பாபாசாகேப்

# டாக்டர் அம்பேத்கர்

நூல்தொகுப்பு :

தொகுதி 6




டாக்டர் பாபாசாகேப்

# அம்பேத்கர்:

## பேச்சும் எழுத்தும்

நூல் தொகுப்பு

தொகுதி 6



டாக்டர் பாபாசாகேப் அம்பேத்கர்

தோற்றம் ஏப்ரல் 14, 1891 பரிநிர்வாணம்: டிசம்பர் 6, 1956.

*"அரசியல் சுதந்திரம் என்பது சட்டமியற்றுவதில் பங்கு கொள்வதற்கும், அரசாங்கத்தை மாற்றுவதற்கும் உருவாக்குவதற்கும் தனி மனிதருக்குள்ள சுதந்திரமாகும். வாழ்வுரிமை, சுதந்திரம், இன்பநாட்ட முயற்சி போன்ற மாற்றமுடியாத உரிமைகளைத் தனிமனிதனுக்கு அளிப்பதற்காகவே அரசாங்கம் அமைக்கப்படுகிறது. எவருடைய உரிமைகளைக் காப்பதற்காக என்று அரசு அமைக்கப்பட்டிருக்கிறதோ, அவர்களிடமிருந்துதான் அரசு அதிகாரம் பெறுகிறது. எனவே ஆளப்படுபவரின் சம்மதத்தின் பேரிலேயே அரசாங்கத்தின் அதிகார எல்லையும் இருப்பும் இயங்க வேண்டும் என்பதாகிறது. மனித ஆளுமை, சமத்துவம் ஆகிய கோட்பாட்டிலிருந்து பெறப்படுவது தான் அரசியல் சுதந்திரம். அனைத்து அரசியலதிகாரமும் மக்களிடமிருந்தே பெறப்படுகிறது என்பதே இதன் பொருள். மேலும் பொதுவாழ்வையும், தனி வாழ்க்கையையும் மற்றவராலன்றித் தமக்குத் தாமே நிர்ணயித்துக் கொள்ளும் ஆற்றல் மக்களுக்கு உண்டு என்பதே இதன் பொருள்."*

**— டாக்டர் பாபாசாகேப் அம்பேத்கர்**

**இந்து சமூக அமைப்பு —**

**அதன் இன்றியமையாக் கோட்பாடுகள்.**

This volume VI in Tamil forms the first part of the English Edition Volume 3: Dr. Babasaheb Ambedkar - Writings and Speeches published by the Education Department, Government of Maharashtra, 1987.

முதற் பதிப்பு: ஏப்ரல், 1995
சைத்ர, 1917

© உரிமைப் பதிவு

விலை ரூ. 30/-
நூலகப் பதிப்பு : ரூ.80/-

வெளியீட்டாளர்:

டாக்டர் அம்பேத்கர் பவுண்டேஷன்,
நல அமைச்சகம், இந்திய அரசு,
புது டில்லி 110 001.

விற்பனை நிலையம்:

நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் பிரைவேட் லிமிடெட்,
136, அண்ணா சாலை,
சென்னை-600 002.

---

அச்சிட்டோர்:

லிங்க் அப் நெட்ஒர்க் (பிரைவேட்) லிமிடெட்.,
சென்னை-600 010.
தொலைபேசி : 642 5943.

# ஆலோசனைக் குழு

மாண்புமிகு திரு. சீதாராம் கேசரி,
நலத்துறை அமைச்சர்
இந்திய அரசு

மாண்புமிகு திரு. கே.வி. தங்கபாலு,
இணை அமைச்சர், நலத்துறை
இந்திய அரசு.

திரு. மாத்தா பிரஸாத், இ.ஆ.ப.,
செயலாளர், நல அமைச்சகம்

திரு. கங்காதாஸ், இ.ஆ.ப.,
இணைச் செயலாளர்,
நல அமைச்சகம்,
மற்றும் உறுப்பினர் -- செயலாளர்
டாக்டர் அம்பேத்கர் பவுண்டேஷன்

நிர்வாகப் பதிப்பாளர் (தமிழ்):
டாக்டர். எஸ். பெருமாள், எம்.ஏ., எம்.பில்., பிச்.டி.

ஆங்கில நூல் தொகுப்பாளர்.

திரு. வஸந்த் மூன்,
பம்பாய்

தமிழ் நூல் பதிப்பாளர்:

டாக்டர் எஸ். பெருமாள்

மொழி பெயர்ப்பாளர்கள்:

திரு. எ.எஸ். மூர்த்தி
திரு. வி. பரஞ்சோதி
டாக்டர் இ.சு. முத்துச்சாமி
திரு. உலோ. செந்தமிழ்க் கோதை
திரு. மனசை ப. கீரன்

ஒப்பு நோக்கியோர்:

திரு. ரா. ரங்கசாமி (மாஜினி)

பிழை திருத்த உதவி

திரு. அ. குப்புசாமி, பி. எஸ்ஸி.,
திரு. ச. மனோகர்

# அணிந்துரை

உலகில் அவ்வப்போது மாமனிதர்கள் தோன்றித் தமது உணர்வு பெருக்கினாலும் ஆளுமைத்திறத்தினாலும் சிந்தனை வளத்தினாலும் சமுதாயத்தின் முன்னேற்றத்திற்குப் புதிய திசையைக் காட்டி வந்துள்ளனர். அத்தகையோரில் ஒருவராகத் தோன்றிய பாரத் ரத்னா டாக்டர் பாபாசாகேப் பீம்ராவ் அம்பேத்கர் அவர்கள் நம் நாட்டு அரசியலமைப்புச் சட்டத் தந்தை மட்டுமல்லர்; மாபெரும் சமூகவியல் அறிஞராகவும் ஆழ்ந்த சிந்தனையாளராகவும் விளங்கியவர். பாரத சமுதாயத்தில் ஒடுக்கப்பட்ட மக்களின் இரட்சகராக அவர் தோன்றினார். சுரண்டலுக்காளான உழைப்பாளர்களின் வாழ்க்கைநிலை மேம்படவும் குறிப்பாக ஒடுக்கப்பட்ட மக்களுக்குச் சமூக, பொருளாதார நீதி கிடைப்பதற்கும் டாக்டர் பாபாசாகேப் அம்பேத்கர் அவர்கள் ஆற்றிய தொண்டுகள் இன்று அனைவராலும் உணர்ந்து ஏற்றுக் கொள்ளப்பட்டு வருகின்றன.

நலவாழ்வுத் துறையைச் சார்ந்த டாக்டர் அம்பேத்கர் பவுண்டேஷன், டாக்டர் பாபாசாகேப் அம்பேத்கர் அவர்களின் நூல் தொகுதிகளை இந்தியிலும் தமிழ் உட்பட இந்திய மொழிகள் பிறவற்றிலும் மொழிபெயர்த்து வெளியிட்டு வருகின்றது. இப்பணியில் ஈடுபட்டு ஒத்துழைத்து வரும் அனைத்து அறிஞர்களும் பாராட்டுக் குரியவர்கள். இத்தொடரில் தற்போது, ஆறாவது, ஏழாவது தொகுதிகளை வெளியிட்டு இப்பணி வெற்றிபெற மனநிறைவுடன் வேண்டுகிறேன். இம்முயற்சிகள் மக்களிடையே மிகுந்த விழிப்புணர்வை உண்டாக்கவல்லவை, சுரண்டலை அடிப்படையாகக் கொண்ட இன்றைய அமைப்புகளைத் தகர்ப்பதற்கு நமக்குப் பேருதவி புரியவல்லவை.

*சீதாராம் கேசரி*
*நலத்துறை அமைச்சர்,*
*இந்திய அரசு*

*புது டில்லி*
*ஏப்ரல், 1995*

## *வாழ்த்துரை*

டாக்டர் பாபாசாகேப் பி.ஆர். அம்பேத்கர் அவர்கள் இந்து சமுதாயத்தின் அடக்குமுறையையும் ஒடுக்குமுறையையும் தீவிரமாக எதிர்த்து நின்றதோடு பல்வேறு துறைகளில் ஆற்றலும் புலமையும் வாய்ந்தவராகவும் விளங்கினார்.

அரசியல் சட்ட மாமேதையாகவும், தேசியத் தலைவராகவும் திகழ்ந்த அவர், இந்திய அரசியலமைப்புச் சட்டம் என்னும் அரிய செல்வத்தினை நமக்கு வழங்கியவர். கல்வியறிவில்லாமல் முன்னேற்றம் பெறுவது இயலாதென உறுதியான கருத்தினைக் கொண்டிருந்த அவர், பள்ளிகள், கல்லூரிகள் பலவற்றைக் நிறுவி ஒடுக்கப்பட்ட மக்கள் கல்விப் பேற்றினைப் பெறுவதற்கு வழிவகுத்தார்.

தம் வாழ்நாள் முழுவதும் சுரண்டப்பட்ட மக்களின் முன்னேற்றத்திற்காக அயர்வின்றி போராடியவர். இதன் காரணமாகச் சமூக, பொருளாதார அநீதிகளிலிருந்து மனிதகுலத்தை மீட்பதற்குப் பாடுபட்டவர் என அனைத்துலகிலும் பாராட்டு பெற்றவர்.

அவர்தம் கருத்துக்களைப் பரப்பும் பொருட்டு டாக்டர் அம்பேத்கர் பவுண்டேஷன், அவரது சொற்பொழிவுகளையும் நூல்களையும் இந்தியிலும் ஏனைய இந்திய மொழிகளிலும் வெளியிட்டு வருவதை அறிந்து பெருமகிழ்வடைகின்றேன்.

இந்தச் சீரிய பணி வெற்றிபெற எனது நல்வாழ்த்துக்கள்.

***கே.வீ. தங்கபாலு***
*இணை அமைச்சர்*
*நலத்துறை*
*இந்திய அரசு*

*புது டில்லி*
*ஏப்ரல், 1995*

## பதிப்புரை

மாமனிதர் பாரத் ரத்னா டாக்டர் பாபாசாகேப் பி. ஆர். அம்பேத்கர் அவர்கள் சமுதாய மறுமலர்ச்சிக்கு முன்னோடியாகத் திகழ்ந்தவர். நெடுங்காலமாக ஒடுக்கப்பட்டும் சுரண்டப்பட்டும் வந்துள்ள மக்களின் சமூக, பொருளாதார முன்னேற்றத்திற்குத் தம் வாழ்க்கையை முழுமையாக அர்ப்பணித்துக் கொண்டவர். சமுதாயத்தில் நிலவும் பொருளற்ற கொள்கைகளையும், பழக்க வழக்கங்களையும் அடியோடு தகர்ப்பதற்காகவும் ஒடுக்கப்பட்டோரின் உரிமைகளை நிலை நாட்டவும் தம் வாழ்நாள் முழுதும் இடையறாது போராடியவர்.

டாக்டர் பாபா சாகேப் அம்பேத்கர் அவர்களின் புதிய சமுதாயம், பொருளாதார அமைப்பு பற்றிய கனவுகளை நனவாக்கும் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு இந்திய அரசு டாக்டர் அம்பேத்கர் பவுண்டேஷனை நிறுவியுள்ளது. இந்த நிறுவனம் பின்வரும் செயல் திட்டங்களை நிறைவேற்றுவதற்கு உறுதி பூண்டுள்ளது:

1. டாக்டர் அம்பேத்கர் தேசிய நூல்நிலையம் நிறுவுதல்
2. டாக்டர் அம்பேத்கர் பெயரில் தேசியப் பரிசுகள் வழங்குதல்
3. டாக்டர் அம்பேத்கர் பெயரில் மாணவர்களுக்கு வெளிநாட்டு உபகாரச் சம்பளம் அளித்தல்
4. டாக்டர் அம்பேத்கர் பெயரில் பல்கலைக்கழகங்களில் பேராசிரியர் பதவிகளை நிறுவுதல்
5. டாக்டர் அம்பேத்கரின் நூல்கள் அனைத்தையும் இந்திய மொழிகளில் வெளியிடுதல்.

இந்தத் திட்டங்களைச் செயல்படுத்துவதற்குச் சமூக நீதியை நிலைநாட்டுவதற்காகத் தம்மை அர்ப்பணித்துக் கொண்டுள்ள இந்திய அரசின் மாண்புமிகு நலத்துறை அமைச்சர் திரு. சீதாராம் கேசரி, மாண்புமிகு நலத்துறை இணை அமைச்சர் திரு. தங்கபாலு, இந்திய அரசு நலத்துறை அமைச்சகத்தின் செயலர் திரு. மாத்தா பிரஸாத் ஆகியோர் அவ்வப்போது சிறந்த ஆலோசனைகள் கூறி வழிகாட்டி

வந்துள்ளனர்; அவர்களிடமிருந்து ஊக்கமும் உற்சாகமும் இடையறாது கிடைத்து வந்துள்ளன. அவர்களுக்குப் பவுண்டேஷன் சார்பில் நன்றி கூறுகின்றேன்.

டாக்டர் பாபாசாகேப் அம்பேத்கர் அவர்களின் நூல் தொகுப்பு முழுவதையும் இந்தி மற்றும் பத்து இந்திய மொழிகளில் மொழி பெயர்த்து வெளியிடும் திட்டம் தேசிய முக்கியத்துவம் வாய்ந்தது. இந்தத் திட்டத்திற்காக இந்திய மொழிகளின் மொழி பெயர்ப்பாளர்கள், ஒப்பு நோக்குவோர், நிர்வாகப் பதிப்பாசிரியர்கள் மற்றும் அச்சகத்தார் ஆகியோரை ஒன்று சேர்க்கும் பெருமுயற்சியில் இயல்பாக ஏற்படும் இடர்பாடுகள் காரணமாக நூல்தொகுதிகளை வெளியிடுவதில் காலதாமதம் ஆவதற்காக வருந்துகின்றோம்.

டாக்டர் பாபாசாகேப் அம்பேத்கர் நூல்களின் தமிழ்த் தொகுதிகளைக் குறித்த காலத்தில் வெளியிடுவதில் நமது பவுண்டேஷன் பெருமகிழ்ச்சி கொள்கிறது. இதற்காகத் தமிழ்த் தொகுதிகளின் நிர்வாகப் பதிப்பாளர் டாக்டர் எஸ். பெருமாள் மற்றும் பவுண்டேஷன் சிறப்புச் செயல் அலுவலரும், இத்திட்டத்தின் ஒருங்கிணைப்பாளருமான திரு. ஜெகன்நாத் பிரஸாத் ஆகியோர் நமது பாராட்டுதலுக்குரியவர்கள். இப்பணியில் தொடர்புடைய மொழி பெயர்ப்பாளர்கள், ஒப்புநோக்குவோர், ஆகியோருக்கும் எமது உளமார்ந்த நன்றி உரித்தாகுக.

டாக்டர் அம்பேத்கர் பவுண்டேஷன் வெளியிட்டுவரும் டாக்டர் பாபாசாகேப் அம்பேத்கர் நூல் தொகுதிகள் அனைத்தும் நன்கு வரவேற்புக்குரியதாகியுள்ளது குறித்து பெரிதும் மகிழ்கின்றோம். இதனால் எமக்கு ஊக்கமும் வலிவும் கிடைத்துள்ளன.

இறுதியாக, நூல்தொகுப்பு தொடர்பாக அறிஞர்கள் மற்றும் வாசகர்களின் யோசனைகளை வரவேற்கின்றோம்.

*கங்காதாஸ்*

*உறுப்பினர்–செயலாளர்*

*டாக்டர் அம்பேத்கர் பவுண்டேஷன்*

*25, அசோகா சாலை*

*புதுடில்லி*

# தமிழ்நூல் பதிப்பாசிரியர் உரை

டாக்டர் பாபாசாகேப் அம்பேத்கர் அவர்கள் நலமிக்க எதிர் காலத்தைப் பற்றிய இலட்சியக் கனவுகள் கண்ட மாமனிதர்களில் ஒருவராகத் திகழ்கின்றார். டாக்டர் பாபாசாகேப் அம்பேத்கர் அவர்கள் தம் இலட்சியக் கனவுகளில் கண்ட புதிய பாரத சமுதாயம் இன்று நனவாகி வருகின்றது, புத்துணர்வும் விழிப்புணர்வும் எங்கும் பரவி வருகின்றது. டாக்டர் பாபாசாகேப் அவர்களின் உயரிய ஆளுமைத் திறனையும், அறிவு நுட்பத்தையும், மனித உரிமை, உயர்வு ஆகியவற்றிற்காக அவர் காட்டிய கடமையுணர்வையும் காலத்தை வென்று நிற்கும் அவருடைய நூல்கள், சொற்பொழிவுகள் ஆகியவற்றை ஊன்றிப் படித்தவர்கள் நன்கு உணர முடியும்.

கல்வியறிவின்றி நாடு முன்னேற முடியாது என்பது டாக்டர் பாபாச ாகேப் அம்பேத்கர் அவர்களின் உறுதியான நம்பிக்கை. சமுதாயத்தில் புறக்கணிக்கப்பட்ட மற்றும் ஒடுக்கப்பட்ட மக்கள் நம் நாட்டின் எளிதில் ஒதுக்கிவிட முடியாத, விலை மதிப்பற்ற உறுப்பினர்களாவர். அவர்கள் கல்வி ஒன்றினாலேயே விழித்தெழ முடியும்; நாட்டின் முன்னேற்றத்திற்கும் உயர்வுக்கும் தமக்குரிய பங்கினை நிறைவேற்ற முடியும். எனவேதான் இந்த மக்கள் விழித்தெழுவதற்காகத் தம் வாழ்நாள் முழுவதும் தம் சிந்தனைகளின் வெளிப்பாடாக அமைந்த சொற்பொழிவுகள், நூல்கள் வாயிலாக அவர் புரட்சிச் சங்கநாதம் எழுப்பினார்.

டாக்டர் பாபா சாகேப் அம்பேத்கர் அவர்களின் நூல்களை மகாரா டிரமாநில அரசு ஆங்கிலத்தில் தொடர்ந்து பல தொகுதிகளாக வெளியிட்டு வருகின்றது. அவற்றை இந்தியமொழிகளில் மொழிபெயர்த்து வெளியிடுவதன் மூலம் அவர்தம் சிந்தனைகள் நம் நாட்டு மக்கள் அனைவருக்கும் எளிதில் எட்டும் வாய்ப்பு ஏற்பட்டுள்ளது. இப்பணிக்கு வழிகோலியுள்ள மகாரா டிர அரசுக்குப் பெரிதும் கடமைப்பட்டுள்ளோம்.

மொழியாக்கம் செய்தல் கடினமானதொரு பணி. இதுவரை இந்தி, தமிழ், குஜராத்தி, பஞ்சாபி ஆகிய மொழிகளில் டாக்டர் பாபா சாகேப் அம்பேத்கர் அவர்களின் மொழிபெயர்ப்புத் தொகுதிகள் வெளிவந்துள்ளன. ஏனைய இந்திய மொழிகளில் மொழி பெயர்ப்புப் பணி நடந்து வருகின்றது. அறிஞர் பெருமக்கள், மொழி

பெயர்ப்பாளர்கள், ஒப்பு நோக்குவோர், டாக்டர் அம்பேத்கர் பவுண்டேஷன் மற்றும் இந்திய அரசு நலத்துறை அமைச்சகத்தின் நண்பர்கள் ஆகியோரின் ஒத்துழைப்பால் இந்த உயரிய பணியினைத் தலைமேற்கொண்டு முடிக்கமுயன்று வருகின்றோம். இதுவரை இப்பணியில் கிடைத்த வெற்றிக்குப் பத்மஸ்ரீ டாக்டர் ஷியாம் சிங் ஷஷி அவர்களின் இடையறாத உழைப்பும் துணையாக இருந்துள்ளது. இவர்கள் அனைவருக்கும் நன்றியைத் தெரிவிக்கின்றோம்.

முந்தைய தொகுதிகளுக்குக் கிடைத்த வரவேற்பும் ஒத்துழைப்பும் கிடைக்கும் என்ற நம்பிக்கையுடன் இந்த ஆறாம் தொகுதியினைத் தங்களுக்கு அளிக்கின்றோம்.

டாக்டர் பாபா சாகேப் பி. ஆர். அம்பேத்கர் அவர்களின் வளமான சிந்தனைகளின் தாக்கம் மக்களிடையே நல்ல விளைவுகளை ஏற்படுத்தும் என நம்புகின்றோம்.

*எஸ். பெருமாள்*
*நிர்வாகப் பதிப்பாளர் (தமிழ்)*

# பொருளடக்கம்

பக்கம்

அணிந்துரை

வாழ்த்துரை

பதிப்புரை

தமிழ்நூல் பதிப்பாசிரியர் உரை

பகுதி 1

இயல் 1. இந்துமதத்தத்துவம் 5

பகுதி 2

இந்தியாவும் பொதுவுடைமைக்கான
முற்படு தேவைகளும்.

இயல் 2. இந்து சமூக அமைப்பு - அதன் இன்றியமையாக்
கோட்பாடுகள் 129

இயல் 3. இந்து சமூக அமைப்பு - அதன் தனித்தன்மைகள் 157

இயல் 4. இந்து மதத்தின் அடையாளங்கள் 177

சிறப்புப் பெயரகராதி 203

பகுதி 1

## இந்து மதத் தத்துவம்

'இந்து மதத் தத்துவம்' என்பது பற்றிய இந்தக் கையெழுத்துப் பிரதி நன்கு தைத்துக் கட்டமைத்த பிரதியாகக் கிடைத்திருப்பதால் முழுமையானதென்றே கருதுகிறோம். இந்தப் பிரதி பெரியதொரு புத்தகத்தின் ஓர் இயல் எனத் தோன்றுகின்றது. முழு நீளத்தாளில் தட்டச்சு செய்த இந்தப் பிரதி 169 பக்கங்கள் கொண்டுள்ளது.

-பதிப்பாசிரியர்கள்.

# இயல் : 1

## இந்து மதத் தத்துவம்

### I

இந்து மதத் தத்துவம் என்ன? தர்க்க ரீதியான முறைப்படி எழும் கேள்வி இது. தர்க்க ரீதியான முறையைத் தவிர்த்தாலும், ஆய்வுக்கு உட்படுத்துவதைத் தவிர்க்க இயலாத முக்கியத்துவம் அதற்கு உண்டு. அதன்றி இந்து மத நோக்கங்களையும் இலட்சியங்களையும் எவரும் புரிந்து கொள்ள முடியாது.

அத்தகையதொரு ஆய்வில் புகு முன்னர், அதற்குரிய பக்குவத்தை ஏற்படுத்துவது, சொற்றொடர்களை வரையறுப்பது போன்றவற்றை ஓரளவிலேனும் மேற்கொள்ள வேண்டும்.

எடுத்த எடுப்பில், கொடுக்கப்பட்டுள்ள தலைப்பு எதனை உணர்த்துகிறது என்று கேட்கப்படக்கூடும். இந்து மதத் தத்துவம் என்ற தலைப்பானது, மதத்தத்துவம் என்ற வகைப்பட்டதுதானா?[1] இந்த அம்சத்தில் ஏதேனும் ஒரு வகையில் முடிவு சொல்ல எனக்கு விருப்பம் தான். எனினும் என்னால் அது முடியாது. இந்தப் பொருள் பற்றி நான் நிறையப் படித்திருக்கிறேன்; ஆனாலும், மதத் தத்துவம் என்பது என்ன பொருள்படும் என்ற தெளிவான நோக்கை நான் பெற முடியவில்லை என்பதை ஒப்புக் கொள்கிறேன். இதற்கு, ஒரு வேளை இரண்டு உண்மைகள் காரணமாகலாம். முதற்கண், மதம் என்பது தெளிவான எல்லைக்குட்பட்ட ஒன்றாக இருக்கும்போது, தத்துவம் என்ற பதத்தில் எதனைச் சேர்க்கலாம் என்பது வரையறுக்கப்பட்ட ஒன்று அல்ல. இரண்டாவதாக, தத்துவமும், மதமும் எதிரெதிரானவை; பகையாளிகள் என்று கூடச் சொல்லலாம்; இதனைத்தத்துவ ஞானியும், இறைமை வல்லுநரும் என்ற கதையிலிருந்து காணலாம். அந்தக் கதையின்படி,

[1] மன்றோவின் 'கல்விக் கலைக்களஞ்சியத்தில்' தத்துவம் பற்றிய கட்டுரையைக் காண்க

இருவரும் ஒரு வாதத்தில் ஈடுபட்டிருந்தனர். "ஓர் இருட்டு அறையில், அங்கு இல்லாத ஒரு கறுப்புப் பூனையைத் தேடும் ஒரு குருடனைப் போன்று" தத்துவஞானி இருப்பதாக, இறைமை வல்லுநர் குற்றம் சாட்டினார். அதற்குப் பதில் அளித்த தத்துவ ஞானி, இறைமை வல்லுநரானவர் "ஓர் இருட்டு அறையில், அங்கு இல்லாத கறுப்புப் பூனையைத் தேடுகின்ற, ஆனால் அதனை அங்கு கண்டுபிடித்து விட்டதாகக் கூறும் ஒரு குருடனைப் போன்றவர்," என்று குறை கூறினார். மதத்தத்துவம் என்ற தலைப்பை, வேண்டா வெறுப்பாகத் தேர்ந்தெடுத்தது, ஒருவேளை, அத்துறையைத் துல்லியமாக வரையறுக்கும் விஷயத்தில் குழப்பத்தை ஏற்படுத்துவதற்குக் காரணமாக இருக்கக் கூடும். மதத்தத்துவம் என்ற துல்லியமான விஷயம் எது என்பது குறித்த அறிவு பூர்வமாக மிக நெருங்கிய அணுகு முறையை, நான் பேராசிரியர் பிரிங்கிள் பாட்டிசனின் நூலில் கண்டேன்[1].

*அவர் கூறுகிறார்*

"மதத்தத்துவம் என்பதற்கு நாம் சாதாரணமாக என்ன பொருள் கொள்கிறோம் என்பதைக் குறிப்பிடுவதற்கு முதலில் சில வார்த்தைகள் கூறுவது பயனுள்ளதாகவிருக்கும். விஷயங்களைப் பற்றிய பொதுவான கருத்தே தத்துவம் என்று நெடுங்காலத்திற்கு முன்னர் பிளேட்டோ விவரித்தார். அதாவது, உலகின் பிரதான அம்சங்கள் அனைத்தையும் கருத்தில் கொண்டு, அவற்றை ஒரு சேரப் பார்ப்பதற்கான முயற்சியும், ஒரே முழுமையின் பல பகுதிகளுக்கிடையேயுள்ள அவற்றின் உறவினைக் காண்பதும் என்பதே அதன் பொருள். இதன் மூலம்தான், நாம் ஒரு வீதாச்சார உணர்வைப் பெறவும், உலக வெளியையும், உலக நிகழ்ச்சிப் போக்குகளின் தன்மை குறித்த நமது இறுதி முடிவுகளை மேற்கொள்வதற்கும், எந்த ஒரு குறிப்பிட்ட எதார்த்த உண்மைகளது வீச்சின் முக்கியத்துவத்தைச் சரியானபடி மதிப்பிடவும் முடியும். அதன்படி, மதத்தத்துவம், கலைத்தத்துவம், சட்டத்தத்துவம் ஆகிய எந்த ஒரு குறிப்பிட்ட அனுபவத்துறையின் தத்துவமும், மனிதன், மற்றும் அவன் வாழும் உலகு பற்றிய நமது கருத்துடன் தொடர்பு படுத்தி, எந்த அனுபவத்தையும் பகுப்பாய்வு செய்து, விளக்கியுரைப்பதே என்று பொருள்படும் என்று கூறலாம். மத வரலாற்று உண்மைகள் காட்டுவதைப் போன்று, நாம் மையப்படுத்தும் விஷயங்கள் சர்வாம்சம் படைத்தவையாகவும், அதன் தன்மைகள் அற்புதமானவையாகவும் இருப்பதால், மனிதனின் மத அனுபவத் தத்துவமானது, நமது பொதுவான தத்துவார்த்த

[1].மதத்தின் தத்துவம், ஆக்ஸ்போர்டு, பக். 1-2

முடிவுகளின்பால், ஒரு தீர்மானமான தாக்கத்தினைப் பிரயோகிப்பது தவிர்க்க இயலாததாகிறது. உண்மையில், பல எழுத்தாளர்களும், ஒரு குறிப்பிட்ட விவாதத்தை, மிகப் பொதுவானதோடு இணைக்க முற்படுகின்றனர்."

"மதத் தத்துவம் தொடர்பு கொண்டுள்ள உண்மைகள் அனைத்தும், அதன் மிக விரிவான பொருளில், மத வரலாற்றினால் அளிக்கப்படுகின்றன. டீலே கூறியுள்ளது போல, "நாகரிக, மற்றும் நாகரிகமற்ற உலகின் எல்லா செத்துப் போன மற்றும் உயிருள்ள மதங்களுமே, அவற்றின் எல்லா வெளிப்பாடுகளிலும், ஒரு வரலாற்று மற்றும் உள இயல்புத் தொடரான குறிப்பிடத்தக்க நிகழ்வேயாகும்". இந்த உண்மைகளே, மதத்தத்துவத்திற்கான விவரங்களாக அமைகின்றன என்பதை நாம் குறிப்பிட வேண்டும்; அவை, தாமாகவே ஒரு "தத்துவம்" ஆகி விடுவதில்லை; அல்லது, டீலேயின் சொல்லைப் பயன் படுத்தினால். மதத்தின் ஓர் "அறிவியல்" ஆகி விடுவதில்லை. "தற்போது நடைமுறையில் உள்ள எல்லா மதங்களையும், அவற்றின் கோட்பாடுகள், இட்டுக்கட்டப்பட்ட பழங்கதைகள், பழக்க வழக்கங்கள், அவை பதியவைக்கும் சடங்குகள், அவற்றைப் பின்பற்றுவோரின் ஸ்தாபன அமைப்பு ஆகியவற்றை, பல்வேறு மதங்களின் தோற்றம், அவற்றின் மலர்ச்சியிலிருந்து அவற்றின் சிதைவு வரை உன்னிப்பாகப் பதிவு செய்து நான் துல்லியமாக வர்ணித்துள்ளேன் என்றால், நான் மத அறிவியல் செயல்படும் ஆதாரங்களை மட்டுமே தொகுத்தளித்துள்ளேன்," என்று அவர் கூறுகிறார். "வரலாற்றுப் பதிவுகள், எவ்வளவுதான் முழுமையானதாக விருப்பினும் போதுமானவையல்ல, தூய்மையான வரலாறு, தத்துவமாகாது. மதத் தத்துவத்தை நாம் பெறுவதற்கு, அதன் பல்வகையான வெளிப்பாடுகளிலும், நாம் ஒரு பொதுவான கோட்பாட்டைக் கண்டுபிடித்தாக வேண்டும்; அந்தக் கோட்பாட்டின், மனித இயற்கையின் வேர்களையும், அவற்றின் படிம வளர்ச்சியை, தாழ்ந்ததிலிருந்து உயர்ந்தது வரையிலான, மற்றும் மேலும் தகுந்த அமைப்புகளிலும், அறிவார்ந்த கட்டங்களிலும், மற்றும், மனித நாகரிகத்தின் இதர பிரதான அம்சங்களுடன், அதன் நெருக்கமான உறவுகளையும், நாம் ஆராய்ந்தால்தான் அதைக் கண்டுபிடிக்க முடியும்."

இதுதான் மதத் தத்துவம் என்றால், ஒப்பீட்டுச் சமயம் என்று அழைக்கப்படும், ஆய்வுத்துறைக்கான மற்றொரு பெயரே அது என்று எனக்குத் தோன்றுகிறது; மதத்தின் பல்வேறு வெளிப்பாடுகளின் பொதுவான கோட்பாட்டைக் கண்டறிவதை அது தனது கூடுதல் நோக்காகக் கொண்டுள்ளது. அத்தகையதொரு ஆய்வின், வாய்ப்பும்,

மதிப்பும் என்னவாக இருந்தபோதும், பேராசிரியர் பிரிங்கிள் - பாட்டிசன் அப்பதத்திற்கு அளித்த நோக்கத்திற்கும், உணர்விற்கும் வேறுபாடான பொருளைக் குறிக்கும் வகையிலேயே நான் மதத்தத்துவம் என்ற தலைப்பினைப் பயன்படுத்துகிறேன். தத்துவம் என்ற பதத்தை அதன் மூலக் கருத்திலேயே நான் பயன்படுத்துகிறேன்; அது இரு படித்தானதாகும். சாக்ரடீசின் தத்துவத்தையோ அல்லது பிளேட்டோவின் தத்துவத்தையோ பற்றி மக்கள் பேசும் போது பொருள் கொள்ளும் போதனைகளை அது குறிக்கிறது. மற்றொரு வகையில், விஷயங்களையும், நிகழ்ச்சிகளையும் குறித்துத் தீர்ப்பு சொல்லும்போது, பயன்படுத்தப்படும் நடு நிலையான விமர்சக மெய்யறிவைக் குறிக்கும். இந்த அடிப்படையிலிருந்து பார்த்தால், மதத்தத்துவம் என்பது வெறும் விரித்துரைக்கும் அறிவியல் துறை மட்டுமே என்று நான் கருதவில்லை. அந்த போதனைகள் குறித்து, தீர்ப்பு வழங்குவதற்கு, விமர்சக மெய்யறிவைப் பயன்படுத்துவதையும், அது சார்ந்திருப்பதால், மதத்தத்துவம் என்பது ஒரு தனிப்பட்ட தரமான அறிவியல் ஆகிறது. இதிலிருந்து, இந்து மதத்தத்துவ ஆராய்ச்சியில் நான் எதைப்பற்றிப் பேசப் போகிறேன் என்பது தெளிவாகும். வெளிப்படையாகக் கூறின், ஒரு வாழ்க்கைப் போக்கு என்ற அளவில் இந்து மதத்தின் தகுதியை மதிப்பிடுவதற்கு அதனை விசாரணைக் குட்படுத்துகிறேன்.

நிலைமையின் ஒரு பகுதி இங்கு தெளிவு படுத்தப்பட்டு விட்டது. இன்னும் மற்றொரு பகுதி தெளிவு படுத்தப்படவேண்டும். அது சம்பந்தப்பட்ட அம்சங்களை உறுதிப்படுத்துவதையும், நான் பயன்படுத்தவிருக்கும் சொற்களின் வரையறையையும் பற்றியதாகும்.

மதத்தத்துவ ஆராய்ச்சியானது, முப்பரிமாணங்களை நிர்ணயிப்பதில் அடங்கியது என்று எனக்குத் தோன்றுகிறது. அவை, ஒரு பண்டத்தின் அம்சங்களாக உள்ள, அறிந்திராத அளவுகளைப் போன்றிருப்பதால், அவற்றைப் பரிமாணங்கள் என்று நான் அழைக்கிறேன். மதத்தத்துவத்தின் பரிசீலனை பயனுள்ளதாக இருக்க வேண்டுமெனில், அதன் பரிமாணங்களை ஒருவர் உறுதிப்படுத்தி, வரையறுக்க வேண்டும்.

இந்த முப்பரிமாணங்களில், முதலாவதானது மதம். குறுக்குச் சால் வாதங்களைத் தவிர்க்கும் பொருட்டு, ஒருவர், மதம் என்பதை எப்படிப் புரிந்து கொள்கிறார் என்பதை வரையறுக்க வேண்டும். மதத்தைப் பொறுத்த மட்டில், இது குறிப்பாக அவசியமானதாகும்; ஏனெனில், அதன் துல்லியமான வரையறை குறித்து உடன்பாடு ஏதுமில்லை. இந்தக்கேள்வி குறித்து, ஒரு விளக்கமான ஆய்வில் இறங்க இது சமயமல்ல. எனவே, தொடரவிருக்கும் விவாதத்தில், அந்தச் சொல்லை எந்தப் பொருளில் பயன்படுத்துகிறேன் என்பதைக் கூறுவதுடன் நான் திருப்தியடைகிறேன்.

இறைமையியல் என்று பொருள்படும் வகையில் நான் மதம் என்ற சொல்லைப் பயன்படுத்துகிறேன். வரையறை நோக்கில், இது ஒருவேளை போதாமலிருக்கலாம். ஏனெனில், பல்வேறுவகைப்பட்ட இறைமையியல்கள் உள்ளன. நான் என்ன பொருள் கொள்கிறேன் என்பதைக் குறிப்பிட்டாக வேண்டும். வரலாற்றுப் பூர்வமாக, பண்டைய காலத்திலிருந்தே பேசப்பட்டு வரும் இரண்டு இறைமையியல்கள் உள்ளன. அவை புராண இறைமையியல், சமுதாயத்திற்குரிய இறைமையியல் எனப்படுவன. இவற்றை வேறுபடுத்திய கிரேக்கர்கள், அவற்றிற்கு ஒரு நிர்ணயமான உள்ளடக்கத்தைத் தந்தனர். தற்போதைய கற்பனை இலக்கியத்தில் கூறப்பட்டுள்ள அல்லது உள்ளடங்கியுள்ள கடவுளர்களின் கதைகளையும், அவர்தம் செயல் பாடுகளையும் கூறுவது புராண இறைமையியல் என்று அவர்கள் பொருள் கொண்டனர். சமுதாயத்திற்குரிய இறைமையியல் என்பது, அவர்களது கருத்துப்படி, அரசுப் பஞ்சாங்கத்தில் உள்ள பலவகைப் பண்டிகைகள், நோன்புகள், அவற்றிற்குரிய சடங்குகள் ஆகியவற்றைப் பற்றிய அறிவு ஆகும். இறைமையியல் என்ற வார்த்தையை நான் இந்த இரண்டு பொருள்களிலுமே பயன்படுத்தவில்லை. இறைமையியல் என்பதை நான் இயல்பு இறைமையியல்[1] என்றே பொருள் கொள்கிறேன்; இயற்கைத் தத்துவத்தின் இணைபிரியா அங்கமாக விளங்கும் கடவுள் மற்றும் தெய்வீகக் கோட்பாடு அது மரபாகப் புரிந்து கொள்ளப்பட்டபடி, இயல்பு இறைமையியல், மூன்று விளக்கங்களை எடுத்துரைக்கிறது. (1) கடவுள் இருக்கிறார்; இயற்கை அல்லது அண்டம் என்று நாம் எதைக் கூறுகிறோமே அதன் படைப்பாளி அவரே (2) இயற்கை ஆக்கும் எல்லா நிகழ்ச்சிகளையும், கடவுளே கட்டுப்படுத்துகிறார். (3) அவரது இறையாண்மையுற்ற தார்மீகச் சட்டத்தின்படி அவர் மனித இனத்தின் மீது ஆட்சி புரிகிறார்.

இயல்பு இறைமையியலிலிருந்து மாறுபட்ட, தெய்வீக எதார்த்தத்தை, தன்னியல்பாக வெளிக்காட்டும், "வெளிப்பாட்டு இறைமையியல்" என்றழைக்கப்படும், மற்றொரு வகை இறைமையியலும் உண்டு என்பதை நான் அறிவேன். ஆனால் இந்த மாறுபாட்டைப் பொருட்படுத்த வேண்டியதில்லை. ஏற்கனவே குறிப்பிட்டுள்ளதைப் போன்று[2], "ஒரு வெளிப்பாடு என்பது எந்தத் திருத்தங்களுமின்றி, துணையில்லாத மனித முயற்சிகளினால் பெறப்பட முடியாத கூடுதல் அறிவின் பிற்சேர்க்கையினால் மட்டுமே பெறப்படும் இயல்பு இறைமையினால் வெல்லப்பட்ட முடிவுகளுக்கோ" அல்லது "அது உண்மையான

1. இயல்பு இறைமையியல் என்பதை ஒரு தனிப்பட்ட ஆய்வுத்துறையாகப் பிளேட்டோ தோற்றுவித்தார்

2. ஏ.இ, டேய்லரின் "ஓர் ஒழுக்க முறையாளரின் நம்பிக்கை" - பக் -19,

வெளிப்பாட்டின்படி பார்க்கப்போனால், இயல்பு இறைமையின் எல்லா உண்மைகளும், ஆழ்ந்த, செழிப்பான பொருளை அடையும் வகையில் இயல்பு இறைமையை மாற்றவோ" கூடும். ஆனால், ஒரு மெய்யான 'இயல்பு இறைமையும்', ஒரு மெய்யான 'வெளிப்பாடு இறைமையும்" ஒன்றுக்கொன்று, உண்மையாகவே முரண்பட்டதாக இருப்பது சாத்தியமில்லை என்று ஒதுக்கித் தள்ளி விடலாம்.

இறைமையியலின் மூன்று கோட்பாடுகளாவன: (1) கடவுள் உண்டு என்பது (2) அண்டத்தின் மீது கடவுளின் தெய்வீக ஆட்சி (3) மனித இனத்தின் மீது கடவுளின் தார்மீக ஆட்சி. மனிதர்கள் தார்மீக ஒழுக்க முறையில் வாழும் சமுதாய அமைப்பினைக் கொண்டு வருவதை நோக்கமாகவும், குறிக்கோளாகவும் கொண்ட தெய்வீக ஆட்சியின் இலட்சிய அமைப்பை விளக்கியுரைப்பதே மதம் என்று பொருள்படுவதாக நான் கொள்கிறேன். மதத்தை இப்படித்தான் நான் புரிந்து கொள்கிறேன்; இந்த விவாதத்தில் மதம் என்ற சொல்லை இந்தப் பொருளிலேயே நான் பயன்படுத்துகிறேன்.

மதம் எதற்காகப் பாடுபடுகிறதோ, அந்த மிகச் சிறந்த ஏற்பாட்டினைத் தெரிந்து கொள்வது இரண்டாவது பரிமாணமாகும். எந்தச் சமுதாயத்தின் மதத்திலும், எது நிலையான, நிரந்தரமான, ஆதிக்கப்பகுதி என்பதை வரையறுப்பதும், அதன் அத்தியாவசியமான குணநலன்களை, அவசியமற்றதிலிருந்து பிரிப்பதும் பெரும்பாலும் மிகக் கடினமானதாகும். இவ்வாறு கடினமாக இருப்பதற்குக் காரணம், அநேகமாக, பேராசிரியர் ராபர்ட்சன் ஸ்மித் சுட்டிக் காட்டியுள்ளது கஷ்டமாக இருக்கக் கூடும்[1]. அவர் கூறுகிறார்:

> "பல நூற்றாண்டு காலப் போக்கில், மதத்தின் பாரம்பரியப் பயன்பாடுகள் படிப்படியாக வளர்ச்சியடைந்து வந்துள்ளன; மனித அறிவு மற்றும் தார்மீக வளர்ச்சியின் பல்வேறு கட்டங்களிலும், அதற்குரிய விசேஷமான சிந்தனைப் பழக்கங்களை அவை பிரதிபலிக்கின்றன. கடவுளர்களது இயல்பினைக் குறித்த எந்தக் கருத்தோட்டமும், பல்வகைத் தன்மைத்தான ஆசார, அனுஷ்டானங்கள், சடங்குகள் ஆகிய அனைத்திற்கான காரணங்களைப் புலப்படுத்தி விடமுடியாது; அப்பட்டமான காட்டுமிராண்டித்தனத்திலிருந்து, ஒவ்வொரு பண்பாட்டுப் படிவத்திலும் வாழ்ந்த, மூதாதையர்களின் தொடர் வரிசையிலிருந்து, பாரம்பரியமாக, பின்னர் வந்த புறச்சமயம் பெற்றவையே அவை. மதஸ்தாபனங்களால் வெளியிடப்படும், மனிதகுல மதச் சிந்தனையின் பதிவானது, பூமியின் மேலோட்டு வரலாற்றின் புவியியல் பதிவினை

1. அவர் எழுதிய "செமிட்டிக் இனத்தவரின் மதம்" என்ற நூல் (1927)"

ஒத்தது; புதியதும், பழையதும் அருகருகே, அடுக்கின்மேல் அடுக்காகக் காப்பாற்றப்பட்டு வந்துள்ளது"

இதே தான் இந்தியாவிலும் நிகழ்ந்துள்ளது. இந்தியாவில் மத வளர்ச்சியைப் பற்றிப் பேசும்போது பேராசிரியர் மாக்ஸ்முல்லர் கூறுகிறார்:

"மிக எளிமையான குழந்தைத்தனமான வேண்டுதல்களிலிருந்து, மிக உயர்ந்த கட்ட பண்பியல் கற்பனாவாதம் வரை படிப்படியாக மதம் வளர்ச்சியடைந்து வருவதை நாம் காண்கிறோம். பெரும்பாலான வேதப் பாசுரங்களில், நாம் குழந்தைப் பருவத்தை இனம் காணலாம்; பிரமாணங்களிலும் அவற்றின் தியாகத் தன்மை கொண்ட, உள்வய மற்றும் ஒழுக்க நெறிகளில், பரபரப்பான மனிதப்பருவத்தைத் காணலாம்; உபநிடதங்களில், வேத மதத்தின் வயோதிகத்தைக் காணலாம். இந்திய மதத்தின் வரலாற்று முன்னேற்றத்தின்படி, பிரமாணங்களின் முதிர்ச்சியை எட்டியவுடன், அவர்கள் வெறும் குழந்தைத் தனமான வேண்டுதல்களை ஒதுக்கித் தள்ளிவிட்டனர் என்பதை நாம் புரிந்து கொள்ள முடியும்; பழைய கடவுளர்களது மெய்யான குண நலன்களும், தியாகப் பகட்டும் புரிந்து கொள்ளப்பட்டபோது, உபநிடதங்கள் என்ற மிக உயரிய மதம், அவற்றை தள்ளிவைத்து விட்டது. ஆனால் அது அப்படி அல்ல. ஒரு காலத்தில் இந்தியாவில் வெளிப்படுத்தப்பட்ட ஒவ்வொரு மதச் சிந்தனையும், புனித பாரம்பரியமாக வாழையடி வாழையாக ஒரு காலத்தில் விட்டுச் செல்லப்பட்ட ஒவ்வொன்றும், பேணிப் பாதுகாக்கப்பட்டது; இந்திய தேசத்தின் குழந்தைப்பருவம், மனிதப்பருவம் மற்றும் முதுமைப் பருவம் என்ற வரலாற்றுக் கால கட்டச் சிந்தனைகளும், ஒவ்வொரு தனி மனிதனின் வாழ்க்கையினது மூன்று கட்டங்களிலும் நிரந்தரச் சேவை செய்யுமாறு பணிக்கப்பட்டன. வேதம் என்னும் ஒரே புனித நியதி, மதச் சிந்தனையின் மாறுபட்ட கட்டங்களின் பதிவேட்டைக் கொண்டதாக மட்டுமின்றி, ஒன்றுக்கொன்று அநேகமாக முற்றிலும் எதிரெதிரானவை என்று நாம் கூறக்கூடிய கோட்பாடுகளையும் கொண்டதாக இருந்தது என்பதை நாம் இதன்மூலம் விளக்கியுரைக்க முடியும்".

நேர்முக (அல்லது எதிர்மறையற்ற) மதங்கள் என்பவை குறித்து, இந்தக் கஷ்டம் அவ்வளவு பெரிதல்ல. நேர்முக மதங்களின் அடிப்படைக் குணாம்சங்கள் என்னவெனில், யுகயுகமாக, அமைதியாகச் செயல்பட்டு வரும், தன்னுணர்வற்ற சக்திகளின் செயல்பாட்டின் கீழ் உள்ள புராதன மதங்களைப் போல அவை வளர்ச்சியுறவில்லை; ஒரு தெய்வீக வெளிப்பாட்டின் அங்கங்களாகப் போதனை செய்த, மாபெரும் மதப்

புனைவோர்களின் போதனைகளைத் தோற்றுவாயாகக் கொண்டவை. உள்ளத் தெளிவின் உருவாக்கத்தின் விளைவாக எழுந்தால், நேர்முகமாக மதத்தத்துவம், கண்டுகொள்வதற்கும் எளிது; எடுத்துரைப்பதற்கும் எளிது. யூத மதம், கிறிஸ்துவ மதம், இஸ்லாம் போன்றே இந்து மதமும். பிரதானமாக ஒரு நேர்முக மதமேயாகும். அதன் தெய்வீக ஆட்சிமுறை அமைப்பினை எவரும் தேட வேண்டியதில்லை. அது எழுதப்படாத அரசியல் சட்டம் போன்றதல்ல. தெய்வீக ஆட்சியின் இந்து முறை அமைப்பானது ஓர் எழுதப்பட்ட அரசியல் சட்டத்தில் பொறிக்கப்பட்டுள்ளது; அதைத் தெரிந்து கொள்ள விரும்பும் எவரும், மனுஸ்மிருதி என்ற புனித நூலில் அவை தெளிவாக்கப்பட்டுள்ளதைக் காணலாம்; நுணுக்கமான விவரத்துடன், இந்துக்களின், மத, ஆசார, சமுதாய வாழ்வினை ஆளும் விதிகளை எடுத்துரைக்கும், ஒரு தெய்வீக நெறி முறையாகும் அது; அதனை இந்துக்களின் விவிலியம் என்று கருதலாம்; இந்து மதத்தத்துவமே அதில் அடங்கியுள்ளது. ஒரு மதம் எதற்காக உள்ளதோ, அதன் தெய்வீக ஆட்சிமுறைக்கான மிகச்சிறந்த அமைப்பின் மதிப்பினை நிர்ணயிப்பதற்குக் கடைபிடிக்கப்படும் பிரமாண சூத்திரமே, மதத்தத்துவத்தின் மூன்றாவது பரிமாணமாகும்[1]. மதம் விசாரனைக்குட்படுத்தப் படவேண்டும். ஆனால், எந்த பிரமாணச் சூத்திரத்தின்படி அதனை நிர்ணயிப்பது? அதுதான் அந்தப் படிவத்தின் வரையறைக்கு இட்டுச் சென்றது. மூன்று பரிமாணங்களிலும், இந்த மூன்றாவதுதான், மதிப்பிடுவதற்கும், வரையறுப்பதற்கும் மிகக் கடினமானதொன்று.

மதத்தைப் பற்றிய தத்துவம் எவ்வளவோ எழுதப்பட்டு விட்டபோதும், துரதிருஷ்டவசமாக, அந்தக் கேள்விக்குத் தக்க விடைகிடைத்ததாகத் தோன்றவில்லை; அதோடு அந்தப் பிரச்சினையைத் திருப்திகரமாகக் கையாளுவதற்கு எந்த முறையும் நிச்சயமாகக் கண்டுபிடிக்கப்படவில்லை. பிரச்சினையைத் தீர்மானிப்பதற்கு ஒவ்வொருவரும், அவரவரது சொந்த முறைகளைக் கைக்கொள்ளுமாறு விடப்பட்டுள்ளனர். என்னைப் பொறுத்தவரை, எந்த இயக்கத்தின் அல்லது ஸ்தாபனத்தின் தத்துவத்தையோ அறிந்து

---

1"மதத்தத்துவத் துறையில் அடங்குவன எல்லாம், முதலிரண்டு பரிமாணங்களின் ஆய்வே என்று, மதத்தத்து வ ஆராய்ச்சி மாணவர்களில் சிலர் கருதுவதாகத் தோன்றுகிறது. மதத்தத்துவ ஆய்வுக்கு, மூன்றாவது பரிமாணத்தைக் கருத்தில் கொள்வதும் அவசியமானதொரு பகுதியே என்பதை அவர்கள் அங்கீகரித்ததாகத் தெரியவில்லை இதற்கு எடுத்துக்காட்டாக, ஹேஸ்டிங்சின் "மதம் மற்றும் தார்மீக நெறிகளின் கலைக் களஞ்சியம்" என்ற நூலின் தொகுதி 12, பக் 393-ல் திரு.டி.எஸ். ஆடம்ஸ் எழுதிய மதம் பற்றிய கட்டுரையைக் காண்க. நான் இந்தக் கருத்திலிருந்து மாறுபடுகிறேன். மதத்தத்துவம் என்பதை ஒரு இயல்பு ஆய்வாகவும், விவரண ஆய்வாகவும் நான் கருதுவது, ஒருவேளை இந்த வேறுபாட்டிற்குக் காரணமாக இருக்கக் கூடும். பொதுவான மதத்தத்துவம் என்று ஒன்று இருப்பதாக நான் எண்ணவில்லை. ஒவ்வொரு மதத்திற்கும் அதற்குரிய குறிப்பிட்ட தத்துவம் உண்டென்று நான் நம்புகிறேன். 'மதத்தத்துவம்' என்று என்னைப் பொறுத்தவரை எதுவும் கிடையாது. ஒரு மதத்தைப் பற்றிய தத்துவம் தான் உள்ளது.

கொள்ள, அந்த இயக்கமும், ஸ்தாபனமும் கடந்து வந்த சுழற்சிகளை (அல்லது புரட்சிகளை) ஆராய்வது என்ற கருத்திலிருந்து தொடங்குவது நம்பகமானது என்று நான் எண்ணுகிறேன். புரட்சி என்பது தத்துவத்தின் தாய்; அது தத்துவத்தின் தாயாக இல்லையெனினும் தத்துவத்திற்கு ஒளியூட்டும் விளக்கு. இந்த விதிக்கு மதமும் புறம்பானதல்ல. எனவே, மதத் தத்துவத்தை மதிப்பிடுவதற்கான பிரமாண சூத்திரத்தை நிர்ணயிப்பதற்கான சிறந்த முறை, மதம் தாங்கி வந்துள்ள சுழற்சிகளையும், புரட்சிகளையும் ஆராய்வதுதான் என்று எனக்குத் தெளிவாகத் தோன்றுகிறது. அந்த முறையைத்தான் நான் கடைப்பிடிக்க உத்தேசித்துள்ளேன்.

வரலாற்று மாணவர்கள், ஒரு மதப் புரட்சியைப் பற்றி நன்கு அறிந்திருப்பர். அந்தப் புரட்சியானது, மதத்தின் எல்லைகளையும், அதன் அதிக்கார வரம்பினையும் பற்றியதாகும். மனித அறிவின் முழுமையான களத்தினைத் தழுவியதாகவும், அதன் போதனைகள் பிழை படாத் தன்மை வாய்ந்தது என்றும் மதம் கருதப்பட்ட காலம் ஒன்று இருந்தது. அது வானியலையும் தழுவி நின்றது; அண்டத்தின் மையத்தில் பூமி தங்கியுள்ளதென்றும் சூரியனும், சந்திரனும், கிரஹங்களும், நிலையான நட்சத்திர மண்டலமும், அதைச் சுற்றி, ஒவ்வொன்றும் தத்தமது வட்டத்தில் சுழன்று வருவன என்றும், அண்டம் பற்றிய கொள்கையினை அது போதித்தது. அது உயிரியலையும், புவியியலையும் உள்ளடக்கியிருந்தது; பூமியில் உயிரின் வளர்ச்சியனைத்தும் ஒரே நேரத்தில் தோற்றுவிக்கப்பட்ட தென்றும், தற்போதுள்ள எல்லா வானுலக அங்கங்களும், எல்லா வகையான பிராணிகளும், பறவைகளும், தோற்ற காலத்திலிருந்தே தொடர்பானவை என்ற கருத்தையும் அது எடுத்துரைத்தது. மருத்துவமும் அதன் எல்லைக்குட்பட்டதாக அது கொண்டாடிற்று; நோய் என்பது செய்த பாவத்திற்கான தெய்வீக தண்டனையோ அல்லது அது பேய்களின் வேலையென்றோ, நேரிடையாகவோ அல்லது புனித வேதங்களின் மூலமோ முனிவர்களின் தலையீட்டாலோ அல்லது தோத்திரங்கள், க்ஷேத்திராடனங்களின் மூலமாகவோ, அல்லது (பேய்களின் காரணமாகவிருப்பின்) பேய் விரட்டலின் மூலமாகவும், பேய்களும் (நோயாளியும் கூட) அருவறுப்படையும் சிகிச்சையின் மூலமாகவும், அதைக் குணப்படுத்த முடியும் என்று போதனை செய்தது. உடலியங்கியலும், உளவியலும் கூட, தனது ஆட்சிக் குட்பட்ட தென்றும், உடலும், ஆன்மாவும் இரு வேறு பொருள்கள் என்றும் போதனை செய்தது.

சிறிது சிறிதாக இந்தப் பரந்த மத சாம்ராஜ்யம் தகர்க்கப்பட்டது. கோபர்னிகஸ் புரட்சி, மத ஆதிக்கத்திலிருந்து வானியலை விடுவித்தது.

டார்வீனியப் புரட்சி, உயிரியலையும், புவியியலையும், மத விலங்குகளிலிருந்து மீட்டது. மருத்துவத்தின் மீது சமய சித்தாந்தத்தின் ஆதிக்கம் இன்னும் பூரணமாக அழிக்கப்படவில்லை. மருத்துவப் பிரச்சினைகளில் அதன் தலையீடு இன்னமும் தொடர்கிறது. குடும்பக் கட்டுப்பாடு, கருச்சிதைவு, ஊனமுற்றோரை மலடாக்குதல் போன்ற விஷயங்களில், அபிப்பிராயங்கள், இன்னமும் சமயக் கோட்பாடுகளின் செல்வாக்கிற்கு உட்பட்டுள்ளன. உளவியல் இன்னும் அதன் பிடியிலிருந்து முழுமையாகத் தன்னை விடுவித்துக் கொள்ளவில்லை. டார்வினிசம்,தெய்வீகவியல் ஆதிக்கத்திற்கு மிகப் பலத்த அடியாகும்; அதன் பின்னர், இழந்த தனது சாம்ராஜ்யத்தைப் மீட்பதற்கு எந்த வித ஆர்வமுயற்சிகளையும் அது மேற்கொள்ள முடியவில்லை.

மத சாம்ராஜ்யத்தின் இந்தச் சீர்குலைவு, ஒரு மாபெரும் புரட்சியெனக் கொள்ளுதல் இயற்கையானதே. தெய்வீகவியலுக்கு எதிராக 400 ஆண்டுகளாக, அறிவியல் துறை தொடுத்து வந்த யுத்தத்தின் விளைவே அது; இரண்டிற்குமிடையே மிகக் கடுமையான போர்கள் நடந்துள்ளன; கொழுந்து விட்டெரியும் இந்தப் புரட்சியினால் தாக்கமடையாதவர்கள் எவரும் இருக்க முடியாது என்ற அளவிற்கு, அதனால் அத்துணை எழுச்சி ஏற்பட்டது.

இந்த மதப்புரட்சி, ஒரு பெரும் நன்மையே என்பதில் எந்த சந்தேகமுமில்லை. அது எண்ணச் சுதந்திரத்தை நிறுவியது. "ஒரு காலத்தில் மூட நம்பிக்கைகளைப் பகிர்ந்து கொண்ட உலகை, தனதாக்கிக் கொண்டு, அதன் மீது கட்டுப்பாட்டைக் கொணர சமுதாயத்திற்கு அது வழி வகுத்தது". தனது முந்தைய அச்சங்கள் சார்ந்த விஷயங்களைத் துணிவுடன் எதிர் நோக்கவும், அதன் மூலம், மர்ம ஆட்சியில் வீழ்ந்து கிடந்ததிலிருந்து, தனக்கென, தங்குதடையற்ற செயல் பிரதேசத்தையும், சுதந்திரச் சிந்தனை வெளியையும் அமைத்துக் கொள்ள முடிந்தது. மதச் சார்பின்மைப் போக்கு, நாகரிகத்தை - கலாசாரத்திலிருந்து வேறுபடுத்துவதைச் - சாத்தியமாக்குவதால், அறிவியலாளர்களால் மட்டுமே அது வரவேற்கப்படுகிறது என்பதல்ல; சமயச் சார்புள்ள ஆண்களும், பெண்களும் கூட, தெய்வீக இயல் போதனைகளில் பெரும்பகுதி தேவையற்ற தென்றும், மத வாழ்க்கைக்கு அது தடையாக உள்ளதென்றும், அதன் அதீத வளர்ச்சியை வெட்டித்தறித்தது வரவேற்கத் தக்கதே என்றும் உணரத் தலைப்பட்டுள்ளனர்.

ஆனால், மதத் தத்துவத்தை மதிப்பிடுவதற்கான படிவங்களை நிர்ணயிப்பதற்கு, மதம் அனுபவித்த மற்றொரு வகையான புரட்சியை நோக்கி நாம் நம் கவனத்தைத் திருப்ப வேண்டும். அந்தப் புரட்சியானது, மனிதனுக்கும், கடவுளுக்கும் உள்ள உறவுகள் மனிதனுக்கும்,

சமுதாயத்திற்குமுள்ள உறவுகள், மனிதனுக்கும் மனிதனுக்குமுள்ள உறவுகள் பற்றிய நடப்புக் கோட்பாடுகளின் தன்மை மற்றும் உள்ளடக்கத்தைப் பற்றியதாகும். இந்தப் புரட்சி எத்துணை மகத்தானது என்பதை, காட்டுமிராண்டி சமுதாயத்திலிருந்து, நாகரிக சமுதாயத்தைப் பிரிக்கும் வேறுபாடுகளிலிருந்து கண்டு கொள்ளலாம்.

இந்த மதப்புரட்சியைப் பற்றி, இதுகாறும் முறையான ஆய்வு ஏதும் மேற்கொள்ளப்படவில்லை என்பது விந்தையே. ஒரு சிலரே அதனை உணர்ந்திருப்பது போலத் தோன்றிய போதும் கூட, காட்டு மிராண்டிச் சமுதாயமும், நாகரிக சமுதாயமும் கருதிவந்த மதத் தன்மையில் முழுமையான மாற்றத்தைக் கொணர்ந்துள்ளது என்ற அளவில் இந்தப் புரட்சி மகத்தானதும்; மிக ஆழ்ந்ததுமாகும்.

காட்டு மிராண்டி சமுதாயத்திற்கும், நாகரிக சமுதாயத்திற்குமிடையேயான ஒப்பு நோக்குடன் இதைத் தொடங்குவோம்.

காட்டு மிராண்டி மதத்தில், இரு விஷயங்கள் இருப்பது எவரையும் வியப்படையச் செய்கிறது. முதலாவது, சடங்குகள், ஆசாரங்களை அனுஷ்டிப்பது, செப்பிடு வித்தைகள், சில தீட்டுக்களைக் கடைப்பிடிப்பது, மூட நம்பிக்கைகளையும், குல தெய்வங்களையும் வழிபடுவது ஆகியவை. இரண்டாவது நாம் காணக்கூடிய விஷயம், இந்தச் சடங்குகள் ஆரவாரங்கள், செப்பிடுவித்தைகள், தீட்டுக்கள், குல தெய்வங்கள், மூட நம்பிக்கைகள் ஆகியவற்றிற்கும், குறிப்பிட்ட நிகழ்ச்சிகளுக்கும் உள்ள தொடர்பு. இந்த நிகழ்ச்சிகள், பிரதானமாக, மனித வாழ்வின் நெருக்கடியான கட்டங்களைக் குறிப்பனவாகும், பிறப்பு, முதற் குழந்தை பிறப்பு, மனிதன் பருவமடைதல், பெண்கள் பூப்படைதல், திருமணம், நோய்வாய்ப்படுதல், சாவு மற்றும் போர் ஆகிய நிகழ்ச்சிகளின் போதே, வழக்கமாக சடங்குகளும், ஆசாரங்களும், அனுஷ்டிக்கப்படுகின்றன; மந்திர வித்தைகள் பயன்படுத்தப்படுகின்றன; குல தெய்வங்கள் பூஜிக்கப்படுகின்றன.

மதத்தின் தோற்றம் மற்றும் வரலாற்று மாணவர்கள், மதத்தின் தோற்றத்தையும், அதன் பொருளையும் விளக்க முற்படும் போது, மந்திர தந்திரங்களையும், தீட்டுக்களையும், ஆசார சடங்குகளையும், குல தெய்வங்களையும் அத்துடன் தொடர்புள்ள விழாக்களையும் பற்றிக் கூறியுள்ளனர்; ஆனால், அவற்றிற்கும், அவை சம்பந்தப்பட்ட நிகழ்ச்சிகளுக்கும் உள்ள தொடர்பு, பொருட்படுத்தக் கூடியவை அல்ல என்று கருதுகின்றனர். அதன் விளைவாக, மதம் செப்பிடு வித்தையில் தோன்றியதென்றும், அல்லது மூட நம்பிக்கைகளில் உதித்தது என்றும் விளக்கமளிக்கும் பல கோட்பாடுகள் உள்ளன. இதைக் காட்டிலும் பெரிய தவறு வேறு இருக்க முடியாது. காட்டு மிராண்டிச் சமுதாயம்

வித்தைகளைக் கடைப்பிடித்தது, தீட்டுக்களையும், சடங்குகளையும் நம்பிற்று. குலதெய்வங்களை வழிபட்டது என்பது உண்மைதான். ஆனால், இதுவே மதம் என்றும் அல்லது மதத்தின் தோற்றுவாயாக அமைகிறது என்றும் கொள்வது தவறாகும். அத்தகைய கருத்தை மேற்கொள்வது, தற்செயல் இடை நிகழ்ச்சிகளை, முதன்மை ஸ்தானத்திற்கு உயர்த்துவதாகும். காட்டு மிராண்டி மதத்தின் பிரதான விஷயம், வாழ்க்கை, பிறப்பு, இறப்பு, திருமணம் போன்ற மனித வாழ்க்கையின் ஆதார உண்மைகளே. மந்திர தந்திரங்கள், தடைகள், குல தெய்வம் ஆகியவை அடைப்பட்ட செயல்பாடுகளே. அவையே முடிவு அல்ல. அவை முடிவுக்கான வழிகளே. வாழ்க்கையும், அதனைப் பாதுகாப்பதுமே இறுதியானது. காட்டு மிராண்டி சமூகத்தால் மந்திர, தந்திர வித்தைகளெல்லாம், அவற்றிற்காகவே கடைப் பிடிக்கப் படவில்லை; வாழ்வைப் பாதுகாத்துக் கொள்ளவும், தீய சக்திகள் வாழ்வுக்குத் தீங்கு ஏற்படுத்தாமல் இருப்பதற்காகவும் தான் அவை கடைப்பிடிக்கப்பட்டன. இவ்வாறு புரிந்து கொண்டால், காட்டு மிராண்டி சமுதாயத்தின் மதமானது வாழ்வையும், அதைப் பாதுகாப்பதோடும் தான் சம்பந்தப்பட்டது; இந்த வாழ்க்கைப் போக்குகள் தாம், காட்டு மிராண்டி சமுதாயத்தின் மதப் பொருளும், தோற்றுவாயும் ஆகும். தங்களது மதத்தின் அடிப்படையாகவே ஆக்கும் அளவிற்கு, காட்டு மிராண்டி சமுதாயம், வாழ்விலும், அதனைப் பாதுகாப்பதிலும் அத்துணை அதிக அக்கறை காட்டியுள்ளனர். வாழ்க்கைப் போக்குகளைப் பாதிக்கும் ஒவ்வொன்றும், அதன் மதத்தின் பகுதியாக ஆகும் அளவிற்கு, அவர்தம் மதத்தில், வாழ்க்கைப் போக்குகளே பிரதான நிலை வகித்துள்ளன. காட்டு மிராண்டி சமுதாயத்தின் விழாக்கள், பிறப்பு, பூப்பெய்தல், திருமணம், நோய் வாய்ப்படுதல், இறப்பு, யுத்தம் ஆகியவற்றை மட்டும் சார்ந்ததோடன்றி, உணவையும் சார்ந்ததாக இருந்தன.

அதேபோன்று, வறட்சி, கொள்ளை நோய் மற்றும் இதர முறையற்ற இயற்கை நிகழ்வுகளின் போதும், சடங்குகள் அனுஷ்டிக்கப்பட்டன. அறுவடை மற்றும் பஞ்சம் போன்ற சந்தர்ப்பங்கள் ஏன் மதச் சடங்குகளுடன் இணைய வேண்டும்? செப்பிடு வித்தை, தீட்டு, குலதெய்வம் என்பவை, ஒரு காட்டு மிராண்டிக்கு ஏன் அத்துணை முக்கியத்துவம் வாய்ந்தது? அதற்கான ஒரே பதில்: அவை அனைத்தும் வாழ்வுப் பராமரிப்பினைப் பாதிக்கிறது. வாழ்வுப் போக்கும் அதன் பாதுகாப்புமே பிரதான நோக்கமாகிறது. வாழ்வும், வாழ்வினைப் பாதுகாப்பதும்தான், காட்டு மிராண்டி மதத்தின் மையமும், கேந்திரமும் ஆகும். பேராசிரியர் கிராலி கூறியுள்ளதைப் போன்று, காட்டு மிராண்டிகளின் மதம், வாழ்வினை உறுதிப்படுத்திப் பாதுகாப்பதுடன் தான் ஆரம்பித்து, முடிவடைகிறது.

வாழ்க்கையிலும், அதனைப் பாதுகாப்பதிலும் தான், காட்டு மிராண்டி மதம் அடங்கியுள்ளது. காட்டு மிராண்டி மதத்தின் உண்மை எதுவோ, அதுவே, எங்கு காணப்படினும், எல்லா மதங்களுக்குமான உண்மை; ஏனெனில், அதுவே மதத்தின் சாராம்சத்தை உள்ளடக்கியது. தற்கால சமுதாயத்தில், தெய்வீக இயல் மெருகேற்றப் பட்டுள்ளதால், மதத்தின் சாராம்சம், பார்வையிலிருந்து மறைக்கப்பட்டு, மறக்கப்பட்டும் விட்டது என்பது உண்மையே. ஆனாலும், தற்கால சமுதாயத்திலும்கூட, வாழ்வும், அதனைப் பாதுகாப்பதுமே மதத்தின் சாராம்சம் என்பது கேள்விக்கு அப்பாற்பட்டதாகும் இதனைப் பேராசிரியர் கிராலி நன்கு விளக்கியுள்ளார். தற்கால சமுதர்யத்தில் மனிதனின் மத வாழ்வு பற்றிப் பேசுகையில் அவர் கீழ்வருமாறு கூறுகிறார்:

> எப்படி, "ஒரு மனிதனின் மதம், அவனது தொழில் அல்லது சமூகப் பணியிலோ, அவனது விஞ்ஞான அல்லது கலைத்திறத்திலோ நுழைவதில்லை; நடைமுறையில், சாதாரண உலகானுபவ அக்கறைகள் தவிர்க்கப்படும் வாரத்தின் ஒரு நாளில் அது தனது பிரதான கோரிக்கைகளை நிறைவேற்றிக் கொள்கிறது. எதார்த்தத்தில், அவனது வாழ்வு இரு பகுதிகளைக் கொண்டது; ஆனால், மதம் சம்பந்தப்பட்ட அந்த அரைப்பாதி ஆதாரமானது. வாழ்வு, சாவு போன்ற இறுதிக் கேள்விகள் குறித்த ஆழ்ந்த சிந்தனை, பொதுவாகக் கூறப் போனால், அவனது ஓய்வு நாளின் சாராம்சமே; அத்துடன், உண்ணுவதற்கு முன்னர் நன்றி தெரிவிப்பது, பிறப்பு மற்றும் இறப்பு, திருமணம் மற்றும் அதன் தொடர்ச்சி ஆகியவை மதத்தினாலேயே முறையாக நடத்தப்பட்ட சடங்குகள் என்ற உள்ளுணர்வான உணர்ச்சிகள் ஆகியவற்றிற்குத் துதிபாடும் வழக்கத்தையும் சேர்த்துக் கொள்ளுங்கள்; அதேபோல், உருவகமாக மட்டுமோ அல்லது சமய உணர்வு அதிகமாகப் பாய்வதாலோ மட்டுமோ, சொந்தப் பணிகளும், இன்பங்களும் ஒருவேளை தெய்வீகத்திற்கு நேர்ந்து விடப்படலாம்".

தற்கால சமுதாயத்திலுள்ள மனிதனின் மதத் தொடர்பான அக்கறை விளக்கத்தினைக் காட்டு மிராண்டிகளின் அக்கறைகளோடு ஒப்பிடுகையில், கொள்கையிலும், நடைமுறையிலும், காட்டுமிராண்டி சமுதாயத்தின் மதத்தையோ அல்லது நாகரிக சமுதாயத்தின் மதத்தையோ பற்றி ஒருவர் பேசும்போது, அவை இரண்டும் ஒரே மாதிரியானவை என்பதை எவரேனும் மறுக்க முடியுமா?

ஆகவே, ஒரு அம்சத்தில் காட்டு மிராண்டி மற்றும் நாகரிக சமுதாயங்கள் ஒத்துப் போகின்றன என்பது தெளிவாகிறது. இரண்டிலுமே, மதத்தின் மைய நலன்கள் - அதாவது தனி மனிதர்கள் பாதுகாக்கப்பட்டு, இனம் செழிக்க வேண்டுமென்பது இரண்டிற்கும் ஒன்றுதான். இதில், இரண்டிற்குமிடையே எந்த மெய்யான வேறுபாடும்

இல்லை. ஆனால், மற்ற இரண்டு முக்கியமான அம்சங்களில் அவை வேறுபடுகின்றன.

முதலாவதாக, காட்டு மிராண்டி சமூக மதத்தில் கடவுள் கருத்து பற்றிய எந்த அடையாளமுமில்லை. இரண்டாவதாக, அந்த மதத்தில் ஒழுக்க நெறிகளுக்கும், மதத்திற்குமிடையே எந்தப் பிணைப்புமில்லை. காட்டு மிராண்டி சமுதாயத்தில், கடவுள் இல்லாத மதம் இருந்தது. அந்த சமுதாயத்தில், ஒழுக்க நெறிகள் இருந்தன; ஆனால், அவை மதத்திலிருந்து சுதந்திரமாக இருந்தன.

கடவுள் கருத்து எப்படி, எப்பொழுது மதத்துடன் ஒன்றிணைந்தது என்பதைக் கூறுவது சாத்தியமில்லை, சமுதாயத்தில் மாபெரும் மனிதனை - பாட்டுடைத் தலைவனை - வழிபடத் துவங்கியதில், வாழும் கடவுளின் மீது கொண்ட விசுவாசமானது ஆத்திகத்திற்குத் தோற்றுவாயாக இருந்திருக்கக் கூடும். வாழ்வினைத் தோற்றுவித்தது யார்? என்ற சுத்தமான தத்துவார்த்த ஆருடத்தின் விளைவாக - இறைமைக் கோட்பாட்டினை அது உருவாக்கி அண்டத்தின் சிற்பி[1] இறைவனே என்ற வகையிலும், ஆத்திகம் தோன்றியிருக்கக் கூடும். எப்படியாயினும், கடவுள் கொள்கை, மதத்துடன் முழுமையாக இணைந்ததல்ல. அது எப்படி மதத்துடன் ஒருங்கிணைந்தது என்பதை விளக்குவது கடினம். மதத்திற்கும், ஒழுக்க நெறிகளுக்குமிடையேயான, உறவுகளைப் பொறுத்து ஒரு விஷயத்தைத் துணிந்து கூறலாம். இறைவனுக்கும், மதத்திற்குமிடையேயான உறவு முழுமையான தல்ல என்றாலும் கூட, மதத்திற்கும், ஒழுக்க நெறிகளுக்குமிடையேயான உறவு முழுமையானது. வாழ்வு, சாவு, பிறப்பு, திருமணம் போன்ற மனித உயிர் வாழ்க்கையின் அதே ஆதார உண்மைகளுடன் தான், மதம், ஒழுக்கமுறை ஆகிய இரண்டுமே இணைக்கப்பட்டுள்ளன. மதம், வாழ்க்கைப் போக்குகளைத் தெய்வப் பணிக்கென ஒதுக்கி வைக்கிறது; அதேபோல, அவற்றைப் பேணிப் பாதுகாப்பதற்கான நியதிகளை ஒழுக்கமுறைமை அளிக்கிறது. வாழ்வின் ஆதார உண்மைகளையும், போக்குகளையும் தெய்வீகப் பணிக்கென மதம் ஒதுக்கும் அதே வேளையில், அவற்றைப் பாதுகாப்பதற்காக, சமுதாயம் விதித்துவைத்த விதிகளையும் அதற்கென ஒதுக்கிவிட முற்பட்டது. இந்தக் கருத்தோட்டத்திலிருந்து நோக்கின், மதத்திற்கும், ஒழுக்க நியதிகளுக்குமிடையேயான பிணைப்பு ஏன் ஏற்பட்டது என்பதை எளிதாக விளக்கி விடலாம். மதத்திற்கும், இறைவனுக்குமிடையேயுள்ள பிணைப்பினைக் காட்டிலும், அது மேலும் நெருக்கமானதும், மேலும் இயற்கையானதுமாகும். ஆனால்,

---

1. இந்த இரு திசை வழிகளிலும், ஆதிக்கம் உருவாகியிருக்கக்கூடும் என்பதை இந்து மதம் நன்கு விளக்கியுள்ளது. இந்திரனையும், பிரம்மனையும் கடவுளர்கள் என்ற கருத்தினை ஒப்பிடுக.

மதத்திற்கும், ஒழுக்க நியதிகளுக்கு மிடையேயான ஒருங்கிணைப்பு துல்லியமாக எப்பொழுது ஏற்பட்டது என்பதைச் சொல்வது எளிதல்ல.

அது அவ்வாறிருக்கட்டும். நாகரிக சமுதாயத்தின் மதம், காட்டு மிராண்டி சமுதாய மதத்திலிருந்து வேறுபட்டுள்ளது என்ற உண்மை இரண்டு முக்கியமான அம்சங்களைக் கொண்டது. நாகரிக சமுதாயத்தில், மதத்தினது திட்டத்தில் இறைவன் வருகிறார். நாகரிக சமுதாயத்தில், ஒழுக்க நெறிமுறைகள் மதத்தினால் புனிதத்துவம் பெறுகின்றன.

நான் கூறிவரும் மதப்புரட்சியின் முதற் கட்டம் இதுதான். மத வளர்ச்சியில் இந்த இரண்டு அம்சங்கள் உருவாகியதால், இங்கு மதப் புரட்சி முடிவடைந்து விட்டதாக கொள்ளக்கூடாது. நாகரிக உலகின் மதத் திட்டங்களில், இந்த இரு கருத்துகளும் அங்கமாகி விட்டதனால், அந்தக் கருத்துகள், மேலும் பல மாற்றங்களை அடைந்தன; அந்த மாற்றங்கள், அவற்றின் உட்பொருளையும், தார்மீக முக்கியத்துவத்தையும் புரட்சிகரமாக்கியுள்ளன. மதப் புரட்சியின் இரண்டாவது கட்டம், ஒரு பெரும் திடீர் மாற்றத்தைக் குறிக்கிறது. நாகரிகம் சமுதாயம் இரண்டாக - புராதன சமுதாயம் என்றும் நவீனசமுதாயம் என்றும்- பிளவுபடும் அளவிற்கு அந்த வேறுபாடு மிகப்பெரிதானதாகும்; அதன் விளைவாக நாகரிக சமுதாயத்தின் மதம் என்று பேசுவதற்குப் பதிலாக, நவீன சமுதாயத்தின் மதத்திற்கு எதிரான வகையில், புராதன சமுதாயத்தின் மதம் என்று பேச வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது.

நவீன சமுதாயத்திலிருந்து, புராதன சமுதாயத்தை வேறுபடுத்தும் மதப் புரட்சியானது, நாகரிக சமுதாயத்திலிருந்து, காட்டு மிராண்டி சமுதாயத்தைப் பிரித்துக் காட்டும் மதப் புரட்சியைக் காட்டிலும் மிகப் பெரிதாகும். கடவுள், சமுதாயம், மனிதன் ஆகியவற்றிற்கிடையேயான உறவுகள் குறித்த கருத்தோட்டங்களில் அது கொணர்ந்துள்ள வேறுபாடுகளிலிருந்து, அதன் பரிமாணங்கள் தெள்ளத் தெளிவாகத் தெரிகிறது.

வேறுபாட்டின் முதல் அம்சம், சமுதாயத்தின் இயைவு பற்றியதாகும்.

ஒவ்வொரு மனிதப் பிறவியும், தன் பங்கிற்கு விருப்பம் எதுவுமின்றி, ஆனால், தனது பிறப்பு மற்றும் வளர்ப்பின் காரணமாக, நாம் இயற்கை சமுதாயம் என்று அழைப்பதன் அங்கத்தினராகிறான். அவன் ஒரு குறிப்பிட்ட குடும்பத்திற்கும், ஒரு குறிப்பிட்ட தேசத்திற்கும் உரியவனாகின்றான். அந்த உறுப்பினர் அந்தஸ்து, அவன் மீது சில பொறுப்புகளையும், கடமைகளையும் சுமத்துகிறது; அவற்றை அவன் வழக்கமான நியதிப்படி நிறைவேற்ற வேண்டியவனாகின்றான்; இல்லையெனில் சமூகத் தண்டனைகளுக்கும், சட்டப்படியான

தகுதியின்மைக்கும் ஆளாக வேண்டியுள்ளது; அதே நேரத்தில், அது அவனுக்குச் சில குறிப்பிட்ட சமூக உரிமைகளையும், சாதகங்களையும் வழங்குகிறது. இந்த அம்சத்தில், புராதன மற்றும் நவீன உலகங்கள் ஒரே மாதிரியானவைதான். ஆனால், பேராசிரியர் ஸ்மித்தின்[1] வார்த்தைகளின்படி,

"இயல்பு என்பதன் தற்காலப் பொருள்படி பார்த்தால், புராதன உலகின் பழங்குடி அல்லது தேசிய சமுதாயங்கள், கறாரான இயல்புத் தன்மையுடையவை அல்ல; ஏனெனில் கடவுளர்களுக்கும் மனிதர்களுடன் சமமான பங்கும், இடமும் இருந்தது என்பது ஒரு முக்கியமான வேறுபாடாகும் - ஒரு மனிதன் பிறந்த வட்டமானது, அவனது சுற்றுக் குழுக்களையும், இதர சகப் பிரஜைகளையும் மட்டுமே தழுவியதாக இன்றி, சில தெய்வீகப் பிறவிகளையும், குடும்பக் கடவுளர்களையும் தழுவியதாக இருந்தது; அவையும், பழங்காலச் சிந்தனைப்படி, சமுதாய வட்டத்திலுள்ள மனித உறுப்பினர்களுடன் இணைந்து குறிப்பிட்ட இனத்தின் ஓர் அங்கமாகவே இருந்தனர். பண்டைய கடவுளர்களுக்கும், அவர்களை வழிபடுவோர்களுக்கு மிடையேயான உறவு, மனித உறவு பாஷையிலேயே வெளியிடப்பட்டன; இந்தப் பாஷையும், உருவகப் பொருளில்லாது சுத்தமான நேருண்மைப் பொருளிலேயே பயன்படுத்தப்பட்டது. ஒரு கடவுள் தந்தையென்றும், அவரை வழிபடுபவர்கள் அவரது வாரீசுகள் என்றும் பேசப்பட்டால், அதன் பொருள், வழிபடுபவர்கள் எதார்த்தத்தில் அவரது வழித் தோன்றல்கள் என்றும், குடும்பத்தில் ஒருவருக்கொருவர் ஆற்ற வேண்டிய கடமைகளைக் கொண்டதோர் இயல்பான குடும்பம் என்பதே அதன் பொருள். அல்லது கடவுளை மன்னர் என்றும், வழிபடுவோர்களைச் சேவகர்கள் என்றும் அழைத்தால், அதன் பொருள், அந்த அரசின் தலையாய வழிகாட்டுதல் அந்த ஆண்டவனின் கரங்களில் தான் உள்ளது என்றும், அரசு நிர்வாகத்திற்கு அவரது இசைவையும், எல்லா முக்கியமான விஷயங்களிலும், அவரது வழிகாட்டுதலைப் பெறவேண்டுமென்றும், அவரை அரசனுக்குரிய மதிப்பு, மரியாதை, வணக்கம், முகமலர்ச்சி உடன் தான் அணுக வேண்டும் என்பதேயாகும்.

"ஆகவே, ஒரு மனிதன், தனது சுற்றுப்புறச் சோதரர்களுடன் எத்தகைய உறவுடன் பிறக்கிறானோ, குறிப்பிட்ட கடவுளர்களிடமும் அதே ஸ்திரமான உறவுகளுடன் பிறக்கிறான்; மேலும், அவனது மதம், அதாவது, கடவுளர்களிடம் அவனுக்குள்ள உறவினால் நிர்ணயிக்கப்படும் அவனது நடத்தையைக் கருதி, சமூக அங்கத்தினன்

1. ஸ்மித், முன்னர் கூறப்பட்ட நூல்

என்ற அவனது ஸ்தானத்திற்கு, வழங்கப்பட்டுள்ள பொதுவான நடத்தைத் திட்டத்தின் ஒரு பக்கமேயாகும். மதச் செல்வாக்கு எல்லைக்கும், சாதாரண வாழ்வின் எல்லைக்கும் இடையே எந்தப் பாகுபாடும் கிடையாது. ஒவ்வொரு சமூகச் செயலும், மனிதர்களுடன், கடவுளர்களுக்கும் தொடர்பு உண்டு; ஏனெனில், சமூகக் குழு என்பது, மனிதர்களை மட்டுமே கொண்டதல்ல; அது கடவுளர்களையும், மனிதர்களையும் கொண்டது".

ஆக, பண்டைய சமுதாயத்தில், மனிதர்களும், கடவுளர்களும், ஒரு சமூக, அரசியல் மற்றும் மதத்தின் மூலம் ஒரு முழுமையடைந்திருந்தனர். கடவுளுக்கும், அவரை வழிபடுவோருக்கு மிடையேயான பண் பொற்றுமையை மதம் அடிப்படையாகக் கொண்டிருந்தது. நவீன சமுதாயம், தனது இயல்பிலிருந்து கடவுளைத் தவிர்த்து விட்டது. அதில் மனிதர்கள் மட்டுமே உள்ளனர்.

புராதன மற்றும் நவீன சமுதாயத்திற்கிடையேயான இரண்டாவது வேறுபாட்டு அம்சம், கடவுளுக்கும், சமூதாயத்திற்குமிடையேயான பிணைப்பு பற்றியதாகும். பண்டைய உலகில், பல்வேறு சமூகத்தினரும்,

"பற்பல கடவுளர்கள் இருப்பதை நம்பினர்; அவர்கள் தங்களது சொந்தக் கடவுளர்களையும், தங்களது எதிரிகளின் கடவுளர்களையும் உண்மையென ஏற்றுக் கொண்டனர்; ஆனால், தாங்கள் எந்த உதவியையும் எதிர்பார்த்திராத மற்றும் தங்களது பரிசுப் பொருள்களும், அர்ப்பணங்களும் வீணடிக்கப்படக்கூடிய நூதனக் கடவுளர்களை அவர்கள் தொழுவதில்லை. ஒவ்வொரு குழுவிற்கும் அதன் சொந்தக் கடவுள் இருந்தது; அல்லது சில வேளைகளில், இதர கடவுளர்களுக்கு எந்த விதத் தொடர்புமற்ற ஒரு ஆண் கடவுளும், பெண் கடவுளும் இருந்தன."[1]

பண்டைய சமுதாயத்தின் கடவுள் ஒரு பிரத்தியேக கடவுள் ஆகும். தனியொரு இனத்திற்கு அவர் சொந்தமானவர்; அதனுடன் அவர் பிணைக்கப்பட்டவர். இதற்குப் பெரும்பாலும் பொறுப்பு,

"வழிபாட்டாளர்களின் சச்சரவுகளுக்கும், சண்டைகளுக்கும் கடவுளர்கள் எடுத்துக் கொண்ட பங்கு ஆகும். அந்தக் கடவுளின் எதிரிகளும், அவரது மக்களின் எதிரிகளும் ஒரே சீரான வர்கள்தாம்; பழைய விவிலியத்தில் கூட, "ஜேஹோவாவின் எதிரிகள்", இஸ்ரேலின் எதிரிகளைத் தவிர வேறொருவருமல்லர். யுத்தத்தின் போது, ஒவ்வொரு கடவுளும், அவரது மக்களுக்காகப் போராடுகிறார்; வெற்றியும் அவருக்கே உரித்தானதாக்கப்படுகிறது. மோவாபியருக்கு

1. ஸ்மித், முன்னர் கூறியது

செமோஷ்ரும், அசிரியாவுக்கு ஆசீரும் வெற்றியை தந்துள்ளனர்; பெரும்பாலும், தெய்வீக உருவமோ அல்லது அடையாளமோ போரின் போது படையுடன் துணையாகச் செல்கிறது. யூதர்களின் (திருமுறைக் கட்டளைகள் அடங்கிய) பேழை, இஸ்ரேலின் பாசறைக்குக் கொண்டு வரப்பட்டபோது, இஸ்ரேலின் எதிரிகள் கூறினர். "பாசறைக்குக் கடவுளர்கள் வந்துள்ளனர்; அவர்தம் நடைமுறையிலிருந்து அவர்கள் நம்மை மீட்பர்; ஏனெனில், பால்பெராசிம் என்ற இடத்தில் தாவீது அவர்களைத் தோற்கடித்த போது, கொள்ளையடிக்கப்பட்ட பொருள்களின் ஒரு பகுதி, களத்திற்குக் கொண்டு வரப்பட்டிருந்த அவர்களது கடவுள் சிலைகளாகும். கார்த்தேஜினியர்கள், மாசிடோனிய பிலிப்புடன் செய்து கொண்ட ஒப்பந்தத்தில், "போரில் பங்கேற்ற கடவுளர்களைப்" பற்றிப் பேசும்போது, அவர்கள் போரின்போது தளபதியின் கூடாத்திற்கருகில் எழுப்பப்பட்டு, வெற்றிக்குப் பின்னர் கைதிகள் அதன் முன்னர் பலியிடப்பட்ட அந்த கூடாரத்தில் தங்கியிருந்தவர்களைப் பற்றியே குறிப்பிட்டனர் என்பதில் ஐயமில்லை. அதைப் போன்றே, "போரத்துக்கு எதிராக யாகூத் நம்முடன் போரிட்டார்", அதாவது யாகூத் என்ற கடவுளினது பிம்பம் போரில் எடுத்துச் செல்லப் பட்டது", என்று ஓர் அரபுக் கவிஞர் கூறுகிறார்.

இந்த உண்மை, கடவுளுக்கும், சமுதாயத்திற்கும் இடையேயான ஒருமைப்பாட்டினை ஏற்படுத்துகிறது.

"எனவே, கடவுளர்களுக்கும், அவற்றைத் தொழுவோருக்கும் இடையிலான ஒருமைப்பாட்டுக் கோட்பாட்டைப் பொறுத்தவரை, அரசியல் சமுதாயத்தின் குண விசேஷமாகத் திகழ்ந்த இந்தக் குறிப்பிட்ட தன்மை, தவிர்க்க இயலாதவாறு மதத்துறையிலும் தலைதூக்கிற்று. அதைப் போன்றே, ஒரு குறிப்பிட்ட கூட்டுக்குழுவைச் சேர்ந்த, அந்தக் குழுவின் அல்லது நகரின் கடவுளர்க்கு, அந்தக் குழுவின் மரியாதையும், சேவையும் மறுக்க இயலாதவாறு உரியதாகும் போது, அந்தக் கடவுளரின் எதிரிகளுக்கு, அவர் எதிரியாகவும், அன்னியர்களுக்கு அன்னியராவதும் அவசியமாகிறது"[1]

ஒரு கூட்டுக் குழுவுடன் கடவுள் இணைந்தும், அந்தக் கடவுள், அக்குழுவினருடன் இணைந்தும் இருந்தனர். கடவுள், அந்தக் குழுவினரது கடவுள் ஆனார்; அந்தக் குழுவினரோ, அக்கடவுளரால் தேர்ந்தெடுக்கப்பட்ட குழுவினர் ஆயினர்.

---

1. ஸ்மித், முன்னர் கூறியது

இந்தக் கருத்திற்கு இரண்டு விளைவுகள் உள்ளன. கடவுள் ஒரு சர்வாம்சக் கடவுளாக, அதாவது எல்லோருக்குமான கடவுளாக இருப்பதாக, புராதன சமூகம் கருதவில்லை. மனித சமுதாயத்தில் பொதுவாக அப்படி யொன்று இருக்க முடியும் என்பதையே புராதன சமூகம் கருத்தில் கொள்ளவில்லை.

பழங்கால சமுதாயத்திற்கும், நவீன சமுதாயத்திற்குமிடையேயான மூன்றாவது வேறுபாட்டு அம்சம், கடவுளின் தந்தைப் பருவம் குறித்த கோட்பாடு ஆகும். இந்தப் புராதன சமுதாயத்தில், கடவுளே, அவரது மக்களின் தந்தையாவார்; ஆனால் தந்தைப் பருவம் பற்றிய இந்தக் கருத்தின் அடிப்படை சடப்பொருள் சார்ந்ததாகவே இருந்தது.

"(கிறிஸ்துவ, யூத இனங்களைச் சாராத) புராதன நாடோடிப் பழங்குடியினரது மதங்களில், கடவுளர்களின் தந்தை அம்சம் என்பது இயல்பியலான தந்தை அம்சம் ஆகும். உதாரணமாக, குயவர்கள் உருவங்களை வடித்தெடுப்பதைப் போன்று, கடவுளர்கள் களிமண்ணிலிருந்து மனிதர்களை உருவாக்கினர் என்ற கிரேக்கர்களிடையே நிலவிய கருத்து, முந்தையதைக் காட்டிலும் நவீனமானது. அதற்கு முந்திய பழைய கருத்தானது, கடவுளர்களே மனித இனங்களின் மூதாதையர், அல்லது கடவுளர்களுக்கும், மனிதர்களுக்கும் பொதுவானவை பூமியின் குழந்தைகளே அவர்கள் என்பதாகும். எனவே மனிதர்கள், கடவுளர்களது வம்சாவழியினர் அல்லது உறவினர் என்பதும் ஆகும். பழைய செமிடிய இனத்தவரும் இதே கருத்தைக் கொண்டிருந்தனர் என்பது பைபிளிலிருந்து தெரிய வருகிறது. சடப் பொருளைப் பார்த்து "நீயே என் தந்தை" என்றும் ஒரு கல்லிடம் "நீயே என்னைக் கொணர்ந்தாய்" என்றும் உருவவழிபாட்டாளர்கள் கூறியதாக ஏரேமியா விவரிக்கிறார். புராதனப் பாடலொன்றில், மோவாப் இனத்தவர் சேமோஷின் புத்திர, புத்திரிகள் என்று அழைக்கப்படுகின்றனர். அதற்குப் பின்னர் மிகச் சமீபகாலத்தில், தீர்க்கதரிசியான மலச்சி, ஒரு நாடோடிப் பெண்ணை "ஒருவிந்தையான கடவுளின் மகள்" என்றழைத்தார். யூதர்கள் அல்லாத இஸ்ரேலின் அண்டைநாட்டினர் தமது மொழியில் சேர்த்துக் கொண்ட சொற்றொடர்கள் அவை. சிரியாவிலும், பாலஸ்தீனத்திலும் ஒவ்வொரு இனக்குழுவும் அல்லது ஒரு சிறிய சுதந்திரமக்களாக வாழ்ந்த, சில குழுக்களின் கூட்டும், தமது தோற்றத்தின் மூலத்தை ஒரு மாபெரும் முதலாவது தந்தையில் தேடினர்; கிரேக்க நாட்டில் போன்றே, இனத்தந்தை அல்லது இனத்தின் முன்னோடி, அந்த இனத்தின் பொதுவான கடவுளர் என்று இனம் காணப்பட்டனர். உலகத் தோற்றம் பற்றிய விவிலிய நூலில், தேசங்களின் பழைய மரபு வழி வரலாற்றில், பல கடவுளர்களின் பெயர்கள் இடம் பெற்றுள்ளன என்று பல நவீன

ஆய்வாளர்கள் நிர்ணயித்துள்ளனர். உதாரணமாக, ஈடோமைட்டுகளின் மரபு மூல முதல்வரான ஈடோம், யூதர்களால், யாகோபின் தமையரான ஈஸாவுடன் இனங்காணப்பட்டார்; ஆனால், " ஈடோமை வணங்குபவர்" என்ற பொருள் கொண்ட, ஒபிதேதொம் என்ற பெயர்ச் சொல்லிலிருந்து தெரிவதைப் போன்று, யூதர்களல்லாதவர்களுக்கு, அவர் ஒரு கடவுளே; குல மரபு மதமும், தனிப்பட்ட கடவுளர்களுக்கு, குறிப்பிட்ட உறவுகளுடன் ஆன தொடர்பும் மறக்கப்பட்டு, பின்னணிக்குச் சென்று விட்ட காலத்திலிருந்து, போனீசிய மற்றும் பாபிலோனிய அண்டப் பிறப்புக் கோட்பாடுகளில் மீதமிச்சம் இருப்பனவற்றிலிருந்து அது தெரிய வருகிறது. ஆனால், ஒரு பொதுவான வடிவில், மனிதர்கள், கடவுளர்களின் வழித்தோன்றல்கள் தாம் என்ற கருத்து இன்றளவும் நீடிக்கிறது. பிலோ பாப்பிலியசின் போனீசிய அண்டப் பிறப்புக் கோட்பாட்டில், ஆசிரியர்,புராணங்களை வரலாற்று அடிப்படையில் விளக்க முற்படுவதால், அது ஒரு குழப்பமான உருவில் தென்படுகிறது; அதாவது, தங்கள் இனத்தவர்களுக்குப் பெரும் ஆதரவாக இருந்த வழிபாட்டுக்குரிய மனிதர்களைக் காட்டிலும், கடவுளர்கள் வேறல்லர் என்பதே அவரது தத்துவம். மேலும், பெரோசசினால் பாதுகாக்கப்பட்ட சால்தியன் புராணக் கதையில், மனிதர்கள், கடவுளர்களின் இரத்தத்திலிருந்து தோன்றியவர்களே என்ற நம்பிக்கை தெரிவிக்கப்பட்டுள்ளது; அது பண்படாத முறையில் கூறப்பட்டிருப்பதிலிருந்து, அது மிகப் புராதன காலத்ததாக இருக்க முடியாது; துண்டிக்கப்பட்ட கடவுளின் இரத்தத்துடன் களிமண்களைச் சேர்த்து விலங்குகளும், மனிதர்களும் உருவாக்கப்பட்டனர் என்று கூறப்படுகிறது"[1].

கடவுளர்க்கும், மனிதர்களுக்கும் உள்ள இந்த இரத்த சம்பந்தக் கோட்பாட்டிற்கு ஒரு முக்கிய விளைவு உள்ளது. புராதன உலகில், கடவுள் ஒரு மனிதப் பிறவியே; அதன்படி, முழுமையான ஒழுக்கமோ, முழுமையான பண்புகளோ அந்தக் கடவுளுக்கு இருந்திருக்க முடியாது. மனிதனது இயல்பியல் தன்மையைக் கடவுள் பகிர்ந்து கொண்டார்; மனிதன் எத்தகைய உணர்ச்சிகளுக்கும், குறைகளுக்கும், தீயனவற்றிற்கும் ஆட்படுவானோ அவை கடவுளையும் பீடிக்கும். அந்தப் புராதன கடவுளுக்கு மனிதனுக்குள்ள அத்தனை தேவைகளும், பசியும் இருந்தன; பல மனிதர்களின் களியாட்டத் தீமைகளில் கடவுளும் ஈடுபட்டார். தங்களைத் தீய கவர்ச்சிகளுக்கு இட்டுச் சென்று விடாதவாறு பக்தர்கள் கடவுளிடம் முறையிட வேண்டியிருந்தது.

1. ஸ்மித், முன்னர் கூறியது

நவீன சமுதாயத்தில், தெய்வத் தந்தை என்ற கருத்தானது, இயற்கையான தந்தை என்ற இயல்பான அடிப்படையிலிருந்து முழுவதுமாக விலகி விட்டது. அதற்குப் பதிலாக, கடவுளின் பிம்பத்திலிருந்து, மனிதன் உருவாக்கப்பட்டான்; அவன் கடவுள் பெற்றெடுத் ததாகக் கருதப்படவில்லை. கடவுளின் தந்தை அம்சம் பற்றிய கருத்தில் ஏற்பட்ட இந்த மாற்றமானது, அதன் தார்மீக கோணத்திலிருந்து நோக்கின், அண்டத்தின் ஆளுநராகிய கடவுளின் தன்மையில் பெருத்த மாறுபாட்டை ஏற்படுத்திற்று. அவரது இயல்பான அடிப்படையில், முழு முதல் நன்மைக்கோ, முழுமையான நற்பண்புகளுக்கோ உரியவராக முடியாது. கடவுளுக்கே நேர்மையுணர்வு தேவைப்படும்போது, நேர்மையை ஒரு மாற்றமுமில்லாக் கோட்பாடாக அகிலம் வலியுறுத்த முடியாது. இவ்வாறு, மனிதனின் இயல்பான தொடர்பிலிருந்து கடவுள் விலக்கப் பட்டதால், அவரை முழுமையான நற்பண்புகளைக் கொண்டவராக உருவகப்படுத்துவது சாத்தியமாயிற்று.

நான்காவது வேறுபாட்டு அம்சமானது, தேசியஇன மாற்றம் நிகழும்போது, மதம் வகிக்கும் பங்கு பற்றியதாகும்.

புராதன உலகில், மத மாற்றத்துடன் இணைந்து நடந்தாலன்றி, தேசிய இன மாற்றம் சாத்தியமானதல்ல. புராதன உலகில்,

> "ஒரு தனி நபர், தனது தேசிய இனத்தை மாற்றிக் கொள்ளாமல், தனது மதத்தை மாற்றிக் கொள்வது முடியாத விஷயம்; எனவே, ஒரு முழு சமுதாயமுமே, வேறொரு தேசத்தால் கிரஹிக்கப் பட்டாலொழிய, அந்தச் சமுதாயம் தனது மதத்தை மாற்றிக் கொள்வது சாத்தியமல்ல. அரசியல் பிணைப்புகளைப் போல, மதமும் தந்தையிடமிருந்து, மகனுக்குக் கடத்தப்பட்டது; ஒரு மனிதன் தன்னிச்சைப்படி, ஒரு புதிய கடவுளைத் தேர்ந்தெடுக்க முடியாது; அவன் தனது வழிவந்த கடவுளுடனான உறவை, சபதம் எடுத்துக் கொண்டு துறந்து, ஒரு புதிய நாகரிக வட்டத்திலும், மத வாழ்விலும் ஏற்றுக் கொள்ளப்பட்டாலொழிய, தனது தந்தையர்களின் கடவுளர்களே, அவன் நட்புரீதியிலும், வணக்கத்திற்குரிய முறையிலும் ஏற்றுக் கொள்ளத்தக்க கடவுளர்களாவர்".

ஒரு சமூகக் கூட்டிணைவுக்கு முன்னோடியாக மதமாற்றம் எவ்வாறு ஒரு நிபந்தனையாக விளங்கிற்று என்பதைப் பழைய ஏற்பாட்டில், நகோமிக்கும், ரூத்துக்குமிடையேயான உரையாடலில் தெளிவாகக் காணலாம்.

"உனது தமக்கை, தனது மக்களிடமும், தனது கடவுளர்களிடமும் மீண்டும் சென்று விட்டாள்" என்று நகோமி ரூத்திடம் கூற, அதற்கு ரூத்தின் பதில்: "உனது மக்களே எனது மக்களாயிருப்பர்; உனது

கடவுளே எனது கடவுளுமாகும்".

புராதன உலகில், தேசிய இன மாற்றத்துடன், மத வழிபாட்டு மாற்றமும் அடங்கியதே என்பது தெளிவாகத் தெரிகிறது. சமூகக் கூட்டிணைவு என்பது மதக் கூட்டிணைவு என்றே பொருள் கொண்டிருந்தது.

நவீன சமுதாயத்தில், மதத்தைக் கைவிடுவதோ, வேறொரு மதத்தை ஏற்றுக் கொள்வதோ, சமூக இணக்கத்திற்குத் தேவையற்றது. நவீன காலக் குடியுரிமை சட்ட விதிகளிலிருந்து அது தெளிவாகிறது; அதன்படி ஒரு அரசின் பிரஜை, அந்த நாட்டின் குடியுரிமையைத் துறந்து, ஒரு புதிய நாட்டின் குடி மகனாகலாம்.

இந்தக் குடியுரிமை மாற்றப் போக்கில், மதத்திற்கு எந்த இடமும் இல்லை. ஒரு மதக் கூட்டிணைவு இன்றியே, சமூகக் கூட்டிணைவு, குடியுரிமை மாற்றம் என்பது அதற்கு மற்றொரு பெயர் - ஏற்பட முடியும்.

புராதன சமுதாயத்திலிருந்து, நவீன சமுதாயத்தை வேறுபடுத்தும்போது, நவீன சமுதாயம் மனிதர்களை மட்டுமே கொண்டது என்று கூறுவது மட்டும் போதுமானதல்ல. வேறுபட்ட கடவுளர்களைத் தொழும் மனிதர்களைக் கொண்டது என்றும் சேர்த்துச் சொல்ல வேண்டும்.

ஐந்தாவது வேறுபாட்டு அம்சமானது, மதத்தின் பகுதியான, கடவுளின் தன்மை குறித்த அறிவின் அவசியம் பற்றியதாகும்.

"புராதனக் கண்ணோட்டத்திலிருந்து, கடவுளர்கள் எப்படிப்பட்டவர்கள் என்பது ஒரு மதப் பிரச்சினையல்ல; அது ஊகத்தை அடிப்படையாகக் கொண்டது; மதத்திற்குத் தேவைப் படுவதெல்லாம், கடவுள் செயல்படும் விதிகளைப் பற்றியும், அதனடிப்படையில், அவரைத் தொழுபவர்கள் தமது செயல்பாட்டினை எவ்வாறு வகுத்துக் கொள்ள வேண்டும் என்று அவரது எதிர்பார்ப்பைப் பற்றியும் நடைமுறையில் தெரிந்து கொள்வதேயாகும் - அதாவது, நாட்டுக் கடவுளரது "போக்கு" அல்லது "வழிவழி வந்த விதிகள்" என்பனவற்றைத் தெரிந்து கொள்வதேயாகும். (இது பழைய ஏற்பாட்டில் "அரசர்கள் 17. 26 ல் காணப்படுகிறது) இஸ்ரேலின் மதத்தைக் குறித்தும் இதுவே உண்மை. இஸ்ரேலின் தெய்வ ஆட்சியினது சட்டங்கள், கோட்பாடுகள் குறித்த அறிவு பற்றி மத குருக்கள் பேசும் போது, மொத்தத்தில் மதம் பற்றிய வெளிப்பாடானது, "(யூதக் கடவுளான) எகோவாவைப் பற்றிய அறிவும், அடக்கமுமே" ஆகும்; அதாவது மரியாதைக்குரிய பணிவுடன், எகோவா பரிந்துரைத்தது பற்றிய அறிவே அது. எல்லா மத ஊகங்கள் குறித்த அதீத ஐயுறவுக் கருத்து (சாலமன் எழுதியதாகக்

கருதப்படும்) திருச்சபை நூலில் பரிந்துரைக்கப்படுகிறது; பக்தியே சரியான போக்கு என்று அது கூறுகிறது; ஏனெனில், எத்துணை விவாதம் புரிந்தாலும், "கடவுளுக்கு அஞ்சி, அவரது ஆணைப்படி ஒழுக வேண்டும்" என்ற தெளிவான விதிக்கு அப்பால், அந்த விவாதம் மனிதனை இட்டுச் சென்றுவிடப் போவதில்லை. இந்த ஆலோசனையை ஆசிரியர் சாலமன் வாயிலாகக் கூறுகிறார்; மிக நவீன காலத்தில், துரதிருஷ்டவசமாக, மதிப்பிழந்து வரும் மதத்தின் பழைய கண்ணோட்டத்தைத் தொகுத்துரைக்கையில், நியாயமாகவே அக்கருத்தினைப் பிரதிபலித்துள்ளார்".

ஆறாவது வேறு பாட்டு அம்சம், மத நம்பிக்கையின் இடம் பற்றியதாகும். புராதன சமுதாயத்தில்,

"கறாராகக் கூறுமிடத்து, சடங்குகளும், நடைமுறைப் பயன்பாடுகளுமே, புராதன மதங்களின் ஒட்டு மொத்தமாகும். ஆரம்ப காலங்களில், மதம் என்பது, நடைமுறைப் பிரயோகங்களுடன் கூடிய ஒரு நம்பிக்கை அமைப்பு அல்ல; அது நிலையான பாரம்பரிய செயல் பாடுகளைக் கொண்டதொரு திரள் ஆகும்; மன உறுதி சார்ந்ததாக, சமூகத்தின் ஒவ்வொரு உறுப்பினரும் அவற்றைப் பின்பற்றினர். தமது செயல்களுக்கான தொரு காரணம் இன்றி, சில விஷயங்களைச் செய்ய மனிதர்கள் ஒத்துக் கொண்டால், மனிதர்கள், மனிதர்களாக இருக்க மாட்டார்கள்; ஆனால், புராதன மதத்தில், காரணமானது, ஒரு கோட்பாடாக முதலில் உருவாக்கப்பட்டு, அதன்பின், அது நடைமுறையாக வெளியிடப்படவில்லை; மாறாக, கோட்பாட்டுத் தத்துவத்திற்கு முன்னர் செயல்முறை ஏற்பட்டு விட்டது. மனிதர்கள் பொதுக் கோட்பாடுகளை வார்த்தைகளில் வெளியிடத் துவங்கு முன்பே செயல்பாட்டுக்கான பொது விதியை வகுத்துக் கொண்டனர்.

அரசியல் தத்துவங்களைக் காட்டிலும், அரசியல் அமைப்புகள் பழைமையானவை; அதே போன்று மதக் கோட்பாடுகளைக் காட்டிலும், மத அமைப்புகள் பழைமையானவை. இந்த ஒப்புமை தன்னிச்சையாகத் தேர்ந்தெடுக்கப்படவில்லை; ஏனெனில், புராதன சமூகத்தில், மத, அரசியல் அமைப்புகளுக்கிடையேயான இணைவு முழுமை பெற்றிருந்தது. ஒவ்வொரு துறையிலும், வடிவத்திற்கும், முன் நிகழ்வுக்கும் பெரும் முக்கியத்துவம் அளிக்கப்பட்டது; ஆனால், அந்த முன் நிகழ்வு ஏன் பின்பற்றப்படுகிறது என்பதற்கான விளக்கம், அதன் ஆரம்ப அமைப்பு குறித்து வெறும் கட்டுக்கதையிலேயே அடங்கியுள்ளது. ஒரு முறை நிறுவப்பட்டு விட்டால், அந்த முன் நிகழ்வு அதிகார பூர்வமானதாகி விடுகிறது; அதற்கு எந்த ஆதாரமும் கூட தேவைப்படாததாகிறது. சமூகத்தின் விதிகள் முன் நிகழ்வுகளின் அடிப்படையிலேயே அமைந்தன; ஒரு காலத்தில் நிறுவப்பட்ட முன்

நிகழ்வு தொடர்ந்து பின்பற்றிவரப் படுவதற்கு, அவ்வாறு அமைந்த சமூகம் தொடர்ந்து நீடித்து வருவதே போதுமான காரணமாயிற்று".

ஏழாவது வேறுபாட்டு அம்சமானது, மதத்தில் தனிமனிதனின் பற்றுறுதி பற்றியதாகும். புராதன சமூகத்தில்:-

"ஒரு மனிதன் பிறந்துள்ள கூட்டிணைவானசமூக வாழ்வின் ஒரு பகுதியாக மதம் இருந்தது; தாங்கள் வாழும் சமூகத்தில், எவ்விதம் மனிதர்கள் தன்னுணர்வின்றி எந்த வழக்கமான நடைமுறையையும் கடைப்பிடிக்கிறார்களோ, அது போன்றே அந்த வாழ்க்கையுடன் அவர்கள் ஒட்டி ஒழுகுகின்றனர். அன்றிருந்த இதர பழக்க வழக்கங்கள் எவ்வாறு ஆராயப் புகாமல் ஏற்றுக் கொண்டார்களோ, அதே போன்று கடவுளர்களையும், அவற்றின் வழிபாட்டையும் மனிதர்கள் ஏற்றுக் கொண்டனர்; அவை குறித்து அவர்கள் ஊகிக்கவோ, உய்த்துணரவோ முயன்றாலும், அந்தப் பாரம்பரிய செயல்பாடுகள், நிலையானவை என்றும், அதற்கு அப்பால் அவர்களது சிந்தனை செல்லக் கூடாது என்றும், எந்த உய்த்துணரலும் அவற்றை வீழ்த்த முடியாது என்றதுமான முற்கோளுடனேயே சிந்தித்தனர். நவீன காலத்தைச் சேர்ந்த நமக்கோ, மதம் என்பது எல்லாவற்றைக் காட்டிலும், ஒரு தனி மனித உறுதிப்பாடு, உய்த்துணர்ந்த நம்பிக்கை, ஆகியவை பற்றிய விஷயம்; ஆனால், புராதன மக்களுக்கு, அது பிரஜைகளின் பொது வாழ்வின் ஒரு பகுதி; மனிதன் புரிந்து கொள்ளக் கூடாததும், அதனை இடித்துரைக்கவோ, புறக்கணிக்கவோ கூடாததுமான, நிலையான வடிவங்களில் வடித்தெடுக்கப்பட்டவை. மதத்தை ஒட்டி ஒழுகாதிருப்பது அரசுக் கெதிரானதொரு குற்றம் ஆகும்; ஏனெனில், புனிதமான மரபுகளில் தலையிடுவதானது, சமூகத்தின் அடிப்படையை வீழ்த்துவதாகும்; கடவுளரின் ஆதரவினை இழப்பதாகும். ஆனால், வகுத்துரைக்கப்பட்ட முறைகள், ஒழுங்காகப் பின்பற்றப்பட்டு வரும் வரையில், அந்த மனிதன், உண்மையான பக்திமானாக அங்கீகரிக்கப்பட்டான்; எப்படி அவனது மதம் அவனது நெஞ்சில் வேரோடியுள்ளது என்றும், எப்படி அது அவனது சிந்தனையைப் பாதிக்கிறது என்றும் எவரும் கேள்வி எழுப்பவில்லை. அரசியல் கடமையைப் போன்றே - அதுவும் மதத்தின் ஒரு பகுதியே - புற நடவடிக்கைக்கான சில குறிப்பிட்ட நிலையான விதிமுறைகளைக் கடைப்பிடித்து ஒழுகுவதே மதம் என்று முழுவதுமாக உணரப்பட்டது".

வேறுபாட்டின் எட்டாவது அம்சம் ஆனது, கடவுளின் தெய்வீகத்தைப் பொறுத்து கடவுளுக்கும், சமூகம் மற்றும் மனிதனுக்கிடையேயும், சமூகத்திற்கும் மனிதனுக்குமிடையேயும் உள்ள உறவு பற்றியதாகும்.

முதலில், சமூகத்துடன், கடவுளின் உறவு பற்றிய வேறுபாட்டினை எடுத்துக் கொள்வோம். இது சம்பந்தமாக, மூன்று அம்சங்கள் குறிப்பிடத்தக்கவை.

புராதன உலகின் கடவுட் பற்று,

"பௌதீக இயல்பு நிலைக்கு மேலாக எதையும் கோரவில்லை; கடவுளிடம் வேண்டிய நல்லனவெல்லாம், உலக வாழ்வில் அவரது ஆசிகளையும், இக வாழ்வுக்குரிய - ஆன்மீகம் அல்ல - வசதிகளும் தான்".

புராதன சமுதாயங்கள் கடவுளிடம் வேண்டியதும், தங்களது கடவுளிடமிருந்து தாங்கள் பெற்றதாக நம்பியவையும் பிரதானமாக கீழ்க்கண்டவைகளேயாகும்.

"நல்ல செழிப்பான மகசூல்கள், அவர்தம் விரோதிகளுக் கெதிரான உதவி, இயற்கைப் பேரிடர்களின் போது தெய்வ வாக்களிப்போர் அல்லது குறி சொல்வோரின் ஆலோசனைகள்".

புராதன உலகில்,

"மதம் என்பது ஒரு தனி மனிதனின் விஷயமல்ல; அது ஒரு சமுதாய விஷயம். தெய்வத்தின் நிரந்தரமான, கைவிடாத ஆதரவினை நிச்சயமாக நம்பியது சமுதாயமேயன்றி, தனி நபர்கள் அல்ல".

அடுத்து, கடவுளுக்கு மனிதனுடன் ஆன உறவு பற்றி...

"ஒவ்வொரு தனி மனிதனின் நலனையும் சில விசேஷ தெய்வக் காவலர்களின் மூலம் கவனித்துக் கொண்டிருப்பது புறச் சமயக் கடவுளர்களது வேலை அல்ல. தனி நபர்கள் தங்களது சொந்த விஷயங்களைக் கடவுளர்கள் முன் வைத்து, தங்களுக்கு மட்டுமே ஆசிகள் கோரித் தொழுது வேண்டுகின்றனர் என்பது உண்மைதான். ஆனால், இதனை அவர்கள், ஒரு மன்னரிடமிருந்து கோரும் சொந்த வரம் போன்றே, ஒரு தந்தையிடம் மகன் கெஞ்சிக் கேட்பது போன்றே - கேட்பவை அனைத்தும் கிடைத்து விடும் என்று எதிர்பார்ப்பின்றி - கோருகின்றனர். இது விஷயத்தில், கடவுளர்கள் தனிப்பட்ட முறையில் கருணை காட்டக் கூடும்; சமுதாயத் தலைவர்கள் என்ற நிலையில் அவர்கள் ஆற்றவேண்டிய பணிகளின் பகுதி அல்ல அவை".

"கடவுளர்கள், ஒரு மனிதனின் பொது வாழ்வினைக் கவனித்து வருகின்றனர்; வருடாந்தர மகசூல், கனிகள், தேசிய அமைதியோ எதிரிகளின் மீது வெற்றியோ போன்ற பொது ஆதாயங்களில் அவனது பங்கினை அவர்கள் வழங்குகின்றனர்; ஆனால், தனி மனிதனின் ஒவ்வொரு சொந்தத் தேவைக்கும் நிச்சயமான

உதவியாளர்கள் அல்லர் அவர்கள்; அனைத்திற்கும் மேலாக, மொத்தத்தில் சமுதாய நலன்களுக்கு எதிரான விஷயங்களில் அவர்கள் அவனுக்கு உதவுவதில்லை. எனவே, மதம் உதவமுடியாத, உதவாத எத்துணையோ சாத்தியமான பல தேவைகள், இச்சைகளின் தொடர்கள் உள்ளன"

அடுத்து, மனிதன் குறித்து, கடவுள் மற்றும் சமூகத்தின் மனப்போக்கு குறித்த வேறுபாடு.

புராதன உலகில், தனி மனித நலனில் . சமுதாயம் அசிரத்தையாயிருந்தது. சந்தேகமில்லாமல், கடவுள் சமூகத்துடன் பிணைந்துள்ளவர். ஆனால்,

"கடவுளுக்கும், அவரைத் தொழுவோர்க்கும் இடையேயான இணைப்பு ஆனது சமுதாயத்தின் ஒவ்வொரு உறுப்பினரது சொந்தக் கவலைகளையும் கடவுள் தனது சொந்தக் கவலையாக எடுத்துக் கொள்ள வேண்டுமென்று, தெய்வத்திற்கு உறுதி அளிக்கவில்லை".

"கடவுளிடமிருந்து எதிர்ப்பார்க்கப்படும் நலன்கள், சமுதாயம் முழுவதையுமே பாதிக்கும் பொதுவான தன்மை -குறிப்பாக, நல்ல பயனுள்ள பருவநிலை, மந்தைகள் பெருக்கம், யுத்தத்தில் வெற்றி பற்றியதாகும். சமுதாயம் செழித்தோங்கும் போது, ஒரு தனி மனிதன் துயருறும் உண்மையானது, கடவுளின் தெய்வீகத்திற்கு இழுக்குச் சேர்க்காது".

அதற்கு மாறாக. ஒரு மனிதனின் துயரத்தை, புராதன உலகமானது கீழ்க்கண்டவற்றிற்கான நிரூபணமாகக் கண்டது:

"அப்படித் துயருறுபவன் ஒரு கொடியவன்; கடவுளர்கள் நியாயமாகவே அவனை வெறுக்கின்றனர். அத்தகைய மனிதன், பண்டிகை தினங்களின் போது தெய்வ சன்னிதியில் கூடும் மகிழ்ச்சியான, வளமையானவர்களின் கூட்டத்தில் இருக்க லாயக்கற்றவன்"

இந்தக் கருத்திற்கு ஏற்பவே, மதச் செயல்பாடுகளிலிருந்தும், சமுதாய வாழ்வின் வசதிகளிலிருந்தும், குஷ்டரோகிகளும், துயரம் கொண்டாடுவோரும் விலக்கப்பட்டுள்ளன்ர்; அவர்களது உணவு தெய்வ இல்லத்திற்குக் கொண்டு வரப்படுவதில்லை.

ஒரு தனி நபருக்கும், மற்றொரு தனி நபருக்கும் உள்ள மோதல் குறித்தோ, சமூகத்திற்கும் தனி நபருக்கும் உள்ள மோதல் குறித்தோ, கடவுளுக்கு அக்கறை கிடையாது. புராதன உலகில்:

"மனித விவகாரங்களைச் செப்பனிடுவதிலேயே (கடவுள்) எப்பொழுதும் முனைந்திருக்க வேண்டும் என்று

எதிர்ப்பார்க்கப்படவில்லை. சாதாரண விஷயங்களில், தங்களுக்கும், தங்கள் சொந்த உறவினர்களுக்கும் உதவுவது மனிதர்களின் வேலையாகும்; எனினும், கடவுள் எப்போதும் அருகில் உள்ளார், தேவைப்படும் போது அவரை அழைத்துக் கொள்ளலாம் என்ற உணர்வு, சமுதாய நேர்மையையும், ஒழுங்கையும் பராமரிப்பதற்கு ஓரளவுக்கு தொடர்ந்து உதவும் ஒரு தார்மீக சக்தியாக இருந்தது. இந்த தார்மீக சக்தியின் பலம் பெரிதும் நிச்சயமற்றதாக இருந்தது; ஏனெனில், தான் செய்யும் குற்றம் புறக்கணிக்கப்பட்டு விடும் என்று ஒரு குற்றவாளி பெருமையடித்துக் கொள்வது எப்பொழுதும் சாத்தியமானதே".

புராதன உலகில், தன்னிடம் நேர்மையாக இருக்குமாறு, மனிதன் கடவுளைக் கேட்கவில்லை.

"சமூக அல்லது சமயச் சார்பற்ற விஷயங்களில், கூட்டமைப்பினரைப் பற்றி மிகுதியாகவும், தனி மனித வாழ்க்கை பற்றிக் குறைவாகவும் சிந்திப்பதே பழைய உலகின் பழக்கமாக இருந்தது; அது ஒரு மனிதனுக்குக் கஷ்டத்தை ஏற்படுத்திய போதும், அது அநியாயமானது என்று எவரும் கருதவில்லை. கடவுள் என்பவர் தேசிய அல்லது அந்தக் கூட்டுக் குழுவிற்குக் கடவுள்; அந்தக் கூட்டுக் குழுவின் அங்கத்தினர் என்ற அளவில் மட்டுமே, தனி நபரைக் கடவுள் அறிவதோடு, அந்த அளவுக்கு அவனிடம் அக்கறை காட்டுகிறார்".

புராதன உலகில், ஒரு மனிதன் தனது சொந்த துரதிருஷ்டம் குறித்து அந்த மனப் போக்கையே கொண்டிருந்தான். கடவுளின் முன் மனிதன் மகிழ்ச்சிக் கூத்தாடினான்; மற்றும்,

"அவ்வாறு செய்யும்போது, அவன் தன் உற்றார் உறவினருடன், அவர்களுக்காகவும், அவனது அண்டை அயலார் மற்றும் அவனது நாட்டு நலனுக்காகவும் தொழுகை எனும் பக்திச் செயல் மூலம் அதன் கடவுளுடனான தனது பிணைப்பினைப் புதுப்பிக்கும்போது, அவன் தன் குடும்பம், சமூக மற்றும் தேசியக் கடமைகளுடனும் தன் பிணைப்பைப் புதுப்பித்துக் கொள்கிறான்".

புராதன காலத்து மனிதன், தன்னைப் படைத்தவன் தன்னிடம் நேர்மையாக இருக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்ளவில்லை.

மதத்தில், இந்த இதர புரட்சி அவ்வாறு தான் இருந்தது.

இவ்வாறாக, இரண்டு மதப் புரட்சிகள் இருந்துள்ளன. ஒன்று ஒரு புறப் புரட்சி; மற்றொன்று அகப் புரட்சி. மதத்தின் மேலாண்மை நிலவிய களத்தினுள் புறப் புரட்சி சம்பந்தப்பட்டிருந்தது. மனித சமூகத்தின், தெய்வீக ஆட்சி அமைப்புக்காக, மதத்தில் மாற்றங்களைப் பற்றியது

தனக்குச் சொந்தமில்லாததொரு களத்தின் மீது, அத்துமீறி மதம் ஆட்சி அதிகாரம் செலுத்துவதற்கெதிராக அறிவியல் செய்த கிளர்ச்சியே அது. அகப் புரட்சியே, உண்மையான புரட்சியாகும்; பிரெஞ்சுப் புரட்சி அல்லது ரஷ்யப் புரட்சி போன்ற இதர எந்த அரசியல் புரட்சியுடனும் அதனை ஒப்பிடலாம். சட்டபூர்வ மாற்றத்தைத் தன்னுட் கொண்டது அது. இந்தப் புரட்சியின் மூலம், தெய்வீக ஆட்சி அமைப்பானது, மாற்றப்பட்டது, திருத்தப்பட்டது. புனரமைக்கப்பட்டது.

தெய்வீக ஆட்சி என்ற புராதன அமைப்பில் இந்த அகப் புரட்சி ஏற்படுத்திய மாற்றங்கள் எவ்வளவு ஆழ்ந்தவை என்பதை எளிதில் கண்டு கொள்ளலாம். இந்தப் புரட்சியின் மூலம், கடவுள், சமுதாயக் கூட்டுக் குழுவின் அங்கத்தினராக விருப்பது நின்றது. அதன் மூலம் அவர் பாரபட்சமற்றவராகிறார். அந்தச் சொல்லின் இயல்புப் பொருளின்படி கடவுள், மனிதனின் தந்தையாக மாட்டார். அவர் அண்டத்தை ஆக்குவிப்பவராகிறார். இந்த இரத்த பந்தத்தை உடைப்பதானது, கடவுள் நல்லவர் என்று கருதுவதைச் சாத்தியமாக்குகிறது. தான் ஏதும் செய்யாமல், கடவுளது ஆணைகளுக்குப் பணிந்து நடக்கும் ஒரு குருட்டுத்தனமான கடவுள் வழிபாட்டாளன் என்ற நிலையிலிருந்து இந்தப் புரட்சி மனிதனை விடுவிக்கிறது. தனது மன உறுதியின் மூலம் கடவுளின் ஆணைகளின் பால் தனக்குரிய நம்பிக்கையை நியாயப்படுத்த வல்ல பொறுப்பு வாய்ந்த மனிதனாக இதன்மூலம் அவன் மாறுகிறான். இந்தப் புரட்சியின் மூலம், வெறும் சமூகப் பாதுகாவலனாக கடவுள் இருக்கும் நிலை முடிவுக்கு வருகிறது; தெய்வ முறைமையின் கேந்திரமாக, மொத்தத்தில் சமூக நலன்கள் விளங்குவதும் இல்லாததாகிறது.

இந்தத் தெய்வீக முறைமையின் கேந்திரங்களாக, சமூகமும், மனிதனும் இடம் மாறி விட்டனர். மனிதனே அதன் கேந்திரமாக ஆகியுள்ளான்.

தெய்வீக ஆட்சி அமைப்பு என்ற மதத்தின் தலையாய கோட்பாடுகளின் இந்தப் பகுப்பாய்வுக்கு ஒரே ஒரு நோக்கம் தான் உண்டு; அதாவது, ஒரு மதத்தின் தத்துவத்தை மதிப்பீடு செய்வதற்கான படிமத்தைக் கண்டு பிடிப்பதேயாகும். எங்கே அந்தப் படிமங்கள், அவை யாவை என்று பொறுமையிழந்த வாசகர் கேட்காமலிருக்கக் கூடும். முன்னர் கூறிய விவாதத்தில், அந்தப் படிமங்கள், அவற்றிற்குரிய பெயர்களில் குறிப்பிட்டுள்ளதை வாசகர்கள் கண்டிருக்க முடியாது. ஆனால், எது சரி, எது தவறு என்று நிர்ணயிக்கும் படிமங்களைச் சுற்றியே, இந்த மதப் புரட்சி முழுவதுமே நடைபெற்று வந்திருப்பதை அவன் காணத் தவறியிருக்க முடியாது. அவ்வாறு தவறியிருந்தால், இந்த விவாதம் முழுவதிலும் அடங்கியுள்ளவை எவை என்பதை நான் தெளிவாகவே விளக்குகிறேன்.

புராதன சமூகத்திற்கும், நவீன சமூகத்திற்கும் உள்ள வேறுபாட்டுடன் நாம் தொடங்குகிறோம்; நாம் சுட்டிக் காட்டியதைப் போல, தங்களது மத இலட்சியங்கள் என்று அவை ஏற்றுக் கொண்ட தெய்வீக ஆட்சியின் வகையில் அவை வேறுபட்டன. சமூகமே இறுதியானது என்ற மத இலட்சியத்துடன் கூடிய புராதன சமுதாயம், புரட்சியின் ஒரு பக்கம் உள்ளது. புரட்சியின் மற்றொரு பக்கத்தில், தனி நபரே இறுதி என்ற மத இலட்சியத்துடன் கூடிய நவீன சமுதாயம் உள்ளது. படிம அளவில் இந்த உண்மையைக் கூறப்புகின், புராதன சமுதாயத்தில் நல்லதையும், தீயதையும் நிர்ணயிக்கும் பிரமாண சூத்திரம் பயனுடைமை; நவீன சமுதாயத்தில் அந்தப் பிரமாண சூத்திரம் நியாயம் என்பதே. ஆக, சமுதாயத்திலிருந்து, தனி நபருக்கு என்ற கேந்திர மாற்றத்தில் முடிவடைந்த சமுதாய மத அமைப்புப் புரட்சி அல்ல அந்த மதப் புரட்சி; அது படிமங்களின் ஒரு புரட்சியே ஆகும்.

நான் கூறிய படிமங்களைச் சிலர் ஆட்சேபிக்கலாம். அவற்றை அடைவதற்காக ஒரு புதிய வழியாக அது இருக்கக்கூடும். ஆனால் மதத் தத்துவத்தை நிர்ணயிப்பதற்கான மெய்யான படிமங்கள் அவையே என்பதில் எனக்கு எந்த சந்தேகமும் இல்லை. முதற்கண், மனித நடத்தையில், எது சரி, எது தவறு என்று நிர்ணயிக்க, மக்களுக்கு அந்தப் படிமம் உதவ வேண்டும். இரண்டாவதாக, தார்மீக நலம் எது என்ற நடைமுறைக் கோட்பாட்டிற்கு அந்தப் படிமம் பொருத்தமாக இருக்க வேண்டும். இந்த இரு கண்ணோட்டங்களிலிருந்தும், அவை மெய்யான படிமங்களாகத் தோன்றுகின்றன. எது சரி, எது தவறு என்பதைத் தீர்மானிக்க, அவை நமக்கு உதவுகின்றன. அவற்றை ஏற்றுக் கொண்ட சமுதாயத்திற்கும் - அவை பொருந்தமாக உள்ளன. சமுதாயமே இறுதியானதென்றும், சமூகப் பயனுடைமையுள்ள எதுவும் தார்மீக நலன் என்றும் இருந்த புராதன சமுதாயத்திற்குப் பயனுடைமை என்ற பிரமாண சூத்திரம் பொருத்தமானதே. நவீன உலகில், நியாயம் என்பதே பிரமாண சூத்திரமாக இருப்பது பொருத்தமாக உள்ளது. அதில் தனி நபரே இறுதியானவன்; தனி நபர்க்கு தியாகம் வழங்கும் எதுவும் தார்மீக நலன் என்று கருதப்படுகிறது. இந்த இரு படிமங்களில் எது தார்மீக ரீதியாக மேம்பட்டது என்பதில் மாறுபாடு இருக்கக் கூடும். ஆனால், இவை அடிப்படைப் படிமங்கள் அல்ல என்பதில் எந்தத் தீவிர மாறுபாடும் இருக்கும் என்று நான் எண்ணவில்லை. இந்தப் படிமங்கள் போதுமான அளவு விளங்காததாக உள்ளன என்று கூறப்படுகிறது; அதற்கு எனது பதில், மதத்தத்துவம் தெய்வீகமாக இருக்க வேண்டும் என்று நிர்ணயிக்கும் ஒரு படிமம் உலகியல் சார்ந்தாகவும் இருக்க வேண்டும். எவ்விதத்திலும், இந்து மதத் தத்துவத்தை ஆராய்வதில் நான் இந்த படிமங்களையே கடைபிடிக்க விருக்கிறேன்.

## II

இது ஒரு சுற்று வழியாகும். ஆனால், பிரதான கேள்வியை எவ்வகையில் பரிசீலிப்பதற்கும் இது ஒரு தேவையான பூர்வாங்கமாகும். எனினும், இப் பரிசீலனையைத் தொடங்கும்போது ஓர் ஆரம்பச் சிக்கல் எதிர்ப்படுகிறது. இந்து மதத்தவர் இந்தப் பரிசீலனையை எதிர் கொள்ளத் தயாராக இல்லை. அவர், மதம் அத்துணை முக்கியமானது அல்ல என்றோ, எல்லா மதங்களும் நல்லவைதான் என்ற மதங்களின் ஒத்தியல் ஆய்வினால் உருவாக்கப்பட்ட கருத்தினையோ முன்வைக்கிறார். இந்த இரு கருத்துகளுமே தவறானவை; ஏற்றுக் கொள்ள இயலாதவை.

ஒரு சமூக சக்தி என்ற அளவில் மதத்தைப் புறக் கணிக்க முடியாது. "வரலாற்றுப் பாவு நூலில் எங்கும் ஊடுருவியாக இருப்பதே" மதம் என்று ஹெர்பர்ட் ஸ்பென்சர் சரியாகவே வர்ணித்தார். எல்லா சமுதாயத்தைப் பொறுத்தும் இது உண்மையே. இந்திய வரலாற்றில் மதம் எங்கணும் புகுந்ததோடு மட்டுமன்றி, அது இந்து மதவாதியின் மனதைப் பின்னிப் பிணைத்துள்ளது. ஒரு இந்துவின் வாழ்வின் ஒவ்வொரு கணத்தையும் மதம் கட்டுப் படுத்துகிறது. வாழ்வில் அவன் எவ்வாறு நடந்து கொள்ள வேண்டுமென்றும், செத்த பின்பு அவனது உடல் எவ்வாறு கழித்துக் கட்டப்பட வேண்டுமென்றும் அவனுக்கு ஆணையிடுகிறது. சிற்றின்ப வேட்கையில் அவன் எப்படி, எப்பொழுது ஈடுபட வேண்டுமென்பதையும் அது அவனுக்குக் கூறுகிறது. ஒரு குழந்தை பிறந்தவுடன் என்னென்ன சடங்குகள் செய்ய வேண்டும், குழந்தைக்கு எப்படிப் பெயரிட வேண்டும், அதன்தலையிலுள்ள முடியை எவ்வாறு கத்தரிக்க வேண்டும், அதற்கு முதல் ஆகாரம் எப்படிக் கொடுக்க வேண்டும் என்பனவற்றை மதம் அவனுக்கு எடுத்துரைக்கிறது. அவன் எந்தத் தொழிலில் ஈடுபட வேண்டும், எந்தப் பெண்ணைத் திருமணம் செய்து கொள்ள வேண்டும் என்பதையும் அது கூறுகிறது. யாருடன் உணவருந்துவது, என்ன உணவை உட்கொள்வது, எந்தெந்த காய்கள் அனுமதிக்கப்படவை, எவை தவிர்க்கப்பட வேண்டியவை என்பதையும், ஒரு நாளை அவன் எவ்வாறு கழிக்க வேண்டும், எத்தனை முறை உணவருந்துவது, எத்தனை முறை தொழுவது என்பதையும் அவனுக்கு உரைக்கிறது. மதம் தழுவாத அல்லது அதனால் ஆணையிடப் படாத எந்த ஒரு செயலும், இந்துவின் வாழ்வில் கிடையாது. விருப்பு வெறுப்பற்ற ஒரு சகஜ விஷயமாக, படித்த இந்துக்கள் அதை எடுத்துக் கொள்கிறார்கள் என்பது விந்தையே.

தவிர, மதம் ஒரு சமூக சக்தியாகவும் உள்ளது. நான் சுட்டிக் காட்டியுள்ளபடி, மதம், தெய்வீக ஆட்சி அமைப்பாகவும் உள்ளது. சமுதாயம் பின்பற்ற வேண்டியதொரு இலட்சிய அமைப்பாக அது உள்ளது. அது தோற்றுவிக்கப்பட்டது என்ற அளவில், அதில்

இலட்சியம் ஏதும் இல்லாதிருக்கலாம். அவ்வாறு இல்லையெனினும், அது ஒரு எதார்த்தமாகும். ஒவ்வொரு இலட்சியத்திலும் உள்ளார்ந்துள்ள முழுமையான இயக்க விசை இதிலும் உண்டு. மதத்தின் முக்கியத்துவத்தை மறுப்பவர்கள், இதனை மறந்து விடுவதோடு மட்டுமல்லாமல், சுத்தமான சமயச் சார்பற்ற இலட்சியத்துடன் ஒப்பு நோக்கின், மத இலட்சியத்தின் பின்னேயுள்ள மிகப் பெரும் ஆற்றலையும், உறுதியையும் உணரத் தவறுகின்றனர். இலட்சியம் மதச் சார்புடையதாயினும், சமயச் சார்பு அற்றதாயினும், அதற்கும் எதார்த்தத்திற்கும் இடையேயுள்ள பின்னடைவு அதற்குக் காரணமாக இருக்கக்கூடும். ஆனால், இந்த இரு இலட்சியங்களுக்குமுள்ள பரஸ்பர ஆற்றலை மற்றொரு சோதனையின் மூலம் அளவிடலாம்; அதாவது, மனிதனின் எதார்த்த உள்ளுணர்வை ஒதுக்கித் தள்ளுவதற்காக அவற்றின் திறன் மூலம் அளவிட முடியும். இலட்சியம் என்பது வெகு தொலைவிலுள்ளதைப் பற்றியதொன்று, மனிதனின் எதார்த்த உள்ளுணர்வோ உடனடி நிகழ்காலம் குறித்ததாகும். மனிதனின் எதார்த்த உள்ளுணர்வுக்கு எதிராக நிற்கும் இரண்டு லட்சியங்களுமே, அவற்றின் வேறுபாட்டினைச் சரியான முறையில் எடுத்துக் காட்டுகிறது. அவ்விரண்டும், ஒன்றிற் கொன்று எவ்வளவுதான் எதிரும் புதிருமாக இருந்த போதும். சமயச் சார்பு இலட்சியத்தின் பரிந்துரைகளுக்கு, மனிதனின் எதார்த்த உள்ளுணர்வுகள் விட்டுக் கொடுக்கின்றன. இரண்டிற்குமிடையே மோதல் இருக்கும்போது, மனிதனின் எதார்த்த உள்ளுணர்வுகள், சமயச் சார்பற்ற இலட்சியத்திற்கு இணங்குவதில்லை. இதன் பொருள் என்னவெனில், கண்கூடான ஆதாயம் எப்படியிருந்த போதும். மத இலட்சியம் மனிதனின்பால் ஆதிக்கம் கொண்டுள்ளது, சுத்தமான மதச் சார்ப்பற்ற இலட்சியம் குறித்து ஒருபோதும் அவ்வாறு சொல்ல முடியாது. பொருளாதார ஆதாரங்களை வழங்கும் திறனைப் பொறுத்தே அதன் சக்தி அமைகிறது. மனித மனத்தின் மீது இவ்விரு இலட்சியங்களுக்குமுள்ள ஆற்றல் மற்றும் செல்வாக்கின் வேறுபாடு எத்துணை பொது என்பதையே இது காட்டுகிறது. மத இலட்சியத்தின்பால் நம்பிக்கை இருக்கும் வரை அது வினைபுரியத் தவறுவதில்லை. மதத்தைப் புறக்கணிப்பது, ஓர் உயிரோட்டத்தைப் புறக்கணிப்பதற்கு ஒப்பாகும்.

மேலும், எல்லா மதங்களும் நல்லவை மற்றும் உண்மையானவை என்று கருதுவதும், உறுதியாகவும், மெய்ப்பிக்கத் தக்கதாகவும் தவறான ஒரு நம்பிக்கையைப் பேணுவதாம். இந்த நம்பிக்கையானது, மத ஒப்பீட்டு ஆய்வு என்று கூறப்படுவதன் விளைவு என்பதை வருத்தத்துடன் கூற வேண்டியுள்ளது. மத ஒப்பீடு, மனித குலத்திற்கு ஒரு பெரும் சேவை புரிந்துள்ளது. ஆராய்ச்சிக்குரிய உண்மையான நல்ல மதங்கள், வெளிப்படையான மதங்களே என்ற உரிமையையும், ஆணவத்தையும்

அது தகர்ந்தெறிந்தது. சுத்தமான தன்னிச்சையான, மற்றும் காரணகாரிய முறையிலான மதிப்பீடுகளின் அடிப்படையில் எழும் உண்மை மற்றும் போலிமதங்களுக்கிடையேயான ஒரு மாறான வேறுபாட்டினை, ஒப்பீடு சார்ந்த மதம் கைவிட்டு விட்டது என்பது உண்மையேயாயினும், அது அந்தப் போக்கில் மதத்தைப் பற்றிய சில பொய்யான கருத்துக்களையும் கொண்டு வந்துள்ளது. அவற்றில் மிகத்தீமை பயப்பது நான் முன்னர் கூறிய ஒன்றாகும்; அதாவது, எல்லா மதங்களுமே, ஒரே மாதிரி நிலையிலில்லையென்றும், அவற்றிடையே பாகுபாடு காண்பது தேவையற்றது என்ற கருத்தாகும். இதைக் காட்டிலும் பெரிய தவறு ஏதும் இருக்கமுடியாது. மதம் என்பது ஓர் அமைப்பு அல்லது ஓர் ஆதிக்க விளைவு; இதன் எல்லா சமூக அமைப்புகளையும், செல்வாக்குகளையும் போலவே, அதன் பிடியிலுள்ள சமுதாயத்திற்கு அது உதவலாம்; அல்லது தீங்கு பயக்கலாம். பேராசிரியர் டீலே கூறியதைப் போன்று[1], மதம் என்பது,

"மனிதகுல வரலாற்றில், மிகப் பலம் பொருந்திய இயக்கு விசைகளில் ஒன்று; அது தேசங்களை உருவாக்கியுமுள்ளது; சிதைத்தும் உள்ளது; சாம்ராஜ்யங்களை ஐக்கியப்படுத்தியுமுள்ளது; மிகக் கொடிய, காட்டு மிராண்டிச் செயல்களிலும், சிற்றின்ப களியாட்டங்களிலும் திளைத்த சாம்ராஜ்யங்களைப் பிளவுறவும் செய்தது; வீரம், தன்னல மறுப்பு, பக்தி ஆகியவற்றை வெளிப்படுத்தும் மெச்சத்தகுந்த பல செயல்களுக்குத் தூண்டுதலாக இருந்தது; கடும் இரத்த வெறிப்போர்களையும், கிளர்ச்சிகளையும், அட்டூழியங்களையும் விளைவித்துள்ளது; அதே போல, தேசங்களுக்கு அமைதியையும், மகிழ்ச்சியையும், சுதந்திரத்தையும் கொணர்ந்துள்ளது; ஒரு நேரத்தில் கொடுங்கோன்மையின் ஆதரவாளனாகவும், மற்றொரு வேளையில் அதன் சங்கிலிகளை உடைத்தெறிபவனாகவும்; ஒரு புதிய, ஒளிமயமான நாகரிகத்தைப் பேணி வளர்ப்பவனாக ஒரு போதும், மறுபோது, முன்னேற்றம், அறிவியல், கலை ஆகியவற்றின் ஆபத்தான எதிரியாகவும் மதம் விளங்கியுள்ளது".

விளைவுகளில் இத்துணை விந்தையான மாறுபாட்டினை வெளிக்காட்டும் ஒரு சக்தியை, அது எத்தகைய வடிவம் பெற்றுள்ளது, எந்த இலட்சியத்திற்கு உதவுகிறது என்பதைப் பரிசீலிக்காது, அதை நல்லது என்று எப்படி ஏற்றுக்கொள்ள முடியும்? ஒரு குறிப்பிட்ட மதம், ஆட்சிக்கான தெய்வீக அமைப்பாக எத்தகைய சமூக இலட்சியத்தை முன்வைக்கிறது என்பதைப் பொறுத்தது அது. ஒப்புநோக்கு மத அறிவியல் இந்தக் கேள்வியை ஒப்புக் கொள்ளவில்லை. உண்மைதான்.

---

1. 'வாழ்க்கை மரம் "பக்.5 குரோலியால் எடுத்துரைக்கப்பட்டது

ஒப்புநோக்கு மதம் முடியுமிடத்தில்தான் அது ஆரம்பமாகிறது. மதங்கள் பலவாயினும், அவை அனைத்துமே சிறந்தவைதாம் என்று கூறுவதன்மூலம், இந்துக்கள் அதைத் தவிர்க்க முயலுகின்றனர். ஆனால், அவை அவ்வாறல்ல.

இந்து மதத்தத்துவ பிரச்சினையை மூடிமறைக்க எவ்வளவுதான் இந்து முயன்றாலும், அதிலிருந்து தப்பிக்க முடியாது. அவன் அதை எதிர்நோக்கியே ஆகவேண்டும்.

## III

இப்பொழுது விஷயத்தைத் தொடங்குவோம். இந்துமதத் தத்துவத்தை நிர்ணயிக்க, நியாயச் சோதனை, பயனீட்டுச் சோதனை **(Test of justice and test of utility)**என்ற இரண்டு சோதனைகளையும் பிரயோகிக்க நான் எண்ணியுள்ளேன். முதலில் நான் நியாயப் பரிசோதனையை நடத்துகிறேன். அவ்வாறு செய்வதற்கு முன்பு, நியாயம் அல்லது நீதி என்ற கொள்கைக்கு நான் எவ்வாறு பொருள் கொள்கிறேன் என்பதை விளக்க விரும்புகிறேன். பேராசிரியர் பெர்க்போனை[1] காட்டிலும் வேறு எவரும் அதனைச் சிறப்பாக விளக்கியதில்லை. அவரது கருத்தின்படி, நியாயக் கொள்கை பலவற்றையும் தன்னகத்தே கொண்டது; தார்மீக முறைமையின் ஆதாரங்களாக ஆகியுள்ள, இதர கொள்கைகள் பலவற்றையும் உள்ளடக்கியது ஆகும். நியாயம் என்பது எப்போதுமே சமத்துவம், வீதாச்சாரம், "சமன்செய்தல்" என்ற கருத்துக்களைத் தூண்டுகிறது. நடுநிலை, நேர்மை என்பது சமத்துவத்தைக் குறிக்கிறது. விதிகளும், கட்டுப்பாட்டு முறைமைகளும், நேர்மையும், மதிப்பின் சமத்துவத்தைப் பொருத்தது. எல்லா மனிதர்களும் சமம் என்றால், எல்லா மனிதர்களும் ஒரே சாராம்சத்தைக் கொண்டவர்களே; அந்தப் பொதுவான சாராம்சம், அவர்களுக்கு ஒரே சீரான அடிப்படை உரிமைகளையும், சமமான சுதந்திரத்தையும் பெற்றுத்தருகிறது.

சுருங்கக் கூறின், நீதி என்பது சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம் ஆகியவற்றின் மற்றொரு பெயரே. இந்து மதத்தை மதிப்பிடுவதில், நான் இந்தப் பொருளில்தான் நீதியை உரைகல்லாகப் பயன்படுத்துகிறேன்[1].

இவற்றில் எந்தக் கூற்றினை இந்து மதம் அங்கீகரிக்கிறது? இந்தக் கேள்வியை ஒன்றன்பின் ஒன்றாக ஆராய்வோம்.

*1. சமத்துவத்தை இந்துமதம் அங்கீகரிக்கிறதா?*

---

1. இரண்டு தார்மீக நெறிகள்

இந்தக் கேள்வி, உடனடியாக ஒருவரது சிந்தனையில் சாதி அமைப்பு முறையைக் கொண்டு வருகிறது. பல்வேறு சாதிகளும், ஒரே தரத்தில் கிடைமட்ட வரிசையில், அருகருகே அமர்த்தப்படவில்லை என்பது சாதி அமைப்பின் ஒரு முனைப்பான அம்சமாகும். பல்வேறு சாதிகளும், ஒன்றன் மீது ஒன்றாக, செங்குத்தான வரிசையில் அமர்த்தப்பட்டுள்ளதொரு அமைப்பு அது. சாதிகளைத் தோற்றுவித்ததில் மனுவுக்குப் பொறுப்பு இல்லாதிருக்கலாம். வருணத்தின் புனிதத்துவத்தை மனுபோதித்தார்; நான் எடுத்துக் கூறியுள்ளபடி வருணமே, சாதி அமைப்பின் தாய். அந்த வகையில், சாதி அமைப்பின் மூலவராக இல்லையெனினும், அதன் தோற்றத்திற்கான கர்த்தாவாக மனு விளங்கினார் என்று குறை கூறலாம். எது எப்படியாயினும், சாதி அமைப்பைப் பொறுத்து மனுவின் குற்றம், அவர் தரப்படுத்தி, படிமப்படுத்தும் கோட்பாட்டினை உயர்த்திப் பிடித்ததில் பொறுப்பு வகித்தார் என்பதில் ஐயமில்லை.

மனுவின் திட்டப்படி, பிராமணன் முதல் தரத்தில் வைக்கப்பட்டான். அதற்கு அடுத்து க்ஷத்திரியர்; க்ஷத்திரியருக்குக் கீழ் வைசியர்கள்; அவர்களுக்குக் கீழ் சூத்திரர்கள்; சூத்திரர்களுக்கும் கீழே ஆதி சூத்திரர்கள் (தீண்டாதார்). இந்தத் தர வரிசை அமைப்பானது, சமத்துவமற்ற கோட்பாட்டினை எடுத்துரைப்பதாகும்; எனவே, இந்து மதம் சமத்துவத்தை அங்கீகரிக்க வில்லை என்று மெய்யாகவே கூறலாம். அந்தஸ்தில் சமத்துவமற்ற இந்த நிலையானது, ஏதோ மன்னரின் அரசவைக் கூடத்தின் விழாக்கூட்டத்திற்காக வரிசைப்படுத்திய முன்னுரிமைப் பட்டியல் ஆணை அல்ல. அது, மக்களினத்தவரிடையே கடைப்பிடிக்க வேண்டிய - எல்லாக் காலத்திலும், எல்லா இடங்களிலும், எல்லா நோக்கங்களிலும், அமுலாக்கப்பட வேண்டிய, ஒரு நிரந்தர, சமுதாய உறவாகும். வாழ்க்கையின் ஒவ்வொரு படியிலும், மனு இந்த வேறுபாட்டினை எவ்வாறு புகுத்தியுள்ளார் என்பதை விவரித்துக்கூறின், அது பெரிதும் நீண்டு விடும்; அவர், சமத்துவமின்மையை வாழ்வின் ஜீவசக்தியாக்கினார். ஆனால், அடிமைத்தனம், திருமணம், சட்டவிதிகள் போன்ற சில உதாரணங்களை எடுத்துக் கொண்டு அதை விளக்க முற்படுகிறேன்.

அடிமைத்தனத்தை மனு அங்கீகரித்தார்[2] ஆனால், அதனை சூத்திரர்களுக்கு மட்டுமே என்று வரையறுத்துள்ளார். மூன்று உயர்சாதி

1. நீதிக்கான மற்றொரு விளக்கத்தைப் "பயன் நெறிமுறைக் கோட்பாடு" என்ற கே.எஸ். மிலான் நூலில் காண்க

1. ஏழுவகை அடிமைகளை (8-415) மனு அங்கீகரிக்கிறார்; 15 வகை அடிமைகளை நாரதர் அங்கீகரிக்கிறார் - 5.25

அமைப்பினராலும் சூத்திரர்கள் மட்டுமே அடிமைப்படுத்தப்பட முடியும். ஆனால், உயர்சாதியினர் சூத்திரர்களுக்கு அடிமைகளாக முடியாது.

ஆனால், மனுவின் சட்டத்திலிருந்து நடைமுறை வேறுபட்டது என்பது கண்கூடு. சூத்திரர்கள் மட்டுமன்றி, இதர மூன்று வகுப்பினைச் சேர்ந்தோரும் கூட, அடிமைகளாயினர். இது கண்டு பிடிக்கப்பட்டவுடன், மனுவின் வாரீசாக வந்த நாரதர் ஒரு புது விதியை உருவாக்கினார்[1]. நாரதரின் இந்தப் புதிய விதி கீழ் வருமாறு:-

> "5.39. ஒரு மனிதன், அவனது சாதிக்கு விசேஷமான கடமைகளை மீறினால் தவிர, நான்கு சாதிகளில் தலைகீழ் வரிசையில் அடிமைத்தனம் விதிக்கப்படவில்லை. ( அதுபோன்று ஏற்பட்டால்) அடிமைத்தனம் என்பது ஒரு மனைவியின் நிலைக்கு ஒத்ததாகும்."

அடிமைத்தனத்தை அங்கீகரிப்பதே மோசமானதுதான். ஆனால், அடிமைத்தன விதிகள், அவற்றின் போக்கில் விடப்பட்டிருந்தால், குறைந்த பட்சம் ஒரு சாதகமான விளைவு ஏற்பட்டிருக்கும். அது ஒரு சமனப்படுத்தும் விசையாக இருந்திருக்கக் கூடும். சாதிகளின் அஸ்திவாரம் தகர்க்கப்பட்டிருக்கும். ஏனெனில் அதன் கீழ், ஒரு பிராமணன், தீண்டாதானின் அடிமையாகவும், தீண்டாதான் பிராமணனின் எஜமானராகவும் ஆகியிருக்கக் கூடும். ஆனால், தங்கு தடையற்ற அடிமைத்தனம் ஒரு சமனப்படுத்தும் அம்சம் என்று காணப்பட்டது; ஆகவே அதைச் செல்லாததாக்க ஒரு முயற்சி மேற்கொள்ளப்பட்டது. எனவே, மனுவும் அவரது வழிவந்தவர்களும், அடிமைத்தனத்தை அங்கீகரித்த போது, வருண அமைப்பில், தலைகீழ் வரிசையில் அது அங்கீகரிக்கப்பட மாட்டாது என்று விதித்தனர். அதன் பொருள், ஒரு பிராமணன் மற்றொரு பிராமணனுக்கு அடிமையாகலாம்; ஆனால், அவன் க்ஷத்திரிய, வைசிய, சூத்திர அல்லது ஆதிசூத்திரன் ஆகிய இதர வருணத்தைச் சார்ந்தவனுக்கு அடிமையாக மாட்டான். மாறாக, ஒரு பிராமணன், நான்கு வருணங்களில், எந்த வகுப்பினைச் சேர்ந்தவரையும் தனது அடிமையாக்கிக் கொள்ள முடியும். ஒரு க்ஷத்திரியர், வேறெரு க்ஷத்திரியரையோ, வைசியரையோ, சூத்திர மற்றும் ஆதி சூத்திரரையோ தனது அடிமையாகக் கொள்ளலாம்; ஆனால், ஒரு பிராமணனை அவ்வாறு கொள்ள முடியாது. ஒரு வைசியர், ஒரு பிராமணனையும், க்ஷத்திரியனையும் தவிர, வேறெரு வைசியரையோ, சூத்திரரையோ, ஆதி சூத்திரரையோ தனது அடிமையாக்கிக் கொள்ளலாம். ஒரு சூத்திரன் வேறொரு சூத்திரரையும், ஆதி சூத்திரர் மற்றொரு ஆதி சூத்திரரையும் அடிமைகளாகக் கொள்ளலாம்: ஆனால்

[1] மனுவுக்குச் சமமான மேலாண்மை கொண்ட யாக்ஞவல்கியர் என்பவரும் அதே விதியை வகுத்துரைக்கிறார்

ஒரு பிராமணரையோ, க்ஷத்தியரையோ, வைசியரையோ, சூத்திரரையோ ஆதிசூத்திரர் அடிமையாக்க முடியாது.

பல்வேறு வகைப்பட்ட வருணத்தாருக்கிடையே நடைபெறும் கலப்பு மணங்கள் பற்றி மனு விதித்துள்ள விதிகள் பின்வருவன.

3:12 "இருபிறப்பாளராம் வருணங்களில், முதல் திருமணத்திற்கு அதே வருணத்தைச் சேர்ந்த பெண்ணையே மணஞ்செய்யப் பரிந்துரைக்கப்படுகிறது. மீண்டும் திருமணம் செய்துகொள்ள விருப்பமுடையோர் வருணமுறையின் நேர் வரிசையில் தேர்ந்தெடுத்தல் வேண்டும்.

3: 13 "சூத்திரன் மனைவி சூத்திரச்சியாகவே இருத்தல் வேண்டும். வைசியனுக்கு வைசிய, சூத்திரப் பெண்; க்ஷத்திரியனுக்குச் க்ஷத்திரிய, வைசிய, சூத்திரப் பெண்கள், பிராமணர்க்குப் பிராமண, க்ஷத்திரிய, சூத்திரப் பெண்கள்".

மனு கலப்பு மணத்தை எதிர்ப்பவர். ஒவ்வொரு வருணத்தாரும் தமக்குள்ளேயே மணம்புரிதல் வேண்டும். குறித்த வருணத்திற்கு வெளியே நடக்கும் திருமணத்தை மனு பொதுவாக அங்கீகரிக்கின்றார். அடிமை முறையைப்போல வரிசைப் படுத்தப்பட்ட சமமின்மைக் கோட்பாட்டிற்கு ஊறுவிளைவிக்காத வகையில் கலப்புத் திருமண முறையை அனுமதிக்கிறார். கலப்புத் திருமணத்தை அவர் அங்கீகரிப்பது அடிமை முறையைப் போல, தலைகீழ் வரிசையிலன்று. பிராமணன் எந்த வருணப் பெண்ணையும் மணக்கலாம். க்ஷத்திரியன் தன் வருணம், தன் கீழ் வருணமான வைசிய, சூத்திர வருணங்களிலும் பெண் கொள்ளலாம். ஆனால் மேல் வருணமாகிய பிராமணப்பெண்களை மணக்கக்கூடாது. வைசியன் தன் வகுப்பிலும் சூத்திரசாதியிலும் பெண் கொள்ளலாம். க்ஷத்திரிய, பிராமணப் பெண்களை மணத்தல் தடை செய்யப்பட்டுள்ளது. ஏன் இந்தப் பாரபட்சம்? அவரது வழிகாட்டு நெறியாக அமைந்துள்ள சமத்துவமின்மையை அப்படியே கட்டிக் காக்க வேண்டும் என்ற மிகுந்த ஆர்வத்தின் விளைவுதான் இது. சட்டத்தின் விதிகளைக் காண்போம். இது பற்றி மனு என்ன கூறுகிறார் என்பதை அறிய ஆர்வமுள்ளோர் அவர் வகுத்துள்ள பின்வரும் விதிகளைக் காண்க. எளிதில் புரிந்து கொள்வதற்காகத் தெளிவான தலைப்புகளில் பகுத்துத் தந்துள்ளேன்.

முதலில் சாட்சிகளை எப்படி விசாரிக்க வேண்டும் என்பதைப் பார்ப்போம். மனு முறைப்படி அவர்களுக்குப் பின்வருமாறு சத்தியப பிரமாணம் செய்வித்தல் வேண்டும்.

8:87 " முற்பகலில் தூய்மை பெற்ற நீதிபதி, இருபிறப்பாளர்

(தூய்மை பெற்றவர்) பிராமணர் அல்லது தெய்வீகச்சின்னம் முன்னிலையில் உண்மையைக் கூறுமாறு அறிவுறுத்த வேண்டும். சாட்சிகள் வடக்கு அல்லது கிழக்கு முகமாக நிற்றல் வேண்டும்".

8:88 "பிராமணரிடத்தில் 'கூறுக' என்றும், க்ஷத்திரியனிடத்தில் "உண்மையைக் கூறுக' என்றும், வைசியனிடத்தில் அவனுடைய பசுக்கள், பொன், தானியங்கள் மேல் ஆணையிட்டுக் கூறுக என்றும், சூத்திரனாயின் தலைமீது ஆணையிட்டு, பொய் கூறினால் வரும் கேடுகளைக் கூறி அச்சுறுத்திக் கூறுக என்றும் பிரமாணம் செய்க".

8:113 "ஒரு மத குருவை அவனது வாய்மையின் மீதும், ஒரு போர் வீரனை அவனது குதிரை, யானை மற்றும் அவனது ஆயுதத்தின்மீதும் ஒரு வணிகனை அவனது பசுக்கள், தானியம், தங்கம் ஆகியவற்றின் மீதும், குற்றேவல் புரிபவனை அவனது தலைமேல் சத்தியம் செய்யுமாறும் நீதிபதி கூறவேண்டும்."

மனு பொய்ச்சாட்சி அளிப்போரைப் பற்றியும் குறிப்பிட்டுள்ளார். பொய்ச்சாட்சி அளிப்பதையும் ஒரு குற்றமாகக் கருதி மனு விதிப்பதாவது.

8:122. "பொய்ச் சாட்சி சொல்லுவோருக்கும் இந்தத் தண்டனை விதிகள் ரிஷிகளால் வகுக்கப் பட்டுப் பெரியோர்களால் நிர்ணயிக்கப் பட்டுள்ளது."

8:123. "க்ஷத்திரியர் முதலான மூவகைக் கீழ் வருணத்தார் பொய்ச் சாட்சி கூறினால் அரசன் முதலில் அபராதம் விதித்து விட்டுப் பிறகு அவர்களை நாடு கடத்த வேண்டும், ஆனால் பிராமணராயின் நாடு கடத்தல் மட்டுமே செய்ய வேண்டும்".

இதிலும் மனு ஒரு விதிவிலக்கு அளித்துள்ளார்.

8:112. "பெண்களிடம் களியாட்டத்தின் போதும், திருமண ஏற்பாடு தொடர்பாகவும், பசு தீவனத்தையோ பழத்தையோ தின்று விட்டது பற்றியும் யாகத்திற்கான சமிதைகள் எடுத்துக் கொண்டது பற்றியும் பிராமணரைக் காப்பாற்றுவதற்காக வாக்குறுதி அளித்தது பற்றியும் பொய்ச் சாட்சி சொல்வது பெரும்பாவமன்று."

வழக்கு நடவடிக்கைகளில் அவரவர்க்குரிய நிலைகளுக்கேற்ப முக்கியமான குற்றங்களுக்குரிய தண்டனை முறைகளாக மனு கூறுவதாவது.

அவதூறுக்குரிய தண்டனை:

8:267 "புரோகிதனுக்கு அவதூறு இழைக்கும் க்ஷத்திரியனுக்கு நூறு பணமும், அவ்வாறு தவறிழைக்கும் வைசியனுக்கு நூற்றைம்பது அல்லது இருநூறு பணமும், ஒரு அடிமையோ, தொழிலாளியோ

தவறிழைத்தால் கசையடியும் விதித்தல் வேண்டும்."

8:268 "ஒரு புரோகிதர் க்ஷத்திரியனுக்கு அவதூறு விளைவித்தால் ஐம்பது பணமும், வைசியனுக்கு அவதூறு விளைவித்தால் இருபத்தைந்து பணமும் அடிமை வர்க்கத்தினனுக்கு அவதூறு விளைவித்தால் பன்னிரண்டு பணமும் அபராதம் விதித்தல் வேண்டும்."

நிந்தனைக் குற்றத்தை எடுத்துக் கொள்வோம். மனு விதிக்கும் தண்டனை வருமாறு:

8:270 "சூத்திரன், இருபிறப்பாளரைக் கடுஞ்சொற்களால் நிந்தித்தால், அவன் நாக்கை அறுத்தல் வேண்டும். ஏனெனில் பிரமனின் கீழான பாகத்தில் அவன் பிறந்தவன்"

8:271 "அவன் பெயரையும், சாதியையும் நிந்தித்தால் உதாரணமாக, "தேவதத்தா, பிராமணக் குப்பையே" என்றால் பத்து விரல் நீள முள்ள பழுக்கக் காய்ச்சிய இரும்பாணியை அவன் வாயில் நுழைத்தல் வேண்டும்."

8:272 "கர்வத்தால் பிராமணன் எப்படிப் பணியாற்ற வேண்டும் என்பதுபற்றிக் கட்டளையிட்டால், அவன் வாயிலும் காதிலும் காய்ச்சிய எண்ணெயை ஊற்றுமாறு அரசன் கட்டளையிடுதல் வேண்டும்"

8:276 "பரஸ்பர பழித்தலைச் செய்த பிராமணனுக்கும் க்ஷத்திரியனுக்கும் அரசன் தண்டனை விதிக்க வேண்டும். பிராமணனுக்கு மிகக் குறைவாகவும், க்ஷத்திரியனுக்கு மிதமாகவும் விதித்தல் வேண்டும்"

8:227 வைசியனுக்கும் சூத்திரனுக்கும் அவரவர் வருணத்திற்குரிய முறையில் ஒன்றுபோலத் தண்டனை விதித்தல் வேண்டும். நாக்கை அறுப்பது சூத்திரருக்கு மட்டுமே. இதுவே தண்டனைக்குரிய நிலையான விதிமுறை".

தாக்கியமைக்கான தண்டனையை மனு விதிக்கிறார்.

8:279 "இழிகுலத்தில் பிறந்தவன் உயர்குலத்தானை எந்த அங்கத்தினால் தாக்கினானோ அல்லது புண்படுத்தினானோ அந்த அங்கத்தை த் துண்டித்தல் வேண்டும் அல்லது காயத்தின் அளவுக்குத் துண்டிக்க வேண்டும். இதுவே மனு விதித்த நீதி."

8:280 " சினத்தினால் கையோங்கியோ, தடியெடுத்தோ ஒருவனை அடித்தால், அடித்தவன் கையையும், உதைத்த காலையும் வெட்டவேண்டியது."

*8:281* "உயர்சாதிக்காரனுடன் இழிசாதிக்காரன் சரியாசனத்தில் அமர்ந்தால் அந்த ஆணவச் செயலுக்காக இடுப்பில் சூடு போடுதல் வேண்டும் அல்லது நாடு கடத்தப்படுதல் வேண்டும் அல்லது அவனது ஆசனத்தில் ஒரு வெட்டுப்புண் ஏற்படுத்திட அரசன் ஆணை பிறப்பித்தல் வேண்டும்".

*8:282* "ஆணவத்தால் அவன் துப்பினால் அரசன் அவனது இரு உதடுகளையும் வெட்டிடல் வேண்டும். அவன்மீது சிறுநீர் பெய்தால் ஆண்குறியை வெட்டிடல் வேண்டும். அவன்மீது குசு விட்டால், ஆசனத்தை வெட்டிடல் வேண்டும்".

*8:283* "பிராமணனின் முடியைப் பிடித்திழுத்தாலோ, காலைப் பிடித்து வாரினாலோ, தாடியை, கழுத்தை, விதையைப் பிடித்து இழுத்தாலோ அவன் கையை வெட்டிவிடுமாறு அரசன் தயங்காமல் ஆணையிடுதல் வேண்டும்".

பிறன்மனை புணர்தலுக்கு மனு விதிக்கும் தண்டனையாவது.

*8:359* "இழிகுலத்தான் ஒருவன் பிறன்மனை புணர்ந்தால் அவனுக்கு மரணதண்டனை விதித்தல் வேண்டும். எல்லா வருணங்களையும் சார்ந்த மனைவிகளையும் குறிப்பாகப் பாதுகாத்தல் வேண்டும்"

*8:366* "உயர்குலத்துப் பெண்ணைக் காதலிக்கும் இழிகுலத்தானுக்குச் கசையடி கொடுத்தல் வேண்டும்; அவரவருடைய சமவர்க்கத்துப் பெண்ணைக் காதலித்தால் பெண்ணின் தந்தை சம்மதத்தைப் பெற்றுப் பரிசம் போட்டு அவளைத் திருமணம் செய்து கொள்ளலாம்"

*8:374* " இருபிறப்பாளனின் மனைவியுடன் சோரம் போகும் சூத்திரன், அப்பெண் இல்லத்தில் பாதுகாக்கப்பட்டிருந்தாலும், காக்கப்படாவிடினும் பின்வரும் தண்டனைக்குள்ளாவான். காக்கப்படாத பெண்ணாயின் தன் சொத்துக்களை இழப்பதுடன் ஆண் குறியையும் வெட்டப்பட வேண்டியவனாகின்றான். காக்கப்பட்டவளாயின் அவன் உயிரையும் பிற அனைத்தையும் இழத்தல் வேண்டும்"

*8:375* "காப்பிலுள்ள பிராமணப் பெண்ணுடன் சோரம்போகும் வைசியன் செல்வமனைத்தையும் இழந்தும், அத்தகைய குற்றம்புரியும் க்ஷத்திரியனுக்கு ஆயிரம் ரூபாய் அபராதமும் கழுதை மூத்திரத்தால் தலைச் சவரமும் பண்ணி விடுதல் வேண்டும்.

*8:376* "க்ஷத்திரியனோ, வைசியனோ காப்பில்லா பிராமணப் பெண்ணுடன் சோரம் போனால் வைசியனுக்கு ஐந்நூறு பணமும் க்ஷத்திரியனுக்கு ஆயிரம் பணமும் அபராதம் விதித்தல் வேண்டும்."

*8:377 "இவ்விரு சாதியைச் சேர்ந்தவரும், மேன்மைமிக்கவளும் பிராமணனின் காப்பிலுள்ளவளுமான மனைவியைச் சேர்ந்தால், அவர்களுக்குச் சூத்திரனுக்குரிய தண்டனையே வழங்குதல் வேண்டும் அல்லது உலர்ந்த புல்லும் நாணலும் நிறைந்த படுக்கையிலிட்டு எரிக்கப் பெறுதல் வேண்டும்."*

*8:382 "க்ஷத்திரியனின் காப்பிலுள்ள மனைவியை வைசியன் கூடினாலும், வைசியப் பெண்ணை க்ஷத்திரியன் கூடினாலும் காப்பில் இல்லாத பிராமணப் பெண்ணுடன் சோரம் போவானுக்குரிய தண்டனை பெறுவர்."*

*8:383 "பிராமணர் இவ்விரு சாதியைச் சார்ந்த காப்பிலுள்ள மனைவியுடன் சோரம்போனால் ஆயிரம் பணமும் சூத்திரப் பெண்ணுடன் சோரம்போனால் ஆயிரம் பணமும் அபராதம் விதிக்கப் பெறுதல் வேண்டும். க்ஷத்திரிய, வைசியருக்கும் அப்படியே."*

*8:384 "க்ஷத்திரிய வகுப்பைச் சார்ந்த, காப்பிலுள்ள பிறர் மனைவியுடன் வைசியன் சோரம்போனால் ஐந்நூறு பணம் அபராதம், க்ஷத்திரியன் வைசியப் பெண்ணுடன் சோரம் போனால் ஐந்நூறு பணம் அபராதம் அல்லது மூத்திரச்சவரம் விதித்தல் வேண்டும்"*

*8:385 "காப்பில் இல்லாத க்ஷத்திரிய, வைசிய, சூத்திரப் பெண்ணுடன் சோரம் போகும் பிராமணனுக்கு ஐந்நூறு பணமும். சண்டாளியுடன் சோரம்போனால் ஆயிரம் பணமும் அபராதம் விதிக்க வேண்டும்"*

*பல்வகைக் குற்றங்களுக்கு மனு விதிக்கும் தண்டனை முறைகள் வேடிக்கையானவை. பின்வருவன அவற்றுள் சில:*

*8:379. "பிராமணன் எத்தகைய பாவமோ, கலப்போ செய்தபோதிலும் அவனைக் கொல்லக் கூடாது; ஏனையோருக்கு மரண தண்டனை விதிக்க வேண்டும்".*

*8:380. "எத்தகைய பாவத்தைச் செய்த போதிலும், பிராமணனைக் கொல்லாமலும், அவன் பொருளைக் கவர்ந்து கொள்ளாமலும் ஊரைவிட்டுத் துரத்த வேண்டும்".*

*11:127. "நற்குணமுள்ள க்ஷத்திரியனைக் கொன்றால் பிராமணனைக் கொன்ற பாவத்திற்கு விதித்த பன்னிரண்டு வருட விரதத்தில் நாளில் ஒரு பங்கும், வைசியனைக் கொன்றால் எட்டில் ஒரு பங்கும், தன்னுடைய கடமைகளைக் கைவிடாது செய்யும் சூத்திரனைக் கொன்றால் பதினாறில் ஒரு பங்கும் கழுவாயாகும்.*

11:128. ஆயின் அறியாமல் க்ஷத்திரியனைப் பிராமணன் கொன்றால் அனைத்துச் சடங்குகளும் செய்து புரோகிதனுக்கு ஓர் எருமையும் ஆயிரம் பசுக்களையும் தானம் செய்ய வேண்டும்".

11:129. "அல்லது ஒரு பிராமணனைக் கொன்று அவனது அங்கங்களை அழித்த குற்றத்திற்குரிய தண்டனையை அவன் நகரிலிருந்து வெகு தூரம் சென்று ஒருமரத்தடியை உறைவிடமாகக் கொண்டு மூன்றாண்டுக் காலம் அங்கு தங்கி கழுவாயய் தேட வேண்டும்".

11:130. "ஒழுக்கமிக்க ஒரு வைசியனைப் பிராமணன் அறியாமற் கொன்றால் ஓராண்டு விரதமோ அல்லது புரோகிதருக்கு ஒரு எருதும் நூறு பசுக்களும் தானமோ செய்ய வேண்டும்".

11:131. "சூத்திரனைக் கொன்றால் ஆறு மாதம் விரதமோ புரோகிதருக்கு ஒரு எருதுடன் பத்துப் பசுக்களைத் தானமோ செய்ய வேண்டும்".

8:381. "பிராமணனைக் கொல்வதைவிட உலகத்தில் பெரிய தொரு பாவம் வேறு இல்லையாதலால், பிராமணனைக் கொல்லுவது பற்றி அரசன் மனதளவில் கூட நினைக்கக் கூடாது".

8:126. "குற்றம் இழைத்தவர்களுக்கான தண்டனைகளை, குற்றம் முதல்தடவையா, இரண்டாம் தடவையா என்பதையும், குற்றத்தின் தன்மையையும், தண்டனையைத் தாங்கக் கூடியவனா என்பதையும், காலத்தையும், தண்ட நீதிகளையும் நன்கு ஆராய்ந்து ஏற்ற தண்டனைகளை மன்னன் விதிக்க வேண்டும்".

8:124. "பிராமணனைத் தவிர்த்த ஏனைய வருணத்தார் குற்றம் இழைப்பின் தண்டிக்கத்தக்க இடங்கள் பத்து என்றும், பிராமணனாயின் அவனைக் காயப்படுத்தாமல் துரத்திவிட வேண்டுமென்றும் சுயம்புவாகத் தோன்றிய மனு கூறியுள்ளார்".

8:125. "இனவிருத்தி உறுப்பு, வயிறு, நாக்கு, கை, கால், கண், மூக்கு, காது, பொருள், உடமை ஆக தண்டிக்கப்பட வேண்டிய இடங்கள் பத்தாகும். மரண தண்டனையாயின் முழு உடம்பும் இலக்காக அமையும்".

சமயச் சடங்குகள், யாகங்கள் சம்பந்தமான உரிமைகள், கடமைகள் பற்றி மனு தெரிவிக்கும் கருத்து குறிப்பிடத்தக்கது.

இந்து சட்ட முறைகளுக்கும் இந்து அல்லாத சட்ட முறைகளுக்குள்ளேயும் எத்துணை வேறுபாடு! குற்றவியல் சட்டத்தில் சம்மின்மை எவ்வாறு ஆழமாகப் பதிக்கப் பெற்றுள்ளது! நீதிமுறைப்படி

அமைந்த குற்றவியல் சட்டத்தில், இரு கூறுகளை நாம் காணலாம். குற்றத்தின் இலக்கணத்தை வகுப்பது ஒரு பிரிவு; அதை மீறுவோருக்கு அறிவுக்குப் பொருத்தமான தண்டனை விதிப்பது மற்றொரு பிரிவு. எல்லாக் குற்றவாளிகளுக்கும் ஒரே விதமான தண்டனையே. மனுவில் நாம் காண்பது யாது? அறிவுக்குப் பொருத்தமற்ற தண்டனைமுறை. குற்றத்துடன் சம்பந்தப்பட்ட அவயவத்தைத் துண்டித்தல், வயிறு, நாக்கு, மூக்கு, கண்கள், காதுகள், பிறப்பு உறுப்புகள் போன்றவற்றிற்குத் தனித்தன்மை உண்டு என்பது போலவும், உடலோடு உடன்வாழ்வன போலவும் கருதித் தண்டனை அளித்தல். மனுவின் குற்றவியல் சட்டத்தின் இரண்டாம் கூறுபாடு குற்றத்தின் கடுமையை மீறிய மனித தன்மையற்ற தண்டனை விதித்தல். மனுவின் குற்றவியல் சட்டத்தின் மிக வெளிப்படையான கூறுபாடு, ஒரே விதமான குற்றத்திற்குப் பல சமமற்ற தண்டனைகளை விதித்தல் அப்பட்டமாகத் தெரிகிறது. குற்றவாளியைத் தண்டிப்பதற்கு மட்டுமின்றி, நீதிகேட்டு மன்றத்திற்கு வருபவருக்குள் சிலருடைய கண்ணியம் காக்கவும், சிலரைத் தாழ்த்தி வைக்கவும் திட்டமிட்ட இச்சமமின்மைச் செயல் மனுவின் திட்டத்தின் அடிப்படையானதும் சமூகச்சமமின்மையை நிலைநாட்டுவதேயாம்.

சமூகச் சமமின்மையை மனு எவ்வாறு நிலை நாட்டியுள்ளார் என்பதைக் காட்டுவதற்குரிய சான்றுகளை இதுவரை எடுத்துக் காட்டியுள்ளேன். இவ்வாறே மத சமத்துவமின்மையை நிலைநிறுத்துவதற்கு மனு விதித்திருக்கும் சான்றுகளைக் காட்டுவேன். இவை மதச்சடங்குகள், ஆஸ்ரமங்கள் என்பவற்றோடு சம்பந்தப்பட்டவை.

கிறிஸ்தவர்களைப் போலவே இந்துக்களும் மதச்சடங்குகளில் நம்பிக்கையுடையவர்கள். இவர்களுக்கிடையே ஒரே வேறுபாடு என்னவென்றால் இந்துக்கள் எண்ணற்ற சடங்குகளைப் பெற்றிருப்பதுதான். இந்துக்கள் அனுசரிக்கும் இந்தச் சடங்குகளின் எண்ணிக்கையைக் கேட்டால் ரோமன் கத்தோலிக்க கிறிஸ்தவர்கள்கூட வியப்படைவார்கள். ஆரம்பகாலத்தில் இந்தச் சடங்குகளின் எண்ணிக்கை நாற்பது என்றிருந்தது. தனிமனிதனின் வாழ்க்கையில் பல்வேறு முக்கியமான சந்தர்ப்பங்களில் அனுசரிக்க வேண்டியதும், நுட்பமும் அலுப்பூட்டக்கூடியதுமான சடங்குகள் இவை. முதலில் இவை இருபதாகக் குறைந்தது. பின்னர் பதினாறு என ஆனது. இதே எண்ணிக்கையில் இந்துக்களின் சமயச் சடங்குகள் தொடர்ந்து கடைபிடிக்கப்பட்டு வருகின்றன.

இந்தச் சடங்குகளைச் செய்வதற்கான விதிகளில் சமத்துவமின்மை எவ்வாறெல்லாம் இடம் பெற்றுள்ளது என்பதை அறிய வேண்டுமாயின். நாம் அந்த விதிகள் என்ன என்பதைத் தெரிந்து கொள்ள வேண்டும்.

அவை அனைத்தையும் அலசி ஆராய்வது என்பது கடினமானது; அவற்றில் சிலவற்றை ஆராய்ந்தாலே போதுமானது. அவற்றில் உபநயனம் செய்வித்தல், காயத்ரி உபதேசம், தினசரி அனுஷ்டிக்க வேண்டிய வேள்விகள் ஆகிய மூன்றினை மட்டும் காண்போம்.

உபநயனம் என்பது பூணூல் அணிவிக்கும் சடங்கு. பூணூல் அணிவிக்கும் இந்தச் சடங்கின்போது கடைபிடிக்க வேண்டிய மிக முக்கிய விதிகளாகப் பின்வருவன என்று மனு கூறியுள்ளார்.

*2:36.* "பிராமணனுக்குக் கர்ப்பத்திலிருந்து எட்டு வயதிலும் க்ஷத்திரியனுக்குப் பதினொன்றிலும் வைசியனுக்குப் பன்னிரண்டிலும் அவரவர் வருணத்திற்குத் தக்கவாறு உபநயனம் செய்விக்க வேண்டும்".

*2:37.* "பிராமணன் அல்லது அவனது தந்தை தன்மகன் பிரம்ம ஞானத்தைப் பெற விரும்பினால் அவனுக்கு ஐந்து வயதிலும், தனது வலிமையைப் பெருக்கிக்கொள்ள விரும்பும் க்ஷத்திரியன் ஆறு வயதிலும் வணிகத் தொழிலில் ஈடுபட விரும்பும் வைசியன் எட்டு வயதிலும் உபநயனம் செய்வது ஏற்றதாகும்".

*2:38.* "காயத்ரி உபதேசத்துடன் செய்யக் கூடிய உபநயனச் சடங்கு செய்வதைக் கால தாமதம் செய்வது தக்கதன்று. எக்காரணத்தாலும் மூன்று வருணத்தாருக்கும் முறையே பதினாறு, இருபத்திரண்டு, இருபத்து நான்கு வயதினைத் தாண்டாமல் பார்த்துக் கொள்ள வேண்டும்".

*2:39.* "மேற் சொல்லியவாறு உபநயன சமஸ்காரத்தை உரிய காலத்தில் செய்யாமல் போகும் மூன்று வருணத்தைச் சேர்ந்த, இளைஞர்கள் விராத்யர்கள் அல்லது புற சாதியராவதோடு காயத்ரியிலிருந்து இழிந்து, நலன்கள் பெறத் தகுதியற்ற வராகின்றனர்".

*2:147.* "தாய், தந்தையின் வேட்கையால் கருப்பையிலிருந்து பிறந்த பிறவி வெறும் உடற்பிறவி யென்றே ஒருவன் கருதவானாக".

*2:148.* "வேதங்களை முழுமையாகக் கற்றுணர்ந்த ஆசாரியனின் காயத்திரி மந்திர உபதேசத்தால் பெறும் பிறவியே அழிவற்றது; மூப்பற்ற தன்மைகளைத் தரவல்லது".

*2:169.* "துவிஜனுக்கு முதல் பிறப்பு தாயாலும், இரண்டாவது பிறப்பு உபநயனத்தாலும், மூன்றாவது பிறப்பு வேள்வி முயல்வதாலும் உண்டாகிற தென்று வேதம் கூறுகின்றது".

*2:170.* "புனிதமான நூல் அணிவதினால் இரண்டாவது பிறப்பில் ஒருவனுக்குத் தாயாகக் காயத்ரியும், தந்தையாக ஆசார்யனும் விளங்குகிறார்கள்".

அடுத்ததாகக் காயத்ரி மந்திர உபதேசம் செய்வதை எடுத்துக் கொள்வோம். காயத்ரி எனப்படுவது தெய்வீகச் சக்திமிகுந்த தேவதா மந்திரத்தை உபதேசிப்பதாம். இதைப்பற்றி மனு விளக்கியுரைப்பதாவது,

*2:76.* "பிரம்மா முறையே மூன்று வேதங்களின் சாரமான அகரம், உகரம், மகரம் என்னும் மூன்றெழுத்து உறுப்புகளால் ஆன ஓம் என்னும் பிரணவத்தையும் பூர், புவ, சுவ அல்லது பூமி, ஆகாயம், சுவர்க்கம் என்னும் புனித உச்சரிப்புகளையும் உண்டாக்கினார்".

*2:77.* "படைப்புக் கடவுளான பிரம்மா, 'தத்' என்று தொடங்கும் காயத்ரி அல்லது சாவித்திரியின் மூன்றடிகளையும் மூன்று வேதங்களிலிருந்து வடித்தெடுத்தார்".

*2:78.* "பிரணவத்தையும் காயத்ரி மந்திரத்தையும் காலை, மாலை வேளைகளில் ஜெபிப்பதனால் மூன்று வேதங்களையும் ஓதிய பலனைப் பிராமணன் பெறுகின்றான்".

*2:79.* "ஓம், காயத்ரி என்னும் மந்திரங்களை தினமும் தொடர்ந்து ஆயிரமுறை ஓதுகின்ற பிராமணன் பெரும் பாவங்களிலிருந்து பாம்பின் சட்டை கழன்று வருவதுபோல நீங்கப் பெறுகின்றான்".

*2:80.* "காயத்ரி மந்திரமோதுதல், காலாகாலத்தில் செய்ய வேண்டிய உபநயனம் முதலிய சடங்குகளைச் செய்தல் ஆகியவற்றைச் செய்யாத புரோகிதன், க்ஷத்திரியன், வைசியன் ஆகிய மூவரும் மேலோரால் நிந்திக்கப் படுவார்கள்".

*2:81.* "பிரணவத்தையும், மூன்று வியாகிருதிகளையும் தன் அகத்தே கொண்டிருக்கும் காயத்ரி, வேதத்தின் முக்கிய பகுதியாகும்".

*2:82.* "எவனொருவன் மூன்றாண்டு காலம் இடையறாது தினமும் சோம்பலின்றி இந்த வேதமந்திரங்களை ஜெபிக்கின்றானோ அவன் காற்றைப் போன்ற லாவகத்துடன் வேண்டிய உருவெடுத்துப் பறந்து செல்லவும், பிரம்மசாயுச்யம் பெறவும் வல்லவனாகின்றான்".

*2:83.* "பிரணவ மந்திரமாகிய ஓம் என்னும் சொல் பரப்பிரம்ம வடிவமானதென்றும், மூச்சையடக்கித் தியானித்திருத்தலினும் மேலானதென்றும் போற்றப் படுவது. எனவே காயத்ரியின் மிக்கதானது யாதொன்றுமில்லை. அதனை உச்சரிப்பவன் சத்தியத்தையே வாயாரச் சொல்பவனாதலால் அது மௌன சாதனையை விட மேலானது".

*2:84.* யக்ஞம், யாகம் ஆகிய சாதனைகள் - இவற்றால் பெறுகின்ற வல்லபங்கள் அழிவுறக் கூடுமாகையால் - அழிவுள்ளதென்றும், 'ஓம்'

என்பதே பரப்பிரம்ம சொரூபமாகி அழிவற்று விளங்குவதால் 'அட்சரம்' (அழிவற்றது) என்றும் வேதம் கூறுகின்றது)"

2:85." பரப்பிரம்மத்தின் நாம உச்சாரணம் வேள்விகள் செய்வதைக் காட்டிலும் பத்து மடங்கு சிறப்புடையது; யார் காதிலும் விழாதவாறு உச்சரிப்பது நூறு மடங்கும், உச்சரிப்பு மானஸீகமாக நிகழ்வது ஆயிர மடங்கும் மேன்மையானதாகும்".

2:86. "இல்லறச் சடங்குகளில் பிரம்ம யக்ஞும் தவிர்த்த மற்ற நான்கு சடங்குகளும் ஒன்றாக இணைந்தாலும் காயத்திரி மந்திரத்தை ஜெபிப்பதானால் ஏற்படும் மகிமையில் பதினாறில் ஒரு பங்கு அளவுகூட ஈடாகாது. உபநயனம் செய்வது புதிய பிறப்பெடுப்பதற்கு இணையானது".

அடுத்ததாகத் தினசரி அனுஷ்டிக்க வேண்டிய வேள்விகளாவன:

3:69. "மேலே கூறிய இடங்களில் அறியாமல் செய்யப்படும் குற்றங்களுக்குக் கழுவாய் தேடும் பொருட்டு ஒவ்வொரு நாளும் இல்லறத்தான் செய்யவேண்டிய ஐம்பெரும் யக்ஞுங்களை மகரிஷிகள் வகுத்துத் தந்துள்ளனர்".

3:70. "அவையாவன:

வேதம் ஓதுதலும் கற்றலும் - பிரம்ம யக்ஞும்; அன்னம் படைத்தோ, புனல் வார்த்தோ தென்புலத்தார்க்கு வழிபாடாற்றுதல் - பிதுர் யக்ஞும்; தீயில் அவி சொரிந்து தேவரை வழிபடுதல் - தேவ யக்ஞும் ; பிற உயிர்களுக்கு உணவோ அரிசியோ அளித்தல் - பூத யக்ஞும்;. விருந்தினரை வரவேற்று உபசரித்தல் - மானுட யக்ஞும்".

3:71. "இந்த ஐம்பெரும் யக்ஞுங்களையும் தவறாமல் செய்யும் இல்வாழ்வோன் அந்த இல்லத்திலேயே தொடர்ந்து வாழ்ந்த போதிலும் பாவம் விளைவதற்கிடமானவைகளிலிருந்து மீட்சி பெறுவான்".

அடுத்ததாக ஆஸ்ரமங்களை எடுத்துக் கொண்டால் இந்துமதத்தத்துவத்தில் இந்த ஆஸ்ரமக் கோட்பாடு விநோதமானதோர் இயல்பாகும். வேறு எந்த மதத்தின் போதனைகளிலும் இது இடம் பெற்றிருக்கவில்லை. இந்த ஆஸ்ரமக் கோட்பாட்டின்படி மக்கள் வாழ்க்கை பிரம்மசரியம், கிரஹஸ்தம். வானப்பிரஸ்தம், சந்நியாசம் என நான்கு நிலைகளாகப் பகுக்கப்பட்டுள்ளன. பிரம்மசரிய நிலையில் மணமாகாத இளைஞன் ஓதுவதிலும் கல்வி கற்பதிலும் ஈடுபட்டிருக்க வேண்டும். இந்த நிலைக்குப் பின்னர் அவன் கிரஹஸ்தனாகின்றான். அதாவது திருமணம் புரிந்து கொண்டு மனைவிமக்களோடு ஒன்றி வாழ்வது இல்லறநெறி என்று கடனாற்றுகின்றான். அதன்பின்

வானப்பிரஸ்தம் எனப்படுவது இல்லறம் புரிந்து இன்புற்று வாழ்ந்தபின்பு வனம் சென்று புலனடக்கத்துடன் வாழ்தல். இந்த நிலையில் மனைவியுடன் வனம் செல்வதற்குத் தடையில்லை; உலகியல் பந்தங்களிலிருந்து முழுத்தொடர்பு நீங்கி இருக்க வேண்டியதில்லை. முற்றும் துறத்தல் என்னும் பொருள்படும் நான்காவது நிலையான சந்நியாசத்தில் துறவியாகி இறைவனை நாடுதலாகும். இறுதியாகக் கூறிய இரு ஆஸ்ரமங்கள் கட்டாயமாகப் பின்பற்றத் தக்கவையல்ல; பரிந்துரைக்கப்பட்டவை. இவற்றைப் பற்றி மனு விதித்திருப்பதாவது:

6:1 "இல்லறத்தில் அறநெறிகளில் வாழ்ந்த துவிஜர்கள் தூயராய், புலனடக்கிப் பின்னர் வானப்பிரஸ்த ஆஸ்சிரமம் அடைந்து வனங்களுக்குச் சென்று (பின்வரும் விதிகளின்படி) வாழக்கடவர்."

6:2 "தன் உடலில் நரையும் திரையும் தன் பிள்ளை வயிற்றில் பிறக்கும் பிள்ளையையும் பார்க்கின்ற இல்வாழ்வான் அந்த வயதில் வானப் பிரஸ்தம் மேற்கொள்ள வேண்டும்."

6:3. "விவசாயம் செய்து கிடைத்த உணவுப் பொருள், சொத்து, சுகங்கள் அனைத்தும்விட்டு மனைவியைப் பிள்ளையினிடம் ஒப்புவித்து அல்லது அவள் விரும்பினால் அவளையும் தன் உடன் கொண்டு வனம் செல்ல வேண்டியது "

6:33 "காட்டில் வாழ்வதான மூன்றாம் நிலையைக் கழித்து, நான்காம் நிலையில் ஆசைகளை வென்று உலகத்தொடர்பனைத்தும் நீத்துத் துறவியாகி விடலாம்".

இந்த விதிகளில் பொதிந்துள்ள சமத்துவமின்மை தெளிவானவை என்ற போதிலும் வெளிப்படையாகத் தெரியாதவை. இந்தச் சடங்குகளையும் ஆஸ்சிரம தர்மங்களையும் இருபிறப்பாளரான பிராமணர்கள் மட்டுமே பின்பற்றுதற்குரியவர்கள். இந்தப் பயன் துய்ப்பதற்குச் சூத்திரர்க்கு வாய்ப்பில்லை. இவர்களுக்குச் சடங்குகளை நடத்திக் கொள்ள மனு அனுமதித்தபோதிலும் 'அந்தச் சடங்குகளின் போது வேதமந்திரங்களைப் பயன்படுத்தக் கூடாது என விதித்திருக்கின்றார்.

இதுபற்றி மனு கூறுவதாவது.

10:127 "தன் குலக்கடமைகளை உணர்ந்த சூத்திரர் இருபிறப்பாளர் களின் தருமமான யாக, யக்ஞங்களைத் தாமும் மேற் கொள்ளும்போது, வேத மந்திரங்களைப் பயன்படுத்தாமல் ஸ்தோத்திர மந்திரங்களால் ஐம்பெரும் வேள்விகளைக் குல

1. பெண்களுக்கும் இந்த வாய்ப்பு மறுக்கப்பட்டுள்ளது.

வழக்கப்படி மேற்கொள்வதனால் உலகநிந்தைக்கு உட்பட்டு உழலாமல் நற்புகழும் அடைவர்"

பெண்களைப்பற்றி மனு தர்மம் கூறுவதைக் காண்க:

2:66 "மிஞ்சி, மேலாடை, தண்டம், பூணூல் அணிதல், முடியெடுத்தல் முதலியவை, சரீர பரிசுத்த கருமங்களில், பூணூல் அணிவதைத் தவிர மற்றவற்றை அந்தந்த முறைப்படி அந்தந்த வயதில் பெண்குழந்தைகளுக்கு வேதமந்திர பூர்வமாக இல்லாமல் வெறும் சடங்காகமட்டும் செய்விக்கத்தக்கதாகும்".

சூத்திரர்கள் இந்தச் சடங்குகள் செய்யக் கூடாதென மனு தடுப்பதேன்? சூத்திரர்கள் சந்நியாசிகளாகி விடக்கூடாது என மனு விலக்கிவைப்பது புதிராக உள்ளது. சந்நியாசம் என்பது துறப்பது; உலகியல் தொடர்புகளிலிருந்து நீங்குவது என்று பொருள் படுகின்றது. சட்ட நூல்களின் மொழியில் சொல்வதென்றால் சந்நியாசம் என்பது உறவு உரிமை அற்றுப்போதல் என்று விளக்கம் பெறுகின்றது. எனவே ஒருவன் சந்நியாசியாகின்றான் என்றால் அந்தக் கணத்திலேயே அவன் இறந்ததற்குச் சமமாகி அவனுக்குரியவற்றை அவனது வாரிசுகள் பெறுவதற்குரியவராகின்றனர். சூத்திரனொருவன் சந்நியாசியானால் இந்த விளைவுதான் உடனடியாக நிகழக்கூடியது. இதனால் அந்தச் சூத்திரனுக்குத்தான் பாதிப்பே ஒழிய வேறெவருக்கும் எந்த பாதிப்பும் கிடையாது. பிறகு எதற்கு இந்த விலக்கிவைப்பு? இது ஒரு முக்கிய வாதம். எனவே சந்நியாசமற்ற சடங்குகள் ஆகியவற்றின் சிறப்பையும் முக்கியத்தையும் பற்றி மனு என்ன கூறுகிறார் எனக் காட்டுவேன். பின்வரும் மனுதர்மக் கூற்றினைச் சிந்தித்துப் பார்ப்போமாக.

2:26 "இருபிறப்பாளர் (பிராமணர்) வேதத்தால் விதிக்கப்பட்ட சத் கருமங்கள் அனுசரிப்பதன் வாயிலாகக் கருதரித்தல் தொடங்கி இம்மையில் பிறவியைத் தூய்மையுறச் செய்யவும், மறுமை இன்பத்திற்குப் பாத்திரமாகவும் கடவர்"

2:28 "வேதம் ஓதுதல், புலால் அகற்றிய நோன்புகள் புரிதல், அவிசொரிந்து தீ வளர்த்தல், தேவ, ரிஷி, பிதுர்களுக்குத் தர்ப்பணம் செய்தல், மக்களைப் பெறுதல், பஞ்ச மகா யக்ஞங்கள், அக்னிஸ்தோமம் முதலான கருமங்களால் மனித உடல் பிரம்மத்தோடு ஐக்கியமாகும் தெய்வ நிலை சித்திக்கிறது".

சமஸ்காரங்களைச் செய்வதன் நோக்கம் இதுதான். மனுவும் சந்நியாசத்தின் நோக்கத்தை விளக்குகின்றார்.

6:81. "சம்சார, பந்தங்களையும் மான அவமானங்களையும் நீக்கினவன் (சந்நியாசி) பிரம்மசாயுஜ்யம் பெறுவான்."

6:85. "இவ்விதம் சந்நியாசம் பெறும் துவிஜன், மேலே கூறிய கடமை களை முறையே செய்து பாவமனைத்தையும் இம்மையிலேயே நீத்து மேலான பிரம்ம நிலையை எய்துவான்"

இவற்றிலிருந்து தெளிவாவது இதுதான். மனுவின் கூற்றுப்படிச் சடங்குகளைச் செய்வதன் நோக்கம் அதன் மூலம் இவ்வுலகில் உடம்பைப் தூயதாகவும், புனிதமானதாகவும் ஆக்குவதனால் கடவுளோடு இரண்டறக் கலப்பதற்குத் தகுதியுள்ளதாக ஆக்குதலாகும். ஆயினும் சடங்குகளும் சந்நியாசமும் உயர்வருணத்தாருக்கே உரியவை என்றும் கூறுகிறார். அவை சூத்திரர்க்கு உரியவை அல்ல, ஏன்? சூத்திரனின் உடல் புனிதமாவதோ, ஆன்மா தூய்மையடைவதோ கூடாதா? இறைவனைச் சென்றடையும் நாட்டம் சூத்திரனுக்கு இருக்க கூடாதா? இந்த வினாக்களுக்கு மனு, 'ஆம்' என்றுதான் விடையளிக்கக் கூடியவராக இருக்க வேண்டும். ஆயினும் ஏன் இத்தகைய விதிகளை வகுத்தார்? சமூக ஏற்றத்தாழ்வில் மனு அழுத்தம் திருத்தமான நம்பிக்கையுடையவர்; அதோடு மத சமத்துவத்தை அளிப்பதனால் ஏற்படக்கூடிய ஆபத்தையும் அறிந்தவர் என்பது இதற்குரிய பதில். கடவுளுக்கு முன்னர் அனைவரையும் போல நானும் சமமானவனென்றால் உலகில் நான் ஏன் சமத்துவமாக இருக்கக்கூடாது? இந்தக் கேள்வி மனுவைத் திகிலடையச் செய்திருக்கலாம். மத சமத்துவத்தை அளிக்க உடன்படுவதன் மூலம் சமூக ஏற்றத் தாழ்வினைச் சீர்குலைப்பதற்கு வழிவகுப்பதற்குப் பதிலாக மத சமத்துவமே கிடையாது என்று மறுப்பதையே அவர் ஏற்றுக் கொண்டிருக்கிறார்.

இவ்வாறு இந்துமதத் தத்துவத்தில் சமூக சமத்துவமின்மையும் மத சமத்துவமின்மையும் இரண்டற ஒன்றிப் போயிருப்பதையும் காணலாம்.

மனிதன் தன்னுடைய பாவங்களைப் போக்கிப் புனிதமடைவதைத் தடுப்பது, கடவுளை நெருங்குவதைத் தடுப்பது ஆகிய விதிகள் பகுத்தறிவுள்ள எவருக்கும் அருவறுப்பைத் தரக்கூடியவை; கொடியதொரு மனப்பாங்கினைக் காட்டக்கூடியவை. இந்துமதம் சமத்துவத்தை மறுப்பது என்பதற்கு இதுஒரு வெளிப்படையான எடுத்துக்காட்டு மட்டுமல்ல; மனிதருக்கே உரிய தனிச்சிறப்பாம் புனிதத் தன்மையையே மறுப்பது என்பதற்கும் சான்றாகிறது.

இது மட்டுமா? மனு தனிமனிதர் சிறப்பியல்பை ஏற்க மறுக்கிறார் என்பதோடு நிற்கவில்லை. தனிமனித சிறப்பியல்பை வேண்டுமென்றே இழிவுபடுத்துவதையும் அவர் ஆதரிக்கிறார். இந்து மதத்தத்து வத்திலுள்ள இந்தப் போக்கினை விளக்குவதற்கு இரண்டு நிகழ்ச்சிகளை மட்டும் நான் குறிப்பிடுவேன்.

சாதி அமைப்பை ஆராயத் தொடங்கியவர்கள் அனைவரும்

இயல்பாகவே சாதி அமைப்பின் தோற்றத்தையும் ஆராய தலைப்பட்டனர். சாதியமைப்பை விவரித்த முன்னோடி என்ற நிலையில் மனு சாதிகள் எப்படி தோன்றின என்பதையும் கூறுகிறார். எனவே மனு கூறும் சாதியமைப்பின் தோற்றம்தான் என்ன? இதற்கான அவரது விளக்கம் மிக எளிமையானது. நாற்பெரும் வருணங்களைத் தவிர்த்த மீதி சாதிகள் கீழானவை. நாற்பெரும் மூலச் சாதிகளைச் சேர்ந்த ஆண், பெண்களின் கூடா ஒழுக்கத்திலிருந்து உருவானவையே இந்த சாதிகள். நாற்பெரும் மூலச் சாதிகளைச் சார்ந்த ஆண், பெண்களிடையே நிலவிய பரவலான ஒழுக்கக் கேடுகளும் நடத்தைப் பிறழ்வுகளும் எண்ணற்ற சாதிகள் உருவாக வழிவகுத்தன; இத்தகைய சாதி மக்கள் பல்லாயிரக்கணக்கில் பெருகக் காரணமாயின. நாற் பெருஞ் சாதி ஆடவர் பெண்டிரின் பால் எத்தகைய பழியைச் சுமத்துகிறோம் என்பதைச் சிறிதேனும் பொருட்படுத்தாமலேயே அவர்கள் ஒழுக்கத்தின் பால் குற்றஞ் சுமத்துகிறார் மனு. குறிப்பாக , சண்டாளர் எனப்பட்ட தீண்டப் படாத சாதி மக்கள் பிராமணப் பெண்ணுக்கும் சூத்திர ஆடவனுக்கும் பிறந்த மக்கள். இதன்படி பார்க்கும்போது சண்டாளர்கள எண்ணற்றவராக இருப்பதால், ஒவ்வொரு பிராமணப் பெண்ணும் ஒழுக்கங் கெட்டவளாக, பரத்தையாக இருந்திருக்க வேண்டும் என்றாகிறது. இதே போல் ஒவ்வொரு சூத்திர ஆடவனும் சோரம் போனவனாக இருந்திருக்க வேண்டும். ஒழுக்கக் கட்டுப்பாட்டுக்குள் யாருமே இருந்திருக்க வாய்ப்பில்லை. எனவே மனு பல்வேறு சாதிகளின் தோற்றத்துக்குக் கூறும் மதிகேடான பழி சுமத்தல் வரலாற்றுண்மைகளைத் திரித்துக் கூறலாகவே அமைகிறது. இரண்டு எடுத்துக்காட்டுகளைக் கூறி இதனை விளக்கலாம் எனக் கருதுகிறேன். மகதர், வைதேகிகள் என்ற மக்கள் சம்பந்தமாக மனு தரும் விளக்கத்தையும் மாபெரும் இலக்கண மேதையான பாணினி விளக்கத்தையும் இப்போது பார்ப்போம். மனு, மகதர்கள் வைசிய ஆடவனுக்கும், க்ஷத்திரியப் பெண்ணுக்கும் பிறந்த கலப்புச் சாதி மக்கள் என்கிறார்; அதே போன்று வைதேகிகள் வைசிய ஆடவனுக்கும் பிராமணப் பெண்ணுக்கும் பிறந்த கலப்புச் சாதி மக்கள் என்கிறார் அவர். இப்போது பாணினிக்கு வருவோம். பாணினியோ மகதர்கள் மகத நாட்டு மக்கள் என்றும் வைதேகிகள் வைதேக நாட்டு மக்கள் என்றும் விளக்குகிறார். எவ்வளவு வேறுபாடு!! மனு கூறுவது எத்துணை கொடுமையானது!! பாணினி கி.மு. 300 இல் வாழ்ந்தவர். மனு சுமார் கி.பி. 200 இல் வாழ்ந்தவர். பாணினி காலத்தில் வாழ்ந்த மக்களை மனு மிகவும் கறைபடிந்த மனிதர்களாகக் காட்டுகிறார். அவர்களை இழிவுபடுத்த வேண்டும் எனக் கங்கணம் கட்டிக் கொண்டதே இதற்குக் காரணம். ஏன் அப்படி? மனு இவ்வாறு இந்த மக்களை ஏன் கொச்சைப் படுத்தினார் என்பது இன்னமும் ஆய்வு மூலம் முடிவு கட்டப்படாமலே

உள்ளது. நாம் இங்கே ஒரு வேடிக்கையான முரண்பாட்டைச் (புதிரைச்) சந்திக்கிறோம். பிற சமயங்கள் உலக முழுவதும் மனிதக் குலத்தை மேம்படுத்த முயன்றுவர இந்து சமயம் மக்களை இழிவு படுத்த முயன்றுள்ளதை மனு மூலம் பார்க்கிறோம்.

இந்தக் கொச்சைப் படுத்துதலையும் இழிவு படுத்தலையும் இந்து சமயக் குழந்தைக்குப் பெயர் சூட்டும் விதி முறையிலும் தெளிவாகக் காணமுடிகிறது.

இந்துக்களின் பெயர்கள் நான்கு வகைகளாக அமைகின்றன. அவை ஒன்று 1) குல தேவதை சம்பந்தப்பட்டதாகவோ 2) குழந்தை பிறந்த மாதம் சம்பந்தப்பட்டதாகவோ 3) குழந்தை பிறந்த நேரம் தொடர்பானதாகவோ 4) முற்றிலும் தொழில் சார்ந்தவையாகவோ அமைகின்றன. இந்த நான்காம் வகைப் பெயர், மனுவின் கூற்றுப்படி, இரு பகுதிகளைக் கொண்டிருக்கும். அந்தப் பகுதிகள் இரண்டும் எப்படி அமைய வேண்டும் என்பதற்கான நெறிமுறைகளையும் மனு கூறுகிறார். இந்த இரண்டாம் பகுதிப் பெயர் பிராமணனுக்கு மகிழ்ச்சியைக் குறிப்பதாகவும், க்ஷத்திரியனுக்குப் பாதுகாவலைக் குறிப்பதாகவும், வைசியனுக்குச் செல்வச் செழிப்பைக் குறிப்பதாகவும், சூத்திரனுக்குத் தொண்டூழியம் செய்வதைக் குறிப்பதாகவும் அமைய வேண்டும். எனவே இதன்படி பிராமணர் பெயரில் சர்மா (மகிழ்ச்சி), தேவ என்ற பின் பகுதியும் க்ஷத்திரியர் பெயரில் ராஜா (அதிகாரம்) வர்மா (வீரம்) என்ற பின் பகுதியும், வைசியர் பெயரில் குப்தா (கொடை) தத்தா (கொடையாளி) என்ற பின் பகுதியும், சூத்திரர்கள் பெயரில் தாசர் (ஊழியர்) என்ற பின் பகுதியும் அமையும். மனுவின் கூற்றுப்படி பெயரின் முற்பகுதி பிராமணனுக்கு மங்களத்தையும் க்ஷத்திரியனுக்கு அதிகாரத்தையும், வைசியனுக்குச் செல்வத்தையும், சூத்திரனுக்கோ வெறுப்பு தரும் ஒரு சொல்லையும் குறிக்க வேண்டும். இதை நம்ப மறுப்பவர் தக்க ஆதாரத்தைக் கேட்கலாம். மனு பெயரிடு விழாவைப் பற்றிப் பின்வருமாறு விவரிக்கிறார். மனு கூறுகிறார்:-

2:30 "பெயரிடும் சடங்கை குழந்தை பிறந்த பத்தாம் அல்லது பன்னிரண்டாம் நாள் அல்லது அதிர்ஷ்டமான பௌர்ணமி நாளில், நல்ல முகூர்த்தத்தில் மங்கலமான ஓரையில் குழந்தையின் தந்தை நடத்த வேண்டும் அல்லது நடத்துவதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும்".

2:31. "பிராமணப் பெயரின் முற்பகுதி மங்கலத்தைக் குறிக்கும் சொல்லாக இருக்க வேண்டும். க்ஷத்திரியப் பெயரின் முதற்பகுதி அதிகாரத்தைக் குறிக்க வேண்டும்; வைசியப் பெயரின் முதற்பகுதி செல்வத்தைக் குறிக்க வேண்டும்; சூத்திரப் பெயரின் முதற்பகுதி வெறுப்பினைக் குறிக்க வேண்டும்".

*2:32. "பிராமணப் பெயரின் இரண்டாம் பகுதி மகிழ்ச்சியைக் குறிப்பதாகவும், க்ஷத்திரியர் பெயரின் இரண்டாம் பகுதி பாதுகாவலைக் குறிப்பதாகவும், வைசியப் பெயரின் இரண்டாம் பகுதி வளமான வாழ்வைக் குறிப்பதாகவும், சூத்திரப் பெயரின் இரண்டாம் பகுதி தொண்டூழியத்தைக் குறிப்பதாகவும் அமைய வேண்டும்".*

*சூத்திரனுக்கு நல்ல பெயர் வைப்பதை மனுவால் பொறுத்துக் கொள்ள முடியவில்லை. வாழ்விலும் பெயரிலும் வெறுக்கத்தக்க நிலையிலேயே சூத்திரன் இருக்க வேண்டும்.*

*எனவே, இந்து மதம், சமூகச் சமத்துவத்தை மறுப்பதோடு சமயச் சமத்துவத்தையும் மறுக்கிறது; மனித ஆளுமையையே கீழ்மைப் படுத்துகிறது என்பது தெளிவு.*

*இந்து மதம் தன்னுரிமையை ஏற்கிறதா?*[1] *தன்னுரிமை உண்மையாக அமைய சில சமூக நிலைமைகள் இருந்திடல் வேண்டும்.*

*முதலில் அதற்குச் சமூகச் சமத்துவம் நிலவ வேண்டும். "தனிச் சலுகைகள் காரணமாக சமூகச் செயற்பாடு என்னும் துலாக்கோல் செல்வந்தர்கள் பக்கமே சாய்கிறது. குடிமக்களின் சமூக உரிமைகள் எந்த அளவுக்கு அதிகமாக இருக்கின்றனவோ அந்த அளவுக்கு அவர்கள் தமது சுதந்திரத்தை அதிகமாகப் பயன்படுத்த வாய்ப்பு ஏற்படும்... தன்னுரிமை அதன் உண்மையான குறிக்கோளை எய்த வேண்டுமானால், சமத்துவம் நிலவ வேண்டியது மிக முக்கியமான முன் தேவையாகும்."*

*இரண்டாவதாகப் பொருளாதாரப் பாதுகாப்பு மிகவும் கட்டாயமானதாகும். "ஒரு தனிமனிதன் தான் விரும்பும் தொழிலை மேற்கொள்ள உரிமை பெற்றவனாக இருக்கலாம்... ஆனால் வேலையில் பாதுகாப்பு இல்லாவிட்டால் அவன் மன ரீதியான அடிமைத் தனத்துக்கும் உடல் ரீதியான அடிமைத் தனத்துக்கும் உள்ளாகிறான். அப்போது அவன் தன்னுரிமைப் பற்றிக் கருதிப் பார்க்கவே முடியாது... எதிர்காலம் பற்றிய இடையறாத கவலையும், ஏற்படவுள்ள பேரழிவு பற்றிய உணர்வும் மகிழ்ச்சியையும் இன்பத்தையும் தக்கப்படி தேடி அடைய வொட்டாமல் செய்து விடும். இந்த நிலைமை தொடர்ந்து நிலவும். எனவே, பொருளாதாரப் பாதுகாப்பில்லாமல் கிடைக்கும் தன்னுரிமை பொருளற்றதேயாகும். மனிதன் சுதந்திரமானவனாக இருக்கலாம். ஆனால் அவன் அந்த சுதந்திரத்தின் குறிக்கோளை அடைய முடியாதவனாக இருக்கிறான்.*

*மூன்றாவதாக, அனைவருக்கும் கல்வி அறிவு கிடைக்க வேண்டும். இந்தச் சிக்கலான உலகில் தனக்கு நேரும் இடுக்கண்களைக் களைய*

---

[1] *பார்க்க: லாஸ்கி, தற்காலத்தில் அரசியல் தன்னுரிமை*

அறிவு தேவை. இந்த அறிவுதான் மனிதன் சுதந்திரமாக இயங்க வழிவகுக்கும்.

"இந்தச் சூழ்நிலைகளில், தனது சுதந்திரத்தைப் பயன்படுத்துவதற்கு மனித மனம் பயிற்றுவிக்கப் படாவிட்டால் அத்தகைய சுதந்திரம் அர்த்தமற்றதாகி விடுகிறது. எனவே, ஒரு மனிதன் சுதந்திரமானவனாக இருக்க வேண்டுமானால் கல்வி பெறும் உரிமை முதன்மையானதாகிறது. ஒரு மனிதன் கல்வி அறிவு அடைவதைத் தடுத்து பாருங்கள். அப்போது அவன் தன்னை விட நல்வாய்ப்பு பெற்றவர்களுக்கு அடிமையாகிவிடுவான். எனவே அறிவுத் தடுப்பு என்பது ஒருவன் மாபெரும் இலட்சியங்களை அடைவதற்கான ஆற்றலை அவனுக்கு மறுப்பதாகும். ஒரு வகையில் அவன் சுதந்திரமானவனாக இருக்கலாம்... ஆனால் தனது சுதந்திரத்தைத் தான் மகிழ்ச்சியாக இருக்க அவன் பயன்படுத்த முடியாது."

இவற்றில் எந்த நிலைமைகளை இந்து மதம் பூர்த்தி செய்கிறது? எப்படி அது சமத்துவத்தை மறுக்கிறது என்பதை முன்பே பார்த்தோம். அது சமமில்லாமையையும் தனிச் சலுகையையும் வளர்க்கிறது. இவ்வாறு இந்து மதத்தில் சுதந்திரத்துக்கான முதல் நிலையே இல்லை என்றாகி விடுகிறது.

பொருளாதாரப் பாதுகாப்பைப் பொறுத்த வரையில் இந்து மதத்தில் மூன்று விஷயங்கள், துலம்பரமாகத் தெரிகின்றன. முதலாவதாக, இந்து மதம் தனிமனிதன் விருப்பப்பட்ட தொழிலைத் தேர்ந்தெடுக்கும் உரிமையை மறுக்கிறது. மனுவின் சட்டத்தில் மனிதனது தொழில் அவன் பிறப்புக்கு முன்பே தீர்மானிக்கப்பட்டு விடுகிறது. இந்து மதம் இந்த விஷயத்தில் தேர்ந்தெடுக்கும் வாய்ப்பைத் தருவதில்லை. இன்னாருக்கு இன்ன தொழில் என்று முன்கூட்டியே தீர்மானிக்கப்பட்டு விடுவதால் திறமைக்கோ விருப்பத்துக்கோ இடமே கிடையாது.

இரண்டாவதாக, மற்றவர் தேர்ந்தெடுத்த இலட்சியங்களை நிறைவேற்றுவதற்குப் பணியாற்றும்படி இந்து மதம் மக்களைக் கட்டாயப் படுத்துகிறது. மனு, சூத்திரன் உயர் சாதிக்குத் தொண்டூழியம் செய்யவே பிறந்தவன் என்கிறார். இதையே அவன் தனது குறிக்கோளாகவும் ஏற்கவேண்டுமெனக் கூறுகிறார். மனுவின் நூல் சட்டப் பிரிவைப் பாருங்கள்.

10:121. "சூத்திரன் பிராமணனுக்கு ஊழியம் புரிந்து வாழ முடியாவிட்டால் க்ஷத்திரியனுக்கோ, செல்வந்தனான வைசியனுக்கோ ஊழியம் செய்து பிழைக்கலாம்".

10:122. "ஆனாலும் சூத்திரன் கட்டாயம் பிராமணர்களுக்கும் தொண்டூழியம் செய்ய வேண்டும்".

மனு, சூத்திரனுக்கு விதிக்கப்பட்ட இலட்சியமாக தொண்டூழியம் புரிவதை வரையறுப்பதோடு நிற்கவில்லை. மேலும் ஒருபடி மேலே செல்கிறார். அவன் இந்த ஊழியத்தைத் தவிர்க்கவோ அல்லது இந்தக் கடமையிலிருந்து தப்பித்துக் கொள்ளவோ வழியேதும் இல்லை என்கிறார். ஏனெனில் அரசனுடைய கடமைகளில் ஒன்று என்ன தெரியுமா? சூத்திரர் உட்பட எல்லா வருணத்தாரும் தத்தமக்கு விதிக்கப்பட்ட கடமைகளைச் செவ்வனே நிறைவேற்றுகிறார்களா என்பதைக் கண்காணிப்பதுதான்.

8:140. "அரசன் வணிகர்களை வணிகம், பணத்தை வட்டிக்கு விடுதல், வேளாண்மை செய்தல் அல்லது கால்நடைகளைப் பேணுதல் போன்ற ஏதாவதொரு தொழிலை மேற்கொள்ளும்படி கட்டளையிட வேண்டும். கீழ்ச் சாதியைச் சார்ந்தவன் இருபிறப்பாளர்க்குத் தவறாது தொண்டு செய்யவேண்டும்".

8:418. "அரசன், வணிகரும் கைவினைஞரும் தமக்குரிய கடமைகளை ஒழுங்காகச் செய்கிறார்களா என விழிப்போடு கண்காணித்து வரவேண்டும். ஏனெனில் அவர்கள் கடமை தவறினால் அது இந்த உலகத்தைக் குழப்பத்தில் ஆழ்த்தி விடும்.

இந்த விதி முறையைப் பேணத் தவறும் அரசனும் சட்டப்படி தண்டனைக் குரியவனே.

8:335. "ஒரு தந்தையோ, ஒரு நண்பரோ, ஒரு தாயோ, ஒரு மனைவியோ, ஒரு மகனோ, ஒரு புரோகிதனோ தத்தமது கடமைகளைச் செய்யத் தவறும்போது அரசன் அவர்களைத் தண்டிக்காமல் விடக்கூடாது".

8:336. "கீழ்ச் சாதியானுக்கு ஒரு பணம் அபராதமாக விதிக்கப்பட்டால் அரசனுக்கு ஆயிரம் பணம் அபராதம் விதிக்க வேண்டும். இந்தத் தண்டப் பணத்தை அவன் புரோகிதர்களுக்குத் தரவேண்டும் அல்லது ஆற்றில் விட வேண்டும். இது ஒரு புனிதமானச் சட்டமாகும்".

இந்த விதிமுறைகள் ஆன்மீக ரீதியிலும், பொருளாதார ரீதியிலும் இரு வகையில் முக்கியத்துவம் வாய்ந்தவை. ஆன்மீக ரீதியில் பார்க்கும்போது அது அடிமைத்தனத்தின் சாசனமாக அமைந்துள்ளது. அடிமைத்தனம் என்பதன் சட்டரீதியான புறவடிவத்தை மட்டும் பார்த்தால் இது புரியாது. அதன் உள்ளர்த்தத்தைப் புரிந்து கொண்டால்தான் விளங்கும். அடிமை என்பதன் உள்பொருளைப் பிளாட்டோ நன்கு விளக்குகிறார். அவரது கருத்துப்படி, தனது நடத்தையைக் கட்டுப்படுத்தும் குறிக்கோள்களை மற்றவர்களிடமிருந்து பெறுவதற்கு இணங்குபவனே அடிமை என்பவன், அவன் அந்தக் குறிக்கோள்களைத் தானாகவே வகுத்துக் கொள்ள திறனிழக்கச் செய்யப்பட்டுள்ளான். அவன் மற்றவர் எண்ணங்களையும், குறிக்கோள்களையும் நிறைவேற்றுபவன் மட்டுமே ஆகிறான். இந்த

நிலையில்தான் சூத்திர அடிமையைப் புரிந்துக் கொள்ளவேண்டும். பொருளாதார ரீதியில் பார்க்கும்போது மனுவின் விதிமுறைகள் சூத்திரர்களின் பொருளாதாரச் சுதந்திரத்தைத் தடுக்கின்றன. உழைப்பதே சூத்திரனது கடமை என்று மனு கூறகிறார். இதில் குறைகூறுவதற்கு ஏதும் இல்லை என்று தோன்றலாம். இதில் உள்ள கோளாறு என்னவென்றால் சட்டமே இவர்களைப் பிறருக்கு உழைப்பதையே கடமையாக விதிப்பதுதான். அவன் தனக்காகத் தொழில் செய்ய முடியாது. அதாவது அவன் பொருளாதாரச் சுதந்திரம் பெறப் பாடுபடக் கூடாது. எப்போதும் அவன் பொருளாதார நிலையில் மற்றவர்களைச் சார்ந்தே இருக்க வேண்டும்.

மேலும் மனு கூறுகிறார்:.

1:91. "சூத்திரனுக்குக் கடவுள் கூறும் கடமை அவன் மற்ற மூன்று வருணங்களுக்கும் தொண்டு செய்ய வேண்டும் என்பதே".

மூன்றாவதாக, இந்து மதம் சூத்திரனுக்குச் செல்வம் திரட்டும் உரிமையைத் தருவதில்லை. மற்ற வருணத்தார் சூத்திரனுக்குத் தரவேண்டிய கூலியைப் பற்றி மனு கூறுவது வியப்பிலும் வியப்பாக இருக்கிறது. சூத்திரர் கூலி பற்றி மனு கூறுகிறார்:

10:124. "சூத்திரனுக்கு ஒவ்வொருவரும் அவர்களது குடும்பச் சொத்தின் வருவாயின் ஒரு பகுதியை, அவனது முயற்சி, திறமை, அவன் காப்பாற்ற வேண்டியவர்களது எண்ணிக்கை ஆகியவற்றைப் பொறுத்து, பகிர்ந்து ஒதுக்கிக் கொடுக்க வேண்டும்".

10:125. "மிஞ்சிவிடும் உணவைத் தந்துவிட வேண்டும்; பழையக் கந்தைத் துணிகளைத் தர வேண்டும்; பழைய வீட்டுத் தட்டுமுட்டு சாமான்களைத் தந்துவிட வேண்டும்."

இதுதான் கூலி சம்பந்தமான மனுவின் சட்ட விதிமுறை. இது குறைந்த பட்சக் கூலி பற்றிய விதியல்ல. அதிகப் பட்ச கூலி பற்றிய விதிமுறையே ஆகும். இந்த விதிமுறை சூத்திரன் பொருள் திரட்டுவதையும் (பொருளாதாரப் பாதுகாப்புப் பெறுவதையும்) தடுக்கும் வகையில் கூலியை மிகக் குறைவாக நிர்ணயித்துள்ளது. மேலும் சூத்திரன் தப்பித் தவறிப் பொருள் திரட்டுவதைத் தடுக்க சூத்திரர்களுக்குச் சொத்துரிமையே கிடையாது என்று வரையறுத்து விடுகிறார். அவர் பின்வருமாறு திட்ட வட்டமாகக் கூறுகிறார்:

10:129. "சூத்திரன் தன்னால் பொருள் திரட்ட முடியும் போதும், அவ்வாறு திரட்டிச் செல்வம் சேர்க்கக் கூடாது. ஏனெனில் செல்வந்தனான சூத்திரன் பிராமணர்களுக்குத் துன்பம் தருகிறான்".

எனவே இந்துமதத்தில் தொழில் தேர்வு வாய்ப்பு இல்லை.

பொருளாதாரச் சுதந்திரமும் கிடையாது. ஏன், பொருளாதாரப் பாதுகாப்பே கிடையாது. சூத்திரனைப் பொருளாதார உறுப்பினனாகக் கருதவே வாய்ப்பில்லை. அது பொருளற்றதும் ஆகும்.

அறிவு பரவ இரு நிலைமைகள் மிக முக்கியமாகத் தேவைப் படுகின்றன. அதற்கு அடிப்படை கல்வியறிவு தேவை. மேலும் எழுத்தறிவும் தேவை. இவை இரண்டும் இல்லாமல் அறிவொளி பரவ முடியாது. முறையான கல்வி இல்லாமல், சமூக வளங்களையும் சாதனைகளையும் அனைவருக்கும் பரப்ப முடியாது. அடிப்படையான கல்வியறிவில்லாமல் சமூகத்தில் திரண்டுள்ள அறிவையும் பட்டறிவையும் இளைஞர்கள் அடைய முடியாது. இந்த அறிவை மற்றவர்களோடு அன்றாட வாழ்வுத் தொடர்புகளால் மட்டும் பெற முடியாது. கல்வியறிவில்லாமல் புதிய கருத்துகளையும் கண்ணோட்டங்களையும் பெற முடியாது. அவனது அறிவு விரிவடையாது. செய்யும் தொழிலுக்கும் அவன் அடிமையாகவே இருப்பான். அடிப்படைக் கல்விக்குப் பள்ளிக் கூடங்கள், பாடப் புத்தகங்கள், திட்டமிட்ட பயிற்சிகள் போன்ற அமைப்புகள் தேவை. எழுத்தறியாமல், எழுதப்படிக்கத் தெரியாமல் மேற்கூறிய வசதிகளை எப்படி பயன்படுத்தமுடியும். எழுதுதலும் படித்தலும் ஒன்றோடொன்று ஒருங்கிணைந்த கலையாகும். எனவே இவை இரண்டுமின்றி அறிவைப் பெறுவது என்பது முயற்கொம்பே!

இந்த விஷயத்தைப் பொறுத்தவரை இந்து மதம் எங்கே நிற்கிறது?

இந்து மதத்தில் அடிப்படைக் கல்வி பற்றிய கண்ணோட்டம் மிகக் மிகக் குறுகிய அடிப்படையும் வரம்பும் கொண்டதாக உள்ளது. கல்வி என்பது வேதங்களைப் படிப்பது மட்டுமே என்று கருதப்படுகிறது. இது இயல்பானதே. ஏனெனில் இந்துக்கள் வேதத்துக்கு மேலான அறிவு இருப்பதாக நம்பவில்லை. ஏனவேதான் கல்வி என்பது வேதப்படிப்பாக மட்டுமே நிலவியது. அவர்களது கடமை வேதம் கற்றுதரும் பள்ளிகளில் படிப்பதேயாகும். இது பிராமணர்களுக்கு மட்டுமே உகந்ததாக இருந்தது. கைவினைஞருக்கும் வணிகருக்கும் தேவையான கலை, அறிவியல் கல்வியைக் கற்றுத்தரும் பொறுப்பு அரசுக்கும் அப்போது கிடையாது. அரசின் புறக்கணிப்பால் அவர்கள் கல்வி பெறுவதற்காக இடம் பெயர வேண்டிய கட்டாய ம் நிலவியது.

ஒவ்வொரு வகுப்பும் பாரம்பரியமாகத் தான் ஈடுபட்டு வந்த தொழில் பற்றிய அனுபவ அறிவை இளைய தலைமுறைக்குக் கற்றுத் தர வேண்டியதாய் இருந்தது. வணிகக் குடியினருக்கு அடிப்படை வணிகப் புவியியலும், எண் கணிதமும், வணிகவியல் நடைமுறை விவரங்களும், பலமொழிகளைப் பற்றிய அடிப்படைகளும்

தேவைப்பட்டன. இவை தந்தையிடமிருந்து வணிகம் செய்யும் போக்கிலேயே கற்றுக் கொள்ளப் பட்டன. இதே முறையில் சூத்திரப் பிரிவில் இருந்து உருவாகிய கைவினைஞர்களும், கலைஞர்களும், ஓவியர்களும், தங்களது கைத்தொழில்களையும் கலைகளையும் தமது குழந்தைகளுக்குத் தொழில் செய்யும் போதே கற்றுக் கொடுத்தனர். இப் பிரிவுகளில் வீட்டுக் கல்வியே நிலவியது. கல்வியும் நடைமுறைத் தன்மை வாய்ந்திருந்தது. இம் முறையானது ஒரு குறிப்பிட்ட பொருளைச் செய்யும் திறமையை மட்டுமே வளர்த்தது. புதுக் கண்ணோட்டங்களுக்கோ கருத்துகளுக்கோ வழிவகுக்கவில்லை. அது அறிவின் பரிமாணத்தை அகலப்படுத்தவும் உதவவில்லை. எனவே தரப்பட்ட நடைமுறைக் கல்வி, ஒரு தனித்த செயல் வழிகளை மட்டுமே கற்றுத் தந்ததால் புதிய மாறுபட்ட சூழலில் இத்திறமை பயன்படாததாகி விட்டது. இந்து சமயத்திளின்றும் பிரிக்கப் படமுடியாத ஒருங்கிணைந்த முறையாக எழுத்தறிவிப்புப் பயிற்சி விளங்கியது. இதைப் புரிந்து கொள்ள வேதம் ஓதல் பற்றியும், ஓதுவித்தல் பற்றியும், மனு கூறும் விதிமுறைகளைக் கண்ணோட்டமிட்டால் தெளிவாகப் புரியும். இவ் விதிகள் கீழ்வரும் சட்டப்பிரிவுகளில் அடங்கியுள்ளது.

1:88. "வேதம் கற்றலும் கற்றுத்தரலும் கடவுளால் பிராமணர்களுக்காக ஒதுக்கப்பட்டவையாகும்".

1:89. "க்ஷத்திரியர்களை வேதம் படிக்கும்படி கடவுள் பரிந்துரைத்துள்ளார்".

1:90. "வைசியர்களும் வேதம் படிக்க கடவுள் பரிந்துரைத்துள்ளார்".

2:116. "குருவின்றி வேதம் கற்பவர் வேதத்தைத் திருடிய தண்டனைக்கு உள்ளாகி நரகத்தில் உழல்வர்".

4:99. "சூத்திரர்கள் முன்னிலையில் இருபிறப்பார் வேதத்தைப் படித்துக் காட்டக் கூடாது".

10:18. "வேத பாடத்துக்கும் பெண்களுக்கும் தொடர்பேதும் இல்லை".

10:199 "இரு பிறப்பாளன் பெண்களுக்கும் சூத்திரர்களுக்கும் முறைகேடாக வேதத்தைக் கற்றுக் கொடுத்தால் அவன் மாபெரும் பாவம் செய்தவனாகிறான். இதற்குக் கழுவாயாக ஓராண்டு பார்லிக் கஞ்சி மட்டுமே குடிக்கும்படி விதிக்கப்படுவான்."

இந்த விதிமுறைகளில் மூன்று முக்கிய அம்சங்களைக் காணலாம். பிராமணரும், க்ஷத்திரியரும், வைசியரும் வேதம் படிக்கலாம். இவருள் பிராமணர் மட்டுமே வேதத்தைக் கற்பிக்கலாம். ஆனால் சூத்திரரைப் பொறுத்த மட்டில் அவர்கள் வேதம் படிக்கக் கூடாது என்பது மட்டுமல்ல, படிக்கும் இடத்தில் நின்று அதைக் கேட்கவும்கூட

மனுவின் வழித் தோன்றல்கள் சூத்திரர்கள் வேதம் பயில்வதைத் தண்டனைக்குரியவராக்கும் குற்றமாக்கினர்.

எடுத்துக்காட்டாக, கௌதமர் கூறுவதைக் கேளுங்கள்:

12:4. "சூத்திரன் மனப்பாடம் பண்ணும் நோக்கத்துடன் வேதம் படிப்பதைக் கேட்டால் அவனது காதுகளில் காய்ச்சிய ஈயத்தையும் அரக்கையும் ஊற்ற வேண்டும்; அவன் வேதம் ஓதினால் ஓதும் நாக்கு துண்டிக்கப்பட வேண்டும். வேதத்தில் முழுத் தேர்ச்சி அடைந்தால் அவனது உடம்பு துண்டு துண்டாக வெட்டிச் சிதைக்கப்பட வேண்டும்",

காத்தியாயனரும் இதே போன்று கூறுகிறார். பண்டைய உலகம் தனது மக்களுக்குக் கல்வி தரும் பொறுப்பை ஏற்றுக் கொள்ளாததற்காக அது குற்றம் சாட்டப்படுவதுண்டு. ஆனால் எந்தச் சமுதாயமும் மதக் கருத்துக்களைப் பொதுமக்கள் படிப்பதையும் அறிந்து கொள்வதையும் தடுத்ததில்லை. எந்தச் சமூகமும் பொதுமக்கள் அறிவு பெறுவதைத் தடுத்ததாக வரலாறில்லை. எந்தச் சமுதாயமும் பொதுமக்கள் அறிவைத் தேடி அடைவது குற்றமாகக் கருதித் தண்டனை ஏதும் அளித்ததில்லை. பொதுமக்களுக்கு அறிவைத் தரமறுத்த ஒரே தெய்வீகச் சட்ட வல்லுனராக மனு ஒருவரைத்தான் கூறலாம்.

இப்படியே விரிவாக கூறிக்கொண்டிருக்க நான் விரும்பவில்லை. இதனால் ஏற்பட்ட விளைவைக் கூற விரும்புகிறேன். வேதம் பயிலும் உரிமை பொது மக்களுக்கு மறுக்கப்பட்டதால், உலகியல் வாழ்க்கையில் எழுத்தறிவின்மையும் அறியாமையும் மண்டின. படிப்பதும் எழுதுவதும் வேதம் கற்பதனுடனும் கற்றுத் தருவதுடனும் பின்னிப் பிணைந்திருந்ததால் வேதம் கற்க உரிமை பெற்ற உயர் குடியினரிடம் மட்டுமே படிப்பதும் எழுதுதலும் நிலவியது. ஆனால் வேதம் கற்க உரிமை தரப்படாத பொது மக்களுக்கு எழுதவும் படிக்கவுமான உரிமை மறுக்கப்பட்டது. எனவே எழுத்தறிவும் படிப்பறிவும் வேதக் கல்வி கற்பாருக்கு மட்டுமே தேவைப்படுவதாயின. இதனால் மனு உருவாக்கிய விதிமுறைகள் எழுத்தறிவினையும் படிப்பறிவினையும் கொடுப்பதற்கும் மறுப்பதற்குமான விதிமுறைகளாக மாறின. எனவே வேதம் படிக்கும் உரிமை உள்ளவருக்கு எழுதப் படிக்கும் உரிமை கிடைத்தது. வேதம் படிக்கும் உரிமை மறுக்கப்பட்டவருக்கு எழுதப்படிக்கும் உரிமை கிடைக்காமல் போனது. விதித்தபடி எழுதப் படிக்கும் உரிமை ஒரு சில மேற்குடியினருக்கு மட்டுமே உரியதாகியது. எழுத்தறிவின்மை எண்ணற்ற மக்களது தலைவிதியாயிற்று.

மேலும் ஒருபடி மேலே சென்றால், மனுவால் பொது மக்களின் மீது சுமத்தப்பட்ட இந்த எழுத்தறிவின்மை அம் மக்களிடம் எவ்விதம் மடமையும் அறியாமையும் பெருக வழிவகுத்தது என்பதைக் காணலாம்.

இந்து மதம் அறிவைப் பரப்புவதற்கு மாறாக அறியாமை இருட்டைத் தான் கொண்டு வந்தது.

இந்த நிலைமைகளைக் கருத்தில் கொண்டோமானால் இந்து மதம் மனிதன் தன்னுரிமையுடன் வாழ்வதற்கேற்ற சுற்றுச் சூழலை உருவாக்குவதற்கு எதிராகச் செயல்பட்டது, அதாவது சுதந்திரம் உருவாவதைத் தடுத்தது என்பது புலனாகும்.

## IV

இந்து மதம் சகோதரத்துவத்தை ஏற்கிறதா?

சமூகத்தில் எப்போதும் இருவகை சக்திகள் செயல்படுகின்றன. ஒன்று தன்னலம், மற்றொன்று சகோதரத்துவம்; தன்னலம் எங்கும் வியாபித்திருப்பது. ஒவ்வொரு தனிமனிதனும் 'நானும் என்னைச் சுற்றியுள்ளவரும் உடன் பிறப்புகளா, மிகத் தொலைவுடைய ஐம்பதாம் நிலை சுற்றத்தினனுக்கும் கூட நான் உதவ வேண்டுமா, ஏன் அவர்களுக்கு நான் பணிபுரிய வேண்டும்' என்று கேட்டுக் கொள்கிறான். அவன் தனது சொந்த நலத்தை மட்டுமே கருதுகிறான். தனக்குள்ளாகவே உலகம் முடிந்து விடுவது போல நினைக்கிறான். சமூகத்துடன் தொடர்பில்லாதவனாக, ஏன் சமூக எதிரியாகக் கூட செயல்படுகிறான். சகோதரத்துவம் இதற்கு எதிரான தன்மை கொண்டது. தோழமை தன்மையை விளக்கும் உணர்வே சகோதரத்துவம். இது மற்றவருக்கு நல்லவற்றைச் செய்யத் தூண்டிவிடுவதாகும்.

ஒருவன் மற்றவர்களின் நன்மையுடன் தன்னைப் பிணைத்துக் கொள்ளும் உணர்வும், மற்றவர்களின் நன்மை தனது நல்வாழ்விற்கு இன்றியமையாதது என்ற உணர்வும் இதில் பொதிந்துள்ளது. இந்த சகோதரத்துவ உணர்வுதான் "இன்ப வாழ்வுக்கான போராட்டத்தில் மற்றவர்களைத் தனது எதிராளிகளாகக் கருதாமல் ஒருவனைத் தடுக்கிறது; இப் போராட்டத்தில் தான் வெற்றி பெறும் பொருட்டு மற்றவர்கள் தோற்க வேண்டும் என்ற எண்ணம் அவனுக்கு ஏற்படாதபடியும் செய்கிறது." இவ்வகையில் பார்க்கும்போது சுய நலம்தான் அராஜகத்துக்கு வழிவகுக்கிறது. சகோதரத்துவம்தான் அராஜகத்தை தவிர்த்து மனிதர்களிடையே தார்மீக ஒழுங்குபாட்டைக் கட்டிக் காக்கிறது. இதில் எந்தவித ஐயத்திற்கும் சிறிதும் இடமே இல்லை.

பிற மனிதர்பாலான இந்த உடன்பிறப்புணர்வு எப்படி உருவாகிறது? ஜே.எஸ். மில் இதை இயற்கையான உணர்வு என்கிறார். அவர் கூறுகிறார்.

"சமூக நிலை என்பது மிக இயற்கையானதும் கட்டாயமானது தேவையானது மட்டுமல்ல மிகவும் பழக்கமானதும் கூட. ஒரு சில இயல்பு மீறிய சூழ்நிலைகளில் தவிர, மனிதன் தன்னை ஒரு அமைப்பின்

உறுப்பினனாகத் தவிர தனிமனிதனாக உணர்வது இல்லை. மனிதன் காட்டுமிராண்டி நிலையை விட்டு விலகி வளர வளர இந்த இணைப்பு மேலும் மேலும் வலுவடைகிறது. சமூக நிலைக்குத் தேவைப்படும் முக்கியமான நிலைமைகள் தனிமனிதன் எந்தச் சூழலில் பிறக்கிறானோ அந் நிலைமைகளில் உருவாகின்றன. தனிமனித வாழ்வின் போக்கும் இதைச் சார்ந்தே உள்ளது. ஆண்டான், அடிமை சமூக உறவு தவிர்த்த பிற சமூகங்களில் அனைத்து மனிதர்களும் சமூக நலனைத் தீர்மானிக்க சமவாய்ப்பளிக்கப் படுவார்கள். வேறு விதமாக அமைய வாய்ப்பே இல்லை. அனைத்து மனிதர்களின் நலன்களும் சமமாக மதிக்கப்பட்டால்தான் சமத்துவமுள்ள சமூகம் உருவாகும். அனைவருடைய நலன்களும் சமமாகக் கருதப்படும் என்னும் அடிப்படையில்தான் சமத்துவமானவர்களிடையே கூட்டுறவு நிலவ முடியும். நாகரிகத்தின் எல்லாக் கட்டங்களிலும் சர்வாதிகார மன்னனைத் தவிர ஒவ்வொருவரும் சமநிலையாளர்களைக் கொண்டிருந்ததால் ஒவ்வொருவரும் மற்றவர்களுடன் இத்தகைய நிலைமையிலேயே வாழ வேண்டியிருந்தது; இவ்வாறில்லாமல் மற்றவர்களுடன் வேறுவிதமான நிலைமைகளில் நிரந்தரமாக வாழ்வதை அசாத்தியமாக்கும் திசை வழியில் ஒவ்வொரு கால கட்டத்திலும் சிறிதளவு முன்னேற முடிந்தது. இவ்வாறாக மற்றவர்களுடைய நலன்களை முற்றிலும் புறக்கணிக்கக் கூடிய ஒரு நிலையைக் கருதிப் பார்க்க முடியாத வகையில் மக்கள் வளர்ந்தனர்."

இந்துக்களிடம் இத்தகைய தோழமை உணர்வு காணப்படுகிறதா? கீழே தரப்பட்டுள்ள விவரங்கள் இந்தப் பிரச்சினையைப் புரிந்து கொள்ளுவதற்குப் பெரிதும் உதவும்.

ஒருவருக்கு முதலில் நினைவுக்கு வருவது இங்குள்ள எண்ணிறந்த சாதிகளே. சாதிகளின் மொத்த எண்ணிக்கையை யாருமே இதுவரை கணித்ததாகத் தெரியவில்லை. ஓரளவுக்கு இங்குள்ள சாதிகள் 2000க்கும் குறையாது. 3000 அளவுக்கும் கூட எட்டலாம். இது மட்டுமே கவலை தரும் செய்தியல்ல. வேறு சிலவும் உள்ளன. இந்து சாதி மேலும் பல உட்பிரிவுகளாகப் பிரிந்து நிற்கின்றன. இதற்கும் சரியான எண்ணிக்கை கிடையாது. பிராமணர்கள் மக்களின் தொகை ஒன்றரை கோடிதான். பிராமணச் சாதியில் மட்டுமே 1886 உள் சாதிப் பிரிவுகள் உள்ளன. பஞ்சாபில் மட்டும் குறிப்பாக சரஸ்வத பிராமணச் சாதியில் 469 உட்பிரிவுகள் உள்ளன. அதே பஞ்சாபில் உள்ள காயஸ்தர் சாதியில் 590 உட்சாதிப் பிரிவுகள் உள்ளன. இங்ஙனம் சமூக வாழ்வு எண்ணற்ற துண்டுகளாகப் பகுக்கப்படுவதற்கு எண்ணற்ற எடுத்துக்காட்டுகளைக் கூறலாம்.

மூன்றாவதாக கவனிக்க வேண்டியது இந்த பகுப்புச் செயல்பாடு

எவ்வளவு சிறு சிறு துண்டங்களாகச் சாதியைப் பிரிக்கின்றது என்பதுதான். சில பனியா சாதி உட்பிரிவில் நூறு குடும்பங்களே அடங்குகின்றன. அவர்கள் மிக நெருக்கமான உறவு பூண்டிருப்பதால் முறைப்படி மரபு மீறாமல் திருமணம் செய்வது கூட அரிதாக உள்ளது.

மிகச் சின்னஞ்சிறு காரணம் கூட எப்படி சாதியைப் பிரிக்கிறது என்பது இங்கு மிகவும் ஆழ்ந்து கவனிக்கத் தக்கதாகும்.

மேலும் ஆழ்ந்து கூர்ந்து நோக்க வேண்டியது சாதிகளுக்கிடையே உள்ள படிவரிசை அடுக்கு முறையாகும். இந்தச் சாதி படிவரிசை அடுக்கில் எல்லாச் சாதிகளையும் விட மிக உயர்ந்ததாக ஒரு சாதியும் எல்லாச் சாதிகளையும்விட மிகத் தாழ்ந்ததாக ஒரு சாதியும், அமைய இடையில் ஒவ்வொருசாதிக்கும் மேல் சில சாதிகளும் அவற்றுக்குக் கீழ் சிலசாதிகளும் அமையும்படி எல்லா சாதிகளும் அடுக்குநிலையில் அமைகின்றன. சாதி அமைப்பு படிப்படியான வரிசைப்படி அமைந்த ஓர் அமைப்பாகும். இந்த அமைப்பில் மிக உயர்ந்த மிகவும் தாழ்ந்த சாதிகளைத் தவிர பிற சாதிகளுக்குள் ஒவ்வொன்றுக்கும் சாதிகளின்மீது முன்னுரிமை உண்டு.

இந்த முன்னுரிமை அல்லது உயர்வு நிலை எப்படி தீர்மானிக்கப்படுகிறது? இந்த உயர்வு தாழ்வு ஒழுங்குமுறை 1) சமயச் சடங்குகள் சம்பந்தப்பட்ட விதிகளாலும், 2) உணவு உண்ணல் சம்பந்தப்பட்ட விதிகளாலும் தீர்மானிக்கப்படுகிறது.

சமயம் என்பது ஏற்றத்தாழ்வான விதிகளின் ஓர் அடிப்படை என்ற முறையில் அது மூன்று வழிகளில் தன்னை வெளிப்படுத்திக் கொள்கிறது. முதலாவதாக சமயச் சடங்குகள் மூலமும், இரண்டாவதாக சடங்குகளில் ஓதப்படும் மந்திரங்கள் மூலமும், மூன்றாவதாக ஓதும் புரோகிதரின் அந்தஸ்து மூலமும் இது செய்யப்படுகிறது.

உயர்வு தாழ்வு எப்படி சமயச் சடங்குகள் மூலம் ஏற்பட்டுள்ளது என்பதுடன் தொடங்குவோம். இந்து வேத நூல்கள் 16 சமயச் சடங்குகளை விளக்குகின்றன. இவை இந்து மதச் சடங்குகளே. ஆனாலும் எல்லாச் சாதிகளுக்கும் இந்தப் பதினாறு சடங்குகளையு ம் செய்ய உரிமை கிடையாது. ஒரு சிலவே 16 சடங்குகளையும் செய்யலாம். பிற சாதிகள் இவற்றுள் சிலவற்றை மட்டுமே செய்யலாம். சில சாதிகள், சில சடங்குகளைச் செய்யவே கூடாது. முப்புரி நூலணியும் உபநயனம் என்ற சமயச் சடங்கைச் சில சாதிகள் கடைப் பிடிக்கக் கூடாது. இந்தச் சடங்கைக் கடைப் பிடிக்கும் உரிமைதான் சாதிகளுக்குள் உயர்வு தாழ்வு கற்பிக்க ஒருவழியாகப் பயன்படுத்தப்படுகிறது. சில சடங்குகளை மட்டும் கடைபிடிக்க உரிமையுள்ள சாதிகளைவிட எல்லாச் சடங்குகளையும் கடைப்பிடிக்கும் சாதிகள் உயர்ந்தவை.

இப்போது மந்திரங்களுக்கு வருவோம். இது மற்றொரு உயர்வு தாழ்வு கற்பிக்கும் வழியாகும். இந்து மதப்படி சில சடங்குகளை இரு வழிகளில் செய்யலாம். அவை 1. வேதோத்க முறை; 2. புராணோத்க முறை. முதல் முறையில் சடங்குகள் வேதத்தில் உள்ள மந்திரங்களை ஓதியபடி செய்யப்படுகின்றன. இரண்டாவது முறையில் அதே சடங்குகள் புராணத்தில் உள்ள மந்திரங்களை ஓதிச் செய்யப்படுகின்றன. இந்து மத நூல்கள் 1, நான்கு வேதங்கள். எனவும் (2.) 18 புராணங்கள் எனவும் இருவகையாகப் பகுக்கப்படுகின்றன. இவை எல்லாமே மதிப்பிற்குரியனவே,. என்றாலும் சமநிலை மதிப்பு பாராட்டப்படுவனவல்ல. வேதங்களுக்கு உயர்ந்த மதிப்புண்டு. புராணங்களுக்கு வேதங்களைவிட தாழ்ந்த மதிப்பே உண்டு. எல்லா சாதிகளும் வேத மோதி சடங்கு செய்ய உரிமை இல்லை என்பதைக் கருத்தில் கொண்டால் மந்திரம் எப்படி சமூக உயர்வு தாழ்வு கற்பிக்க வழிவகுக்கிறது என்பது தெளிவாகும். மூன்று சாதிகள் 16இல் ஒரு சடங்கை செய்ய உரிமை பெற்றிருப்பினும் ஒரு சாதி அதை வேத மோதியும் மற்றது புராணமோதியும் மட்டுமே செய்ய முடியும். எனவே உயர்வு தாழ்வு சமயச் சடங்கில் ஓதப்படும் மந்திர வகையால் ஏற்படுகிறது. வேத மோதும் உரிமை உள்ள சாதி உயர் சாதியாகிறது. புராண மந்திரங்களை மட்டுமே ஓதும் உரிமை உள்ள சாதி தாழ்ந்ததாகிறது.

சாதியில் உயர்வு தாழ்வு பார்ப்பதற்குப் புரோகிதர் எப்படி இரண்டாவது காரணமாக இருக்கிறார் என்பதைப் பார்ப்போம். சமயச் சடங்கு புரோகிதர் மூலம் செய்தால்தான் முழுப் பலன் தரும் என்பது இந்து மத நம்பிக்கை. வேத நூல்கள் பிராமணனைப் புரோகிதனாக வரையறுக்கின்றன. எனவே சடங்கு செய்ய பிராமணன் கட்டாயம் வேண்டும். ஆனால் யார் அழைத்தாலும் எந்தச் சாதியினர் அழைத்தாலும் சமயச் சடங்கில் மந்திரம் ஓத பிராமணன் செல்ல வேண்டுமென வேதம் கட்டாயப் படுத்தவில்லை. அவர் எந்தச் சாதி கூப்பிட்டால் போவார், எந்தச் சாதி கூப்பிட்டால் போக மாட்டார் என்பது அவரது சொந்த விருப்பத்துக்கே விடப்பட்டுள்ளது. பல்லாண்டு காலப் பழக்கத்தால் பிராமணர் யார் கூப்பிட்டால் போவார் என்பதும், யார் கூப்பிட்டால் போக மாட்டர் என்பதும் தற்போது நடைமுறையில் தெளிவாக உள்ளது. இது சாதி உயர்வு தாழ்வு கற்பிக்க ஒரு வழியாகிவிட்டது. பிராமணர் வந்து வேதம் ஓதும் சாதி ஓதாச் சாதியை விட உயர்ந்ததாகி விடுகிறது.

முன்னுரிமை சம்பந்தமான விதிகளுக்கு இரண்டாவது ஆதாரமாக இருப்பது உணவு உண்ணும் முறை சம்பந்தப்பட்டதாகும். திருமண விதிகளை விட உணவு சம்பந்தப்பட்ட விதிகள்தான் முன்னுரிமை

தடைசெய்யும் விதி, சம்பந்தப்பட்டவர்களால் மதிக்கத் தக்கதாகவும், மிகவும் கண்டிப்பான முறையில் செயல்படுத்தக் கூடியதாகவும் இருக்கிறது. ஆனால் கலந்து உண்ணுவதைத் தடை செய்வது பல சிரமங்களைத் தோற்றுவிக்கிறது. எல்லா இடங்களிலும் எல்லாச் சூழ்நிலைகளிலும் இதனைச் செயல்படுத்த முடியாது. மனிதன் இடம் பெயர்வது தவிர்க்க முடியாது. இடம்பெயரும் இடங்களில் எல்லாம் அவனது சாதியாட்கள் இருப்பது முடியாது. அவன் புதிய மனிதர்களிடையே வாழ வேண்டியவனாகிறான். திருமணம் இல்லாமல் ஒருவன் வாழலாம். உணவின்றி வாழ முடியாது. தனது சாதி மனிதரைச் சந்திக்கும் வரை ஒருவன் திருமணமின்றி வாழமுடியும். ஆனால் அதுவரை அவன் தனது உணவுக்காகக் காத்திருக்க முடியாது. அவன் எங்காவது யாரிடமிருந்தாவது உணவைப் பெற்றுக் கொண்டேயாக வேண்டும். எந்தச் சாதியிடமிருந்து அவன் உணவு பெறலாம் என்ற கேள்வி இப்போது எழுகிறது. அவன் தன்னை விட உயர் சாதியினரிடமிருந்து உணவு பெறலாம். தாழ்ந்த சாதியிடமிருந்து பெறமாட்டான். ஒரு சாதியிலிருந்து உணவைப் பெறலும் ஒரு சாதியிலிருந்து உணவைப் பெற மறுத்தலும் எப்போதிலிருந்து வழக்கத்தில் வந்துள்ளது என்பது விளங்கவில்லை. இந்த வழக்கம் எப்படி உருவாகியது என்பதும் தெரியவில்லை. இது பிராமணன் பின்பற்றும் விதிமுறையிலிருந்து பின்பற்றப்படுவது தெளிவு. பிராமணன் ஒரு சாதியிலிருந்து உணவு பெறுகிறானா, மறுக்கிறானா என்பதிலிருந்து அச் சாதியின் உயர்வு தாழ்வு நடப்பில் உருவாகிறது. இதைப் பொறுத்தமட்டில் பிராமணன் மிக விரிவான விதிமுறைகளைக் கையாள்கிறான். (1) அவன் நீரை ஒரு சில சாதிகளிடமிருந்து பெறுவான்; சில சாதியினரிடமிருந்து பெறுவதில்லை. (2) நீரில் சமைத்த உணவைப் பிராமணன் எந்தச் சாதியிடமிருந்தும பெறுவதில்லை. (3) சிலசாதியினரிடமிருந்து எண்ணெயில் சமைத்திட்ட உணவைப் பெறுகிறான். உணவும் நீரும் பெறும் கலத்தைப் பொறுத்த மட்டில் பிராமணன் மேலுஞ் சில விதிமுறைகளைப் பின்பற்றுகிறான். மட்பாண்டத்திலிட்ட நீரையும் உணவையும் சில சாதியினரிடமிருந்து பிராமணன் பெறுவதுண்டு. சில சாதியினரிடமிருந்து உலோகப் பாத்திரத்தில் இட்ட உணவைப் பெறுகிறான். வேறு சில சாதியினரிடமிருந்து கண்ணாடிப் பாத்திரத்தில் இட்ட உணவைப் பெறுகிறான். இது சாதி உயர்வு தாழ்வு கற்பிக்க உதவுகிறது. பிராமணன் எண்ணெயில் சமைத்த உணவை ஒரு சாதியிடமிருந்து பெற்றால் அந்த சாதி உயர்ந்த சாதியாகிவிடுகிறது; அதே சமயம் அந்த உணவை எந்த சாதியிடமிருந்து பெறவில்லையோ அது தாழ்ந்த சாதியாகிவிடுகிறது. பிராமணன் மண் பாண்டத்தில் நீரைப் பெறும் சாதியை விட உலோகப் பாத்திரத்தில் நீரைப் பெறும் சாதி உயர்ந்தது. பிராமணன் ஒரு

சாதியிலிருந்து நீரைப் பெற்றால் அது அவன் நீரைப் பெற மறுக்கும் சாதியை விட உயர்ந்தது. இந்த இருசாதிகளும் பிராமணன் கண்ணாடி பாத்திரத்தில் மட்டுமே நீரைப் பெறும் சாதியை விட உயர்ந்தவை. கண்ணாடியில் கறை ஏற்படாது. எனவே பிராமணன் கண்ணாடிக் குவளையில் மிகத் தாழ்ந்த சாதியிடமிருந்தும் கூட நீரைப் பெறுவான். உலோகமோ கறைபடிவது. இந்த கறை படிதல் பயன்படுத்தும் சாதிக்காரனின் உயர்வு தாழ்வைப் பொறுத்தது. இதைப் பொறுத்தே பிராமணன் உலோகப் பாத்திரத்து நீரை வாங்கிப் பருகுவான்.

இவை இந்து படிநிலை சாதி அமைப்பு முறையிலுள்ள ஒரு சாதியின் இடத்தையும் அந்தஸ்தையும் தீர்மானிக்கும் சில அம்சங்களாகும்.

இந்த சாதி படிவரிசை அடுக்குமுறை ஒரு குறிப்பிடத் தக்க சமூக மனோபாவத்தை உருவாக்குகிறது. முதலாவதாக, இது மதிப்பைப் பெறும் பொருட்டு பல்வேறு சாதிகளிடையே போட்டி உணர்வை உருவாக்குகிறது. இரண்டாவதாக, அது அதிக அளவிலோ குறைந்த அளவிலோ வெறுப்பையும், அவமதிப்பையும், உண்டு பண்ணுகிறது.

இந்தியாவில் நிலவும் எண்ணற்ற பழமொழிகளே இந்த வெறுப்பையும் அவமதிப்பையும் விளக்க வல்லன. அவற்றுள் சில எடுத்துக்காட்டுகளை இங்கே பதிவுசெய்ய நான் விழைகிறேன்[1].

இந்த வெறுப்பும் அவமதிப்பும் பழமொழிகளில் மட்டுமல்லாமல், இந்து மத இலக்கியத்திலும் கூட காணப்படுகின்றன. நான் சாஹியத்ரிகாண்டம் என்ற மறை நூலை மேற்கோளாகக் கூற விரும்புகிறேன். இந்து மத புனித இலக்கியங்களில் உள்ள புராணங்களில் இது ஒன்றாகும். ஆனால் இதில் உள்ள சாரப்பொருள் முற்றிலும் மற்ற புராணங்களின் கருப்பொருளிலிருந்து வேறு படுகிறது. இது சாதிகள் உருவாகிய கதையைக் கூறுகிறது. இது மற்ற சாதிகள் உருவாகிய முறையை உயர்வு படுத்திக் கூறுகிறது. ஆனால் பிராமண சாதியின் தோற்றத்தை இழிவானதாகப் படம்பிடித்துக் காட்டுகிறது இது மனுவைப் பழி வாங்குவதாகத் தோன்றுகிறது. இது பிராமணருடைய சாதியை மிகக் கடுமையாகத் தாக்குகிறது. எனவே பேஷ்வா அரசர்கள் இந்த நூலை அழிக்கக் கட்டளையிட்டனர். பொதுவாக பெரும்பகுதி அழிக்கப்பட்டாலும் சில பகுதிகள் எஞ்சியுள்ளன.

இந்தப் பிரச்சினையை முடிக்கும் முன்பு மேலும் ஓர் உண்மையைக் கூற விழைகிறேன்.

தற்கால இந்துக்கள்தாம் மார்க்சீயத்தை மிக வன்மையாக

---

[1] கையெழுத்துப் படியில் இந்தப் பழமொழிகள் தரப்படவில்லை - ஆசிரியர்கள்

எதிர்ப்பவர்கள். வர்க்கப் போராட்டம் என்ற அதன் சித்தாந்தத்தைக் கண்டு அவர்கள் அதிர்ச்சி அடைத்துள்ளனர். ஆனால் இந்தியா வர்க்கப் போராட்ட நாடாக மட்டுமன்றி வர்க்கப் போர்களின் களமாகவும் இருந்தது என்பதை அவர்கள் மறந்து விட்டனர்.

மிகக் கடுமையான போர் க்ஷத்திரியர்களுக்கும் பிராமணர்களுக்கும் இடையே நிகழ்ந்தது. இந்த இருபெரும் வருணங்களுக்கும் இடையே நடந்த போர்களைப் பற்றி எண்ணற்ற இந்து புராணக் கதைகளில் மேற்கோள்கள் உள்ளன.

பிராமணருக்கும் வீணா என்ற அரசனுக்கும் இடையே நிலவிய தகராறு முதன்முதலாக நடந்த வர்க்கப் போராகப் புராணங்களில் உள்ளது. வீணா, அங்கன் என்ற அரசனின் மகன். அங்கன் ஆத்ரி குலமரபினன். இவன் மிருத்யூவின் (இறப்பு) மகளான சுனிதாவுக்குப் பிறந்தவன். காலனின் மகளுக்குப் பிறந்த இந்த மகன் தனது தாய்வழிப் பாட்டனிடமிருந்து பெற்ற களங்கம் காரணமாக தனது கடமைகளைத் துறந்து விட்டு சுகபோக வாழ்க்கையில் திளைத்துப் போயிருந்தான். இந்த அரசன் சமய மறுப்பு ஒழுங்கு முறைகளை உருவாக்கினான். வேதக் கட்டளைகளைப் புறக்கணித்து சட்ட மீறலில் இறங்கினான். இவனது ஆட்சியில் மக்கள் புனித நூல்களைப் படிக்காமல் வாழ்ந்தனர். வேள்விகளில் தேவர்களுக்குச் சோமபானம் அருந்தத் தரப்படவில்லை. அவன் கூறினான்: "நானே பரம் பொருள், நானே வேள்வி ஆற்றுபவன், நானே வேள்வியும். எனவே எனக்கே வேள்வி ஆகுதிகள் உரிமையானவை. எனக்குத்தான் எல்லாப் படையல்களும் தரப்பட வேண்டும்". கடமையை புறக்கணித்த இந்த அரசனிடம், தனக்கு உரியதல்லாதவற்றைத் தனக்கென ஒதுக்கிக் கொண்ட இந்த மன்னனிடம் எல்லா ரிஷிகளும் மரிச்சி என்பவரின் தலைமையில் கூடி விரிவாக கூறினர். "நாங்கள் பல்லாண்டுகாலம் நீடிக்கப் போகும் சமய வேள்வி நடத்தப் போகிறோம். எனவே சட்டத்துக்குப் புறம்பானதை நடைமுறைப் படுத்தாதே! ஓ வீணா அரசனே ! இது நிரந்தரமான கடமைக்கான விதிமுறையாகாது. நீங்கள் எல்லா வகையிலும் ஆத்ரி குலமரபின பிரஜாபதி; உங்கள் குடி மக்களைப் பாதுகாப்பதில் நீங்கள் ஈடுபட வேண்டும்." முட்டாளான வீணா மன்னன் எதுமுறையானது என்பதை உணர மறுத்தான். அட்டகாசமாக நகைத்து அந்த ரிஷிகளை நோக்கிக் கூறலானான்: 'நானே கடமைகளைப் படைப்பவன்; நான் ஏன் எந்தக் கடமையையும் பின்பற்ற வேண்டும்? புனிதமான அறிவில் என்னை மிஞ்ச இந்த உலகத்தில் யார் இருக்கின்றார்கள்? வீரத்திலோ உண்மையிலோ படைப்பு வல்லமையிலோ என்னை மிஞ்சுபவர்கள் யார்? எல்லா இருப்புக்கும் கடமைகட்கும் நானே மூலம் என்பதை அறியாத கீழ்த்தரமான புலன் அறிவுணர்வு இல்லாத முட்டாள்கள் தாம் என்னைப்

புறக்கணிப்பார்கள். நான் சொல்லுவதை நம்புங்கள்; நான் நினைத்தால் இந்தப் பூலோகத்தையே எரித்துச் சாம்பலாக்கி விடுவேன், அல்லது கடலுக்குள் அமிழ்த்தி விடுவேன், அல்லது சொர்க்கத்தையும் பூலோகத்தையும் இழுத்து மூடிவிடுவேன்". செருக்கும் ஞானமுமற்ற வீணா மன்னனை எவ்வகையிலும் வழிக்குக் கொண்டுவர முடியவில்லை. வல்லமை வாய்ந்த ரிஷிகள் இதனால் பெரும் சீற்ற மடைந்தனர்; அந்த அரசனைப் பிடித்து அவனது இடது தொடையை அழுத்தித் தேய்த்தனர். இந்த தொடை தேய்ப்பில் இருந்து ஒரு கருத்த மனிதன் தோன்றினான். அவன் குள்ளமான கட்டுக் கோப்புடன் விளங்கினான். அவன் எச்சரிக்கையுடன் இருகைகளையும் இணைத்தபடி நின்றான். அவன் கலவரமடைந் திருப்பதைப் பார்த்து ஆத்ரி 'நீ உட்கார்' (நிஷாத) என்றான். எனவே இவன் நிஷாத இனத்தை தொடங்கி வைத்தவனாகினான். வீணாவின் தீய ஒழுக்கத்தால் திவாரா இனமும் (மீனவர்கள்) உருவாகியது. இந்த இருவரிலிருந்து விந்தியமலைச் சாரலைச் சேர்ந்த துகாராக்கள், தும்புராக்கள் போன்றோர் உருவாகினர். பிறகு ரிஷிகள் மேலும் கிளர்ச்சியும் கோபமு மடைந்து ஆரணி கட்டையைத் தேய்ப்பது போல் ரிஷிகள் அரசனைக் கட்டிப் பிடித்து அவனது வலது கையை அழுத்தித் தேய்த்தனர். அதிலிருந்து அக்னிபோல சுடர் வீசியபடி பிரீதன் தோன்றினான்.

"வீணா அரசனின் மகனான பிரீதன் இருகை குவித்து பெருமைமிக்க ரிஷிகளிடம் பின்வருமாறு கூறலானான்: 'இயற்கையின் மூலம் கடமை பற்றிய கோட்பாடுகளை ஓரளவே நான் புரிந்து கொண்டுள்ளேன். அதை நான் எப்படி பயன்படுத்த வேண்டும் என்பதை நீங்கள் எனக்குக் கூறுங்கள். எனக்கு நீங்கள் எதை என் கடமையாகவும் அதன் நோக்கமுமாக கூறுகிறீர்களோ அதை நான் கட்டாயமாகப் பின்பற்றுவேன். அதில் கிஞ்சித்தும் நீங்கள் ஐயப்பட வேண்டாம்'. அப்போது அந்தத் தேவர்களும் ரிஷிகளும் பின்வருமாறு கூறினர்: 'உனக்கு விதிக்கப்பட்ட கடமைகள் எதுவானாலும் அவற்றைத் தயக்கமின்றி விருப்பு வெறுப்புமின்றி செய்வாயாக!. எல்லா உயிர்களையும் சமமாகப் போற்றுவாயாக! வேட்கை, சினம் காமம், செருக்கு ஆகியவற்றைத் தவிர்ப்பாயாக! தொடர்ந்து கடமை போற்றி பணிபுரிபவர்களுக்கு உனது தோள் வலிமை கொண்டு பாதுகாப்பு தருக!. சிந்தனை, சொல், செயல் ஆகியவற்றைப் புதுப்பித்துக் கொண்டேயிரு! பூலோகப் பிராமணனைப் பாதுகாத்திடுவாயாக! (வேதத்தையா பிராமணனையா). பிராமணர்களைத் தண்டிக்காமலிருக்க உறுதி பூணுவாயாக! சாதிக் குழப்பங்களிலிருந்து சமூகத்தைக் காப்பாற்றுவாயாக அப்போது வீணா மன்னனின் மகன் ரிஷிகள் தலைமைதாங்கிய தேவர்களுக்கு உரைப்பான்: "மக்களது

தலைவர்களான பெருமைமிக்க பிராமணர்களை நான் என்றும் மதிப்பேன்". "அது அப்படியாகுக" என்றனர். வேதம் ஓதுபவர்களும், தெய்வீக ஞானத்தின் கருவூலமான சுக்கிரன் அவனுக்கு புரோகிதனானான். பாலகியர்களும் சரஸ்வத்யர்களும் அவனுக்கு அமைச்சர்களாக அமர்ந்தனர். வணக்கத்துக்குரிய கார்கா என்ற மாபெரும் ரிஷி அவனுக்கு ஜோதிடனானார்.

அடுத்த இரண்டாவது சச்சரவு பிராமணர்களுக்கும் க்ஷத்திரிய அரசன் புரூரவனுக்கும் இடையே நிகழ்ந்ததாக எழுதப்பட்டுள்ளது. இது சுருக்கமாக மகாபாரதத்தில் ஆதி பருவத்தில் கூறப்பட்டுள்ளது.

இளைக்குப் பிறந்தவன் புரூரவன். கடலில் நிலவிய 13 தீவுகளுக்கு ஒரே அரசன் அவன். அவனிடம் மகா வல்லமை பொருந்திய பல பலசாலிகள் இருந்தனர். அவனது படைவலிமை அவனுக்குச் செருக்கூட்டவே, பிராமணர்களுடன் தகராறுக்குக் கிளம்பினான். அவர்களது நகைகளைக் களவாடினான். அவர்களது கூக்குரல் அவனை ஏதும் செய்யவில்லை. பிரம்மாவின் சொர்க்கத்திலிருந்து சனத்குமாரன் வந்தான். அவனிடம் அவனது செயலுக்காக வருந்தி மன்னிப்பு கேட்கும்படி கூறினான். புரூரவன் அதைப் புறக்கணித்தான்.

உடனே சினமுற்ற ரிஷிகள் அவனைச் சபித்தனர். சனத்குமாரன் அந்த செருக்குற்ற மன்னனை அழித்தான். மன்னன் புரிந்து கொள்ளும் திறனையும் பறிகொடுத்தான். பிறகு புனித சடங்குகளைச் செய்வதற்காக பரப்பிரமன் ஊர்வசி உடன்வர வந்து சேர்ந்தார். கந்தர்வர்கள் உலகிலிருந்து நெருப்பு கொண்டுவரப்பட்டு மூன்றாக பகுத்து வேள்வி சிறப்பாக நடத்தி முடிக்கப்பட்டது.

மூன்றாம் மோதல் பிராமணர்களுக்கும் நகுஷன் என்ற மன்னனுக்கும் இடையே நடந்தது. இது மகாபாரதத்தில் உத்தியோக பருவத்தில் விரிவாக கூறப்பட்டுள்ளது. அதில் பின்வருமாறு எழுதப்பட்டுள்ளது.

"விருத்திரனைக் கொன்றுவிட்ட இந்திரன் தான் ஒரு பிராமணரைக் கொன்று விட்டதற்காக அஞ்சி எச்சரிக்கையாகக் கடலுக்குள் ஒளிந்துக் கொண்டான். தேவர்களின் அரசன் ஓடி ஒளிந்து விட்டதால் மண்ணுலகும் விண்ணுலகும் செயலிழந்து குழப்பத்தில் ஆழ்ந்தது. உடனே தேவர்களும் ரிஷிகளும் நகுஷனைத் தமது மன்னன் ஆக்கினர். முதலில் அப்பெரும் பதவி ஏற்க மறுத்து மன்னிப்பு கேட்டாலும் பிறகு அதிகாரத்தை அவன் ஏற்றுக் கொண்டான். பதவியேற்கும் வரை ஒழுங்காக நடந்து கொண்டு இருந்த நகுஷன் பதவியேற்றதும் புலனுணர்வு இச்சைகளுக்கு ஆளானான். இந்திராணியைக் கூட அடைய வேண்டும் என்று ஆசைப்பட்டான். அவள் பாதுகாப்புக்காக தேவர்

குலக் குருவான அங்கிரஸ் பிருகஸ்பதியிடம் சரணடைந்தாள். இந்தக் குறுக்கீட்டால் நகுஷன் சினமுற்றான். தேவர்கள் மற்றவனது மனைவியை நாடுவது ஒழுக்கக் கேடானது என்பதைச் சுட்டிக் காட்டி அவனது சினத்தை ஆற்ற முயன்றனர். ஆனால் நகுஷன் அதை ஏற்கவில்லை; பிறன்மனை நயத்தல் போன்ற விஷயங்களில் இந்திரனைவிட நான் மோசமானவனல்ல என வாதிட்டான். "இந்திரன் ரிஷிப் பத்தினியான அகல்யையைக் கற்பழித்தானே அதை ஏன் நீங்கள் கேட்கவில்லை. உங்கள் இந்திரன் எத்தனை காட்டுமிராண்டித் தனமான செயல்களில் ஈடுபட்டான்; எத்தகைய தவறுகளை எல்லாம் இழைத்தான், எத்தனை கொடுமைகளையும் ஏமாற்று வித்தைகளையும் செய்தான். அவற்றை யெல்லாம் எப்படி நீங்கள் மறந்து விட்டீர்கள்? நீங்கள் ஏன் அப்போது தடுக்க வில்லை." நகுஷன் இப்படி விவாதிக்கவே தேவர்கள் இந்திராணியை நகுஷனிடம் அழைத்துவரச் சென்றனர். ஆனால் பிருகஸ்பதி அவளை அனுப்பிவிட வில்லை. இந்திராணி பிருகஸ்பதி அறிவுரைப்படி இந்திரனுக்கு ஏற்பட்ட இறுதி கதியை அறியும் வரை நகுஷனைச் சற்றுப் பொறுத்துக் கொள்ளும்படி கால அவகாசம் கேட்டாள். இது ஏற்கப்பட்டது. தேவர்கள் இந்திரனின் சார்பில் விஷ்ணுவிடம் சென்று முறையிட்டனர், விஷ்ணு தனக்கு இந்திரன் வேள்வி செய்து அவிர்பாகம் தந்தால் இந்திரன் அரச பதவி அடையலாம் என்றும், நகுஷனும் அழிக்கப் படுவான் என்றும் வரம் தந்தார். இந்திரன் அதை நிறைவேற்றினான். "இந்திரனின் பிராமணக் கொலை பாவம், மரம், ஆறு, மலை, நிலம், பெண்கள், பஞ்ச பூதங்கள் ஆகிய வற்றுக்குப் பகிர்ந்தளிக்களிக்கப்பட்டதால் தேவர்களின் தலைவன் பாவத்திலிருந்தும் துன்பங்களிலிருந்தும் விடுவிக்கப்பட்டு இந்திர உலக அரசனானான்". இதனால் நகுஷன் தனது அதிகாரத்திலிருந்து இறக்கப்பட்டான். எனினும் அவன் தனது வலிமையை மீண்டும் பெருக்கிக் கொண்டு இந்திரனைத் தோற்கடித்து விட்டான்; அவன் கண்ணுக்குத் தெரியாமல் மறைந்துவிட்டான்; இந்திராணி தனது கணவனைத் தேடிப் புறப்பட்டாள். இரவுதேவதையும் இரகசியங்களை வெளியிடும் தேவதையுமான உபஸ்ருதி மூலம் இந்திரன் தாமரைக் காம்பாக இமயமலைக்கு அடுத்த கடலின் நடுவிலமைந்த கண்டத்தில் உள்ள ஒரு குளத்தில் உருமாறி ஒளிந்துக் கொண்டிருப்பதை இந்திராணி கண்டுபிடித்தாள். அவள் இந்திரனிடம் நகுஷன், தன்மீது வைத்துள்ள கெட்ட எண்ணத்தை எடுத்துக் கூறினாள். அவள் இந்திரனைத் தனது வலிமை மூலம் தன்னை இந்த இக்கட்டிலிருந்து காப்பாற்றும்படியும் இந்திர, உலக அரசாட்சியை மீண்டும் ஏற்குமாறும் கேட்டுக் கொண்டாள். நகுஷன் பெருவலிமையுடன் இருந்ததால் அவனை எதிர்த்துப் போரிட இந்திரன் மறுத்தான். ஆனால் இந்திராணிக்கு அவனை அரசிலிருந்து வீழ்த்திவிட ஒரு வழியைக் கூறினான்.

இந்திராணியை நகுஷனிடம், "நீர் ரிஷிகளின் புஷ்பக விமானத்தில் என்னைச் சந்தித்தால் நான் உன் விருப்பத்தை ஏற்கிறேன்". எனக் கூறுமாறு அறிவுறுத்தினான். நகுஷனிடம், தேவர்கள் இச் செய்தியை கொண்டு சென்றனர். நகுஷன் இந்திராணியை முகமலர வரவேற்றான். இந்திராணி அவனிடம், "ஓ! தேவர்குல தலைவனே! நீ இதுவரை அறியாத ஒரு விமானத்தில் விஷ்ணுவோ, ருத்திரனோ, தேவரோ, இராட்சதரோ பயன்படுத்தாத ஒரு விமானத்தில் வருவாயாக. இதற்காக ரிஷிகளைக் கூட்டிடுக! அவர்கள் உன்னைச் சுமந்து அந்தத் தேரில் அழைத்து வரட்டும். இது எனக்கு மகிழ்வூட்டும். நான் உன்னை ஏற்றுக் கொள்கிறேன்" என்று கூறினாள். இதை செருக்கு வாய்ந்த நகுஷன் ஏற்றுக் கொண்டான். அவன் இவ்வாறு அகம்பாவத்தோடு விடை கூறினான். "ஆகா! முனிவர்கள் என்னைச் சுமந்து வரச் செய்வது என் மகத்தான வலிமையைக் காட்டிக் கொள்ள ஒரு நல்ல சந்தர்ப்பம் அல்லவா! சர்வ வல்லமை பொருந்திய கடவுளின் சிறந்த பக்தனல்லவா நான்! நான் சினங்கொண்டால் இந்த உலகமே நிலைக்காது. எல்லாமே என்னைச் சார்ந்துதான் இருக்கின்றன. எனவே தேவர் தலைவியே, நீ தெரிவித்த திட்டத்தை நான் நிறைவேற்றுகிறேன். ஏழு ரிஷிகளையும் மற்ற பிராமண ரிஷிகளையும் என்னைச் சுமக்கச் செய்கிறேன். அழகிய தேவமகளே! எனது பெருமதிப்பையும் பெருவளத்தையும் பெறுவாயாக". கொடுமையும், சமய எதிர்ப்பும், வன்முறையும், சருக்கு உணர்வும், ஒழுங்கற்ற நடத்தையும் கொண்ட அவன் ரிஷிகளைத் தனது தேரில் பூட்டித் தன்னைச் சுமந்து வர கட்டளைகளைப் பிறப்பித்தான். மறபடியும் இந்திராணி பிருகஸ்பதியை அணுகிக் கேட்க, அவர் நகுஷன் விரைவில் அழிவான். அதற்காக தாமே ஒரு வேள்வி செய்து நகுஷனை ஒடுக்கி இந்திரன் இருப்பிடத்தைக் கண்டுபிடித்துத் தருவதாக உறுதி கூறினார். பிருகஸ்பதியிடம் இந்திரனைக் கொணர அக்னி தேவன் அனுப்பப்பட்டான். அவன் இந்திரனிடம் சென்று அவன் இல்லாதபோது நடந்ததெல்லாம் விவரித்தான். குபேரன், யமன், சோமன், வருணன் ஆகியவருடன் இந்திரன் கலந்து பேசி நகுஷனை அழிக்கும் வழிமுறைகளை வகுத்துக் கொண்டிருக்கும் போது அங்கே வந்த அகஸ்தியர் இந்திரனின் எதிரி வீழ்ந்து விட்டதற்காக வாழ்த்து கூறினார். நகுஷனின் வீழ்ச்சி எப்படி ஏற்பட்டது என்பதையும் விவரமாகக் கூறினார். நகுஷனைச் சுமந்து சுமந்து தளர்ந்து போன பெருமைமிக்க தேவ ரிஷிகளும் களங்கமற்ற பிராமண ரிஷிகளும் ஒரு சிக்கலைத் தீர்க்கும்படி அவனைக் கேட்டுக் கொண்டனர். "வாசவா, வெற்றி பெற்றவர்களுள் சிறந்த வெற்றியாளனே, நீவிர் அதிகாரம் மிக்கவரா? அல்லது ஓர் அரசன் எரிக்கப்படும்போது ஓதப்படும் பிராமணங்கள் அதிகார பூர்வமானவையா?" என்று கேட்க அறியாமை இருளில் மூழ்கிய "நகுஷன்! இல்லை என்றான். ரிஷிகள் திரும்பவும்

கூறினர்." "கொடுங்கோன்மை மூலம் செங்கோலை உயர்த்திப் பிடிக்க முடியாது. பழம் பெரும் ரிஷிகள் ஓதிய பிராமணங்கள் மிகவும் அதிகார பூர்வமானவை" என்றனர். அகத்தியர் மேற்கொண்டு நடந்ததைக் கூறலானார். முனிவர்களுடன் தகராறு பண்ணுவது கொடுங் கோன்மையாகும். எனது தலைமேல் நகுஷன் கால்பட்டது. எனவே அரசனின் புகழ் அழிந்தது; அவனது செல்வமும் செல்வாக்கும் கரைந்தன. அவன் உடனே கலவரமடைந்து அடிபணிந்தான். நான் அப்போது அவனிடம் சொன்னேன். "நகுஷனே ! நீ பிராமண வேதத்தை அவமதித்தாய். மாபெரும் ரிஷிகள் ஓதிய வேதத்தை மதிக்காததோடு ரிஷிகளை உன்னைச் சுமக்க வைத்தாய். என் தலையிலும் உன் கால்கள் பட்டன. எனவே உனது வரங்கள் அழிந்தன. நீ வலிமை இழந்து விட்டாய். பாவியே! நீ பூவுலகுக்குச் செல்! நரகத்தில் பாம்பாகி ஊர்ந்து கொண்டு பல்லாண்டுகளுக்குக் கிட . உன் பாவங்கள் முடிந்ததும் விண்ணுலகுக்கு வா". இவ்வாறு நகுஷன் தேவருலகத்திலிருந்து நரகில் வீழ்ந்தான்.

அடுத்து நிமி மன்னனுக்கும் பிராமணர்களுக்கும் நடந்த சச்சரவைப் பார்ப்போம். விஷ்ணு புராணம் இந்த நிகழ்ச்சியை விவரிக்கிறது.

நிமி என்ற அரசன் பிராமணரிஷியான வசிஷ்டரை ஆயிரம் ஆண்டுகளுக்குத் தான் நடத்தவிருக்கும் வேள்வியை நடத்தித் தருமாறு கேட்டுக் கொண்டான். ஆனால் வசிஷ்டர் அடுத்த ஐந்நூறு ஆண்டுகள் இந்திரனிடம் இருக்க ஒப்புக் கொண்டிருப்பதாகவும், அந்தக்காலக் கெடு முடிந்ததும் அவனிடம் வருவதாகவும் கூறினார். அரசன் பதிலேதும் சொல்லவில்லை. வசிஷ்டரும் அரசன் ஒப்புக்கொண்டிருப்பதாகக் கருதி சென்று விட்டார். அவர் திரும்பி வந்து பார்க்கும் போது நிமி வசிஷ்டருக்கு இணையான பிராமண ரிஷியான கௌதமரையும் பிறரையும் கொண்டு வேள்வி செய்துக் கொண்டிருப்பதைக் கண்ணுற்றார். தனக்குச் சொல்லாமல் இப்படி செய்ததால் சினமுற்று வசிஷ்டர் அரசனை அவனது உருவம் அழியும்படி சபித்தார். நிமி விழித்தெழுந்து தான் எச்சரிக்கை இல்லாமலே சபிக்கப்பட்டதை அறிந்ததும் அவனும் வசிஷ்டரை அதே போல உரக்கச் சபித்து விட்டு இறந்தான். வசிஷ்டரின் சாபம் இந்த சாபத்தால் குன்றி மற்றொரு உடல் தோன்றிற்று. ஊர்வசியைப் பார்த்ததும் அந்த சாபத்தின் விதைகள் விழுந்து பட்டன. நிமி உடலும் எரிக்கப்பட்டது. அவன் நடத்திய வேள்வி முடிந்ததும் புரோகிதர்களின் வார்த்தைகளை ஏற்று அவனுக்கு உயிரளிக்க தேவர்கள் ஆயத்தமானார்கள். நிமி அதை மறுத்து விட்டான். அவன் கேட்டுக்கொண்டபடி தேவர்கள் அவனைச் சகல உயிர்ராசிகளின் கண்களில் கொண்டுபோய்வைத்தனர். அதுமுதல் மனிதக் கண்கள் மூடித்திறக்கத் தொடங்கின (நிமிஷ என்றால் கண்ணிமைத்தல் என்று

பிராமணருக்கும் மன்னன் சுமுகனுக்கும் நடந்த வேறொரு தகராறையும் மனு விவரிக்கிறார். இதுபற்றி விவரம் ஏதும் இல்லை.

இவை யெல்லாம் பிராமணர்களுக்கும் க்ஷத்திரிய அரசர்களுக்கும் இடையே ஏற்பட்ட தகராறுகள் ஆகும். ஆனால் இதைக்கொண்டு பிராமண குலமும் க்ஷத்திரிய குலமும் தம்முள் சண்டையிட்டுக் கொள்ளவில்லை என்ற முடிவுக்கு வந்து விடக்கூடாது. அரசர்களுடன் நடைபெற்ற தகராறுகள் போலவே இருவர்களிடையேயும் மோதல்கள் இருந்துள்ளதை மெய்ப்பிப்பதற்கு ஏராளமான சான்றுகள் உள்ளன. இவற்றின் வரலாற்று முக்கியத்துவம் குறித்து ஐயப்படுவது இல்லை. இது சம்பந்தமாக இங்கு மூன்று நிகழ்ச்சிகளைக் கூறுவோம்.

முதலாவது விசுவாமித்திரர் என்ற க்ஷத்திரியருக்கும் வசிஷ்டர் என்ற பிராமணருக்கும் நடந்த தகராறைக் கூறலாம். பிரச்சினை ஒரு க்ஷத்திரியன் பிராமண நிலையைக் கோரலாமா என்பதே. இந்த கதை இராமாயணத்தில் பின் வருமாறு கூறப்பட்டுள்ளது:.

" முன்னொரு காலத்தில் குசன் என்ற அரசன் வாழ்ந்தான். அவன் பிரஜாபதியின் மகன். குசனுக்கு குசானபன் என்றொரு ம்கன் இருந்தான். குசானபனுக்கு காதி என்றொரு மகள் இருந்தான். இந்த காதிக்கு விசுவாமித்திரன் என்றொரு மகன் பிறந்தான். விசுவாமித்திரர் உலகைப் பல ஆயிரக் கணக்கான ஆண்டுகளாக ஆண்டு வந்தார். ஒரு நாள் பூமியை வலம் வரும் வேளையில் விசுவாமித்திரர் வசிஷ்டரின் குடிலுக்கு வந்தார். அங்கே பல முனிவர்களும் ரிஷிகளும் மகிழ்ச்சியுடன் வாழ்ந்துக் கொண்டிருந்தனர். முதலில் சிறிது தயக்கம் இருந்தாலும் பிறகு அங்கே தனது சீடர்களுடன் தனக்கு அளிக்கப்பட்ட விருந்து உபசரிப்பை விசுவாமித்திரர் ஏற்றுக் கொண்டார். அங்கே இருந்த அனைவருக்கும் அருஞ் சுவை உணவை வழங்கிய ஓர் அற்புதமான பசுவைப் பார்த்துப் பொறாமை அடைந்தார். இலட்சம் பசுக்களுக்கு ஈடாக அந்தப் பசுவைத் தனக்குத் தந்து விடும்படி அவர் கேட்டார். மேலும் அவர் " இது ஒரு நல்ல இரத்தினம் போன்றது. இரத்தினங்கள் அரசனுடைய சொத்துகள். எனவே அந்த உரிமையின்படி இந்தப் பசுவும் எனக்குச் சொந்தமானதே" என உரிமை பாராட்டலானார். இந்த விலை மறுக்கப் பட, மேலும் தருவதாகப் பேரம் பேசியும் பயனளிக்காமல் போனது. பிறகு வலுக்கட்டாயமாக, அந்த பசுவை கைப்பற்ற விசுவாமித்திரர் முயன்றார் ஆனால் அது தன்னைக் கட்டியிழுத்துச் செல்ல வந்தவர்களிடமிருந்து தப்பித் தனது பழைய எசமானனிடமே சென்றடைந்தது. என்னை ஏன் கைவிடுகிறீர்கள்?' என்றும் அது கேட்டது. அதற்கு முனி புங்கவர்,' நான் உன்னைக் கைவிடவில்லை. என்னை விட அரசன் வலிமையும் அதிகாரமும் உள்ளவன் எனவேதான் உன்னை இழுத்துச் சென்றான், என்று பதிலளித்தார். அதற்குப் பசு க்ஷத்திரியர்கள் அப்படி ஒன்றும்

வல்லமை மிக்கவர்களல்லர், பிராமணர்கள் தாம் அவர்களைவிட மிகவும் வல்லமை பொருந்தியவர்கள். பிராமணர்களின் வலிமை தெய்வீகமானது. க்ஷத்திரியனை விட உயர்ந்தது. தங்கள் வலிமை அளவற்றது. விசுவாமித்திரன் பெரும் பலசாலியாக இருக்கலாம். ஆனால் உங்களை விட அவன் வலிமை மிக்கவனில்லை. எனக்கு ஆணையிடுங்கள், நான் அந்த மன்னனின் செருக்கை, ஆணவத்தை, கொடுமையை ஒழிக்கிறேன்' என்றது. அதன்படி அது உக்காரமிட்டு ஆயிரக் கணக்கான பகலவர்களை தோன்றச் செய்து விசுவாமித்திரரின் விருந்தினர்கள் அத்தனை பேரையும் ஒழித்துக் கட்டியது. ஆனாலும் விசுவாமித்திரர் எல்லாப் பகலவர்களையும் கொன்று விட்டார். பிறகு பசு வீரமும் வல்லமையும் கொண்ட சாகர்களையும், யவனர்களையும் படைக்கலங்களுடன் அனுப்பி விசுவாமித்திரரின் படைவீரர்கள் அனைவரையும் துவம்சம் செய்தது. விசுவாமித்திரர் எல்லா சாகர்களையும், யவனர்களையும் கொன்று தீர்த்தார். பிறகு பசு மீண்டும் உக்காரமிட்டு தனது உடம்பின் ஒவ்வொரு பகுதியிலிருந்தும் பலசாதி போர் வீரர்களை உருவாக்கி விசுவாமித்திரரின் தேர்ப்படை, யானைப்படை, குதிரைப்படை, காலாட்படை முழுவதையும் அழித்தது. விசுவாமித்திரர் அந்தப் பலசாதி போர் வீரர்கள் அனைவரையும் அழித்தொழித்தார். பிறகு பலநூறு இளவரசர்கள் பெரும்படைக்கலங்கள் தாங்கிய படைகளோடு வசிஷ்டர் குடிலை முற்றுகையிட்டனர். முனிபுங்கவரின் வாயிலிருந்து வெளியேறிய சினத் தீயில் அனைவரும் எரிந்து சாம்பலாயினர். இவ்வாறு விசுவாமித்திரர் படுதோல்வியும் அவமானமும் அடைந்தார்; தனது பிள்ளைகளில் ஒருவனை தனக்குப் பதிலாக ஆட்சி செய்யும்படிக் கூறிவிட்டு இமயமலைக்கு அப்பாற் சென்று கடுமையான தவம் செய்தார். மகாதேவன் தோன்றி படைத்துறைக் கலைபற்றிய அறிவைப் போதித்தார். தேவப் படைக்கலங்களையும் அளித்தார். இந்த தவவலிமையால் செருக்குற்ற விசுவாமித்திரர் பெருமிதத்தோடு வசிஷ்டரின் குடிலை அழித்தார்; அங்கு வசித்து வந்தவர்களை ஓடச் செய்தார். பிறகு வசிஷ்டர் தனது பிராமண வல்லமையைக் காட்டத் தொடங்கி விடுவேன் என்று விசுவாமித்திரரை எச்சரித்தார். விசுவாமித்திரர் தனது ஆயுதங்களைத் தாங்கி வசிஷடரைப் போருக்கு அழைத்தார். வசிஷ்டரும் உனது வல்லமையைத் திரட்டி கொண்டு போரிடு. உன்னை, உனது செருக்கை ஒழிக்கிறேன் பார் என்றார். பிராமணனின் வல்லமை முன் க்ஷத்திரிய வல்லமை எம்மட்டு? 'பொறாமையும் வெறுப்பும் மிக்க க்ஷத்திரியனே, இந்தப் பிராமண வல்லமையைப் பார்' என்றார் வசிஷ்டர். விசுவாமித்திரர் ஏவிய அச்சமூட்டும் பயங்கர படைக்கலத்தை வசிஷ்டரின் கதாயுதம் நெருப்பை நீர் அணைப்பது போல் அழித்து விட்டது. பிறகு விசுவாமித்திரர் எதிரிபால் எய்த பிரம, கால, வருணகணைகள் விஷ்ணுச் சக்கரம், சிவன்

வில் முதலிய தேவப்படைக்கலங்கள் அனைத்துமே வசிஷ்டரின் பிராமண வல்லமையினால் விழுங்கப்பட்டு அழித் தொழிக்கப் பட்டன. பிறகு தேவர்களும் வானவீரர்களும் நடுநடுங்க விசுவாமித்திரர் தனது பிரமாஸ்திரத்தை விட்டார். இதுவும் பிராமண முனிபுங்கவரால் தடுக்கப்பட்டது. வசிஷ்டருக்கு சினம் பொங்கிற்று, அவரது உடல் துவாரங்களிலிருந்து நெருப்பு ஜுவாலைகள் பீறிட்டுக் கொண்டே வெளியேறின. அவர் புகையிலாப் பெரு நெருப்புக் கோளமாகி இரண்டாவது யமன் போன்று உருவெடுத்தார். ரிஷிகளும் முனிவர்களும் அவரது வல்லமையைப் போற்றினர், பிறகு அமைதியானார், தனது வல்லமையை தனது எதிரிக்கு விரிவாக எடுத்துக் கூறினார். இதைக்கேட்டு விசுவாமித்திரர் "க்ஷத்திர வலிமைக்கே அவமானம், பிராமண வலிமையே உன்னதமானது. ஒரு பிராமண தண்டாயுதம் எனது படைகளை எல்லாம் தூள் தூளாக்கிவிட்டது" என்று வருத்தத்துடன் முணுமுணுத்தார். அவமானமடைந்த மன்னனுக்கு வேறேதும் மாற்று வழி இல்லை. ஒன்று தனது திராணியின்மையை உணர்ந்து பணிந்துபோக வேண்டும், அல்லது பிராமண நிலைக்கு உயர முயற்சிக்க வேண்டும், இங்கு இரண்டாவது வழியையே விசுவாமித்தரர் தேர்ந்தெடுத்தார். "எனது புலன்களை ஒடுக்கி, மனத்தை அடக்கி, க்ஷத்திரியப் பண்புகளைமாற்றி பிராமணனாக உயர்வேன்" என அவர் உறுதிபூண்டார், பிறகு மனம்மிக பேதலித்து, அச்சத்துடன் வருத்தமிக்க புலம்பலுடன் வெறுப்பே உருவாய் தனது இராணியிடம் தெற்கு நோக்கிப் பயணஞ் செய்தார். தனது தீர்மானத்தைச் செயல் படுத்தத் தொடங்கினார். அவருக்கு ஹவிஷயந்தன், மதுஷயந்தன், திரிதநேத்திரன் என்று மூன்று பிள்ளைகள் பிறந்தனர். ஆயிரம் ஆண்டுகளுக்குப் பிறகு பிரமா அவர்முன் தோன்றி அவர் ராஜரிஷியாகி விட்டதாக அறிவித்தார். ஆனால் விசுவாமித்திரர் அவமானமும் வருத்தமும் சினமும் நிறைந்து காணப்பட்டார். தனக்கு அளிக்கப்பட்ட வரத்தின் சிறுமையைக் கண்டு மனம் வெதும்பினார். ' "நான் மிகக் கடுமையான தவமிருந்தேன். அப்படியிருந்தும் தேவர்களும் ரிஷிகளும் என்னை ராஜரிஷியாக மட்டுமே ஏற்கின்றனர். பிராமணரிஷியாக ஏற்க மறுக்கின்றனர்", என்று புலம்பினார். ஒரே பெயருடைய ஒரே நபர்களிடையே அல்லது ஒரே பெயருடைய வெவ்வேறு நபர்களிடையிலான தகராறுகளும் நூல்களில் வேறுபட்ட பிரச்சினைக்காக நடைபெற்றிருப்பதாகக் கூறப்படுகின்றது.

இக்ஷவாகு குலமரபைச் சேர்ந்த திரிசங்கு என்ற மன்னன் தான் தனது பருவுடம்போடு வானுலகம் அடைய தவம் செய்ய முடிவு செய்தான். அவன் வசிஷ்டரை வரவழைத்து வழிகேட்க, அவர் அது இயலாத செயலெனக் கூறிவிட்டார். திரிசங்கு தெற்கு நோக்கிப் பயணமானான். அங்கே வசிஷ்டரின் நூறு பிள்ளைகளைக் கொண்டு வசிஷ்டர் தடைசெய்த அதே வேள்வியைச் செய்ய மிகுந்த பணிவோடு

அவர்களை அணுகி இவ்வாறு கூறினான்:

"ஐயன்மீர், இக்ஷுவாகு குலத்தினர் தமது குருமக்களைப் பெரிதும் மதிக்கின்றனர். எனது தந்தைக்குப் பிறகு நான் உங்களிடம் பெருமதிப்பு பூண்டொழுகி வருகிறேன். எமது குருக்கள் தாம் எமக்குத் துன்பமோ இடுக்கணோ நேரும் போதெல்லாம் எங்களைக் காப்பாற்றுகின்றனர். உங்களது தந்தைக்குப் பிறகு உங்களிடம் நான் பெருமதிப்பும் நம்பிக்கையும் வைத்துள்ளேன்." அதற்கு சற்றும் மசியாத அந்தப் புரோகிதர்கள் அவனது எண்ணத்தை ஏளனம் செய்தனர். அவனிடம் இவ்வாறு கூறினர்:."அது இயலாது முட்டாளே! உனது குரு ஏற்கெனவே இது நடக்க முடியாதென அறிவுரை கூறி விட்டார். அதைப் புறக்கணித்து விட்டு எங்களிடம் வந்துள்ளாய். புரோகிதர் குடும்பங்கள் இக்ஷுவாகு குலமன்னர் அனைவருக்கும் கிடைத்த மிக உயர்ந்த செல்வங்கள். தவவலிமை மிக்காரின் ஆணைகளை மீறுவது தவறு.. ஏற்கெனவே வசிஷ்டர் முடியாதென மறுத்த வேள்வியை நாங்கள் எப்படி ஏற்றுச் செய்யமுடியும். நீ ஒரு முட்டாள். தலைநகருக்குச் செல். தேவரிஷி வசிஷ்டர் தான் நீ கூறும் வேள்வியைச் செய்ய சர்வ வல்லமை பொருந்தியவர். மூவுலகமும் முக்காலமும் உணர்ந்தவர். அவருக்கு நாங்கள் எப்படி அவமதிப்பை ஏற்படுத்துவோம்?" திரிசங்கு பிறகு அவர்களிடம் நடந்ததைக் கூறி புரிய வைத்தான். தனது குருவும், குருவின் மக்களும் தான் கூறும் வேள்வியைச் செய்ய மறுத்ததை எண்ணி, நாம் வேறு உத்தியைப் பின்பற்றுவோம் என முடிவு செய்தான். அதைக் கண்ட புரோகிதர்கள் அவன் சண்டாளனாக மாறச் சபித்தனர். அந்தச் சாபம் பலித்தது. பிரகாசம் மிக்க அரசனின் உருவம் மாறியது. தரங்கெட்ட பிச்சைக்கார உருவமடைந்தான். அப்போது விசுவாமித்திர ரிஷி தெற்கே சென்று தவஞ்செய்துக் கொண்டிருந்தார். அவரை அணுகினான். அவர் கடுமையான தவம் செய்து பலனை எதிர்பார்த்துக் கொண்டிருந்தார். விசுவாமித்திரர் அவனுக்கு உதவுவதாகவும் அவன்கூறிய வேள்வியை நடத்தி அவனது குருவால் சபிக்கப்பட்ட இந்தச் சண்டாள உருவிலேயே வானுலகத்துக்கு அனுப்பி வைப்பதாகவும் உறுதி கூறினார். "நீ கௌசிக முனிவரது மகனை அணுகி விட்டாய். இப்போதே தேவர் உலகம் உனதே" என்றார். பிறகு வேள்விக்கான ஏற்பாடுகளைச் செய்யச் சொன்னார். வசிஷ்டர் உட்பட எல்லா ரிஷிகளையும் அழைக்கும்படி கூறினார். இந்தச் செய்தியை எல்லாருக்கும் கூறிவிட்டு வந்த விசுவாமித்திரரின் சீடர்கள் பின்வரும் செய்தியை அவரிடம் கூறினர்:

" எல்லா உலகிலும் உங்கள் செய்தியைக் கேள்விப்பட்டதும் பிராமணர்கள் ஒன்று கூட்டப்படுகின்றனர். மகோதயர் (வசிஷ்டர்) மட்டும் வரவில்லை. அந்த நூறு வசிஷ்டப் புத்திரர்கள் கூறியதைக்

ஆகுதிகளைத் தேவர்களும் ரிஷிகளும் எப்படி ஏற்பது? விசுவாமித்திரர் ஏற்பாடு செய்து சண்டாளனால் இடப்பட்ட விருந்துண்டு விட்டு எப்படி வானுலகுக்கு வரமுடியும்?'' இவைதாம் அந்த நூறு வசிஷ்டகுமாரர்களின் கண்டன வாசகங்கள். வசிஷ்டரும் இதையே கண்களில் சினம் பொங்கக் கூறினார். இதைக் கேட்ட விசுவாமித்திரருக்குச் சீற்றம் பொங்கியது. வசிஷ்டரின் ம்க்களைச் சுட்டுச் சாம்பலாகும்படிச் சபித்தார், எழுநூறு பிறவிகள் தரங்கெட்ட மகோதயர்களாக இவர்கள் பிறக்க சாபமிட்டார். வசிஷ்டரும் நிஷாதனாகட்டும் எனச் சபித்தார். சாபம் பலித்ததைப் பார்த்த விசுவாமித்திரர் திரிசங்குவை அழைத்து வேள்வி மூட்டச் சொன்னார். கொடூர முனிவருக்கு அஞ்சி மற்ற ரிஷிகள் வேள்விக்கு ஒப்பினர். விசுவாமித்திரர் முதன்மையான பகுதியைச் செய்து யாஜக ஆகுதிகளைப் படைத்தார். மற்ற ரிஷிகள் மற்ற வேள்விக் கருமங்களை நிறை வேற்றினர். எல்லா சடங்குகளும் தவறாமல் நிறைவேறின. பிறகு விசுவாமித்திரர் தேவர்களை அழைத்து வேள்வி அவிர்பாகங்களை எடுத்துக் கொள்ளச் சொன்னார் தேவர்கள் வரவில்லை. விசுவாமித்திரருக்கு சினம் மூண்டது. வேள்வி அவிர்பாகத்தை கையிலெடுத்தபடி திரிசங்குவைப் பார்த்து "மன்னனே ! இதைப் பெற்றுக் கொள். எனது வல்லமையால் வந்த பலனிது. நானே எனது ஆற்றலால் உன்னை தேவருலகத்துக்கு அழைத்துச் செல்கிறேன். வா". என்றார், '' இந்த உடம்போடு மேலேறுவது அரிது. எனினும் தவவலிமை மிக்க என்னுடன் வா, போவோம்' என அழைத்தார். முனிவர்கள் இந்திரன் ஆகியோர் கண் முன்னால் திரிசங்கு வானுலகுக்குச் சென்றான். இருந்தாலும் அவனது குருக்களது அறிவுரையைக் கேட்காத தவற்றுக்காக அவனை அமரர் உலகம் ஏற்கவில்லை. நடுவிலேயே தொங்கினான். தலைகுப்புற பூமியில் விழச் சபிக்கப்பட்டு விழும் போது, அலறி விசுவாமித்திரர் உதவியைக் கோர, அவர் அவனை அந்தரத்திலேயே நிற்கும்படி கூ றி, தனது தேவ வல்லமையால் புதிய பிரஜாபதி முதல் ஏழு ரிஷிகளுடன் சொர்க்கத்தையே படைத்தார். இந்த ஏழு ரிஷி கூட்டம் வானின் தெற்கே உள்ள விண்மீன்குழுவாகும். இந்தப் புது சொர்க்கத்தில் ரிஷிகள் புடைசூழ, புது விண்மீன் கூட்டங்களை உண்டாக்கினார். இன்னும் அவரது சினம் ஆறவில்லை. "புது இந்திரன் உருவாகட்டும் " என்றார். "புது தேவர்கள் உருவாகட்டும் " என்றார். இதுகண்ட ரிஷிகளும் தேவரும் அசுரரும் சமாதானக் குரலில், "திரிசங்கு குரு அறிவுரையை மறுத்ததால் நேராக பருவுடம்போடு வானுலகு வர முடியாது. அதற்கு விமோசனம் செய்யுங்கள்" எனக் கூறினர். விசுவாமித்திரர் அவர்களை மறுத்து இந்தப் புது திரிசங்கு சொர்க்கமும் அதன் விண்பொருள்களும் உரிய இடங்களில் என்றென்றும் நிலவட்டும் எனக் கூறிவிட்டார், "சூரியனுக்கு தடையின்றி அவனுக்குப் பின்னால் தலைகீழாக திரிசங்கு சுடர் வீசிப் பிரகாசிக்கட்டும்" அவன் வானவாசிபோல அங்கேயே

இருக்கட்டும் என்றனர் தேவர்கள். இந்த இடைநிலை தீர்வுக்கு, விசுவாமித்திரர் ஒப்புக் கொள்ள இவ்வாறுதான் திரிசங்கு சொர்க்கம் உருவாகியது[1].

தேவரும் ரிஷிகளும் சென்றதும் தனது சீடரிடம் விசுவாமித்திரர் "இது நமது பாதையில் தெற்கிலே விழுந்த முட்டுக்கட்டை. இதை வென்று நாம் முழு குறிக்கோளை அடைந்தே தீரவேண்டும். வேறு வழிமுறை தேடுவோம்" என்றார். பிறகு அவர் மேற்கே இருந்ததொரு காட்டை அடைந்தார். புதிதாக வேள்வியைத் தொடங்கி செய்யலானார். இதற்குள் இங்கே கதை துண்டிக்கப்பட்டு இடையில் அயோத்தியாண்ட அம்பாரிஷ மன்னனின் இடைக் கதை வருகிறது. இவர் இக்ஷுசவாகு பரம்பரையில் இருபத்தெட்டாம் மன்னர். திரிசங்குவிற்குப் பிறகு 22 ஆம் மன்னர். விசுவாமித்திரர் பெருமை மிக அந்த இரு மன்னரிடமும் இருந்தார். இந்திரன் ஒரு குற்றவாளியைத் தூக்கிச் சென்றபோது அம்பாரிஷர் வேள்வியில் இருந்ததாகத் தெரிகிறது. இந்த அவக்கேடு அரசனின் மோசமான நிர்வாகப் போக்கால் உருவாகியது எனப் புரோகிதர் அரசனிடம் கூறினார். ஒரு மனிதனைப் பலி கொடுத்துத்தான் இதற்குக் கழுவாய் தேட வேண்டும். மிகவும் பாடுபட்டு க்ஷத்திரிய ரிஷி பிராமண ரிஷி ரிட்சிகரை (பிருகு முனிவர் மகன்) அணுகினார். அவரது ஒரு மகனைப் பலிகொடுப்பதற்குத் தரும்படி கேட்டார். அதற்காகத் தான் நூறாயிரம் பசுக்களைத் தருவதாகவும் கூறினார். ரிட்சிகர் தனது மூத்த மகனைத் தர மறுக்க அவரது பத்தினி இளைய மகனைத் தர மறுத்தாள். மேலும் " தந்தைக்கு மூத்த பிள்ளையும், தாய்க்கு இளைய பிள்ளையும் எப்போதும் பிரிமானவர்கள்" என்றார் ரிஷி பத்தினி. அப்போது இரண்டாம் மகனாகிய சுனஸ்சேபன் விற்பதற்குரியவன் தானே என்றும், தன்னை அழைத்துச் செல்லலாம் என்றும் கூறினான். நூறாயிரம் பசுக்களோடு ஒரு கோடி பொற்காசுகளும் நகைக் குவியலும் தரப்பட்டன. சுனஸ்சேபன் உடன் அழைத்துச் செல்லப் பட்டான். புஸ்கரா என்ற இடத்தைக் கடந்து செல்லும்போது தாய்வழி மாமனான விசுவாமித்திரரைச் சுனஸ்சேபன் சந்தித்து தனது பரிதாபகரமான நிலைமையை எடுத்து விளக்கி, அவரிடம் அடைக்கலம் புகுந்தான்; அவரது உதவியைக், கோரினான். பலரிஷிகளுடன் வேள்வி செய்துக் கொண்டிருந்த விசுவாமித்திரர் அவனைத் தேற்றிச் சுனஸ்சேபன்னுக்குப் பதில் தனது பிள்ளைகளையே பலியிட அனுப்புவதாகக் கூறினார். அந்த அரச முனிபுங்கவரின் மகனான மதுசந்தரும் மற்ற பிள்ளைகளும் இதை ஏற்கவில்லை, "நீங்கள் எப்படி மற்றவர் பிள்ளைகளைக்

---

[1] இதுதான் திரிசங்குவின் கதை. ஹரிவம்சத்தில் காணப்படும் கதையிலிருந்து இது பெரிதும் மாறுபடுகிறது என்பது இங்கு கவனிக்க தக்கது. இருப்பினும் விசுவாமித்திருக்கும் வசிஷ்டருக்கும் இடையே உள்ள தகராறை இது மிகவும் தெளிவாக எடுத்துரைக்கிறது.

காப்பாற்றுவதற்காக உங்கள் பிள்ளைகளையே தியாகஞ் செய்யலாம்" எனக் கோபத்தோடு கேட்டனர். இது தனது சதையையே தின்னும் பழக்கத்துக்கு ஒப்பானது எனக் கேலி செய்தனர். இதைக்கேட்டு சினமடைந்த விசுவாமித்திரர்" நீங்களும் வசிஷ்டர் மக்களைப்போல தாழ்ந்த குலத்தில் இழிந்த பிறவிகளாகப் பிறப்பீர்கள். ஆயிரமாண்டுகளுக்கு நீங்கள் நாயின் சதையைத் தின்று வாழ்வீர்கள்" என்று சபித்தார். பிறகு சுனஸ்சேபனிடம் திரும்பி, "நீ கயிற்றால் பிணிக்கப்பட்டு செவ்வுடை அணிந்து விஷ்ணு கம்பத்தில் கட்டப்பட்டு அம்பாரிஷனின் வேள்வியில் அவிர்பாகமாக தரப்படும்போது அக்னியை நினைத்து இந்த இரண்டு தெய்வீக மந்திரங்களை உரத்து ஓதுவாயாக; இவை நீ எதிர்நோக்கும் பலன்களை உடனடியாகத் தரும்," என்றார். இந்த இரண்டு மந்திரங்களைக் கற்றுக் கொண்டதும் சுனஸ்சேபன் மன்னர் அம்பாரிஷினிடம் சென்று நாம் செல்ல வேண்டிய இடத்துக்குப் போகலாம் ' என்றான். சுனஸ்சேபன் சிவப்புடையில் விஷ்ணு கம்பத்தில் கட்டப்பட்டு வேள்விக்குப் பலியாக்கப்படும் நேரத்தில் இந்திரனையும் அவனது தம்பி விஷ்ணுவையும் நினைத்து இரண்டு இனிய பாடல்களை இசைத்தான். இந்தத் தெய்வீகப் பாடலைக் கேட்ட இந்திரன் மகிழ்ந்து சுனஸ்சேபனுக்கு நீண்ட ஆயுளை வழங்கினான். அந்த வேள்விக்காக அம்பாரிஷனும் பல வரங்களைப் பெற்றான். இதற்குள் விசுவாமித்திரர் ஆயிரம் ஆண்டுகள் ஆழ்ந்த தவம் செய்தார். இறுதியில் தேவர்கள் தோன்றி அவருக்குப் பரிசுகள் நல்கினர். பிரமா தோன்றி ' நீ ரிஷியாகக் கடவாய்' என வரமளித்தார். இதில் நிறைவடையாத விசுவாமித்திரர் புதிதாக கடுந்தவம் இயற்றலானார். நெடுங்காலத் தவம் செய்து கொண்டிருக்கம்போது ஒரு நாள் மேனகை புஸ்கர நதியில் நீராடும் காட்சியைக் கண்ணுற்றார். அவளது அபூர்வமான அழகில் மயங்கினார். தன்னுடன் வந்து வாழுமாறு அழைத்தார். அவளது அழகுக்கு அடிமையாகி பத்தாண்டுகள் அவளுடன் கேளிக்கையில் ஈடுபட்டார்.. இது அவரது தவத்துக்கு மாபெரும் பின்னடைவைத் தந்தது. இதற்காக, இந்த புனிதமற்றச் செயலுக்காக நெடுநேரம் வருந்தியபின் இது எனது தவங்கலைக்க தேவர்கள் செய்த தந்திரச் செயலாகத்தான் இருக்குமென்பதை உணர்ந்தார். பின்னர் மேனகையைத் துறந்து வடதிசை மலைகளை நோக்கிப் பயணமானார். அங்கே கௌசிக ஆற்றங்கரையில் ஆயிரமாண்டுகள் கடுந் தவமிருந்தார். அவரது முன்னேற்றம் கண்ட தேவர்களும் மூவர்களும் அஞ்சினர். அவருக்கு மகரிஷி பட்டம் தர முடிவெடுத்தனர். அவர் முன் பிர்மா தோன்றி 'நீ மகரிஷி' நிலை எய்தி விட்டாய் என வரமளித்தார். தனது கைகளைக் குவித்து தலையைத் தாழ்த்தி பிரமாவை வணங்கிவிசுவாமித்திரர் தான் முழுதும் புலன்களை வென்றதால் பிராமணரிஷி பட்டம் அளிக்க

வேண்டும் எனக்கேட்டார். அதற்குப் பிரமா நீர் இன்னும் அந்த அளவுக்குப் புலன்களை வெல்லவில்லை எனக்கூறி மறுத்து விட்டார். பிறகு விசுவாமித்திரர் தன்னிருகைகளையும் உயர்த்தி ஐந்து தீக்கோள் நெருப்பின் நடுவில் நின்று (நான்கு பக்கங்களில் நெருப்பும் தலைக்குமேல் சூரியனும் இருக்கும்படி) காற்றை மட்டும் உண்டு, மழைக்காலத்தில் பாதுகாப்பு இன்றி ஈரப் படுக்கையில் இரவும் பகலும் இருந்து கடுந்தவம் இயற்றலானார். இந்தத் தவம் ஆயிரம் ஆண்டுகள் வரை நீண்டது, இந்திரனும் தேவரும் விசுவாமித்திரர் அடைந்து வரும் உயர் நிலையையும் ஆற்றலையும் கண்டு அஞ்சினர். எனவே ரம்பையை அழைத்து நீ உன்னழகால் அந்த முனிபுங்கவரின் தவத்தைக் கலைத்திடு என ஏவினர். ஆனால் ரம்பையோ முனிவரின் தவ ஆற்றலுக்கு அஞ்சிப் போக மறுத்தாள். தானும் காதல் தேவனான கந்தர்ப்பனும் அருகில் காவலுக்கு இருப்பதாகக் கூறி பன்முறை வற்புறுத்தவும் இறுதியில் ரம்பை இசைந்தாள், இதைத் தெரிந்து கொண்ட விசுவாமித்திரர் ரம்பை ஆயிரம் ஆண்டுக் காலம் நிலவுலகில் கல்லாகக் கிடக்கும்படிச் சபித்துவிட்டார். இந்தச்சாபம் பலித்தது, இந்திரனும் கந்தர்ப்பனும் அங்கிருந்து சென்று விட்டனர். புலன் இன்பத்தை முனிபுங்கவர் இப்படித் தடுத்தாரே தவிர அவரது சினம் அவருடைய தவ ஆற்றலைச் சிதைத்துக் குறைத்து விட்டது. எனவே மீண்டும் தவத்தில் ஈடுபட வேண்டியதாகி விட்டது. பிராமண ரிஷியாகும் வரை பின்வரும் விரதங்களை மேற்கொள்ளத் தொடங்கினார். அமைதிகாத்தல், நூற்றுக்கணக்கான. ஆண்டுகளுக்கு மூச்சு கட்டுப்பிடித்தல், உடம்பை உலர்த்தல் ஆகிய நோன்புகளாற்றினார். பின்னர் இமயமலையை விட்டிறங்கிக் கிழக்கே பயணமானார். தவ வரலாற்றிலேயே இல்லாத புதுமுறையில் கடும் பயிற்சியில் அமைதி பூண்டு ஆயிரம் ஆண்டுகள் கடுந் தவமியற்றினார். அந்தக் காலக்கட்ட இறுதியில் அவர் வேண்டிய முழுமை நிலையை அடைந்தார். இதற்கு எண்ணற்ற இன்னல்களையும் இடுக்கண்களையும் எதிர் கொண்டு அவற்றை அவர் கடக்க நேரிட்டது. சினம் அவரைத் தாக்க முடியவில்லை. இந்தத் தவம் முடிந்தது . தனக்காக அவர் சிறிது உணவு சமைத்தார். இந்திரன் பிராமண வேடம் பூண்டு இந்த உணவை யாசகம் கேட்டான். தான் பசியில் இருக்க வேண்டியிருந்தாலும் விசுவாமித்திரர் அந்த உணவைப் பிச்சையிட்டார். அந்தப் பிராமணரிடம் ஏதும் கூறாமல் அமைதி காத்தார். மேலும் அவர் மூச்சையடக்கியதால் அவரது தலையிலிருந்து நெருப்பு கொட்டத் தொடங்கியது. மூவுலகமும் ஆடின. தேவரும் ரிஷிகளும் பிரம்மாவிடம் சென்று, ' அந்த மாமுனி விசுவாமித்திரருக்கு நாங்கள் ஏற்படுத்திய இன்னல்கள் ஏதும் பலிக்க வில்லை. அவர் தனது நோக்கத்தில், குறிக்கோளில் முன்னேறிக் கொண்டே போகிறார். அவரது விருப்பம் நிறைவேற்றப் படாவிட்டால் தனது தவ வலிமையால் இந்த மூன்று உலகையும் அழித்துவிடுவார்.

அண்டங்கள் எல்லாம் இருண்டு விட்டன. எங்கும் ஒளியே இல்லை. கடல்கள் தலைகீழாகி மலைகள் நொறுங்குகின்றன. எங்கும் நிலநடுக்கம் . காற்று தாறுமாறாக வீசுகிறது. ஓ, பிரமாவே, இனி மனிதப்பூண்டு நிலவுமா எனப் புரிய வில்லை. அவர்கள் நாத்திகர்களாக மாறாதிருக்க வழி செய்யுங்கள். இந்த தவ வல்லமைமிக்க மாமுனிவர் அனைத்தையும் அழித்தொழிக்கும் முன் ஒரு வழி செய்யுங்கள்" என்றனர். பிரமா தேவர்கள் சூழ விசுவாமித்திரரிடம் ' வாழ்க! பிராமண ரிஷியே! உம் தவத்தால் யாம் பெருமகிழ்வுற்றோம். ஓ, கௌசிக முனியே. உனது அரும் பெருந் தவப்பலனால் பிராமண நிலை எய்தி விட்டாய், ஓ பிராமணரே! உமக்கு நீண்ட ஆயுளைத் தருகிறேன். எல்லாச் செல்வங்களும் உம்மிடம் குவியும். நீர் எங்கும் விரும்பியபடி செல்லலாம்". " உண்மையிலேயே பெருமிதமுற்ற விசுவாமித்திரர் தேவர்களுக்குப் பணிவாக, " நான் பிராமண நிலையை எய்தி இருந்தால் ஓங்காரமும் வேள்வி விதிமுறையும் (வஷத்காரமும்) வேதங்களும் என்னைப் பிராமண நிலையில் மதிக்கட்டும், பிராமண வசிஷ்டர் வேத அறிவுமிக்க என்னை அவ்வாறு மதித்து அழைக்கட்டும்"; என்றார். அவ்வாறே வசிஷ்டரும் தேவர்கள் கேட்டுக் கொண்டதை ஒப்புக்கொண்டு, விசுவாமித்திரரைப் பிராமண ரிஷியாக ஏற்றுக் கொண்டார். விசுவாமித்திரரும் பிராமண ரிஷியாகியதால் வசிஷ்டருக்கு செய்ய வேண்டிய அனைத்து மரியாதைகளையும் செய்தார்".

மகாபாரதத்தில் ஆதி பருவத்தில் க்ஷத்திரியர்களைப் பிராமணர்கள் கொலை செய்த இரண்டாவது விவரம் தரப்பட்டுள்ளது. அந்தக் கதையும் கீழே கொடுக்கபடுகிறது.

"முன்னொரு காலத்தில் கார்த்த வீரியன் என்ற அரசன் வாழ்ந்து வந்தான். அவன் வேதம் கற்ற பிறகு முனிவர்களை அரசாங்கப் புரோகிதர்களாக கொண்டிருந்தான். அவன் அவர்கட்குத் தானியமும் பணமும் அளவில்லாமல் வழங்கினான். அவன் விண்ணுலகு சென்றதும் அவனது பிள்ளைகள் வறுமையால் பிருகு முனிவர்களிடம் சென்று அவர்களது செல்வத்தில் ஒரு பகுதியைக் கேட்டனர். சிலர் அவர்களது செல்வத்தினை நிலத்தடியில் புதைத்துவிட்டனர். சிலர் க்ஷத்திரியருக்குக் கொடையாகக் கொடுத்து விட்டனர். சிலர் அவர்களிடம் இருந்த சிறிதளவு செல்வத்தைச் க்ஷத்திரியருக்குத் தரவும் செயதனர். சில க்ஷத்திரியர்கள் நிலத்தைத் தோண்டும் போது பிராமணர் ஒளித்து வைத்திருந்த செல்வத்தைப் பிருகுவின் வீட்டில், கண்டு பிடித்து விட்டனர். க்ஷத்திரியர்கள் கூட்டமாக வந்து இந்தச் செல்வத்தைக் கண்டு சினமடைந்தனர். எனவே எல்லாப் பிருகு பிராமணர்களையும் கருவிலிருக்கும் சேயுட்பட வெட்டி வீழ்த்தினர். பிராமண விதவைகள் இமயமலை நோக்கி ஓடினர். அதில் ஒருத்தி தனது தொடையில் ஒரு மகவை ஒளித்து வைத்துக் கொண்டாள். இந்தச் செய்தியை ஒரு பிராமண

உளவாளி மூலம் அறிந்த க்ஷத்திரியர் அதைக் கொல்லச் சென்றபோது தொடையிலிருந்த அந்தக் குழவி க்ஷத்திரியர் கண்களைக் பேரொளி கொண்டு குருடாக்கியது. குருடான க்ஷத்திரியர்கள் மலைகளில் சிலகாலம் துன்புற்று அலைந்து, பிறகு அந்தக் குழந்தையின் தாயை அணுகிக் குழந்தை மூலம் தங்களது பார்வையை மீட்டுத்தருமாறு வேண்டினர். அதற்கவள் தனது பிள்ளையாகிய ஆயுர்வானிடம் அனுப்பினாள். அவன் வேதமும் அதன் ஆறு வேதாங்கமும் அறிந்தவன். அவன் தன் சுற்றத்தைக் கொன்றதற்காக அவர்களது கண்களைக் குருடாக்கினான். அவனால் மட்டுமே அவர்களுக்குப் பார்வையை மீட்டுத்தர முடியும்.

எனவே க்ஷத்திரியர்கள் ஆயுர்வானிடம் சென்றனர். ஆயுர்வான் அவர்களது பார்வையை மீட்டுத் தந்தான். ஆனால் பிருகு முனிவர் குலத்தை அழித்தமைக்காக பழிவாங்க பிறஉயிரினங்களை ஒழிக்க கடுந்தவம் பூண்டான். இதனால் தேவர்களும் அசுரர்களும் மனிதர்களும் அஞ்சினர். ஆயுர்வானின் குரு பித்ரி தோன்றி, தனக்கு க்ஷத்திரியர்களை பழி வாங்கும் நோக்கம் இல்லை என்பதால் அதிலிருந்து மீளுமாறு ஆயுர்வானிடம் கூறினார். புனித பிருகு குலத்தினர் தங்களது வலுவின்மையால் கொல்லப்படவில்லை. முதுமை அடைந்தமையால் கொல்ல வழிவிட்டனர். ஒழுக்கமிக்க பிருகு முனிகளுக்கும் பணத்துக்கும் தொடர்பில்லை. க்ஷத்திரியருக்கும் பிராமணருக்கும் பகைமூட்டவே சில கயவர்கள் பிருகுவின் வீட்டில் பணத்தைப் புதைத்து வைத்தனர், என்று மேலும் நடந்தவற்றை ஆயுர்வானுக்கு விளக்கிக் கூறினார். நாங்கள் தற்கொலை செய்துக் கொள்ள நேரும் பழியிலிருந்து பாதுகாக்கவே இந்த ஏற்பாடு திட்டமிட்டு உருவாக்கப்பட்டது என்றும், எனவே உயிரினக்கொலை நோக்கத்தைத் தவிர்க்குமாறும் அறிவுறுத்தினார். அவனை இந்தப் பாவச் செயலிலிருந்து விலகுமாறு சொன்னார். மேலும் க்ஷத்திரியர்களைக் கொல்லாதே, ஏழு உலகங்களை அழிக்காதே, உன் தவம் உன் சினத்தைக் கொல்லட்டும் என்றார். எனினும் ஆயுர்வான் தான் எடுத்த முடிவிலிருந்து பின்வாங்க இயலாதென்றும், ஏதேனும் ஒரு புறப்பொருள் மீது ஏவா விட்டால் தனது சினம் தன்னையே அழித்துவிடும் என்றும் பதிலுரைத்தான். மேலும் தனது செயல் தன்னுடைய குருக்கள் கூறிய நீதி, கடமை, உழைப்பு ஆகிய கோட்பாடுகளின் அடிப்படையில் அமைந்ததே யாகும் என்றும் சாதித்தான். எனினும் அவனைத் திருத்தி, அவனது சினத் தீயைக் கடலில் வீசி அணைக்குமாறு வழிகூறினார். இதனால் அவன் அழியாமல் காப்பற்றப்படலாம் என்றார், பித்ரி".

மூன்றாவது நிகழ்ச்சி பிராமணர்கள் க்ஷத்திரியர்களைக் கொன்ற நிகழ்ச்சியாகும். இது மகாபாரதத்தில் பல இடங்களில் வருகிறது.

முன்னொரு காலத்தில் கார்த்தவீரியன் என்பவன் ஆயிரம் படைகள்தாங்கி பெருவீரனாக இந்த உலக முழுவதையும் மிகிஷ்மதி நகரில் இருந்து ஆண்டு வந்தான். இந்த ஹைகய வீரன்கீழ் மண்ணுலகைக் கடல்களும் கண்டங்களும் அடிமையாக இருந்தன. இந்த உலகைப் போரில் வெல்ல ஆயிரம் படைகளை அவன் தத்தாதிரேய முனியிடம் பெற்றான். இந்த உலகை ஆளும் வரமும் பெற்றான், நீதி தவற நேரிடும் போது நல்லவர்களுடைய அறிவுரையை நாடுவதாகக் கூறி இந்த வரங்களைப் பெற்றான். பிறகு சூரியனைப்போல மின்னும் தனது தேரிலிருந்து இறங்கிய கார்த்த வீரியார்ச்சுனன் தன் வல்லமையால் அகந்தையுற்று, செல்வத்திலோ, வலிமையிலோ, புகழிலோ, வீரத்திலோ, ஆற்றலிலோ, அயராது சலியாது பாடுபடும் வேகத்திலோ, எனக்கு இணையானவர் யார்? என்று கொக்கரித்தான். இந்தப் பேச்சு முடிந்ததுமே வானத்திலிருந்து ஓர் அசரீரி கேட்டது: "உனக்கு ஏதும் தெரியாது. ஏ முட்டாளே, பிராமணன் க்ஷத்திரியனை விட உயர்ந்தவன். க்ஷத்திரியன் பிராமணர்களின் உதவியுடன்தான் தனது குடிமக்களை ஆள்கிறான்". அதற்கு அர்ச்சுனன், "நான் விரும்பினால் உயிர்ராசிகளை என்னால் படைக்க முடியும், நினைத்தால் அவற்றை அழிக்கவும் முடியும். செயலிலோ, சொல்லிலோ சிந்தனையிலோ எந்தப் பிராமணனும் உயர்ந்தவனில்லை. பிராமணன் உயர்ந்தவன்; இரண்டாவதுதான் க்ஷத்திரியன் என்று நீங்கள் இருவரையும் அவரவருக்கு என்றுள்ள தனித் தனியான நிலைமை கொண்டு கூறினீர்கள். இவர்கள் இருவரும் வலிமையில் வேறுபட்டுள்ளனர். வலிமையில் பிராமணன் க்ஷத்திரியனுக்கு இணையாக முடியாது. பிராமணன் க்ஷத்திரியனைச் சார்ந்தே உள்ளான். க்ஷத்திரியன் பிராமணனைச் சார்ந்தில்லை. க்ஷத்திரியனுக்காக காத்திருந்து வேதம். ஓதலே பிராமணனுக்கான பணி. மக்களைப் பாதுகாக்கும் தர்மத்தை க்ஷத்திரியன்தான் நிலைநாட்டுகிறான், பிராமணன் க்ஷத்திரியனிடமிருந்துதான் உணவு, உடை பெறுகிறான். எனவே பிராமணர் எப்படி உயர்ந்தவராக முடியும்? தங்களைப் பெரிதாக நினைத்துக் கொண்டு, தானம் பெற்று உண்டு வாழும் பிராமணரை, அனைவரினும் உயர்ந்த பிராமணரை நான் எப்போதும் அடக்கியாள்கிறேன். இதைத்தான்-இவ்வுண்மையைத்தான் வானத்து காயத்திரியும் கூறுகிறாள். ஒளிந்து மறைந்து பெருமை பேசும் எல்லாப் பிராமணரையும் நான் அடிமை கொள்வேன். இந்த மூவுலகில் பிராமணரோ மனிதரோ எனது அரசு அதிகாரத்தை மீற வல்லவர் யாருமில்லை. எனவே நான் எந்தப் பிராமணனையும் விட உயர்ந்தவன். நான் பிராமணர் உயர்ந்த நிலையில் வீற்றுள்ள உலகங்களை க்ஷத்திரியர் உயர்ந்துள்ள நிலைக்கு மாற்றிக் காட்டுகிறேன். ஏனெனில் என்னை யாராலும் போர்க்களத்தில் சந்திக்க முடியாது." இந்தப் பேச்சால் இரவில் திரியும் வான மங்கை அலறினாள். இதுகண்ட காற்றுத்தேவன் (வாயு)

அர்ச்சுனனைப் பார்த்து, "இந்த பாவச் செயலிலிருந்து விடுபடுவாயாக! பிராமணரை மதித்திடுவாயாக நீ அவர்களுக்குக் கேடிழைத்தாயானால் உனது நாடு கேடுறும். உனது அரசு அழியும். உன்னை அவர்கள் அடக்கி விடுவார்கள். உன்னைக் கீழ்படியச் செய்து உனது நாட்டிலிருந்தே உன்னை விரட்டி விடுவார்கள்" என்றான். அரசன் " நீ யார்?" என்றான். "நான் தான் வாயு என்னும் காற்றுத் தேவன், தேவரின் தூதுவன்" என்றான். அவன். மேலும், "இதனால் உனக்கென்ன லாபம்" என்று வினவினான். அர்ச்சுனன் பதில் கூறலானான்: " நீர்தான் என்னை எதிர்த்துக் கொண்டு பிராமணரைப் போற்றிக் கொண்டு நிற்கிறீர். ஆனால் பிராமணர் பூமியில் பிறந்த புழு பூச்சி போன்றவர்."

இந்த அரசன் ஜமதக்னி முனிப்புதல்வன் பரசுராமனிடம் பகைமை பூண்டு அவனிடம் சண்டை செய்தான். இந்தச் சண்டையின் விவரம் இங்கே தரப்படுகிறது. முன்னொரு காலத்தில் காதி என்றழைக்கப்படும் கன்னியாகுப்ஜன் என்ற அரசன் இருந்தான். அவனுக்குச் சத்தியவதி என்றொரு மகள் இருந்தாள். இந்த இளவரசிக்கும் இருஷிகன் என்ற முனிக்கும் திருமணம் நடந்தது. ஜமதக்னி என்ற மகன் பிறந்தான். ஜமதக்னிக்கு ஐந்தாவது கடைசிப்பிள்ளை பரசுராமன். பரசுராமன் தனது தந்தையின் ஆணையை நிறைவேற்ற தாயைக் (தாய்தவறான போக்குடைய வேட்கை மீதூர்ந்ததால் பண்பிழந்ததாக அவனது தந்தை கூறியது கேட்டு) கொன்றான். அவனது மற்ற நான்கு அண்ணன்களும் தந்தையின் கட்டளையை நிறைவேற்ற சம்மதிக்க வில்லை. எனவே அவர்கள் எதையும் சிந்தனை செய்து பார்க்கும் ஆற்றலை இழக்கும்படி சபிக்கப்பட்டனர். பரசுராமன் தாயைக் கொன்றாலும் தந்தையிடம் தாயைத் திரும்பப் பெற விரும்புவதாகக் கூறியதும் தந்தை, அவனது தாயை உயிர்ப்பித்தார். தனது அண்ணன்மாரின் சிந்தனைத் திறனையும் தந்தையிடம் வேண்டி மீட்டான். அவன் தனது தாயைக் கொன்ற பழியையும் போக்கிக் கொண்டான். மேலும் தந்தையிடமிருந்து அளவற்ற பெருஞ்செல்வத்தையும் நீண்ட ஆயுளையும், வரத்தையும் பெற்றான். இதற்குப் பிறகு இவன் கார்த்தவீரிய அரசனின் வரலாற்றில் ஒரு பாத்திரமாகப் பேசப்படுகிறான். கார்த்த வீரியார்ச்சுனன் ஒரு நாள் ஜமதக்னி முனிபுங்கவரின் குடிலுக்கு வருகிறான். ஜமதக்னி முனிவரின் பத்தினி அவனை நன்கு வரவேற்று உபசரித்தாள். ஆனால் அந்த மதிப்பை அவன் காப்பாற்றிக் கொள்ளவில்லை. அவர்களது தெய்வீகப் பசுவை வலுக் கட்டாயமாக பறித்துக் கொண்டு நெடிதுயர்ந்த தேவ தருக்களை முறித்தான். இந்த வன்முறையைக் கேள்விப்பட்ட பரசுராமன் கொதித்தெழுந்தான். அர்ச்சுனனை எதிர்த்து அவனது ஆயிரம் கைகளைக் கொய்து எறிந்தான். அவனைக் கொன்றுவிட்டான். பரசுராமன் இல்லாத சமயம் பார்த்து அர்ச்சுனனின் பிள்ளைகள் பழிவாங்க ஜமதக்னி முனிவரைக் கொன்றனர்.

பரசுராமன் தந்தையின் ஈமக்கடன்களை முடித்துத் திரும்பியதும் க்ஷத்திரியக் குலத்தையே பூண்டோடு அழித்துவிடுவதாக சூளுரைத்தான். இதற்கேற்ப அர்ச்சுனன் பிள்ளைகளையும் அவர்களது வழித் தோன்றல்களையும் கொன்று குவித்தான். இருபத்தொரு முறை பூவுலகில் உள்ள க்ஷத்திரியர்கள் அனைவரையும் திரும்பத் திரும்பக் கொன்று குவித்தான். இதனால் சமந்த பஞ்சகம் என்ற இடத்தில் ஐந்து குளங்களில் இரத்தம் நிரம்பியது. அந்த இரத்தத்தைக் கொண்டு பிருகு மூதாதையரின் ஆவிகளைத் திருப்திப்படுத்தினான் இருஷிக முனியிடமும் (அவனது தாத்தா) நேருக்கு நேராகப் பேசினான். அவரும் பரசுராமனுடன் பேசினார். பிறகு பரசுராமன் இந்திரனுக்கு வேள்விசெய்து பெரும் பரிசுகளை நல்கினான். இறைப்பணி புரியும் புரோகிதர்களுக்குப் புவியைக் கொடையாகக் கொடுத்தான். பெருவலிமை கொண்ட கசியபருக்கு அறுபது அடி நீளமும் ஐம்பதுநான்கடி உயரமும் கொண்ட பொன்னாலான பலிபீடத்தை அமைத்துக் கொடுத்தான். இதைக் கசியபரின் ஒப்புதலுடன் பிராமணர்கள் பங்கிட்டுக் கொண்டனர். அந்தப் பிராமணர்கள் கந்தவவானவர்கள் எனப்பட்டனர். கசியபரிடம் பூவுலகைத் தந்துவிட்ட பரசுராமன் மகேந்திர மலையில் தங்கியிருந்தான். இங்ஙனம் பரசுராமனுக்கும் க்ஷத்திரியருக்கும் பகைமையுருவாகி க்ஷத்திரியர்கள் அனைவரையும் கொன்று பூவுலகம் முழுவதையும் தனது முழுக்குடையின் கீழ்கொண்டு வந்தான்".

கா மீரம், தராதம், குந்தீஸ், சூத்திரகம், மாளவம், அங்கம், வங்கம், கலிங்கம், விதேகம், தமிரலப்தி, மார்திகவதம், கிவி, ராஜன்யம் ஆகிய ராஜ்யங்களில் வாழ்ந்த க்ஷத்திரியர்களைப் பரசுராமன் கொன்று குவித்ததைப் பற்றி மகாபாரதத்தின் துரோண பருவத்தில் விளக்கப்பட்டுள்ளது.

பிராமணரால் க்ஷத்திரியக்குலம் பூண்டோடு அழிக்கப்பட்ட கதையின் ஒரு பகுதியாகப் பிறகு க்ஷத்திரிய குலம் மீண்டெழுந்த கதையும் உள்ளது. அது பின் வருமாறு:

"இருபத்தொரு முறை க்ஷத்திரியர்களைப் பூண்டோடு அழித்த பிறகு, ஜமதக்னி மகனான பரசுராமன் மாபெரும் மகேந்திர மலையையடைந்து பெருந்தவம் இயற்றினான். க்ஷத்திரியர்கள் இறந்ததும் அவர்களது விதவைகள் தங்களுக்கு வழித் தோன்றல்களைத் தருமாறு பரசுராமனிடம் வந்து வேண்டினர். காமமற்ற சமய உணர்வுள்ள பிராமணர்கள் இவர்களுடன் தக்கப் பருவக் காலங்களில் உடன் வாழ்ந்தனர். எனவே அவர்கள் கருவுற்று வலிமைமிக்க க்ஷத்திரிய ஆண்களையும் பெண்களையும் பெற்றெடுக்க க்ஷத்திரியர்குலம் மீண்டும் பூவுலகில் தோன்றிப் பெருகித் தழைக்கலாகியது. பிறகு பிராமணருக்கும்

இந்து மதத்தைப் போல வேறெங்கும் இத்தகைய வர்க்கப் போராட்டங்கள் நிகழ்ந்ததில்லை. செருக்குமிக்க பரசுராமன்தான் இருபத்தொரு முறை க்ஷத்திரியர்களை அழித்த பிறகு பிராமணர் மூலம் க்ஷத்திரிய விதவைகளிடம் க்ஷத்திரியக் குலத்தை மீண்டும் உருவாக்கினான்.

இந்த வர்க்கப் போராட்டம் தொல்பழம் இந்தியாவுக்கு மட்டுமே உரியதல்ல. தற்காலத்திலும் இது தொடர்ந்து நிகழ்கிறது. இதன் தாக்கம் மராத்தியர்கள் ஆட்சியில் பரவலாக இருந்தது. அது மராத்திய ஆட்சியையே முடிவுக்குக் கொண்டு வந்தது. இந்த வர்க்கப் போராட்டம் மற்றப் போர்களைப்போல தோன்றும்போதுமட்டும் அழிவையும் பகைமையையும் நிலவச் செய்து விட்டு மறைந்து விடுவதில்லை. இந்திய நாட்டில் தொடந்து நிகழும் நிகழ்ச்சியாகும். இது அமைதியான முறையில், ஆனால் அணையாமல் நிலவுகிறது. இது வாழ்வின் ஒரு தத்துவமாக, இந்துசமயத்தின் பொதுப்போக்காக அறிவுத் தந்திரமாகவே இது விளங்கி வருகிறது என்றால் பொய்யல்ல. இந்த உண்மைகள் இந் நோயின் அறிகுறிகள். இவற்றை யாரும் மறுக்க முடியாது. இது இந்துக்களிடம் சகோதரத்துவம் நிலவுவதையா காட்டுகிறது? இதற்கான உடன்பாடான பதிலை என்றும் எதிர் பார்க்க முடியாது என்றுதான் கூறுவேன்.

இந்துக்களிடம் சகோதரத்துவம் நிலவாததற்கான காரணம் தான் என்ன? இதற்குக் காரணம் இந்துமத வாதமும் அதன் தத்துவப் போக்குந்தான் இந் நிலையை உருவாக்குகின்றன. மில் கூறுவதுபோல் சகோதரத்துவம் மனிதக் குலத்துக்கே இயல்பான பண்புதான். ஆனால் அந்த அன்பு விருட்சம் வளர, நலம் வாய்ந்த சமூக மண்ணும் சிந்தனை நீரூற்றும் தேவை. சகோதரத்துவத்துக்கு முதல் தேவை, நாம் கடவுளின் மக்கள் என்று கூறுவதல்ல; நாம் ஒருவரைஒருவர் சார்ந்துதான் வாழவேண்டியவர்கள் எனக் கூறுவதல்ல.; ஒத்துணர்வை உருவாக்க இது போதுமானது என்பது உண்மையே. ஆனால் அந்த உணர்வைக் கட்டிக்காக்க வாழ்க்கையின் உயிர்துடிப்பான இயக்கத்தூடே, அது நிலவ வேண்டும். இது மகிழ்ச்சி, அவலம்,பிறப்பு, இறப்பு, உணவு அனைத்தையும். அனைவரும் பகிர்ந்துக்கொள்ளும் போது மட்டுமே நில்வமுடியும். இந்தப் பகிர்வு அனைவரையும் சகோதரர்களாக உணரவைக்கிறது. வின்சென்ட் ஸ்மித் உணவைப் பகிர்தல் எப்படி சமுதாய உணர்வை உருவாக்குவதில் முக்கிய பங்காற்றுகிறது என்பதை பின் வருமாறு கூறுகிறார்.

“ வேள்வி அவிர்பாக உணவு பண்டைய வாழ்வின் சமயக்குறியீடு; இதில் கடவுளும் வழிபாட்டாளரும் உடன் நிலவும் சமூகச் செயல்பாடு மட்டுமல்ல. கடவுள் உடன் இருந்து மனிதருடன் உணவு உண்டும்

பருகியும் மகிழ்தல் அவருடைய சமூகக் கடமையுமாகும். வேள்வி அவிர்பாகத்தில் கடவுளும் வழிபாட்டாளரும் ஒத்த பாகத்தினர். பிற பரஸ்பர உறவுகளெல்லாம் அப்போது என்ன நடந்தது என்ற உண்மையின் வடிவங்கள். உணவுகளில் ஒன்றானவர்கள் அனைத்துச் சமூகச் செயல்களிலும் ஒன்றுபட முடிகிறது. ஒன்றாக உட்கார்ந்து உண்ணாதவர் அயல்வராகின்றனர். சமய உறவற்றவர்களாகின்றனர், சமுகக்கடமையை ஏற்காதவராகின்றனர்"[1].

அன்றாட வாழ்வில் இந்துக்கள் இன்ப துன்பங்களைப் பகிர்ந்து கொள்வதில்லை. எல்லாமே தனித்தனியே பிரிந்து பிரிந்து நிற்கின்றன. இந்தியாவில் நுழையும் அயல் நாட்டவர் இந்து நீர் முஸ்லீம் நீர் என்று எழுதப்பட்டதைக் காண்பதில்லை. ஆனால் பிராமண உணவு விடுதிகள் என்று எழுதப்பட்டிருப்பதை உறுதியாகக் காணலாம். அங்கு பிராமணரல்லாதார் செல்ல முடியாது. பிராமண மருத்துவமனை , மராத்தியர் மருத்துவமனை. பாடியா மருத்துவமனை என எழுதிய பலகைகளைக் காணலாம். எல்லாரும் இந்துக்கள் தானே . ஆனால் இந்து மருத்துவமனை எனப் பொதுவாக எழுதப்படும் பலகை எங்கும் இல்லை. பிராமணர் வீட்டில் குழந்தை பிறந்தால் பிராமணரல்லாதார் அழைக்கப்படுவதில்லை. பிராமணர் வீட்டில் ஒருவர் இறந்தாலும் அப்படியே. பிராமணரல்லாதார் சுடுகாட்டுச் சடங்குகளிலும் அழைக்கப்படுவதில்லை. பிராமணரல்லாதாரில் ஒருவர் சென்று கலந்துகொள்ள நினைப்பது கூட கிடையாது. விழாவொன்று பிராமணர் வீட்டில் நடந்தாலும் அந்த விழாவுக்குப் பிராமணரல்லாதார் பங்கெடுக்க அழைக்கப் படுவதில்லை. எனவே வாழ்வின் இன்பதுன்பங்களைப் பிராமணரும் பிராமணரல்லாதாரும் சமூக உறவில் பகிர்ந்து கொள்ளும் வழக்கமே இல்லை. ஒரு சாதியின் இன்பமோ துன்பமோ மற்ற சாதியைப் பாதிக்காது. அறக்கட்டளைகளும் சாதிக் கட்டுப்பாட்டுக்குள்தான் அமைக்கப்பட்டுள்ளன. அறக்கட்டளைகள் தனித்தனி சாதிக்குத்தான்.. எல்லாச்சாதிக்கும் உரிய பொது அமைப்பு கிடையாது. இந்துக்களுக்குள் எல்லாருக்கும் நன்மையைப் பகிர்ந்து தரும் பொது சத்திரம் சாவடி கிடையாது. பிராமணர் அறக்கட்டளைகள் பிராமணருக்கு உண்டு. அதிலும் சித்பவப் பிராமணருக்கு மட்டும் சித்பவப் பிராமண அறக்கட்டளை இருக்கிறது; அதேபோல தேசஸ்தப் பிராமணருக்குத் தேசஸ்தப் பிராமண அறக்கட்டளை உள்ளது; காராதப் பிராமணருக்குக் காராதப்பிராமண அறக்கட்டளை இருக்கிறது. அதேபோல சரஸ்வதப் பிராமணருக்குத் தனி அறக்கட்டளை உள்ளது; கூடல் தேஷ்கார் பிராமணருக்கும் தனி அறக்கட்டளை உள்ளது. இப்படியே எல்லா சாதிகள் சாதி உட்பிரிவுகள் எதற்கும் அவரவர்க்கு

1 'செமிடிக் இனத்தவரின் மதம்' பக்கம் 269

மட்டுமேயான தனித்தனி அறக்கட்டளைகள்தாம் உள்ளன. பொதுவான இந்து மக்களுக்கான அறக்கட்டளை எனக்கிடையாது. எனவே வாழும் போது ஓர் இந்து இன்னொரு இந்துவுடன் எதையும் பகிர்ந்து கொள்வதில்லை; பிரிந்து பிரிந்தே செல்கின்றனர். இறப்பிலும் கூடப் பிரிந்து நிற்கின்றனர். சில இந்துக்கள் பிணங்களைப் புதைக்கத்தான் செய்வார்கள். சில இந்துக்கள் பிணங்களை எரிக்கத்தான் செய்வார்கள். புதைப்பதும் ஒரே இடுகாட்டில் அமையாது. அதுவும் தனித்தனி இடுகாட்டில்தான் நடக்கும். எரிப்பதும் அப்படியே தனித்தனியேதான் நடக்கும். ஒரே இடமான பகுதியைத் தனியாகப் பிரித்துக் கொள்வர்.

எனவே இந்துக்களிடையே சகோதரத்துவம் வளராததில் வியப்பேதும் மில்லை. வாழ்க்கையில் இன்பதுன்பங்களைப் பகிராத போது எப்படி உடன்பிறப்பு ஒட்டுறவு மலரும்?.

ஆனால், எல்லாக் கேள்விகளுக்கும் அடிப்படைக் கேள்வியாக இருப்பது, இந்துக்கள் தம் வாழ்க்கையின் இன்ப-துன்பங்களைப் பகிர்ந்துகொள்ள மாட்டேன் என்கிறார்களே, அது ஏன் என்பதுதான். அவனுடைய இந்து மதம் அவற்றைப் பகிர்ந்து கொள்ள வேண்டாம். என்று இந்துக்களுக்குச் சொல்வதிலேயேதான் என்பதைக் கூற வேண்டியது அவசியம் இல்லை. இம் முடிவு வியப்பைத் தரத் தேவையில்லை. இந்துமதம் எதைப் போதிக்கிறது? பிறருடன் கலந்து உண்ணக்கூடாது, கலப்பு மணம் கூடாது, பிறருடன் சேர்ந்திருக்கக்கூடாது எனப் போதிக்கிறது, அதன் போதனைகளின் சாரம் கூடாது என்பதாகவே இருந்துவருகிறது. நான் குறிப்பிட்ட நாணத்தக்க அவ்வுண்மைகள் அனைத்தும் இந்துக்களின் தனித்திருக்கக்கூடிய, ஒதுங்கிக் கொள்கிற தன்மையையே காட்டுகிறன்றன. இவை இந்துமதத் தத்துவத்தின் வெளிப்பாடுகளே தவிர வேறில்லை. இந்து மதத் தத்துவம்.சகோதரத்துவத்தின் நேர் எதிர் மறுப்பேயாகும்.

நீதியின் கோணத்தில் இந்து சமயத் தத்துவத்தைக் கொஞ்சம் பகுத்து ஆய்ந்தால், அது சுதந்திரத்திற்கும், சமத்துவத்திற்கும், சகோதரத்துவத்திற்கும் எதிராக இருப்பது வெட்ட வெளிச்சமாகத் தெரிகின்றது.

சகோதரத்துவமும் சுதந்திரமும் ஒன்றிலிருந்து மற்றறொன்று பெறக்கூடிய கொள்கைகள். சமத்துவமும் மனித நேயமும் அடிப்படையான ஆதார கொள்கைகள். இன்னும் ஆழ்ந்து நோக்கினால், சமத்துவமே அடிப்படையான கொள்கை என்றும் அதன் பிரதிபலிப்பே மனிதநேயம் என்றும் கூறலாம். ஆகவே எங்கே சமத்துவம் மறுக்கப் படுகின்றதோ, அங்கே பிற யாவும் மறுக்கப் படுவதாகவே

சமத்துவம் இல்லை என்பதைத் தெளிவுப்படுத்தியதே எனக்குப் போதுமானது. ஆனால் நான் செய்ததைப்போல இதுவரை ஆராயப்படாததால், இந்து சமயம் சகோதரத்துவத்தையும் சுதந்திரத்தையும் தவிர்ப்பது எனக் கருதவிட்டு விடுவது போதுமானது அல்ல என நினைக்கின்றேன்.

ஆக்டன் பிரபு ஆழ்ந்து நோக்கி உரைத்த ஒரு கருத்தாக இந்த ஆய்வைக் கடைசியாக அங்கு முடிக்க விரும்புகிறேன். வரலாற்றுச் சூழ்நிலைகளால் சமத்துவம் இன்மை வளர்ந்துள்ளது என அப் பெருமகனார் கூறுகிறார். ஒரு மத நம்பிக்கையாக அது ஒருபோதும் ஏற்கப்பட வில்லை. இந்து சமயத்தைக் கருத்தில் கொள்ளாமலேயே ஆக்டன் பிரபு இந்தக் கருத்தைத் தெரிவித்தார் என்பது தெளிவு. ஏற்றத் தாழ்வு என்பது இந்து சமயத்தில் ஏற்றுக் கொள்ளப்பட்ட சமய விதியாக புனிதமான நம்பிக்கையாகப் போதிக்கப்பட்டு வந்துள்து என்பதே உண்மை. அது அதிகார பூர்வமான சமயக்கொள்கை. அதனை வெளிப்படையாகச் சொல்ல எவரும் வெட்கப்படுவதில்லை. இந்துக்களுக்கு ஏற்றத் தாழ்வுகள் சமயக் கொள்கையாக வகுக்கப்பட்ட ஒரு வாழ்க்கை வழி. இந்து சமுதாயத்தில் அது ஒரு திருஅவதாரமாகிவிட்டது. இது இந்து சமயச் சிந்தனைகளையும் செயல்களையும் வடிவமைத்துவிட்டது. இந்து சமயத்தின் ஆன்மாவே ஏற்றத் தாழ்வுதான் எனலாம்.

இனி, பயன்பாட்டு நோக்கில் இந்து சமயத் தத்துவம் என்ன என்பது பற்றி ஆய்ந்து பார்க்கிறேன். இந்த கோணத்தில் சமயம் பற்றிய ஆய்வு நீண்டதாகவும் நுணுக்கமாகவும் இருக்க வேண்டும் என்பதில்லை. மில் சுட்டிக் காட்டியுள்ளவாறு, நீதிக்கும் பயன்பாட்டுக்கும் இடையில் பகைமை இருக்க வேண்டிய தேவை இல்லை. வேறுவகையில் சொல்ல வேண்டுமானால், தனி ஒருவருக்கு அநீதியாக இருப்பது சமுதாயத்திற்குப் பயனுள்ளதாகஇருக்கமுடியாது. இதையும் தவிர, சாதியின் விளைவுகள் நேருக்கு நேர் முறைத்துக் கொண்டுள்ளன என்பதையே நாம் காண்கிறோம்.

சாதி இலட்சியம் என்பது வெறும்இலட்சியம் மட்டும் அல்ல. அது செயற்படுத்தப்படுகின்றது. ஆகவே ஒருவகையில் உண்மையானது. நால்வகை சாதிமுறையைப் பொறுத்தவரை இந்துக்கள் " குறிக்கோளை அடைக; அடைந்ததை நிரந்தரமாக்கு" என்ற ஜெர்மானியத் தத்துவ ஞானி நீட்ஷேயின் கோட்பாட்டை அப்படியே பின்பற்றுபவர்கள்,. சிறந்த குறிக்கோள் என்பதன் தகுதியை அதன் விளைவுகளைக் கொண்டு சோதித்துப் பார்க்க வேண்டும். அனுபவமே அளவு கோலானால், நால்வகை சாதி தவறானதென மும்முறை சொல்ல வேண்டும். அது தயாரிப்பாளர் நோக்கில் மதிப்பிழந்தது; சிறந்த விநியோக அமைப்பு

நோக்கில் பார்த்தாலும் படுமோசமாகத் தோற்றுப் போனது. அது அமைப்பு முறையிலாவது சிறந்ததா என்று நோக்கினால், இந்துசமயம் ஓர் ஒருமித்தஅமைப்பாக ஏன் உருவாகவில்லை? அது சிறந்த தயாரிப்பு அமைப்பானால், ஆதிகால மனித நிலையிலிருந்து அதன் தொழில் நுணுக்கம் சற்றும் முன்னேற வில்லையே, அது ஏன்? அது சிறந்த விநியோக அமைப்பானால், சொத்துக்களில் மிகுந்த ஏற்றத் தாழ்வுகளும், பொருள்செல்வமும் பரம ஏழ்மையும் ஒரு சேர இருப்பது எப்படி?

இந்துச் சாதி அமைப்பால் சமுதாயத்துக்கு மிகுந்த பயனுள்ளதெனக் கூறும் இந்துக்கள் பலரை அறிவேன். ஆகவே இதனை ஒட்டு மொத்தமாக ஒதுக்கிவிட விரும்ப வில்லை. அவர்கள் இந்த முறையினை மனு புத்திசாலித் தனமாக உருவாக்கியதோடுப் புனிதமானதாகவும் ஆக்கியுள்ளார் எனப் பாராட்டுகின்றனர். சாதியைத் தனித் தனியாக எடுத்துக்கொண்டு தனிக்கோணத்தில் சாதியைப் பார்ப்பதனாலேயே இத்தகைய நோக்கு உருவாகிறது. அவற்றை ஒட்டு மொத்தமாக எடுத்துக்கொள்ள வேண்டும், சாதியால் பெறப்படுகின்ற சமுதாயப் பயன் அல்லது பயனின்மையைச் சாதியின் தனித்தனித் தன்மைகளை ஒன்றாகச் சேர்த்துப் பார்த்துத்தான் கணிக்க வேண்டும். சிக்கலை இவ்வகையில் எதிர்கொண்டால், பின்வரும் முடிவுகள் புலப்படும்:

(1) தொழிலாளரைச் சாதி பிரிக்கிறது.

(2) சாதி, வேலையில் ஈடுபாடு கொள்வதிலிருந்து பிரிந்து வருகின்றது.

(3) சாதி, உடலுழைப்பில் இருந்து புத்திசாலிதனத்தைப் பிரிக்கின்றது.

(4) சாதி, அடிப்படை ஆர்வத்தை வளர்த்துக் கொள்வதைத் தடுத்து ஊக்கம் அற்றவனாக்கிவிடுகின்றது.

(5) சாதி, ஒருவரோடொருவர் இணைந்து பழகுவதைத் தடுக்கின்றது. சாதி முறை தொழிலை மட்டும் பிரிப்பதாக இல்லை; அது தொழிலாளரையும் பிரித்து விடுகின்றது. சமூகத்துக்குத் தொழில் பாகுபாடு தேவைதான் . ஆனால் எந்த நாகரிகச் சமூகத்திலும் தொழில் பகுப்போடு, தொழிலாளர்களைச் சேரமுடியாதபடி பிரிவுகளாக, இயற்கைக்குப் புறம்பாகப் பிரிப்பதைக்காண முடியாது. சாதிமுறை தொழிலாளர் பிரிவு மட்டும் அல்ல அது தொழிற் பகுப்பில் இருந்து மாறுபட்டது. சாதி முறை ஒன்றுக்குமேல் ஒன்றாய் அடுக்கு அடுக்காக உயர்வு தாழ்வுகளை வகுக்கும் தொழிலாளர்களின் அமைப்புமுறை, வேறெந்த நாட்டிலும் தொழில் பகுப்புடன் தொழிலாளர்களிடையில் வித்தியாசங்கள் இல்லை. சாதி முறைக்கு எதிராக மூன்றாவதாக இன்னொரு விமர்சனமும் உள்ளது. இந்த தொழில் பகுப்பு தானாக வந்ததல்ல; பிரிவுகள் இயல்பான பணி ஈடுபாட்டால் வந்தவையும் அல்ல.

தேர்ந்தெடுத்துக் கொண்டு செய்யும் அளவிற்கு உருவாக்க ஒவ்வொருவரின் தனித்திறமையையும் சமூகத் திறனையும் வளர்க்க வேண்டும். ஒருவர் பெற்றுள்ள அடிப்படைப் பயிற்சியைப் பொறுத்ததாக இல்லாமல் பெற்றோரின் சமூக அந்தஸ்தை வைத்தே ஒவ்வொருவருக்கும் வேலை தரும் வாய்ப்புள்ளதால் சாதி முறையில் அடிப்படைத் திறன் கொள்கையை மீறுகிறார்கள். இன்னொரு நோக்கில் பார்த்தால், சாதி முறையின் விளைவான இந்த அடுக்கு முறை ஆபத்தானது ஆகிறது. இதனால் தொழில் எப்போதும் நிலையாய் நிற்பதில்லை. அது விரைவான, தலைகீழ் நிலையை அடைகிறது. இத்தகைய மாற்றங்களால் எவரும் தம் தொழிலை எளிதில் மாற்றிக் கொள்ளும் நிலையில் இருக்க வேண்டும். மாறுகின்ற சூழ்நிலைகளுக்குத் தக்கவாறு மாற்றிக் கொள்ளும் நிலையில் இல்லாவிட்டால் அவனால் வயிற்றைக் கழுவ முடியாது. சாதி அமைப்பில் ஓர் இந்து நிறைய ஆட்கள் தேவைப்படுகின்ற வேலைக்கு மாற்றிக் கொள்ள நினைத்தாலும் அந்தத் தொழில் அல்லது அந்த வேலை தன்னுடைய பரம்பரைத் தொழிலாக இல்லாவிட்டால் அதைச் செய்யமாட்டார். ஓர் இந்து பட்டினி கிடந்தாலும் கிடப்பாரே ஒழிய தன் சாதிக்கு உரியது அல்லாத தொழிலைச் செய்ய மாட்டார். இதற்கு மூலகாரணம் சாதி முறை தான். ஒருவர் தமது தொழிலை மாற்றி கொள்ள முடியாதபடி தடுக்கப்படுவதால் பெரும்பான்மை வேலை இன்மைக்குக் காரணம் ஆகிறது. சாதிமுறை தொழில் பகுப்பு முறை என்ற வகையில் இன்னொரு கொடிய குறைபாட்டிற்கு உரியதாகிறது. சாதி அமைப்பால் வரும் தொழில் பகுப்பு விரும்பி மேற்கொள்ளும் பகுப்பல்ல. தனிபட்டவரின் விருப்பம், தனிப்பட்டவரின் தேர்வு ஆகியவற்றுக்கு அதில் இடமில்லை. அது முன்கூட்டியே நிர்ணயிக்கப்பட்டுவிட்ட ஒரு பிடிவாத சித்தாந்தம். தொழில்களில் ஈடுபட்டுள்ளோரைத் தொழில்கள் ஈர்ப்பதில்லை. இந்த நிலைதான், தொழில் முறையின் காரணமாக ஏற்படும் ஏழ்மையையும் இன்னல்களையும் விட சக்தி வாய்ந்ததாக இருக்கிறது எனச் சமூகத் திறனில் காட்டும் தயவு தாட்சண்யத்தால் ஏற்க வேண்டிய நிலையில் இருக்கிறோம். இத்தகைய தொழில்கள் எப்போதும் வெறுப்பையும், நம்பிக்கையின்மையையும், அதைத்துறந்து விட வேண்டிய சூழ்நிலையையும் உருவாக்குகின்றது. இந்தியாவில் இந்துக்கள் இழிவான வேலைகள் என கருதப்படும் வேலைகளைச் செய்வோர் அவற்றை வெறுப்புடனேயே செய்கின்றனர், அத்தகைய வேலைகளைச் செய்வதிலிருந்து அவர்கள் நழுவவும் தவிர்க்கவும் விரும்புவதற்கு, இந்துக்கள் அந்தத் தொழில்களைச் செய்வோரை அவமரியாதையோடு நடத்தியதும், இழிவு படுத்தியதும்தான் காரணம்.

இதனால் ஏற்பட்ட இரண்டாவது தீங்கு என்னவென்றால், செய்யும்

வேலைக்குப் புத்திசாலித்தனம் தொடர்பில்லாதிருப்பதும், உழைப்பை உதாசீனப்படுத்துவதாகச் செய்திருப்பதும் ஆகும். பிராமணன் தன் அறிவை வளர்த்துக் கொள்ள அனுமதித்துள்ள சாதிக் கோட்பாடு உழைக்க அனுமதிக்கவில்லை. அதுமட்டுமல்ல, உழைப்பை இழிவாகக் கருதவும் கற்பித்துள்ளது. உழைக்க வேண்டியவனாகிற சூத்திரன் தன் அறிவை வளர்த்துகொள்ள அனுமதிப்பதில்லை. இதனால் ஏற்படும் பாதகமான பின்விளைவுகளைத் திரு. ஆர்.சி. தத் தெளிவாக விளக்கியுள்ளார்.[1]

சாதி மனிதனைச் சக்தி அற்றவனாக்கி விடுகின்றது. இது மலடாக்கும் ஒரு முறை. கல்வி, செல்வம், உழைப்பு ஆகிய யாவும் ஒவ்வொருவரும் சுதந்திரமான முழு மனித நிலையடையத் தேவையானவை. செல்வமும் உழைப்பும் இல்லாத கல்வி மட்டும் களர்தான். உழைப்பும் கல்வியும், அற்ற செல்வம் மிருகத் தனமானது. கல்வியும் செல்வமும் ஒன்று மற்றதற்கு அவசியம். அவை மனித வளர்ச்சிக்கு அவசியமானவை.

பிராமணன் அறிவு வளர்க்க வேண்டும், க்ஷத்திரியன் ஆயுதங்களை ஏந்த வேண்டும், வைசியன் வாணிபம் செய்ய, வேண்டும், சூத்திரன் உழைக்க வேண்டும் என ஒருவரை ஒருவர் சார்ந்திருக்கும் கோட்பாடு குடும்பத்தில் உள்ளது. பிற மூன்று வகுப்பினர் உதவ இருக்கும் போது சூத்திரன் எதற்காகப் பொருளைச் சேர்க்க வேண்டும் என வினவப்படுகின்றது. படிக்கவோ எழுதவோ நேரும் பொழுது, பிராமணனிடம் போகலாம் என்கிற நிலையில் சூத்திரன் படிக்கச் சிரமப்பட வேண்டுமா? க்ஷத்திரியன் அவனைக் காக்க இருக்கும் பொழுது சூத்திரன் தானே ஆயுதங்களை ஏந்தத் தேவையா? நான்கு வருணக் கோட்பாடு இந்த வகையில் இப்படி விளக்கப்படும்போது, சூத்திரன் மற்ற மூன்று வருணத்தாரின் புரவலர்களாகவும் இருப்பதாக சொல்லலாம். இந்த விளக்கப்படிப் பார்த்தால் சிக்கலே இல்லாத அழகான முறையாகவே தெரிகிறது. நால்வருண முறைக் கொள்கையில் பொதிந்துள்ள சரியான கருத்து இதுதான் எனக் கொண்டால், இம்முறை சரியானது, கேடு விளைவிக்காதது என்று தோன்றுகிறது. ஆனால் பிராமணர்களோ, க்ஷத்திரியர்களோ அல்லது வைசியர்களோ அவர்களின் கடமைகளான கற்கவும், வாணிபம் செய்யவும், சிறந்த போர்வீரர்களாக இருக்கும் தத்தம் கடமைகளிலிருந்து தவறினால் என்னவாகும்? ஒருவேளை அவர்கள் தம் கடமைகளைச் செய்தாலும், சூத்திரனைக் காப்பாற்றத் தவறினாலோ அல்லது அவரவர் கடமைகளைச் செய்யாமல் விட்டாலோ என்னவாகும்? மூன்று வகுப்பினரும், மூவகை வருணத்தாரும் சூத்திரனுக்கு நியாயமாக உதவ

1. மேற்கோள் கையெழுத்துப்படியில் இல்லை

— பதிப்பாசிரியர்கள்.

மறுத்தாலோ அல்லது மூவரும் ஒன்றாகக்கூடி அவனை அழுத்தி வைத்தாலோ என்னாவது? சூத்திரனின் சுதந்திரத்தைக் காப்பது யார்? அல்லது, க்ஷத்திரியன், வைசியன் ஆகியோரின் அறியாமையை பிராமணன் தனக்குச் சாதகமாக்கிக் கொண்டால் என்னாவது? இந்த நிலையில் ஒரு வகுப்பினர் மற்ற வகுப்பாரைச் சார்ந்திருப்பது தவிர்க்க முடியாததாகிறது. ஒரு வகுப்பினர் இன்னொரு வகுப்பாரைச் சார்ந்திருப்பதும் சில சமயங்களில் அனுமதிக்கக்கூடியதுதான். ஆனால் ஒருவன் தன்னுடைய அத்தியாவசியத் தேவைகளுக்கும் இன்னொருவனைச் சார்ந்திருக்க வேண்டுமா? கல்வி ஒவ்வொருவரும் பெற வேண்டும். ஒவ்வொருவரும் தன்னைக் காத்துக் கொள்ளும் திறனைப்பெற வேண்டும். இவை மிகவும் அவசியமான தேவைகள். படிக்காத, ஆயுதம் அற்ற ஒருவனுக்குப் படித்த, ஆயுதம் கொண்ட பக்கத்து வீட்டான் எப்படி உதவ முடியும்? இந்தக் கருத்து முழுக்க முழுக்க அறிவுக்கு ஒவ்வாதது. நால் வருணக் கொள்கையை ஆதரிப்போர் இந்தக் கொள்கையைப் பற்றியெல்லாம் கவலைப் படுவதாகத் தெரியவில்லை. ஆனால் இந்தகேள்விகள் ஒன்றுக்கொன்று நெருங்கிய தொடர்புள்ளவையே. நால்வருண முறைக் கொள்கை பல வகுப்புகளுக்கு இடையேயுள்ள தொடர்பு கோட்பாட்டில் அதாவது சார்ந்துள்ளோர், பாதுகாவலர் உறவு கோட்பாட்டில் அமைந்தது என்று கொண்டாலும், பாதுகாவலர் செய்யும் தவறுகளில் இருந்து சார்ந்துள்ளவர் தன்னைப் பாதுகாத்துக் கொள்ள வழி வகை ஏதும் செய்யப்பட வில்லை என்பதை ஒத்துக் கொள்ள வேண்டும். நால் வருணக் கொள்கையில் பொதிந்துள்ள உண்மைக் கருத்து சார்ந்துள்ளோருக்கும் - பாதுகாவலர்களுக்கும் இடையே உள்ள உறவை அடிப்படையாகக் கொண்டது என்று கூறப்பட்டாலும் நடைமுறையில் அது ஆண்டான் - அடிமை உறவையே குறிக்கிறது என்பதில் ஐயமேதும்இல்லை. பிராமணர்கள், க்ஷத்திரியர்கள், வைசியர்கள் ஆகிய மூவகுப்பினருக்கு இடையே உள்ள உறவு முறைகள் சுமுகமாக இல்லாத போதிலும் ஒருவருக்கொருவர், சரிப்படுத்திக் கொண்டு செயல்படுகிறார்கள். பிராமணர்கள் க்ஷத்திரியனைப் பாராட்டி, அவனைக் கொண்டு தாமும் வாழ வைசியனை வாழவிட்டார்கள். மூவருமே சூத்திரனை அமுக்கி வைக்க இசைந்து போனார்கள். அவன் சொத்து சேர்க்க அனுமதிக்கப்படவில்லை. அப்புறச் சேர்த்தால் அவன் மூன்று வகுப்பினரிடமிருந்து விடுபட்டுவிடுவானே!

அவன் அறிவு பெற முடியாமல் தடுக்கப்பட்டான். பெற்றால், அவன் தமது உரிமைகளை விழிப்போடு கவனித்துக் கொள்வானே! அவன் ஆயுதங்களை ஏந்தாமல் தடுக்கப்பட்டான். அவன் ஆயுதமேந்தினால் அந்த மூவரின் ஆதிக்கத்தை எதிர்க்கத் தொடங்கிவிடுவான். இப்படித்தான் சூத்திரர்கள் மூவருணத்தாரால் நடத்தப்பட்டனர்.

என்பதற்கு மனு நீதி சான்றாக உள்ளது. சமூக உரிமைகளைப் பொறுத்தவரையில் மனு நீதியைவிட இழிவான விதிகளைக் கூறும் நூல் வேறு எதுவும் இல்லை. சமூக அநீதியின் எந்த உதாரணமும் எங்கும் எதுவும் இதற்கு முன் நிற்க முடியாது. இத்தகைய சமூகக் கொடுமைகளுக்கு ஆட்படுத்தப்பட்ட பெருங் கூட்டமான மக்கள் ஏன் இதைப்பொறுத்துக் கொண்டனர்?

உலகின் பிற நாடுகளில் சமூகப் புரட்சிகள் ஏற்பட்டுள்ளன. இந்தியாவில் சமூகப் புரட்சிகள் ஏற்படாமல் போனது ஏன், என்ற வினா என்னைத் தொடர்ந்து வதைத்து வந்திருக்கிறது. இதற்கு நான் தரக்கூடிய விடை ஒன்றே ஒன்றுதான் உண்டு. அது இந்துக்களில் கீழ் வகுப்பினர் இந்தப் பாழாய்ப்போன நால்வருண முறையினால் நேரடியாகச் செயலில் இறங்க முடியாதவாறு முடமாக்கப்பட்டார்கள் என்பதுதான். அவர்கள் ஆயுதம் ஏந்த முடியாது. ஆயுதம் இன்றிக் கலகம் செய்ய முடியாது. அவர்கள் யாவரும் உழவர்கள். இன்னும் சொல்லப் போனால் உழவராக ஒதுக்கப்பட்டவர்கள். அவர்களின் ஏர்களின் இரும்பு முனைகளை வாள்களாக்க அனுமதிக்கப்பட்டார்கள். அவர்களிடம் பிச்சுவா இல்லை. ஆகவே ஏர்களை எடுத்துக்கொண்ட ஒவ்வொருவரும் ஏருடனே ஒன்றிப்போனார்கள். நால்வருண முறையால் அவர்கள் கல்வி கற்க முடியவில்லை, அவர்களால் சிந்திக்கவோ, விடுபடும் வழியை அறியவோ முடியவில்லை. கீழ் நிலையிலேயே கிடக்கும்படி அவர்கள் தண்டிக்கப்பட்டனர். மீளும் வழியேதும் அறியாமல், மீளும் வழிமுறை இல்லாமல், அவர்கள் நிரந்தர அடிமை வேலை செய்யும் நிலைக்கு இசைந்துபோய், அதையே தம் மீளமுடியாத தலைவிதியாகவும் ஏற்றனர். ஐரோப்பாவிலும் வலியவர்கள் எளியவர்களைச் சுரண்டியுள்ளனர்; ஏய்த்திருக்கின்றனர் என்பது உண்மைதான். ஆனால் வெட்கித் தலைகுனியக்கூடிய அளவுக்கு இந்தியாவில் இந்துக்கள் ஏய்த்திருப்பது போல, எதுவும் செய்ய முடியாத அளவிற்கு ஐரோப்பாவில் எளியவர்களைத் திட்டமிட்டுச் செயலற்றவர்களாக ஆக்கவில்லை. இந்தியாவில் ஒருபோதும் நடந்திராத அளவில் ஐரோப்பாவில் எளியோர், வலியோருக்கிடைய உக்கிரமான சமூகப் போர்கள் நடந்துள்ளன. ஐரோப்பாவில் எளியோரிடம் இராணுவப் பணியில் சேரும் சுதந்திரத்தின் காரணமாக வந்த உடல்பலம் ஆயுதமாக இருந்தது. அவர்கள் பெற்றிருந்த வாக்குரிமை அரசியல் ஆயுதமாக இருந்தது; அவர்கள் பெற்றிருந்த கல்வி ஒழுக்க ஆயுதமாக இருந்தது. ஐரோப்பாவில் விடுதலைக்கான இந்த மூன்று ஆயுதங்களையும் நலிந்தவர்களிடமிருந்து வலியவர்கள் ஒருபோதும் பறித்துக் கொள்ளவில்லை. இந்த ஆயுதங்கள் அனைத்தும் இந்தியாவில் நால்வருண முறையால் மக்களுக்கு மறுக்கப்பட்டது. நால்வருணச் சமூக அமைப்பு முறையைவிடக் கடைத்தரமான சமூக அமைப்பு இருக்கவே முடியாது. இந்த அமைப்பு

மக்கள் பயனுள்ள செயல்களைச் செய்ய முடியாதவாறு அவர்களை சாகடித்து, முடமாக்கி, செயலிழக்கச் செய்யும் அமைப்பு. இதில் மிகையே இல்லை. இதற்கு வரலாற்றில் நிறைய சான்றுகள் உள்ளன. இந்திய வரலாற்றில் ஒரே ஒரு காலம்தான். சுதந்திரமும் மேன்மையும் புகழ் மிக்கதாகவும் இருந்தது. அதுதான் மௌரியப் பேரரசுக் காலம். பிற எல்லாக் காலங்களிலும் நாட்டைத் தோல்வியும் இருளும் சூழ்ந்தன. ஆனால் மௌரியர் காலத்தில் நால்வருண முறை அடியோடு ஒழிக்கப்பட்டது. அப்போது மக்களில் பெரும்பகுதியினரான சூத்திரர்கள் தனிநிலை அடைந்து நாட்டை ஆள்பவர்கள் ஆயினர். நால்வருண முறை ஓங்கியிருந்த காலம் நாட்டின் பெரும்பான்மையினர் சீரழிந்து தோல்வியும் இருளும் சூழ்ந்த காலமாகும்.

சாதி ஒருங்கிணைந்து வாழ்வதைத் தடுக்கிறது. சமுதாயம், பேராபத்திலிருந்து தன்னைப் பாதுகாத்து கொள்ள தனது எல்லாத் திறன்களையும் ஒன்று திரட்ட வேண்டிய சந்தர்ப்பங்கள் வரும் அத்தகைய ஆபத்துக்களைப் போரைப் போல் எதிர்கொள்ளச் சமுதாயம் தன் எல்லாத் திறன்களையும் படையாகத் திரட்டவேண்டும். ஒவ்வொருவரும் போரிட வேண்டும். ஒவ்வொருவரும் போர்வீரர் ஆகவேண்டும், சாதி முறையில் இது முடியுமா? இயலாது என்பது வெளிப்படை இந்திய வரலாறு நெடுகிலும் நாடு கண்டுள்ள தோல்விக்குச் சாதியே காரணம். சாதி எல்லாரும் ஒன்று கூடுவதைத் தடுத்தது. அனைவரும் ஒருவரோடொருவர் இணைந்திருந்த சந்தர்ப்பம் மிகக் குறைவே. க்ஷத்திரியர்கள் மட்டுமே போரிட வேண்டும் என்று எதிர் பார்க்கப்பட்டனர். பிராமணரும் வைசியரும் போருக்கு தயாராக இல்லை. நாட்டின் மிகப் பெரும்பான்மை மக்களான சூத்திரர்களுக்கோ படைக்கலங்கள் இல்லை. இதன் விளைவு சிறுவகுப்பினரான க்ஷத்திரியர்கள் அயல்நாட்டு எதிரிகளால் வீழ்த்தப்பட்டு முழுநாடும் அவர்கள் காலடியில் விழவும் நேர்ந்தது. அதனால் எதிர்த்து நிற்க முடியாமல் போயிற்று. எதிர்த்து நிற்கும் திறன் இல்லை. இந்தியாவில் நடந்துள்ள போர்கள் பெரும்பாலும் தனிதனிச் சண்டைகள், அல்லது படையெடுப்புகள்தான். இந்தப்போர்களில் க்ஷத்திரியர்கள் வீழ்ந்ததும் அனைத்தும் வீழ்ந்தன, ஏன்? எல்லாரும் ஒன்று திரண்டு போரிடாததே இதற்கு காரணம். இந்தக் கொள்கை மக்களின் மனப்போக்கிலேயே ஊறிவிட்டது.

இந்த முடிவுகள் சரியாக இருக்குமாயின், சமூகத்தைச் சிதைத்து, தொழில் செய்வதற்குரிய ஆர்வத்தை நீக்கி, தொழிலுக்கும் அறிவுக்கும் தொடர்பில்லாமல் செய்து, வாழ்வின் அத்தியாவசியமான விருப்பங்களை அடைவதற்கு மனிதருக்குரிய உரிமைகளைப் பறித்து, ஆபத்துக் காலத்தில் ஒன்றுக்கூடித் தமது பலத்தைப்

கூறுபோடும் ஒரு தத்துவம் சமூகப் பயன்பாட்டுத் தேர்வுக்கு உரியது என்று எப்படி நாம் கூற முடியும்.

## V

ஆகவே, இந்து மதத் தத்துவம் சமூகப் பயன் நோக்கத்தையும் நிறைவு செய்யவில்லை; தனிமனிதனின் நீதிக்கும் துணை புரியவில்லை என்றாகிறது. என் ஆய்வின் முடிவு பலருக்கு வியப்புதரும் வகையில் முரண்பாடுள்ளதாகத் தோன்றலாம். மதத் தத்துவம் பற்றிய எனது முடிவு முரண்பாடு உள்ளதென்றால் அதற்குக் காரணம் என் ஆய்விலேயே ஏதோ பிழை இருக்கலாம் என்றும் சிலர் கூறலாம். நான் இந்த மறுப்பை எதிர்கொள்கிறேன். என் ஆய்வை ஏற்க மறுப்போருக்கு நான் கூறுவதெல்லாம், அவர்கள் இந்து மதத் தத்துவத்தின் மையம் என்ன என்பதில் அவர்கள் சரியான கருத்தைக் கொள்ளவில்லை என்பதாலேயே என் ஆய்வை வித்தியாசமானதாகக் காண்கிறார்கள் என்பேன். இல்லையெனில், அவர்கள் என் முடிவுகளைக் கண்டு அதிர்ச்சி அடையமாட்டார்கள்.

இது மிக முக்கியமானது என்பதால் இதனை மேலும் விளக்கவேண்டும். இனி நான் விளக்க இருக்கின்ற சமயப்புரட்சி மனித சமுதாயத்தைப் பாதுகாக்கும் இரண்டு புனித கொள்கைகளைக் காட்டக் கூடியது என்பதை நினைவில் கொள்ள வேண்டும். அவற்றில் சமுதாயத்தை மையமாகக் கொண்டது ஒன்று. மனிதனை மையமாகக் கொண்டது இன்னொன்று. இதனை நினைவுகூர்தல் வேண்டும். அதே ஆய்வு முன்னைய கொள்கைக்கு ஏற்ற சோதனை எது பயனளிக்கும் சிறந்த, நல்ல ஒழுக்கத்தத்துவம் என்பதும், பின்னதற்குச் சோதனை நீதியும்தான் என்பதை காட்டுகிறது. இப்போது இந்து மத தத்துவத்தில் பயன் சோதனை அல்லது நீதிச் சோதனை ஆகிய இரண்டிற்குமே சரியானவிடை கிடைக்காத்தற்குக் காரணம் மனித சமுதாயத்தின் புனித ஆளுகைக்கான இந்து மதக் கொள்கை ஒரு தனி வகையைச் சேர்ந்ததாக இருப்பதுதான்; இக்கொள்கையில் தனி மனிதன் மையமாக இல்லை; சமுதாயமும் மையமாக இல்லை; மாறாக பிராமணர்கள் எனப்படும் மாமனிதர்களின் வகுப்பு தான் மையமாக உள்ளது; இந்த முக்கியமான உண்மையை உணரக்கூடியவர்கள், ஏன் இந்த மதத் தத்துவம், தனி மனித நீதி, சமுதாயப் பயன் ஆகியவற்றின் அடிப்படையில் தோற்றுவிக்கப்படவில்லை என்பதை அறிவார்கள். இந்து மதத் தத்துவம் அடியோடு மாறுபட்ட கொள்கை அடிப்படையில் தோற்றுவிக்கப்பட்டுள்ளது. எது சரி, எது நல்லது என்பதற்கு இந்து மதத் தத்துவம் தரும் விடை குறிப்பிடத்தக்கது. ஒரு செயல் சரியானதாகவும் நல்லதாகவும் இருக்க வேண்டுமானால் அது மாமனித வகுப்புக்கு, அதாவது, பிராமணர் நலனுக்கு உதவும் செயலாக

இருக்கவேண்டும் என்று கூறுகிறது. மனு யார் மாமனிதர்கள் என்பதை அழுத்தம் திருத்தமாக ஆரவாரத் தொனியிலேயே தெரிவிக்கிறார். அதுமட்டுமல்ல, அந்த மாமனிதர் நலனுக்குப் பயன்படக் கூடியது எதுவோ அதுவே சரியானது; நல்லது என்றும் கூறுகிறார். மனுவின் கூற்றுக்களைப் பார்ப்போம்:

10:3."பிறப்பினால் உயர்ந்த இடத்திலிருந்து தோன்றியதாலும்,உயர்ந்த குலத்தாலும், வேதங்களைப் பிழையறக் கற்றுணர்ந்த அறிவினாலும், பூணூல் தரித்துள்ள சிறப்பினாலும் பிராமணன் அனைத்து வருணத்தாருக்கும் தலைவனாக உள்ளான்."

தனக்கு ஆதரவான காரணங்களைத் தொடர்ச்சியாகக் கூறுகையில் தனக்கே உரிய வகையில் பின்வருவனவற்றைக் கூறுகிறார்:

1:93. "பிராமணன் பிரஜாபதியின் முகத்திலிருந்து தோன்றியவ னாதலாலும், முதலாவதாகத் தோன்றியவனாதலாலும் வேதங்களைப் பெற்றிருப்பதனாலும் படைக்கப்பட்ட யாவற்றினும் தலைவனாகும் உரிமையைப் பெற்றிருக்கின்றான்."

1:94."தேவர்களுக்கு அவிசொரிந்து மகிழ்விக்கவும், பிதுரர்களுக்குச் சிரார்த்தம் செய்யவும் இந்த உலகத்தை அழிவிலிருந்து காக்கவும் தக்கவனாகப் பிராமணனைச் சுயம்புவான பிரம்மா தமது முகத்தினின்று முன்னதாகப் படைத்தார்."

1:95. "எவனுடைய மந்திரகோஷங்களையும், அவிப்பாகத்தையும், தேவ, பிதுரர்கள் இடையறாது உண்டு மகிழ நேர்கிறதோ அந்தப் பிறப்புக்குரியவன் படைப்பில் சிறந்தவனாகின்றான்."

1:96. "படைப்புப் பொருள்களில் உயிருடையவை சிறந்தவை, உயிருள்ளவற்றுள் அறிவுள்ளவை சிறந்தவை, அறிவுள்ளவற்றிலும் மானுடர் சிறந்தவர்கள், மானுடருள் பிராமணர் சிறந்து விளங்குகின்றனர்."

மனு கூறுகின்ற காரணங்களோடு, தேவர்களுக்கும் பிதுரர்களுக்கும் அவிர்பாகத்தை அளிப்பதற்குரியவனாகக் கடவுளின் வாயிலிருந்து பிராமணன் பிறந்திருப்பதால் அவன் முதல் வரிசையில் வைக்கப்பட்டிருக்கின்றான். இதற்கு மேலும் மனு, பிராமணனின் உயர்வுக்கு இன்னொரு காரணத்தையும் கூறுகின்றார். அவர் கூறுவதாவது:.

1:98. "ஒரு பிராமணனின் பிறப்பைப் புனித சட்டத்தின் (வேதத்தின்) நிலையான அவதாரம் எனலாம். ஏனென்றால் புனித சட்டத்தை (நிறைவேற்றுவதற்காகவே) அவன் பிறக்கிறான், பிரம்மத்துடன் (கடவுளுடன்) ஒன்றிக் கலந்துவிடுகிறான்."

1:99. "உலகப் படைப்புகளில் பிராமணன் உயர்ந்த பிறவியாகப் பிறந்து பிற உயிர்கள் அனைத்துக்கும் தலைவனாக இருப்பதற்கு அவன் சட்டம் என்னும் கருவூலத்தைக் காப்பவனாக இருப்பதே காரணம்."

மனு, பின்வருமாறு கூறி முடிக்கின்றார் :

1:101. "பிராமணன் பிறரிடமிருந்து பெற்ற போதிலும் அவனுடைய உணவையே அவன் பெறுவதாகவும், அவனுடைய உடையையே அவன் உடுத்துவதாகவும், அவனுடைய பொருள்களையே அவன் அடைவதாகவும் உள்ளது. ஏனையோர் பிராமணனிடமிருந்து இவற்றைப் பெற்றுத் துய்ப்போராக உள்ளனர்."

இதற்குக் காரணம் மனுவின் கூற்றுப்படி,

2:100. "பிறவியின் மேன்மையினால் படைப்புலகில் காணப்படும் பொருள்கள் அனைத்தையும் தனக்குரிய செல்வமாகப் பெறுவதற்குப் பிராமணன் உரிமை பெற்றிருக்கின்றான்."

மனு வழிபடுத்துவதாவது,

7:37. "அரசன் காலையில் துயிலெழுந்து, மூன்று வேதங்களையும் அறநூல்களையும் ஆய்ந்துணர்ந்த பிராமணரை வணங்கி வழிபட்டு, அவர் அறிவுரையைப் பின்பற்றி நடப்பானாக."

7:38. "வேதங்களைக் கற்றுணர்ந்தவராகவும் தூயவராகவும் உள்ள முதிய பிராமணரை மன்னன் நாள்தோறும் வழிபடுவானாக."

9:313. "பொக்கிஷம் கொள்ளை போனாலும் அந்தணர்க்கு இடையூறு செய்யற்க. அவர்களின் வருத்தம், கோபம் இவை மன்னர் சேனையோடும் ஊர்தியோடும் அழியச் செய்வன".

முடிவாக மனு கூறுவதாவது.

11:35. "பிராமணனே இந்த உலகைப் படைத்தவனென இதன் வாயிலாக அறிவிக்கப்படுகிறது. தண்டிப்பவனாகவும், ஆசிரியனாகவும் இருந்து எல்லா உயிர்களுக்கும் புரவலனாக விளங்குபவனாதலால் அவனை எடுத்தெறிந்து பேசுதலும் பழித்துரைத்தலும் ஆகாது."

மாமனிதர் கோட்பாட்டையும் எது சரியானது, எது நல்லது என்ற கோட்பாட்டையும் நிறைவு செய்து முடிப்பதற்குப் பின்வரும் இரு பகுதிகளை மனு நீதியிலிருந்து தருகின்றேன்.

10:122. "பிழைப்புக்காகவும், மறுமை நலத்திற்காகவும் பிராமணர்தம் பணியேற்று நடத்தல் சூத்திரனின் கடனாம். இன்னாருடைய ஏவலன் என்ற புகழே அவனுடைய மேன்மை".

10:123. "பிராமணரைப் பேணிப்பணி செய்தலே சூத்திரர்க்கு வேறு

எத்தொழிலைக் காட்டிலும் மேலானது; மற்றவை அனைத்தும் பயனற்றவை".

மேலும் மனு கூறுவதாவது,

10:129. "சூத்திரன் பொருளீட்டத் தக்கவனேயாயினும் அவன் தனது தேவைக்கு மேலாகப் பொருள் சேர்க்கக் கூடாது. அடிமை போன்ற அவன், பொருள் சேர்த்துப் பணக்காரனாக மாறினால் தற்பெருமைக்குரியனாவான்; தனது அகங்காரத்தால் அல்லது அலட்சியத்தால் பிராமணனுக்கு அவன் துன்பம் இழைப்பான்".

மனு தர்மத்திலிருந்து எடுத்துக் காட்டப்பட்ட இந்தப் பகுதிகள் இந்து மதத்தத்துவத்தின் மூலக்கூறுகளையும் அதன் இதயத்தையும் காட்டுகின்றன. இந்து மதம் மாமனிதனின் வேதம். அது அந்த மாமனிதனுக்கு எது சரியானதோ அதுமட்டுமே அறநெறிப்படி சரியானது. அறநெறிப்படி நல்லது என்பதைக் காட்டுகிறது.

இந்தத் தத்துவத்திற்கு இணையான தத்துவம் வேறு ஏதாவது இருக்கிறதா? அதைக் குறிப்பிட்டுக் கூற வெறுக்கிறேன் அது எல்லோரும் அறிந்ததே. இந்து மதத் தத்துவத்திற்கு இணையாக நீட்ஷேயின் தத்துவம் இருப்பதைக் காணலாம். இப்படிக் கூறுவதற்காக இந்துக்கள் கோபப்படலாம். அது எதிர்பார்க்கக் கூடியதே. காரணம், நீட்ஷேயின் தத்துவம் வெகுவாக வெறுக்கப்படுவது. அது ஒருபோதும் வேரூன்றவில்லை.அவரே கூறியிருப்பது போலவே, சிலசமயங்களில் உயர்குடிமக்களாட்சி, பெருநிலக்கிழார்களின் ஆட்சி ஆகியவற்றிற்குரிய தத்துவஞானி என்னும் மறுப்புக்கும் சில சமயங்களில் மற்றவர்களின் ஏளனத்திற்கும், இகழ்ச்சியுரைக்கும், சிலபோது மனிதாபிமானமற்றவன் என்ற எதிர்ப்புக்கும் ஆளாகியுள்ளார். நீட்ஷேயின் தத்துவங்கள் அதிகாரவிருப்பத்திற்கும், வன்முறை, ஆன்மீக மதிப்புகளை மறுத்தல், மனித நிலையைக்கடந்த மாமனிதர்களின் நலன்களுக்காகப் பொது மக்களை இழிவுபடுத்துதல், கொத்தடிமைப்படுத்துதல், பலியாக்குதல் ஆகிய விருப்பங்களுக்கும் எடுத்துக்காட்டாக அமைந்தவை. அவரது தத்துவத்தின் இத்தகைய குறைபாடுகள் காரணமாக அவருடைய தலைமுறைக் காலத்து மக்களிடையே அதற்கு வெறுப்பும் அதனைக் கண்டு மக்களிடையே அச்சமும் நிலவியது. அவர் முழுமையாக வெறுக்கப்படாத போதிலும் புறக்கணிக்கப் பட்டவரானார். நீட்ஷேயும் தன்னை 'மறைவுக்குப் பின்னாக' உள்ள மனிதர்களுள் ஒருவராகக் கருதிவாழ்வதில் ஆறுதல் பெற்றார். பல நூற்றாண்டுகளுக்குப் பின்னர் வருங்கால மக்கள் தன்னைப் பாராட்டுவார்கள் என எதிர் நோக்கினார். இதிலும் நீட்ஷே ஏமாற்றத்துக் குரியவரானார். அவருடைய தத்துவங்கள் பாராட்டப் படுவதற்கு மாறாக, பல தலைமுறைகளுக்குப் பின்னரும் அவை எதிர்ப்புக் குரியதாகவும், வெறுத் தொதுக்கத் தக்கதாகவும் ஆயின.

நீட்ஷேயின் தத்துவம் நாஜிசத்தைத் தோற்றுவிக்கக் கூடியது என்பது வெளிப்பட்டதே இதற்கு அடிப்படைக் காரணம். இத்தகைய கருத்தை உருவாக்குவதை அவருடைய நண்பர்கள் வன்மையாகக் கண்டித்தனர்.[1]

ஆனால் அவருடைய தத்துவம் மாமனிதனை உருவாக்குவதைப் போன்றே ஒரு வல்லரசை உருவாக்க வழிகோலுவதாக எளிதில் நிறுவி விடலாம். இதைத்தான் நாஜிகள் செய்தனர். எப்படியோ, நாஜிகள் தம் பாரம்பரியத்தை நீட்ஷேயிடம் இருந்துதான் தொடங்குகின்றனர்; நீட்ஷேவைத் தம் ஆன்மீகத் தந்தையாகவும் போற்றுகின்றனர். ஹிட்லரே நீட்ஷேயின் மார்பளவுப் படத்தின் பக்கத்தில் நின்று ஒரு படம் எடுத்துக் கொண்டுள்ளார். அவர் தம் குருவின் கையெழுத்துப் பிரதிகளைத் தம் சிறப்பான பாதுகாப்பில் வைத்திருந்தார். நீட்ஷே எழுதியவற்றிலிருந்து தேர்ந்தெடுத்த பகுதிகளை நாஜிச விழாக்களில் புதிய ஜெர்மானியக் கொள்கையாகச் சத்தம் போட்டு முழங்கினார். நாஜிகளின் ஆன்மீகப் பாரம்பரியம் நீட்ஷேயுடன் தொடர்பு படுத்தப்பட்டதை அவருடைய நெருங்கிய உறவினர்கள் மறுக்கவில்லை. நிட்ஷேயின் ஒன்றுவிட்ட சகோதரர் ரிச்சர்ட் ஆக்லர் இதை அங்கீகரிக்கும் முறையில், 'நீட்ஷேயின் சிந்தனையே ஹிட்லர் மூலம் செயலாக்கம் பெறுகிறது'; அமரர் நீட்ஷேதான் முதன்முதலான முன்னோடி என்றும் கூறினார். நீட்ஷேயின் உடன்பிறந்த சகோதரி தன்மறைவுக்குச் சில மாதங்களுக்கு முன், ஜராதுஸ்ட்ரர் தீர்க்கதரிசனமாகக் கூறிய 'மாமனிதனின்' அவதாரமாகவே நீட்ஷேயைக் காண்பதாகவும், பியூர்ஹர் தன்னுடைய சகோதரனைச் சிறப்பித்தற்காக அவருக்கு நன்றி தெரிவிப்பதாகவும் கூறுகிறார்.

நீட்ஷேயின் பெயரும், தத்துவமும் மிகுந்த பயங்கரத்தையும் அவர் மீது வெறுப்புணர்வையும் தூண்டுவதை உணர்கிறோம். நீட்ஷே மனுவுக்கு இணையானவர் என அடையாளம் காணும்போது இந்துக்களின் மனத்திலும் வியப்பும் வெறுப்பும் ஏற்படவே செய்யும். இதில் சந்தேகத்திற்கே இடம் இல்லை. மனுவின் திட்டத்தையே தன் தத்துவமாகப் பின்பற்றுவதாக நீட்ஷே வெளிப்படையாகவே அறிவித்துள்ளார். நீட்ஷே தன்னுடைய 'கிறிஸ்துவுக்கு எதிர்ப்பு' என்ற நூலில் கூறியிருப்பதாவது:

"பொய்மைகள் எந்த அளவுக்குக் கேடுவிளைவித்துள்ளன என்பது கேள்வி? உண்மையில் கிறிஸ்துவத்தில் புனித முடிவுகள் முழுமையாக இல்லாதபோதிலும் அவற்றை நடைமுறைப் படுத்துவது பற்றியே என்னுடைய மறுப்பு அமைந்துள்ளது. அதன் முடிவுகள் தவறான முடிவுகளாகவே உள்ளன. நஞ்சு ஊட்டுதல், பழித்துக்கூறல்,

[1] இதற்கும் தொடர்ந்துவரும் உண்மைகளுக்கும் பார்க்க: எம்.பி.நிகொலாஸ் எழுதிய 'நீட்ஷே முதல் ஹிட்லர் வரை', 1938

வாழ்க்கை மறுப்பு, உடலை வெறுத்தல், பாவத்தை அற்பமாகக் கருதல் ஆகியவற்றின் காரணமாக மனிதன் தரங்கெட்டுத் தாழ்வுறுதல் - இவற்றின் விளைவாக அதன் வழிமுறைகள் தவறானவையாகின்றன. இணையற்றதும் உயர்ந்ததுமான மனுவின் நூலை நான் படித்தறிந்தபோது என் உணர்வுகள் மாறின. இதே போன்ற உணர்வுடன் விவிலிய நூலைப் பாராட்டியுரைப்பது ஒரு பாவமென்பேன். இவ்வாறு உரைப்பதற்கு நேரிய தத்துவார்த்த பின்னணி உள்ளதேன் என்பதை நீங்கள் உடனடியாக யூகித்துணர இயலும். யூதர்களின் யூதமத குருமார்களுக்குரிய கோட்பாடுகள், மூடநம்பிக்கைகள் ஆகியவற்றின் பிழிவாக உள்ள துர்நாற்றம் மட்டுமல்ல இதிலுள்ளவை. நுணுக்கநயம் எதிர்பார்க்கும் மனவியலறிஞர் ஒருவர் நினைந்து அசைபோடுவதற்கும் அது இடமளிக்கின்றது. இதில் மறக்கமுடியாத முக்கிய கருத்து, விவிலியத்திலிருந்து இந்த நூல் அடிப்படையிலேயே வேறுபடுகின்றது என்பதே. இதன் மூலம் உயர்குடிமக்கள், தத்துவவியலார்கள், வீரர்கள் ஆகியோர் மக்கள் அனைவருக்கும் பாதுகாப்பளித்து வழிகாட்டுபவராக உள்ளனர். உயரிய நலன்கள் அதில் நிறைந்துள்ளன, வாழ்வுக்கு இணக்கம் தெரிவிக்கும் ஒரு முழுமையுள்ளது என்ற உணர்வு நிரம்பியது. இதற்காக மட்டுமல்லாமல் வாழ்வின் நலன்களுக்குரிய வெற்றியுணர்வு நிரம்பியது, நூல் முழுமைக்கும் சுடரொளிர்கின்றது. மக்களைப் பெறுதல், மகளிர், திருமணம் ஆகியவற்றைப் பற்றிக் கிறிஸ்துவத்தில் ஆழங்காண முடியாத ஆபாசப் புகைமூட்டமாகக் கூறப்பட்டிருப்பவை இந்தநூலில் வாழ்க்கை விருப்போடும், கனிவோடும், நம்பிக்கையுடனும் கூறப்பட்டுள்ளது. மணமாகாத ஆண், பெண் கலவியைத் தவிர்ப்பதற்கு அவனவன் தனக்கு மனைவியைப் பெற்றிருப்பானாக, பெண்டிர் யாவரும் தத்தமக்குரிய கணவரைப் பெற்றிருப்பாராக..... எரிக்கப்படுவதைவிடத் திருமணம் செய்துகொள்வது மேலானது என்றுரைக்கும் இழிந்ததொரு புத்தகத்தைக் குழந்தைகளும், பெண்களும் படிப்பதற்குரிய வாய்ப்பினை நாம் அளிக்கலாமா? மாந்தரின் தோற்றமே கிறிஸ்துவ மயமாக்கப்பட்டுள்ளபோது - அதாவது கள்ங்கமில்லாத கர்ப்பம் தரிப்பது பற்றிய கோட்பாட்டின் காரணமாகக்களங்க முற்றுள்ளபோது கிறிஸ்துவனாக இருப்பதென்பது ஏற்புடையது தானா? மனுநீதியில் உள்ளதைப்போல பெண்ணிடத்தில் மென்மையும், கருணையுமுள்ளதாகக் கூறப்பட்டுள்ளவை, வேறெந்த நூலிலும் கூறப்பட்டிருப்பதாக எனக்குத் தெரியவில்லை. வெண்தாடிக் கிழவர்களும். துறவிகளும் பெண்ணிடம் வீரத்தைக் காட்டும் முறை தெரிந்தவர்; இவ்வகையில் வேறெவரும் இவர்களை மிஞ்சமுடியாது. மனு ஓரிடத்தில், "பெண்ணின் வாய், கன்னியின் மார்பு, குழந்தையின் பிரார்த்தனை, யாகத்தின் புகை ஆகியவை

எப்போதும் தூய்மையானவை" என்று சொல்கிறார். இன்னொரு இடத்தில், "கதிரவனின் கிரணம், பசுவின் நிழல், காற்று, நீர், தீ, கன்னியின் மூச்சு ஆகியவற்றை விடத் தூய்மையானது வேறெதுவும் இல்லை" என்கிறார். கடைசியாக, அவரால் கூற முடிந்ததொரு புனிதமான பொய், "உடலில் தொப்புளுக்கு மேலுள்ள திறந்த பகுதிகள் தூய்மையானவை. தொப்புளுக்குக் கீழுள்ளவை யாவும் தூயவை அல்ல. கன்னியொருத்தியின் உடல் மட்டும்தான் முழுதுமாக தூய்மையானது".

ஜராதுஸ்ட்ரர் என்பது மனுவுக்குப் புதிய பெயர்தான் என்பதையும், 'ஜராதுஸ்ட்ரரின் பொன்மொழிகள்' என்னும் நூல் மனு ஸ்மிருதியின் புதிய பதிப்பு என்பதையும் இவை உறுதி படுத்துகின்றன.

நீட்ஷே, மனு ஆகிய இருவருக்கிடையில் ஏதாவது வேறுபாடு உள்ளதென்றல் அது இதுதான்; தற்போதைய மனித இனத்திற்குப் பதிலாக மாமனிதரினமான சிறந்த மனிதரினத்தைப் **(RACE OF SUPERMAN)** படைக்க வேண்டுமென்பதில் நீட்ஷே உளப்பூர்வமான விருப்பம் கொண்டிருந்தவர். ஆனால் மனுவோ, தம்மை உயர்ந்த மனிதர்கள் என்றாக்கிக் கொண்ட தொரு வகுப்பாருக்குரிய சிறப்புரிமைகளைக் கட்டிக்காப்பாற்றுவதிலே ஆர்வம் கொண்டவர். நீட்ஷே கற்பனைசெய்த உயர்ந்த மனிதர் தமது தகுதியின் காரணமாக உருவானவர்கள்; நீட்ஷே உண்மையிலேயே எதிலும் தனிப்பற்றினைக் காட்டாத தத்துவ ஞானி. ஆனால் மனுவோ, ஒரு குறிப்பிட்ட குழுவில் பிறந்த ஒரு கூட்டத்தாரின் நலன்களைக் காப்பதற்காக ஒரு தத்துவத்தை உருவாக்குவதற்கு முனைந்த கைக்கூலியாவார்; அவர் சூட்டிய உயர்ந்த மனிதன் என்ற பெயர், அந்தப் பெயருக்குரிய பண்பு நலன்களெதுவும் இல்லாதபோதும் மாறாதது. மனுவின் பின்வரும் கூற்றுக்களை ஒப்பிட்டுக் காண்க :-

10:81. "தனக்குரிய தொழில் செய்து வாழ்க்கை நடத்த இல்லாத போது பிராமணன், க்ஷத்திரியனுக்குரிய தொழிலைச் செய்து பிழைத்துக் கொள்ளலாம். ஏனெனில் இதுதான் அவனுக்குரிய அடுத்த குலத்தொழில் ஆகும்."

10:82. "பிராமணன், தன்குலத் தொழில், க்ஷத்திரியருக்குரிய தொழில் ஆகியவற்றைச் செய்து வாழ்க்கை நடத்த முடியாத பட்சத்தில் வாழ்க்கை நடத்துவதற்கு அவன் வேறு என்னதான் செய்வது என்ற கேள்வி எழும்போது, வைசியனுக்குரிய வாணிபம் செய்தும், உழுது பயிரிட்டும், ஆநிரை மேய்த்தும் வாழ்க்கையை நடத்திக் கொள்ளலாம் என்பதே இதற்கான விடையாகும்."

மனு மேலும் கூறுகிறார்:

9:317. " எவ்வாறுநெருப்பானது வைதீக காரியங்கள் செய்வதற்கு பயன்பட்டாலும் பயன்படாவிட்டாலும் தெய்வத் தன்மையுடன்

விளங்குகிறதோ அவ்வாறே ஒரு பிராமணன் கற்றறிந்தவனாகவோ மூடனாகவோ இருந்தாலும் மேன்மையானனாகவே இருக்கின்றான்".

9:319. "பிராமணர்கள் எவ்வகையான இழிந்த தொழில்களைச் செய்த போதிலும், அனைத்திலும் அவர்கள் போற்றுதற்குரியவராவர்; ஏனென்றால், அவர்கள் மனித அறிவுக் கெட்டாத ஒரு வகைத் தெய்வீகத் தன்மை பெற்றவராவர்."

நீட்ஷேயின் தத்துவத்தோடு ஒப்பிடும் போது மனுவின் உயர்மனிதத்தத்வம் இழிவானது, தரம் கெட்டது. எனவே, நீட்ஷேயின் தத்துவத்தைவிடப் பெரிதும் வெறுக்கத்தக்கது; அருவறுக்கத்தக்கது.

இந்து மதத்தத்துவம், நீதி சோதனை அல்லது பயன் சோதனையில் ஏன் நிறைவு பெறவில்லை என்பதைத் தெளிவாக்குகின்றது. இந்து மதம் சாதாரண மனித நலனில் அக்கறை கொள்ளவில்லை. இந்து மதத்திற்கு ஒட்டு மொத்தமான சமூக ஆர்வமும் இல்லை. அதனுடைய ஆர்வமெல்லாம் ஒரு தனி வகுப்பாரைச் சார்ந்ததாகவே உள்ளது. அந்த வகுப்பாரின் உரிமைகளைக் கட்டிக்காத்து உதவுவதே அந்தத் தத்துவத்தின் முக்கிய நோக்கம் எனவேதான், மாமனித வகுப்பாரின் நலன்களுக்காக சாதாரண மனிதர்களின் நலன்களையும் சமூகத்தின் நலன்களையும் இந்துமதத் தத்துவம் மறுத்திருக்கிறது, ஒடுக்கியுள்ளது, பலியிட்டுள்ளது.

இத்தகைய தொரு மதத்தினால் மனிதனுக்கு என்ன பயன்?

மதம் என்ற வகையில் அனுபவ வாதத்தின் (**Positivism**) தகுதிகளைப் பற்றிப் பேசுகையில் திரு. பால் ஃபோர் அனுபவவாதிகளை நோக்கி எழுப்பிய கேள்விகள் இங்கு நினைவு கூரத் தக்கவை. மிகப் பொருத்தமாக அவர் கேட்பதாவது:

"அன்றாடத் தேவைகள், சிறு சிறு கவலைகள் ஆகியவற்றில் மூழ்கி, இடையறாது போரிட்டுக் கொண்டு அதில் ஆழ்ந்து போயுமுள்ளவர்களும் தெளிவு பெறாத நிலையிலுள்ளவர்களுமான எண்ணற்ற மக்களுக்கு அனுபவ வாதத்தினர் என்ன சொல்லப் போகிறார்கள்?. மானுடத்தின் மாபெரும் நாடகத்தில் தாங்கள் நடிப்பதற்கென்று நிர்ணயிக்கப்பட்டுள்ள சரியான பாத்திரமென்ன? என்பது பற்றிய தெளிவோ அல்லது அதைப் பற்றி நினைத்துப் பார்ப்பதற்குத் தக்க வாய்ப்போ இல்லாதவர்களுக்கு அல்லது அதனுடைய முக்கியத்துவத்தையும் ஈடுபாட்டினையும் அறிந்தால் குழம்பிப் போகக் கூடியவர்களுக்கு இவர்கள் கூறப் போவதென்ன? சொர்க்கத்தைப் படைத்த இறைவனுக்கு முன் ஒரு பொருட்டாகக் கருதக் கூடாத அளவுக்கு அற்பமானவர்கள் என்று கருதக்கூடியவர் எவருமில்லை என்று அந்தக் கொள்கையினர் உறுதியளிக்க முடியுமா? உலகியல்

பருப்பொருள்முறை மிச்ச சொச்சம் எதுவுமில்லாமல் நொறுங்கிப் போன பின்பு முடிவேதும் இல்லாத விளைவுகளை அவரது செயல் உருவாக்கும் ஆற்றலற்றதா? துக்கமடைந்தவருக்கு ஆறுதலும், மெலிந்தவர்க்கு வலிமையும், பாவிகளுக்கு மன்னிப்பையும் பெரும் பாரத்தைச் சுமந்து களைத்தவர்களுக்கு ஓய்வையும் அது அளிக்கக் கூடியதா?"

இதே கேள்விகளை மனு விடமும் கேட்கலாம்.

அந்தக் கேள்விக்கு அளிக்கப்படும் பதில்கள் அனைத்தும் நேர்மறையில் இருக்க வேண்டும்.

சுருக்கமாகச் சொல்வதென்றால் இந்துமதம் மனித நல முன்னேற்றக் கோட்பாடுடையது என்று கூறுவதற்கு முடியாததாக உள்ளது. எனவேதான் பால்ஃபோரின் மொழியில் சொல்வதென்றால் இந்துமதம் ஊடுருவினால் சாதாரண மனித இனத்தின் உள்ளார்ந்த வாழ்வினைப் பிரதிபலிக்கும் கண்ணாடியாகாது. அதனால் ஏதாவது செய்ய முடியுமென்றால் அது அவர்களை முடமாக்கிவிடக் கூடியது மட்டுமே. சாதாரண மனித உள்ளங்களுக்கு ஊட்டமளிக்கக் கூடியதோ, சாதாரண மனிதத் துயரங்களுக்கு ஆறுதல் அளிக்கக் கூடியதோ, சாதாரண மனிதர்களின் நலிவுகளுக்கு உதவக்கூடியதோ இந்துமதத்தில் எதுவும் இல்லை. பயனற்ற போராட்டத்திற்குப் பின் மரணமடையச் செய்யக் கூடிய பிறப்பைத் தரும் இயற்கையின் நினைக்க முடியாத சக்தியை நேருக்கு நேராகச் சந்திக்கும் இருளில் நிறுத்துகின்றது. கொடூரமான மதப் புறக்கணிப்பை விட எவ்வகையிலும் கொடுமையில் குறைவில்லாத வகையில் கடவுளோடு மனிதனுக்கு எவ்வித தொடர்பும் இல்லாமல் செய்து விடுகிறது.

இந்துமதத்தின் தத்துவம் இத்தகையதுதான், அது உயர் மனிதனின் சொர்க்கம்; சமானிய மனிதனின் மீளமுடியாத நரகம்.

இந்துமதத் தத்துவம் குறித்து என்னுடைய இந்த நிலைக்காக நான் பல வகைகளிலும் தாக்கப்படுவேன் என்பதை உணர்ந்திருக்கின்றேன். அதைப் பற்றிய தற்போதுள்ள கருத்துக்களிலிருந்து நான் மாறுபட்டிருப்பதால் தாக்குதலுக்கு உள்ளாக வேண்டியதுதான். இந்தத் தாக்குதல் பல கோணங்களிலிருந்து வரலாம்.

மனுஸ்மிருதியை நான் இந்து மதத்தின் மதநூலாகக் கொண்டது தவறு என்றும், இந்து மதத்தின் உண்மையான கோட்பாடுகள் வேதங்களிலும், பகவத் கீதையிலும்தான் அடங்கியுள்ளன என்றும் குறிப்பிடலாம். மனுஸ்மிருதியை இந்துமத நூலாக ஏற்றுக் கொள்வதை வைதீக இந்து எவரும் மறுக்கத் துணிய மாட்டார் என்பது உறுதி. ஆரிய

சமாஜிகளைப் போன்றுள்ள இந்துமதச் சீர்திருத்தப் பிரிவினர் மனுஸ்மிருதியை இந்துமத நூலென்று சொல்வதை மறுக்கலாம். ஆயினும் இவ்வாறு மறுத்துரைப்பது ஆதாரமில்லாதது என்பதில் ஐயமேதும் இல்லை. இந்த மறுப்புரையை எதிர்ப்பதற்கு ஸ்மிருதிகள் இந்துக்களிடையே எத்தகைய இடத்தைப் பெற்றுள்ளன, அவற்றின் செல்வாக்கு எத்தகையது என்பதை விளக்கியுரைப்பது விரும்பத்தக்கது.[1]

முதன் முதலில் வேதங்களைக் கற்றவர் அங்கீகரித்துப் பரிந்துரைத்த சமூக மரபுகள், பழக்கங்கள், சம்பிரதாயங்கள் ஆகியவற்றின் தொகுப்பாகவே இந்த ஸ்மிருதிகள் இருந்தன. நெடுங்காலமாக வேத விற்பன்னர்களின் நினைவிலேயே இந்த விதிகள் இருந்தன. அதாவது ஒலி வடிவமாகக் கேட்கப் பட்டவை என்று பொருள்படும். ஸ்ருதிகள் அல்லது வேதங்கள் என்பதற்கு மாறாக, நினைக்கப்பட்டவை என்று பொருள்படும் இவை ஸ்மிருதிகள் எனப்பட்டன.

ஆரம்ப காலத்தில் இந்த ஸ்மிருதிகளை வகைப்படுத்தி எழுதிய போது அந்த விதிகள், வேதங்களில் அடங்கிய விதிகளோடு ஒப்புநோக்க அவைத் தரம் தாழ்ந்தவை எனக் கருதப்பட்டது.

இவற்றின் அதிகார உரிமை, கட்டுப்படுத்தும் திறன் ஆகியவற்றிலுள்ள வேறுபாடு, நினைவில் மட்டுமே உள்ளதற்கும் ஒருவரிடமிருந்து ஒருவர் கேட்பதால் உள்ள நம்பகத் தன்மைக்கும் இடையே உள்ள இயற்கையான வேறுபாட்டின் விளைவே ஆகும். இந்த வேறுபாடு இவற்றைப் படைத்தவர்களின் தகுதியைப் பொறுத்தும் அமைந்துள்ளது. வேதங்களைப் படைத்தவர் ரிஷிகள்; ஸ்மிருதிகளைப் படைத்தவர்கள் கற்றவர்கள் மட்டுமே. வெறும் படித்தவர்களாக இருந்தவர்களை விட ரிஷிகள், தகுதியிலும் புனிதத் தன்மையிலும் மிகுந்தவர்கள். இந்த வேறுபாட்டின் விளைவாக வேதங்கள் ஸ்மிருதிகளைவிட மிகுந்த அதிகாரப் பூர்வமானவை எனக் கருதப்படலாயின.

இந்த வேறுபாட்டினால் எழுந்த விளைவுகள் இந்துமதக் கோட்பாடுகளில் வெளிப்படுவதைக் காணலாம். ஒரே பொருள் பற்றி இரு வேதங்களின் விதிகளில் முரண்பாடு எழுந்தால் வேதங்களின் ஒரு விதியை செயலற்றதாகக் கருத முடியாது. ஆனால் ஸ்ருதியில் உள்ள ஒரு விதிக்கும் ஸ்மிருதியிலுள்ள ஒரு விதிக்கும் முரண்பாடு எழுந்தால் இவை இரண்டிற்கும் ஏற்றத் தாழ்வுகளாக மேலே குறிப்பிட்ட காரணங்களால் ஸ்மிருதியை விட ஸ்ருதியின் விதி உகந்ததாக ஏற்றுக் கொள்ளப்பட்டது. ஆயினும் பேராசிரியர் அல்டேகர் சுட்டிக் காட்டியதைப் போல், காலப்

1. பேராசிரியர் அல்டேகரின் சுவையான கட்டுரை காண்க: "தர்மம் பற்றிய ஆதாரத்திற்கு ஸ்மிருதிகளின் நிலை", கனே நினைவுத் தொகுதி, பக் 18-25.

போக்கில் ஸ்மிருதிகளுக்கும் வேதங்களுக்குரிய அதே அதிகார உரிமை தரப்படலாயிற்று. இந்த நோக்கத்தை அடைவதற்குப் பல்வேறு வழிமுறைகள் மேற்கொள்ளப்பட்டன. முதலாவதாக ஸ்மிருதிகளைப் படைத்தவர்களும் ரிஷிகள் நிலைக்கு உயர்த்தப்பட்டனர். தொடக்க காலத்தில் கௌதமர், பௌதாயனர் போன்ற தர்ம சாஸ்திர எழுத்தாளர்களுக்கு ஒருபோதும் ரிஷி அந்தஸ்து தரப்படவில்லை. ஆயினும் மனுவும் யாக்ஞவல்கியரும் ரிஷிகளாகக் கருதப்பட்டனர். இதனால் ஸ்மிருதிகளுக்கும் ஸ்ருதிகளுக்கு இணையான தகுதி ஏற்பட்டது. அழிந்து விட்ட ஒரு ஸ்ருதியை நினைவில் வைத்திருந்து எழுதியதுதான் ஸ்மிருதி என்று இந்த வகையில் இரண்டாவது வழியாக மேற் கொள்ளப்பட்டது. ஸ்ருதியிலிருந்து ஸ்மிருதியை வேறுபட்டதாகக் கருதாமல் ஸ்ருதி வகையைச் சேர்ந்ததே என்றும், ஸ்ருதியிலிருந்து பிரிக்க முடியாதது என்றும் ஆகிவிட்டது. இந்த ஏற்பாடுகளின் விளைவாக, அவை இரண்டின் அதிகாரம் பற்றிய விதிகள் அடியோடு மாறிவிட்டன. முதலில் ஸ்ருதி, ஸ்மிருதி ஆகிய இரண்டிற்குமிடையில் முரண்பாடு வந்தால், ஸ்ருதி ஏற்புடையதாகக் கொள்ளப்பட்டது. புதிய விதிகளின்படி, அப்படி ஏதாவது முரண்பாடு வருமானால் ஸ்மிருதியின் விதியையும் ஸ்ருதியின் விதியைப்போல செயல்படுத்திக் கொள்ளலாம் என்று விதிவிலக்கு தரப்பட்டது. குமரிலபட்டர் தமது பூர்வமீமாம்சை சூத்திர உரையில்தான் இந்தப் புதுவிதியை வெளிப்படையாகப் புகுத்தினார். அதில் ஸ்மிருதிகளும் ஸ்ருதிகளைப் போன்றே அதிகார முடையவையாயின.

முதலில் இந்து சமூகம் வேதங்களுக்குக் கட்டுப்பட்டு, வேதங்களுக்குப் புறம்பான விதிகளை ஏற்காமல் இருந்தது. இந்தப் புதிய விதி, நிலையை மாற்றி ஸ்ருதியையோ ஸ்மிருதியையோ பின்பற்றிக் கொள்ளலாம் என்று சமூகத்தின் விருப்பத்திற்கு விட்டுவிட்டது. பின்னர் இவ்வாறு தேர்ந்தெடுத்துக் கொள்ளும் விருப்பமும் நீக்கப்பட்டது. ஸ்ருதியைப் போன்றே ஸ்மிருதிகளையும் கட்டாய மாகப் படித்தாக வேண்டும் என்று ஏற்பட்டதன் மூலம் இது நிகழ்ந்தது.

இது படிப்படியாகச் செய்யப்பட்டது. முதலில் ஸ்ருதிகளும் ஸ்மிருதிகளும் பிராமணனின் இரு கண்கள் என்றும் ஒன்றைக் கற்று இன்னொன்றை விட்டு விட்டால் ஒரு கண்ணை உடையவனாவான் என்றும் கூறப்பட்டது. பின்னர் வேதங்களையும் ஸ்மிருதிகளையும் இணையாகப் பயின்றால் தான் பிராமணீயம் அமையும் என்ற கோட்பாடு வந்தது. இறுதியாக வந்த விதியின்படி ஸ்மிருதியைக் கற்பது மட்டுமே ஏற்றுக் கொள்ளப்பட்டதோடு, ஸ்மிருதியை உதாசீனம் செய்வது பாவம் என்று ஆக்கப்பட்டது. இந்தப் பாவத்தைச் செய்தவன் 21 தலைமுறைகளுக்கு விலங்காகப் பிறப்பான் என்று விதிக்கப்பட்டது.

இந்துமதத்தின் மூலாதார நூல்களாக ஸ்மிருதிகள் இவ்வாறுதான் ஏற்றுக் கொள்ளப்பட்டன. இதில் ஐயத்திற்கு இடமில்லை என்பதைப் பேராசிரியர் அல்டேகர் கூற்றின் வாயிலாகவும் நிறுவலாம்:

ஸ்மிருதிகள், "பல சமூக மற்றும் சமூக-சமய நிறுவனங்கள், சம்பிரதாயங்கள் ஆகியவற்றின் போக்குகள் உருவாவதற்கும் நவீன இந்துமத வளர்ச்சியின் உருவாக்கத்திற்கும் பெரும் பணியாற்றியுள்ளன."

எனவே, இந்துமதத் தத்துவம் மனு ஸ்மிருதியில் அடங்கியுள்ளதென நான் கொண்டது தவறு என்று சொல்லமுடியாது என்றாகிறது.

ஸ்மிருதிகளை வேதங்கள் நிலைக்கு உயர்த்திய பணியைப் பிராமணர்கள் தங்களின் மிகுந்த சுய நலத்திற்காகச் செய்து கொண்டனர். சாதிக் கொள்கை, பிராமணர்களின் உயர்வுக் கொள்கை, அவர்களுக்குரிய உரிமைகள், சலுகைகள், க்ஷத்திரியர்கள், வைசியர்கள் ஆகியோரைத் தாழ்த்தும் கோட்பாடுகள், சூத்திரர்களைத் தரந்தாழ்த்திய கோட்பாடுகள் ஆகியவற்றின் வரையறையற்ற, அபரிமிதமான வளர்ச்சி இந்த ஸ்மிருதிகளில்தான் இடம் பெற்றுள்ளன. இவைகளே ஸ்மிருதிகளின் தத்துவங்கள் என்று ஆன நிலையில் வேதங்களுக்கு அளிக்கப்பட்டிருந்த அதிகாரங்களை ஸ்மிருதிகளுக்கு அளிக்கப் பிராமணர்கள் நேரடியாகவே ஆர்வமுடையவராயினர்; இறுதியில் தங்களுக்குச் சாதகமான அந்த முயற்சியில் அவர்கள் வெற்றி பெற்றனர்; ஆனால் நாடு முழுவதும் கெட்டு அழிவுற்றது.

இந்துமதத் தத்துவம் ஸ்மிருதிகளில் கிடையாது, வேதங்களிலும், பகவத் கீதையிலும்தான் இடம் பெற்றுள்ளது என்பதை ஏற்றுக் கொள்வதானாலும் - ஆஸ்தீக இந்து எவராவது இதை ஏற்றுக் கொள்வாரா, என்ன, - இதனால் முடிவில் பெரிய வித்தியாசம் என்ன ஏற்பட்டுவிடப் போகிறது என்பது தான் கேள்விக் குரியது.

ஒருவன் ஸ்மிருதிகளையோ, வேதங்களையோ அல்லது பகவத் கீதையையோ எதை எடுத்துக் கொள்வதானாலும் என்னைப் பொறுத்தவரை அது ஒரு பெரிய விஷயமென்று தோன்றவில்லை.

ஸ்மிருதிகள் சொல்வதற்கும் வேதங்கள் போதிப்பதற்கும் ஏதாவது அடிப்படை வேறுபாடு இருக்கிறதா? ஸ்மிருதிகள் விதிக்கும் விதிகளுக்கு எதிர்மாறாகப் பகவத் கீதை எதையாவது சொல்கிறதா? சில எடுத்துக் காட்டுகள் இதனைத் தெளிவாக்க வல்லவை.

புருஷசூக்தம் எனப்படும் சதுர்வருணக் கோட்பாட்டினை வேதங்களே விதித்துள்ளன என்பதில் மாற்றுக் கருத்தேதும் இருக்க முடியாது. இந்தப் புருஷ சூக்தம் இரு அடிப்படைக் கொள்கைகளை அங்கீகரிக்கிறது. சமூகத்தை நான்கு பிரிவாகப் பிரிப்பதைச் சிறந்ததென ஏற்கிறது. இந்த நான்கு பிரிவாருக்கும் இடையில் சமத்துவமில்லாமல்

இருப்பதே சிறந்த உறவு முறை என்பதையும் அது ஏற்கிறது.

பகவத் கீதை போதிப்பதும் விவாதத்திற்கு அப்பாற்பட்டது. பகவத் கீதையில் கிருஷ்ணன் போதித்துள்ளவற்றைப் பின்வரும் நான்கு கூற்றுக்களில் சுருக்கிக் காட்டி விடலாம்.

1. "நானே நால்வகை (பிராமணர், க்ஷத்திரியர், வைசியர், சூத்திரர் என மக்களை நான்கு வகையினராகப் பிரித்தல்) வருண அமைப்பினை அவரவர்களுக்குள்ள செயல் வேறுபாடுகளுக்கு ஏற்றவாறு படைத்துள்ளேன். எனவே நானே இந்த சதுர்வருணங்களை உருவாக்கியவனாவேன்." - கீதை 4:13.

2. "ஒருவன் இன்னொரு வருணத்தானின் தொழிலைச் செய்வது எளிதாக இருப்பினும், ஒருவன் தன் வருணத்திற்குரிய தொழிலை மிகுந்த திறனோடு செய்ய முடியாத போதிலும் தன் வருணத்திற்குரிய தொழிலைச் செய்வதே மிகச் சிறந்தது. ஒருவன் தன் வருணத்திற்குரிய தொழிலைச் செய்வதால் மரணமே நேர்வதாக இருந்தாலும் தன் வருணத் தொழிலைச் செய்வதே இனியது; ஆனால் பிற வருணத்தாரின் தொழிலைச் செய்வது ஆபத்தானது." கீதை 3:35.

3. "மக்கள் தத்தமக்குரிய தொழில்களைச் செய்ய வேண்டும் என்று விரும்பும் அறிவாளியானவன், தம் தொழிலில் பற்றுடைய அறிவீனர்களுக்குப் புத்திக் குழப்பத்தை உண்டாக்கக் கூடாது. அவனவன் தமது வருணத்திற்குரிய தொழிலைச் செய்து மற்றவர்களையும் அவ்வாறே செய்விக்க வேண்டும். கற்றறிந்தவன் தன் தொழில் ஈடுபாடு இல்லாதவனாக இருக்கலாம். ஆனால் தம் தொழிலில் ஈடுபாடுடைய கல்லாதோரையும் மந்த புத்தியுள்ளவர்களையும் தம் தொழிலை விட்டு வேறு தொழிலைச் செய்வதற்குரிய கெட்ட வழியில் செல்வதற்குக் கற்றறிந்தவன் விட்டு விடக்கூடாது." கீதை 3:26, 29.

4. "அருசுனா! கடமைகளும் தொழில்களுமான இந்தத் தருமம் (நால் வருணமான இந்த மதம்) தளர்வுறும் போதெல்லாம், இந்த இழிவுக்குக் காரணமானவர்களை அழித்துத் தருமத்தை நிலை நாட்டுவதற்காக நானே பிறப்பேன்" - கீதை 4:7-8.

இதுதான் கீதையின் நிலை. இதற்கும் மனுஸ்மிருதிக்கும் என்ன வேற்றுமையுள்ளது? கீதை மனுவின் சுருக்கம். மனுஸ்மிருதியை ஒதுக்கிவிட்டு கீதையில் புகலிடம் தேடுவோர், கீதையை அறியாதவர்களாக அல்லது மனுஸ்மிருதியை முற்றிலும் ஒத்துள்ளதும் கீதையின் உயிராக உள்ளதுமான பகுதிகளைக் கண்டு கொள்ளாமல் விட்டுவிடுவதற்குத் தயாராக இருப்பவர்களாக உள்ளனர்.

இந்துமதத் தத்துவத்தை விளக்குவதற்கு மனுஸ்மிருதியிலிருந்து நான்

பகுதிகளோடும் ஒப்பிட்டுப் பாருங்கள். ஒருவர் இவற்றில் என்ன வேறுபாடு காணமுடியும்? வேதங்களும் பகவத் கீதையும் பொதுநிலையான விதிமுறைகளைக் கூறுகின்றன: ஸ்மிருதிகள் அந்த விதிமுறைகளின் விவரக் குறிப்புகளை வரையறுத்துக் கூறுகின்றன என்னும் வேறுபாடு ஒன்றுதான் இவற்றிற்கு இடையே உள்ளது. ஆனால் இவற்றின் சாராம்சத்தைப் பொறுத்த வரையில் ஸ்மிருதிகள், வேதங்கள், பகவத் கீதை ஆகிய அனைத்தும் ஒரே மாதிரி பின்னப்பட்டுள்ளன; இவை அனைத்திலும் ஒரே இழை ஊடுருவி ஓடுகிறது; உண்மையில் இவை அனைத்தும் ஒரே துணியின் பகுதிகள்.

இதற்கான காரணம் வெளிப்படையானது. உபநிடதங்கள் நீங்கலாகப் பிற இந்துமத இலக்கியப் படைப்பாளர்களான பிராமணர்கள் ஸ்மிருதிகளில் தாங்கள் உருவாக்கிய விதிகளை வேதங்களிலும், பகவத் கீதையிலும் திணிப்பதற்குப் பெருமுயற்சி எடுத்துக் கொண்டனர். எனவே இவற்றில் உள்ளவற்றை அலசி ஆராய்ந்து தெரிந்தெடுத்துக் கொள்வதில் பயனேதும் இல்லை. மனுஸ்மிருதியை இந்துமதத்தின் மறை நூலாகக் கொண்டாலும் சரி, வேதங்களையும், பகவத் கீதையையும் அதன் மறைநூல்களாகக் கொண்டாலும் சரி இந்துமதத் தத்துவம் என்பது ஒன்றே தான்.

இரண்டாவதாக, மனுஸ்மிருதி விதிகளைக் கூறும் நூலே; அது அறநெறியை வகுத்துரைக்கும் நூல் அல்ல என்றும் இந்துமதத் தத்துவம் என்று நான் எடுத்துரைத்தவை சட்டத் தத்துவமே அல்லாமல் இந்துமதத்தின் ஒழுக்க நெறி தத்துவமன்று என்றும் மனஅமைதி கொள்வோர் இருக்கலாம்.

இதற்கு நான் அளிக்க விரும்பும் விடை எளிதானது. இந்து மதத்தில் சட்டத் தத்துவத்திற்கும் ஒழுக்க நெறித் தத்துவத்திற்கும் இடையே வேறுபாடு இல்லை என்றே நான் கருதுகின்றேன். காரணம் என்னவென்றால் இந்துமதத்தில் சட்டத்திற்கும் ஒழுக்க நெறிக்கும் இடையில் வேறுபாடு எதுவும் இல்லை; சட்டமே ஒழுக்க நெறியாக உள்ளது என்பதுதான்.

என் வாதத்திற்குச் சாதகமாக நிறைய சான்றுகளைக் காட்டத் தேவையில்லை. ருக் வேதம் தர்மம் என்பதற்கு என்ன பொருள்[1] கூறுகிறது என்பதைப் பார்ப்போம். ருக் வேதத்தில் தர்மம் என்ற சொல் 58 தடவை வருகின்றது. அது ஆறு வித்தியாசமான பொருள்களில் ஆளப்பட்டுள்ளது. 1. புராதன வழக்கம், 2. சட்டங்கள், 3. சமூகத்தில் சட்டம் ஒழுங்கைப் பாதுகாக்கும் ஏதாவது ஏற்பாடு, 4. இயற்கையின்

1. இதைத் தொடர்ந்து வருவன 'ஸ்வதயா' என்னும் மராத்தி இதழில் திரு.யஸ்வந்த் இராமகிஷ்ண் தாதே என்பவர் எழுதியுள்ள கட்டுரையிலிருந்து எடுக்கப்பட்டவை. பார்க்க: ஸ்வதயா எண் 7-8 உள்ள இரு இதழ்கள், முதலாண்டு பக்.18-21.

போக்கு, 5. ஒரு பொருளின் பண்பு, 6. நல்லது, கெட்டதன் கடமை என ஆறு வித்தியாசமானவற்றைக் குறிக்கப் பயன்படுத்தப்பட்டுள்ளது. இந்துமதத்தில் ஆரம்பத்திலிருந்தே தர்மம் என்ற சொல் இரு பொருள்களில் பயன்படுத்தப்பட்டுள்ளதைக் காணலாம். அச் சொல் சட்டம், ஒழுக்க நெறி என்னும் இரு பொருளும் கொண்டது. எனவே தான், இந்துமதத் தத்துவத்தில் சட்டத் தத்துவம், ஒழுக்க நெறித் தத்துவம் என்ற இரண்டிற்குமிடையே வேறுபாடு இல்லை என்பதற்கு இதுவுமொரு காரணம்.

இதனால் இந்துக்களுக்கென ஒழுக்க நெறிகளே இல்லையெனச் சொல்லிவிட முடியாது. அவர்களுக்கென ஒழுக்க நெறிகள் இருக்கத் தான் செய்கின்றன. ஆனால் இந்துக்களின் ஒழுக்க நெறிக் கோட்பாடுகள் எதை ஒழுக்கப் பண்பு, நன்னடத்தை என்று சொல்கிறது, அதன் இயல்பு எப்படி இருக்க வேண்டும் என்கிறது என்பதைக் கேட்பது பொருத்தமானதாகும்.

இந்து நினைக்கும் ஒழுக்கப் பண்பின் இயல்பும் தன்மையும் எப்படிப் பட்டது என்பதைத் தெரிந்து கொள்வதற்கு மூன்று நிலைகளாக உள்ள நடத்தைகளை [1] அறிந்து கொண்டு அவற்றிற்கு இடையே உள்ள வேறுபாடுகளை அறிந்து கொள்வது நல்லது. 1. உணர்வுகள், அடிப்படைத் தேவைகள் தொடர்பான நடத்தை 2. சமூகத்தில் நிலவும் தரத்தினால் முறைப்படுத்தப்பட்ட நடத்தை 3. தனிமனிதரின் மனச் சான்றினால் முறைப்படுத்தப்பட்ட நடத்தை. முதலாவது நிலையில் உள்ளதனை நாம் நன்னடத்தை என்று கூறுவதில்லை. ஆயினும் அது 'நன்னடத்தை இல்லாதது அல்ல, அது நேரிய நடத்தை அல்லாதது. அதன் நோக்கத்தைப் பொறுத்தவரை அது நன்னடத்தையால் கட்டுப்படுத்தப் படுவதில்லை; ஆனால் விளைவு அளவில் மதிப்பு மிக்கது. இதற்குத் தூண்டுதலாக இருப்பவை உயிர் வாழ்க்கை அல்லது சமுதாயம் அல்லது உளவியல் தொடர்பானவை. இவை பசியைத் தீர்ப்பது, பகைவர் எதிர்த்தால் ஆயுதத்தைப் பயன்படுத்துவது போன்ற நோக்கங்களைக் கொண்டது. ஆனால் இதன் முடிவோ உடல்நிலை, உணர்வு தன்மைகளால் அமைவது. வேறு வழியில்லை என்று ஏற்றுக் கொண்டு, மற்றவற்றோடு ஒப்பிட்டு மதிப்பிடாமல் தேர்ந்தெடுத்துக் கொள்வதால் நடத்தை என்று சொல்வதற்கு ஏற்றதாக இல்லாமல் இருப்பது. இரண்டாம் நிலையில் உள்ள நடத்தைச் சமூகத் தன்மையுடையது என்பதில் ஐயமில்லை. எங்கெல்லாம் மக்கள் கூட்டத்தினர் வாழ்கிறார்களோ அங்கெல்லாம் அந்தக் கூட்டத்தாருக்குப் பொதுவானதாகச் செயல் படுவதற்கு அமைந்த நடைமுறை-அதாவது குழு நடத்தை, ஒரு குழுவிற்குப் பொதுவாகப் பரம்பரைப் பரம்பரையாகத்

---

[1].இவ் விஷயத்தில் கிராவ்லி மற்றும் டப்ட்ஸ் ஆகியோரின் 'ஒழுக்கவியல்' பற்றிய

தொடர்ந்து வருகின்ற அங்கீகரிக்ககப்பட்ட நடை முறையாக இது உள்ளது. இவ்வாறு அங்கீகரிக்கப்பட்டவை சமூக ஒழுக்க நடைமுறைகள், அந்தக் குழுவின் நன்னடத்தைகள் எனப்படுகின்றன. அவை அனைவராலும் பின்பற்றப்பட வேண்டும் எனக் குழுவின் ஒருமித்த இசைவையும் பெற்றுள்ளன. ஒருவகையில் அந்தக் குழுவின் நலம் அந்த நடவடிக்கைகளில் அடங்கியுள்ளது. அந்தக் குழுவினைச் சார்ந்த அனைவரும் அவற்றைப் பின்பற்றுவது கடமையாகிறது. இதற்கு மாறாக எவராவது நடந்து கொண்டால், அந்தக் குழுவின் எதிர்ப்பைத் தேடிக் கொள்ள நேரிடும். இந்த நடைமுறையை ஒழுக்க நடத்தை என்பது முழுவதுமாகப் பொருந்தாது. ஏனென்றால் இதில் சமுதாயம் 'நல்லது' என்று வரையறுத்து ஏற்றுக் கொண்ட அனைத்தையும் ஒப்புக் கொள்ள வேண்டியதாகின்றது. அது எந்த நடவடிக்கையையாவது நன்னடத்தை என்று ஏற்றுக் கொண்டதென்றால் அது அந்த சமுதாயத்தின் ஒழுக்க அல்லது சமூக ஒழுக்கக் கட்டுப்பாட்டு விதிகளுக்கு ஏற்றதாக இருப்பதனால்தான். எனவே இதனைச் சமூகத்தின் வழக்கமான அறமுறை எனலாம். மூன்றாம் நிலையிலுள்ள நடத்தையே உண்மையாகவும், முழுமையாகவும் ஒழுக்க நடத்தை என்பதற்குரியது. ஏனெனில் அதில் தனிமனிதன் சரியானது எது என்பதைத் தெரிந்து கொண்டு நல்லதைத் தேர்ந்தெடுத்துக் கொள்வதோடு, அதை நிறைவேற்றுவதற்கு முழுமனதோடு தன்னை ஈடுபடுத்திக் கொள்கின்றான். தவிர்க்க முடியாதது என்றோ, சமுதாயம் அங்கீகரித்து விட்டதால் பின்பற்ற வேண்டியது என்றோ அவன் அதனை ஏற்றுக் கொள்வதில்லை. அவன் முடிவுகளை மதிப்பீடு செய்து தேர்ந்தெடுத்துக் கொண்டு விளைவுகளுக்குத் தானே பொறுபேற்கின்றான். அவன் நன்னடத்தையைப் பிரதிபலிக்கின்றான்.

இதில் எந்த நிலையில் இந்து நன்னடத்தை உள்ளது? நிச்சயமாக அது மூன்றாம் நிலையில் இல்லை. அதாவது இந்துக்கள் கலந்து பழகக் கூடியவர்கள்; ஆனால் நன்னடத்தை என்ற சொல்லின் வரையறுத்த பொருளுக்குரிய வகையில் அல்ல என்றாகிறது. தான் மேற்கொள்ளும் செயல்களின் விளைவுகளுக்கு ஓர் இந்து பொறுப்பேற்பதில்லை. சமுதாயத்தின் விருப்பத்திற்கு ஏற்றபடி செயல்படும் ஒரு கருவியாக, அதிலே திருப்தி அடைபவனாக அவன் இருக்கின்றான். வேறுபாடாகச் செயல்படுவதற்குப் பயந்தவனாகவோ, சுதந்திரமாகச் செயல்பட முடியாதவனாகவோ அவன் உள்ளான். பாவம் எது என்பது பற்றி அவன் கொண்டுள்ள கருத்து, அவனது நன்னடத்தைக்கு மாறான பண்புக்கு எடுத்துக்காட்டாக உள்ளது. விஷ்ணுவின் சட்ட மூலத் தொகுப்புகள் ஒன்பது வகையாக வகுக்கப்பட்ட பாவங்களின் பட்டியலைப் பின்வருமாறு தருகின்றது:

1. கொலை பாவங்கள் - அதிபாதகம், நெருங்கிய உறவினருடன்

கொள்ளும் சிலவகைத் தகாத உடலுறவுகள், தீக்குளிப்பதே இதற்குப் பரிகாரம்.

2. பெரும் பாவங்கள் - மகாபாதகம். இவை பிராமணனைக் கொல்வது, எரிசாராய மது அருந்துவது, பிராமணனிடம் தங்கத்தைத் திருடுவது, குரு பத்தினிவுடன் கள்ளத் தொடர்பு, இத்தகைய பாவங்கள் செய்தவர்களுடன் சமூகத் தொடர்பு கொள்வது ஆகியவை.

3. இதுபோன்ற சிறு பாவங்கள் - அணு பாதகம். இவை சில குறிப்பிட்ட பிற வகுப்பாரைக் கொலை செய்வது, பொய் சாட்சி சொல்வது, நண்பனைக் கொல்வது, பிராமணனின் நிலங்களையோ, சொத்துக்களையோ திருடுவது, நெருங்கிய உறவினருடன் கொள்ளப்படும் சிலவகை தகாத உடலுறவுகள், விபசாரம் முதலியவற்றைச் சார்ந்தவை.

4. சிறு பாவங்கள் - உப பாதகம். பொய் பேசுதல், சில வகை சமய சடங்குகளை உதாசீனப்படுத்துதல், விபசாரம், சட்டத்திற்குப் புறம்பான தொழில்கள் செய்தல், அண்ணனுக்கு முன்னதாகத் திருமணம் செய்து கொள்வது தொடர்பான குற்றங்கள், கடவுளர்க்கும், பிதுரர்களுக்கும் உரிய கடனாற்றத் தவறுதல், நாத்திகம் பேசுதல் முதலியன.

5. சாதி விலக்காகக் கூடிய பாவங்கள் - சாதி பிரமசாகரம். பிராமணனுக்கு உடல் ஊறு விளைவிப்பது, மோந்து பார்க்கக் கூடாத பொருள்களை மோந்து பார்ப்பது, ஏய்த்துப் பிழைத்தல், இயல்புக்கு மாறான சிலவகைக் குற்றங்கள் புரிதல்.

6. கலப்பு சாதியினராக்க தக்க பாவங்கள் - சங்காரிகரனா. வீட்டு அல்லது காட்டு விலங்குகளைக் கொல்லுதல்.

7. பிச்சை எடுப்பதற்குத் தகுதியில்லாதவர்களாக ஆக்கக் கூடிய பாவங்கள் - அபத்ரிகரனா. இழிந்தவர்களிடம் பிச்சையோ, பொருள்களோ பெறுதல், வாணிபம், வட்டிக்கு விடுதல், பொய் கூறல், சூத்திரனுக்குத் தொண்டு செய்தல்.

8. அசுத்தப் படுத்தக் கூடிய பாவங்கள் - மாலவாஹா. பறவைகள், நீர்-நிலத்தில் வாழ்விலங்குகள், புழு, பூச்சிகள் ஆகியவற்றைக் கொல்வது, சாதிக்காய் உண்பது அல்லது மதுவகைகளைப் போன்ற மயக்கம் தரக்கூடிய செடி, கொடிகளை உண்பது.

9. பிறவகைப் பாவங்கள் - பிராகிர்ணகா - மேலே உள்ளவற்றில் குறிப்பிடப்படாதவை.

பாவங்களைப் பற்றிய இந்தப் பட்டியல் முடிவானதன்று. எனினும் இந்துக்கள் பாவத்தைப் பற்றி எத்தகைய கருத்தைக் கொண்டுள்ளனர் என்பதைத் தெளிவாக்குவதற்குப் போதுமான நீண்ட பட்டியல் இது.

முதலாவதாக, குறிப்பிட்ட நடத்தையிலிருந்து மனிதன் வீழ்ச்சியடைவதை உள்ளர்த்தமாகக் கூறுகிறது. இரண்டாவதாக, அசுத்தம் அடைவதை, தூய்மை இழப்பதை உணர்த்துகிறது. பாதகம் என்பதன் மூலப் பொருள் அதுதான். அதன் பொருள் படனா (வீழ்ச்சியடைதல்) மற்றும் அசௌசம் (அசுத்தப்படுதல்). எவ்வகையில் பார்த்தாலும் இந்தக் கருத்தின்படி பாவம் என்பது ஆன்மாவின் நோய். முதலாவதாக வெளிப்புற நடத்தைகளுக்கான ஒரு விதியை மீறுவது என்பது மட்டுமே பொருளாகிறது. இன்னொரு வகையில் உடலின் அசுத்தம், யாத்திரை மேற்கொள்வது அல்லது வேள்வி வளர்த்துதல் அல்லது இவை இரண்டையும் செய்து தூய்மையாக்குதல் அல்லது அசுத்ததைப் போக்குதல். ஆனால் தீய செயல்களாலும் தீய எண்ணங்களாலும் ஏற்படும் ஆன்மாவின் களங்கத்தைத் துடைப்பது பற்றி எதுவும் இதில் இல்லை.

இந்த நல்லொழுக்க விதிகள் முழுக்க முழுக்க சமூகத் தொடர்புடையவை என்பது பொருளாகின்றது. அது மட்டுமல்ல நல்லொழுக்க நிலை முழுக்க முழுக்க பாரம்பரியமாகவும் வழக்கமாகவும் பின்பற்றப்பட்டு வருவது என்பதும் பொருளாகின்றது. இப்படி வழக்கமாகப் பின்பற்றப்படும் நன்னடத்தையில் இருவகைத் தீங்குகள் உள்ளன. முதலாவதாக நோக்கத்தில் தூய்மையும் உண்மையான ஈடுபாட்டு உணர்வும் இதில் எப்போதும் இருக்குமா என்பதற்கு உத்திரவாதம் ஏதுமில்லை. மனித நடத்தையில் பாசாங்கு தனத்திற்கு இடமேதுமில்லை என்ற உணர்வு ஏற்படுவதற்குரிய வகையில் நல்லொழுக்க நெறி ஆழமான செயல் நோக்கத்தோடும், உணர்வோடும் தனிமனிதரிடம் ஊடுருவி நிற்க வேண்டும். இரண்டாவதாக, வழக்கமாகப் பின்பற்றப் படும் நன்னடத்தை என்பது தடையாகவும், வேகமாக முன்னேறுவதைத் தடுத்து நிறுத்துவதுமாகிவிடும். சாதாரண மனிதர்களை இந்தப் போக்கு தடுத்து நிறுத்தி முன்னேற முடியாமல் செய்துவிடும். தேக்க நிலையின் மறுபெயர்தான் வழக்கமான நன்னடத்தை நெறி என்பது. நன்னடத்தை என்பது வழக்கமான நன்னடத்தை நெறி என்று இருக்கின்ற எல்லாவற்றிலும் இதுவே உண்மையான நிலை. ஆனால் இந்துக்களின் வழக்கமான நன்னடத்தை நெறி தனக்கே உரிய தீயப் போக்கினைக் கொண்டது. வழக்கமாகப் பின்பற்றப்படும் நன்னடத்தை நெறி பாராட்டதக்கதொரு நடத்தைதான். சாதாரணமாக இந்த பாராட்டதக்க நடத்தை பொதுநோக்கிலும் சமுதாய நோக்கிலும் பார்க்க நல்லது தான். ஆனால் இந்து மதத்தில் இந்தப் பாராட்டத்தக்க நடத்தை என்பது கடவுள் வழி பாட்டுடனோ அல்லது சமுதாய நலத்துடனோ தொடர்புடையதல்ல, இந்து மதத்தில் இந்தப் பாராட்டத்தக்க நடத்தை என்பது பிராமணர்களுக்கு நல்ல மதிப்பும் மரியாதையும் கொடைகளும் அளிப்பதோடு சம்பந்தப்பட்டது. இந்து ஒழுக்க வியல் என்பது உயர்மனிதர் வழிபாடே.

இந்துமதத் தத்துவத்தை ஊகித்தறிவதற்கு இந்து ஒழுக்கவியலை அடிப்படையாக நான் கொண்டிருந்தாலும் அதனால் என்ன வேறுபாடு ஏற்பட்டு விடக்கூடும்? இந்து மதத்தில் சட்டத்திற்கும் ஒழுக்க வியலுக்கும் வேறுபாடு இல்லாததைப்போலவே சட்டத்திற்கும மதத்திற்கும் வேறுபாடு எதுவுமில்லை என்பதை இந்து மதத்தை ஆய்வு செய்யும் பெரும்பாலோர் மறந்து விடுகின்றனர். இவை இரண்டும் கீழ்நிலை வகுப்பினராக உள்ள இந்துக்களின் நடத்தைகளை ஒழுங்குபடுத்தி அவர்கள் உயர் சாதி இந்துக்களின் நலன்களுக்குச் சாதகமாக இருக்கச் செய்வதிலேயே குறியாக உள்ளவை.

மூன்றாவதாக, இந்து தத்துவத்தின் உண்மையான மூலங்களாக உள்ள உபநிடதங்களை நான் பயன்படுத்திக் கொள்ளாமல். ஒதுக்கிவிட்டிருப்பதாகக் கூறி அதனால் இந்து மதத்தைப் பற்றிய பொய்யான உருவத்தையே காட்டியிருக்கின்றேன் என்று மறுக்கப்படலாம்.

நான் உபநிடதங்களைக் கணக்கிலெடுத்துக் கொள்ளவில்லை என்பதை ஒத்துக் கொள்கிறேன். ஆனால் நான் அப்படிச் செய்ததற்கு உள்ள காரணம் மிகச் சிறந்த காரணம் என்றே கருதுகிறேன். மதத் தத்துவத்தின் ஒரு பகுதியாகவே இந்து மதத் தத்துவத்தை நோக்குவதே என் நோக்கம். இந்து தத்துவத்தைப் பற்றி எனக்குக் கவலை இல்லை. அப்படியொரு கவலை இருந்திருக்குமானால் உபநிடதங்களையும் ஆராய வேண்டிய தேவை நேர்ந்திருக்கும். இந்து மதத்தின் தத்துவம் என்று எதைக் காட்டியுள்ளேனோ அது உபநிடதங்களின் தத்துவமும் ஆகும் என்பதில் எவ்வித ஐயத்திற்கும் இடம் வைக்காமல் அதனையும் எடுத்துக் கொள்ளத் தயாராக உள்ளேன்.

உபநிடதத்தின் தத்துவம் பற்றி வெகுசில சொற்களிலேயே சொல்லி விடலாம். உபநிடதத் தத்துவம் எவ்வாறு ஒத்துப் போகிறது என்பதைச் சொல்ல வந்தபோது இதனை ஆக்ஸ்லி சரியாகவே தொகுத்துரைத்திருக்கின்றனர்.[1]

"பொருள் அல்லது நிரந்தர உண்மையென ஒன்று இருப்பதைக் கருதுவதில் மாறும் தொடர் காட்சிகளுக்கு அடியில் பொருளா, மனமா என்பதில் அண்டத்தின் மூலப் பொருள் 'பிரமா'; அதேபோல மனிதனுக்கு 'ஆத்மா'. பின்னது முன்னதிலிருந்து பிரிக்கப்படுவது எப்போதெனில் - அப்படி நான் கூறலாமென்றால்- அதன் பிரமாண்டமான போர்வையால், வாழ்வின் மயக்கம் தரும் ஏராளமான மாயக் காட்சிகளை உருவாக்கும் உணர்ச்சிகள், எண்ணங்கள், ஆசைகள், இன்ப துன்பங்கள் ஆகியவற்றை மூடி மறைப்பதால் கைக்கூடும். அறியாதோர் இதனை மெய்யென்றே கருதுகின்றனர்; எனவே அவர்களின்

1. பரிணாமமும் ஒழுக்கவியலும், பக்கம் 63.

'ஆத்மா' என்றென்றும் மயக்கங்களால், ஆவல்களின் விலங்குகளால் கட்டப்பட்டும், துயரங்களால் துன்புறுத்தப்பட்டும் அடைபட்டுக் கிடக்கிறது"

இந்த உபநிடத்த தத்துவங்களால் என்ன பயன்? துறவாலும் தன்னடக்கத்தின் மூலமும் ஆசைகளை அழித்துக் கொண்டு வாழ்க்கைப் போராட்டத்திலிருந்து விலகுவதைத்தான் உபநிடதங்களின் தத்துவம் கூறுகின்றன. இது ஒரு வாழ்க்கை முறையா என ஆக்ஸ்லி மிகக் கடுமையான சொற்களால் சாடுகிறார்.[1]

"இந்தியத் துறவிகள் உலக வாழ்விலிருந்து ஒதுங்கித் சாதித்திருப்பதை விடத் தன்னைத் தானே முழுமையாக அழித்துக் கொண்ட முயற்சி வேறேதுமில்லை. பின்னர் மனித மனத்தைச் செயலற்ற, அரைத்துயிலில் நடப்பது போன்ற நிலைக்கு தாழ்த்துவதில் வெற்றிகண்டு, அது புனிதமென ஏற்கப்பட்டிராவிட்டால், முழு மூடத்தனம் எனப்படும் நிலைமை அடைய நேரிடலாம்."

உபநிடதத் தத்துவத்திற்கு எழுந்துள்ள இந்தக் கண்டனம் லாலா ஹரிதயாள் மறுப்புரைக்கு முன் அற்பமாகி விடுகின்றது.[2].

"உபநிடதங்களை அறிந்தால் எல்லாவற்றையும் அறிந்தது போன்றது" எனப்படுகிறது. தனி முதற் பொருளை அறியும் வேட்கையே இந்தியாவில் போலியான மறைபொருள் ஆராய்ச்சிகளுக்கெல்லாம் அடிப்படையாகியுள்ளது. இந்த ஆய்வுகள் தவறான ஏமாற்றுதல்கள், கவர்ச்சியான புனை கதைகள், குழப்பமான கற்பனைகள் நிறைந்தவை. அவை பயனற்றவை என்பதை நாம் அறியவில்லை. இன்னமும் நாம் பழைய தடத்திலேயே போய்க் கொண்டிருக்கிறோம். ஐரோப்பிய நாட்டுச் சமூகச் சிந்தனை இலக்கியங்களை மொழி பெயர்ப்பதற்குப் பதிலாகப் பழைய புத்தகங்களையே மீண்டும் மீண்டும் பதிப்பித்துக் கொண்டிருக்கின்றோம். பிரெட்டெரிக் ஹாரிசன், பிரீயக்ஸ், பேபெல், அனடோல் ஃபிரான்ஸ். ஹெர்வே, ஹெகால், கிட்டிங்ஸ், மார்ஸல் ஆகியோர் டூன்ஸ், ஸகாடஸ், தாமஸ் அக்கினாஸ் ஆகியோரைப் பற்றி ஆய்வுகளைச் செய்வதிலும், பென்டாட்யூக்கின் சட்டங்கள், பியோவுல்ஃப் எழுதிய கவிதைகள் ஆகியவற்றின் சிறப்புகளைப் பற்றிப் பேசுவதிலும் தங்களுடைய காலத்தைக் கழித்திருப்பார்களாயின் ஐரோப்பா எப்படி இருக்கும்? இந்திய நாட்டுப் பண்டிதப் பெருமக்களும், பட்டதாரிகளும் உலுத்துப் போனவற்றிலும், பழமைப் பட்டுப் போனவற்றிலும் ஆர்வம் காட்டும் ஒருவகை நோய்க்கு ஆளாகியுள்ளனரெனத் தோன்றுகிறது.

[1] பரிணாமமும் ஒழுக்கவியலும், பக்கம் 64.

[2] மாடர்ன் ரெவிவ்யூ, ஜுலை, 1912.

முற்போக்காளர் நிறுவிய நிறுவனம் ஒன்று ஆறு தரிசனங்களின் வழியாக வேதங்களை அறிவதற்குச் சமஸ்கிருத இலக்கணத்தைக் கற்பிக்கும் நோக்கம் கொண்டுள்ளது. அறிவு வேட்கையில் எத்தகையதொரு தவறான முயற்சி. இது குடிநீரைத் தேடிப் பாலைவனத்தைக் கடந்து சாக்கடலின் கரையோரத்திற்குப் போகும் ஒட்டக அணியின் பயணத்தைப் போன்றது. இந்திய இளைஞர்கள் நசித்துபோன மறைபொருள் பற்றிய ஆய்வேடுகளில் அறிவைத் தேடிச் செல்ல வேண்டியதில்லை. அங்கு முடிவில்லாத வார்த்தை ஜாலங்களைத் தவிர வேறொன்றும் இல்லை. வாழ்வுபற்றியும் அதன் சிக்கல்பற்றியும் நீங்கள் தெரிந்து கொள்ள விரும்பினால் ரூஸோ, வால்டேர், பிளாட்டோ, அரிஸ்டாடில், ஹெகால், ஸ்பென்ஸர், மார்க்ஸ், டால்ஸ்டாய், ரஸ்கின், காம்ரூட் மற்றும் பிற ஐரோப்பிய சிந்தனையாளர்களின் நூல்களையும் படியுங்கள்.

இந்தப் பழிப்புரைகள் ஒருபுறம் இருக்கட்டும், ஒரு சமூக அரசியல் முறை என்ற அளவில் இந்துமத வளர்ச்சியில் உபநிடதத் தத்துவத்தின் செல்வாக்கு ஏதாவது உள்ளதா? இந்துக்களின் நன்னடத்தை, சமூக ஒழுங்குமுறை ஆகியவற்றிற்கு எவ்வகையிலும் உதவாத, தொடர்பு பொருத்தமில்லாத, பயன்தராத கற்பனைக் குவியலாகவே இது உள்ளது என்பதில் ஐயமேதும் இல்லை.

துரதிர்ஷ்ட வசமான இந்த விளைவுகளுக்கான காரணங்களை ஆராய்வது தேவையற்றதாகி விடாது. இதில் ஒரு காரணம் வெளிப்படையானது. உபநிடதத் தத்துவம் முழுமை பெறாததாக உள்ளதால் அதனால் விளைந்திருக்கக் கூடிய பயன்கள் கிடைக்கவில்லை. உபநிடதங்களின் மையக் கருத்து என்னவென்று கேட்போமானால் இது தெளிவாகிவிடும். பேராசிரியர் மாக்ஸ்முல்லர்[1] கூறியுள்ளார். அவர்சொற்களில் கூறுவதானால் 'உன்னையே நீ அறிந்து கொள்' என்பதுதான் உபநிடதங்களின் மையக் கருத்து. உபநிடதங்கள் கூறும் இந்த உன்னையே நீ அறிந்து கொள் என்பதன் பொருள் 'உண்மையாக உன்னை நீ அறிந்துகொள்' என்றாகுமானால் அது சுட்டிக் காட்டும், உன் தன் முனைப்பு அதனை நீ அறிந்து கொள், அதனைக் கண்டு அதன் உயர்நிலையை அறிந்து, ஆதி அந்தம் இல்லாத உன்னை, எல்லாவற்றிலும் ஊடுருவி இருப்பதும் இரண்டாவது என்று ஒன்று உண்டு என்பதும் அற்ற 'ஒன்றை' அறிந்து கொள் என்பதே பொருள்.

ஆத்மா, பிரமா இரண்டும் ஒன்றே என்பது தான் உபநிடதங்கள் கண்ட பேருண்மையாதலின் இந்த உண்மையை மாந்தர் யாவரும் அறியும்படி அது கூறுகிறது. இனி, உபநிடதங்களின் தத்துவம் ஏன்

---

1 ஹப்பர்டு சொற்பொழிவுகள், 1878 பக் 317

பயனற்றுப் போயின என்பதற்குப் பல காரணங்கள் உள்ளன. அதைப் பற்றி வேறொரு இடத்தில் விளக்குவேன். இங்கு ஒன்றைமட்டும் நான் குறிப்பிடுவேன். உபநிடதங்களின் தத்துவ ஞானிகள் உண்மையை அறிவது மட்டுமே போதாது என்பதைப் புரிந்து கொள்ளவில்லை. ஒருவன் உண்மையை நேசிக்கத் தெரிந்து கொள்ள வேண்டும். தத்துவத்துக்கும் மதத்திற்கும் உள்ள வேறுபாட்டை இருவழிகளில் விளக்கலாம். தத்துவம் உண்மையை அறிவதோடு சரி. சமயம் உண்மையை நேசிப்பது சம்பந்தப்பட்டது தத்துவம் அசையாதது. மதமோ செயலாற்றல் மிக்கது. இந்த வேற்றுமைகள் ஒரே பொருளின் இரு தன்மைகள். தத்துவம் ஏன் அசையாததாக இருக்கிறது என்றால், அது உண்மையை அறிவதில் மட்டுமே ஈடுபாடு கொண்டது. மதம் ஏன் செயல்வேகம் மிக்கதாக இருப்பது என்றால், அது உண்மையை நேசிப்பதில் ஈடுபாடு கொண்டது. இதுபற்றி மாக்ஸ் புளோமேன்[1] சரியாகச் சொல்லியுள்ளார்:

"...மதம் செயல்வேகம் உள்ளதாகவும், எதன் மேலாவது நேசிக்கும் உணர்வைத் தோற்றுவிப்பதாகவும் இல்லாவிட்டால், மதம் என நாம் அழைக்க ஏதும் இல்லாமல் இருப்பதே மேல். உண்மையைக் காண்பதே மதம். ஆதலால், உண்மை காண்பதோடு, அதனோடு அன்பும் இணைந்திராமற் போனால் அதைப் பாராமல் இருப்பதே மேல்! உண்மையை வெறுப்பதற்காகவே சாத்தான் அதைக் கண்டவன்." டென்னிசன் "நாம் உயர்ந்ததைக் காணும் போது, அதை நேசிக்க வேண்டும் என்றார். இது தொடரவில்லை. பற்றற்ற நோக்கத்தில் மிக உயர்ந்ததைக் காண்கையில், அதன் மாறுபாட்டாலும் தொலைவாலும் விரட்டி அடிக்கிறது - அதன்மேல் பயம் - நாம் எதைக் கண்டு பயப்படுகிறோமோ அதனை வெறுக்கிறோம்..."

மனித அனுமானத்தைக் கடந்த தத்துவங்களின் தலைவிதி இதுதான். அவற்றினால் வாழும் வகையின் மீது எவ்வகை பாதிப்பும் ஏற்படுவதில்லை. பிளாக் சொல்வதைப் போல், மதமே அரசியல், அரசியலே சகோதரத்துவம். தத்துவம் மதம் ஆக வேண்டும். அதாவது, அது செயல்படும் கோட்பாடாக வேண்டும். அது வெறும் மறைபொருள் ஆய்வாக இருந்து விடக் கூடாது. புளோமென் சொல்வதுபோல், மதம் மறைபொருள் அறிவியலாக மட்டும் இருந்தால், சாதாரண எளிய மக்களுக்கு அதில் ஈடுபாடு இராது என்பது உறுதி.

"உண்மையை மறைபொருள் அறிவியல் அளவில் முழுதாக வைத்திருப்பது என்பது, அதை மடத்தனமாக்குவதாக ஆகிவிடும். மதத்தில் நம்பிக்கை, நேரடியாக முக்கியப் பயனில்லாத அரசியல்போல், இறுதி நம்பிக்கை சரியாகச் சொல்வதென்றால் முட்டாள் தனமாகி

1.பயனற்ற மதத்திற்கு நேரும் கதி, ஏ. டெல்போன், ஜனவரி. 1941.

விடுகின்றது. அத்தகைய நம்பிக்கை ஒரு மாற்றத்தையும் ஏற்படுத்துவதில்லை. அப்படி மாற்றம் எதுவும் செய்யவில்லை என்றால் காலமும் இடமுமான உலகில் 'இல்லாதது' என்பதே பொருள்". இந்தக் காரணங்களாலேயே உபநிடதங்களின் தத்துவம் பயனற்றதாக ஆகிவிட்டது.

இந்துமதக் கோட்பாடுகள், உபநிடதங்களின் தத்துவம் ஆகியவை இருந்தும் கூட மனு தோற்றுவித்த இந்து மதத்தத்துவம் ஒரு சிறிதும் அசைக்கப்படவில்லை. திறனற்ற அவற்றால், மதத்தின் பேரால் மனு பரப்பிய இழுக்கைப் போக்கவும் முடியவில்லை.அவை இருந்த போதிலும் இன்னும் சொல்லலாம்:.

"இந்து மதமே! உன் பெயர்தான் ஏற்றத் தாழ்வு!"

## VI

சமத்துவமின்மையே இந்து மதத்தின் ஆன்மா. இந்து மதத்தின் நன்னடத்தைவிதி சமுதாயத் தன்மையுடையது மட்டுமே. சுருங்கச் சொல்வதென்றால் இது மனிதத்தன்மையற்றது. நன்னடத்தையற்றது; மனிதத் தன்மையற்றதும், நன்னடத்தையற்றதும் எளிதாகத் தீய நடத்தையாகவும், மனிதாபிமான மற்றதாகவும் இகழ்ச்சிக்குரியதாகவும் ஆகிவிடுகிறது. இதை மறுப்பவர்களும் அல்லது இதில் ஐயம் கொள்பவர்களும் இந்து சமூகம் எப்படிப்பட்டவர்களைக் கொண்டிருக்கிறது என்பதையும் அதில் சில பகுதியினரின் நிலைமை எப்படிப்பட்டது என்பதையும் ஆராய வேண்டும். பின்வரும் சில உதாரணங்களைக் காண்போம்.

முதலில் பழங்கால மக்களை எடுத்துக் கொள்வோம். அவர்களுடைய நாகரிகம் எந்த நிலையில் உள்ளது?

மனித நாகரிக வரலாறு, காட்டுமிராண்டி நிலையிலிருந்து பண்படாத நிலைக்கும், பண்படாத நிலையிலிருந்து நாகரிக நிலைக்கும் மாறிய மாந்தரின் முன்னேற்றம் முழுவதையும் கூறுகிறது. ஒரு நிலையிலிருந்து இன்னொரு நிலைக்கு மாறியபோது, மனிதனின் பயணத்தை முன்நோக்கி நடத்திச் சென்ற கலையைப் பற்றிய அறிவுத்துறையில் ஏதாவதொரு கண்டுபிடிப்பு அல்லது புதிய கண்டுபிடிப்பினால் முன்னேற்றம் நிகழ்ந்துள்ளது.

மாந்தரின் முன்னேற்ற நோக்கத்தில் பார்க்கும்போது நயம்பட பேசும் திறன் வளர்ச்சி மனிதனை விலங்குகளிடமிருந்து வேறுபடுத்தியது. அது காட்டுமிராண்டி நிலையின் முதற்படி ஆகும். காட்டுமிராண்டி நிலையின் இடைக்காலம் நெருப்பை உண்டாக்கவும் அதைப் பயன்படுத்தவும் தெரிந்து கொண்டபோது ஏற்பட்டது. இந்த வியத்தகு கண்டுபிடிப்பு

உதவியது. அவன் காட்டை விட்டு நீங்கி, பலவகையான, குளிரான இடங்களுக்குப் போகவும் மாமிசம், மீன் உட்பட உணவு வகைகளைப் பெருக்கிக் கொள்ளவும் முடிந்தது. அடுத்த கட்ட கண்டுபிடிப்பு வில்லும் அம்பும் ஆகும். இது பழங்குடி மக்களுக்குப் பெருத்த வெற்றி. இது காட்டு மனிதனின் மிக உயந்த நிலை. அது உண்மையிலேயே வியத்தகு ஆயுதம். இந்தக் கருவியை வைத்திருந்தவர் விரைந்தோடும் விலங்கையும் வீழ்த்த முடிந்தது; கொடியவிலங்குகளிடமிருந்து தம்மைக் காத்துக்கொள்ள இயன்றது.

காட்டுமிராண்டி நிலையிலிருந்து நீங்கி நாகரிகம் அடையாத நிலையில் இருந்தபோது மட்பாண்டங்கள் கண்டுபிடிப்புஏற்பட்டது. அதுவரை நெருப்பில் வைக்கும் போது தாங்கக் கூடிய பாத்திரங்கள் மனிதனிடம் இல்லை. பாத்திரங்கள் இல்லாமல் மனிதனால் சேமித்துவைக்கவும் சமைக்கவும் முடியவில்லை. ஐயத்திற்கு இடமின்றி மட்பாண்டங்கள் பெருத்த அளவில் நாகரீகத்திற்கு வழிகோலின.

நாகரிகம் அடையாத நிலையின் இடைநிலை, மனிதன் காட்டு விலங்குகளை வீட்டில் வளர்க்க முற்பட்டபோது தொடங்கியது. காட்டு விலங்குகள் அவனுக்கு வேலைகள் செய்ய உதவியாக இருக்கும் என அறிந்தான். மனிதன் இப்போது மேய்ப்பவனுமாக ஆனான். இதற்கப்புறம் காட்டு விலங்குகளை உணவுக்காக விரட்டி வேட்டையாடுவதையே நம்பி இருக்க அவசியம் இல்லாமற் போயிற்று. எல்லாப் பருவ காலங்களிலும் பால் கிடைக்கும் நிலை ஏற்பட்டதால் அவனுடைய உணவிற்கு அது மிகச் சிறந்த துணை ஆயிற்று. குதிரையையும் ஒட்டகத்தையும் துணையாகக் கொண்டு இதுவரை கடக்க முடியாதிருந்த விரிவான இடங்களுக்குப் பயணம் சென்றான். பழக்கி வயப்படுத்தப்பட்ட விலங்குகளை வாணிபத்துக்கும் பயன்படுத்திக் கொண்டு பொருள்களையும் கருத்துக்களையும் பரிமாறிக் கொள்ள முடிந்தது.

அடுத்த கண்டுபிடிப்பு இரும்பை உருக்கும் கலை. இது நாகரிகம் அடையாத நிலையின் மிக உயர்ந்த வளர்ச்சியைக் குறிக்கின்றது. இந்தக் கண்டுபிடிப்பால் மனிதன் "கருவி செய்யும் விலங்காக" ஆகி விட்டான். இதனால் அவன் கருவிகளைக் கொண்டு மரத்தையும், கல்லையும் செதுக்கவும் வீடுகளும் பாலங்களும் கட்டவும் முடிந்தது.

நாகரிகம் அடையாத கால மனிதனின் வளர்ச்சி எல்லை முடிவைக் இது குறிக்கின்றது.

நாகரிகம் அடையாத கால மக்கள், நாகரிகம் அடைந்த மக்கள் ஆகியோருக்கிடையில் நாகரிகம் என்பதன் முழுப் பொருளில்

வேறுபடுத்திக்காட்டும் கோடாகக் கருத்துக்களைக் குறியீடுகள் மூலம் தெரிவிக்கும் கலை, அதாவது எழுதும் கலை அமைந்தது. முன்னைய கண்டுபிடிப்புகளால் தூரத்தை வென்றதைப்போல், இதனால் மனிதன் நேரத்தை வெற்றிகொண்டான். இப்போது அவன் தன் செயல்களையும் எண்ணங்களையும் எழுத முடிந்தது.

இதைத் தொடர்ந்து அவனுடைய அறிவு, அவனது கவிதைக் கனவு, நல்லொழுக்க நோக்கங்கள் ஆகியவற்றைத் தன்னுடைய காலத்தவருக்கு மட்டுமின்றி இனிக் காலங்காலமாகத் தொடர்ந்துவரும் தலை முறையினரும் படிக்குமாறு எழுதி வைக்க முடிந்தது. மனிதனுக்கு அவனது வரலாறு பாதுகாப்பானதாகவும் உறுதியானதாகவும் ஆயிற்று. இந்தச் செங்குத்தான ஏற்றமும் அதில் ஏற்பட்ட முன்னேற்றமும் நாகரிகத்தின் தொடக்கம் ஆயிற்று.

இங்கே ஒரு கணம் நிறுத்தி, பழங்குடி மக்களின் நாகரிகம் எந்நிலையில் உள்ளது என்பதைப் பார்ப்போம்.

பழங்குடிகள்[1] என்று அழைக்கப்படும் அந்த மக்களின் பெயரே அவர்களின் தற்கால நிலையையும் விளக்குவதாக உள்ளது. அவர்கள் இங்குமங்குமாகச் சிதறி அமைந்துள்ள சிறு குடிசைகளில் வாழ்கின்றனர். அவர்கள் காடுகளில் கிடைக்கும் கனிகள், கொட்டைகள், கிழங்குகள் ஆகியவற்றை உண்டு வாழ்கின்றனர். உணவுக்காக மீன் பிடிப்பதும், வேட்டையாடுவதும் வழக்கம் அவர்களின் சமூகப் பொருளாதாரத்தில் வேளாண்மைமிகச் சிறிய அளவிலேயே இடம் பெற்றுள்ளது. உணவு கிடைப்பது நிலையற்றதாக இருப்பதால் வேறு வழியில்லாமல் அவர்கள் அரைப்பட்டினியுடன் இருக்க வேண்டியதாகிறது. உடையைப் பொறுத்தவரையில் மிகக் குறைந்த அளவிலேயே சிக்கனமாக உடுத்தும் நிலையில் உள்ளனர். இதனால் அனேகமாக நிர்வாண நிலையில் இங்குமங்குமாக உலவுகின்றனர். நிர்வாண போரஜாக்கள் எனப் பொருள்படும் ' போண்டா போரஜாக்கள்' என்னும் பழங்குடியினர் பெண்கள் உள்ளாடை போல் பயன்படுத்தும் மிகக் குறுகிய துணியை அஸ்ஸாமிலுள்ள மாப்ஜாக் நாகர்களைப்போல துணிகள் இடது தொடைமேல் தொங்கும் வண்ணம் அணிகிறார்கள். இந்த உள்ளாடைகளை ஒரு வகைக்காட்டு மர இழையைக் கொண்டு வீட்டில் நெய்கின்றனர். பெண்கள் மணிகளாலும் பனையோலைகளாலும் செய்த மாலைகளை தலை அலங்காரமாக அணிகின்றனர். ஏராளமான மணிகளையும் கழுத்து அணிகளையும் கொம்ஜாக் பெண்கள் அணிவது போலவே இவர்களும் அணிகின்றனர். மற்றபடி வேறெதையும் இவர்கள்

---

[1] இதைப்பற்றிய தகவல்கள் இந்திய மக்கள் தொகைக் கணக்கு, 1931, தொகுதி 1, பகுதியிலிருந்து எடுத்தவை.

அணிவதில்லை. பெண்கள் முழுதாக மொட்டையடித்துக் கொள்கிறார்கள். இவர்களில், நிஜாம் ராஜ்யத்தைச் சேர்ந்த பர்ஹாபாத் அருகே வாழும் செஞ்சுக்கள் என்னும் பழங்குடி இனத்தாரின் குடிசைகள் கூம்பு வடிவத்தில் அமைந்தவை. மூங்கில்கள் உச்சியில் சேர்த்துக் கட்டப்பட்டு மஞ்சம்புல்லில் கூரை வேயப்பட்டிருக்கும். வெகுசிலப் பொருட்களே அவர்களுக்குரிய உடமைகள். மிகக் குறைந்த அளவு உடை- லங்கோட்டும் இன்னொரு துணியுமே ஆடவர்க்கு உரியவை. பெண்கள் மேலே ஓர் ஆடையும் சிற்றாடையும் அணிவர். அவர்களுக்குரிய சமையல் பானைகள், ஓரிரு கூடைகள் ஆகியவற்றில் எப்போதாவது தானியங்கள் இருக்கும். கால்நடைகளையும் வெள்ளாடுகளையும் வைத்துள்ளனர். குறிப்பாக இந்தக் கிராமத்தில் ஓரளவு விவசாயம் செய்கின்றனர். வேறு இடங்களில் உள்ளவர்கள் காட்டில் கிடைக்கும் பொருள்களையும் தேனையும் விற்று வாழ்கிறார்கள். மோரியர் எனப்படும் இன்னொரு வகைப் பழங்குடியினர் ஆண்கள் பெரும்பாலும் இடுப்பில் ஒரு துணியை முன்னால் ஒரு துண்டு தொங்குமாறு உடுக்கிறார்கள். மணியினாலான மாலைகளை அணிகின்றனர்; நடனம் ஆடுகையில் தலைப்பாகைகளில் சேவல் இறகுகளையும், மயில் தோகைகளையும் சொருகிக் கொள்கின்றனர். பெண்கள் முகத்திலும் காலிலும் பச்சைக்குத்திக் கொள்கிறார்கள். அவரவர் விருப்பப்படி முட்களாலும் ஊசிகளாலும் பச்சைக்குத்திக் கொள்கிறார்கள். அவர்களின் தலைமுடியில் காட்டுப் பறவைகளின் இறகுகளைச் சொருகிக் கொள்கிறார்கள். மரச்சீப்பாலும், தகரம் பித்தளை அணிகளாலும் தலை அலங்காரம் செய்து கொள்கிறார்கள்.

இந்தப் பழங்குடிமக்கள் புழு, பூச்சி முதலிய எதையும் உண்ணத் தயங்குவதில்லை. தாமே இறந்த விலங்காயினும் சரி, புலியால் நான்கு அல்லது அதிக நாட்களுக்கு முன்பாகக் கொல்லப்பட்ட விலங்காயினும் சரி, அவற்றின் மாமிசத்தைக் கொஞ்சமும் விடாமல் உண்ணத் தயங்கமாட்டார்கள்.

அடுத்ததாகக் குறிப்பிடுவதற்குரியவர்கள் குற்ற இயல்புள்ள பழங்குடியினர். இந்தப் பழங்குடியினர் மற்ற பழங்குடியினரைப் போலக் காடுகளில் வாழ்வதில்லை. காடுகளை ஒட்டியுள்ள சமவெளிகளில் நாகரிகமடைந்த மக்களைப் போலவே வாழ்கிறார்கள். ஹாலியஸ் தமது, "ஐக்கிய மாகாணங்களில் குற்ற இயல்பு பரம்பரையினர்" என்னும் நூலில் இவர்களின் நடவடிக்கைகளைப்பற்றி விவரித்துள்ளார். இவர்கள் குற்றம்புரிவதே இயல்பாகக் கொண்டவர்கள். சிலர் தம் குற்ற நடவடிக்கைகளை மூடிமறைக்க விவசாயத்தில் ஈடுபடுகிறார்கள். அவர்களின் சட்ட விரோத செயல்களான வன்முறைகளில் வழிபறி,

கொள்ளை ஆகியவற்றிற்கு அதிக வாய்ப்புண்டு. ஆனால் குற்றம் புரிவதற்கென்றே கூட்டம் கூட்டமாகத் திரியும் இவர்களின் பிடியிலிருந்து எதுவும் தப்புவதில்லை. கொள்ளையிடுவதென்று முடிவெடுத்தும் கொள்ளையிடுவதற்குரியவரைத் தேர்ந்தெடுக்கவும் அவர்கள் வாழும் கிராமத்தாரின் பழக்க வழக்கங்களை அறியவும், அவர்களுக்கு உதவி செய்வதற்கு வெளியூரார் யாராவது வரக்கூடுமானால் அந்த ஊரின் தொலைவும், தாம் கொள்ளையிடப் போகும் மக்களிட முள்ள ஆட்கள், துப்பாக்கிகளின் எண்ணிக்கை ஆகியவற்றையும் ஒற்றர்களை அனுப்பித் தெரிந்துகொள்வர். தாக்குதல் பெரும்பாலும் நள்ளிரவில் நடக்கும். ஒற்றர் தந்த விவரங்களின் அடிப்படையில் செயற்பட்டு ஆட்கள் கிராமத்தின் பலபகுதிகளில் நிறுத்தப் படுவர். துப்பாக்கி வெடித்துக் கொள்ளையிடும் முக்கியக் குழுவினரின் கவனத்தை ஈர்ப்பர். முன்னேற்பாட்டின்படி குறிப்பிட்ட வீடு, அல்லது வீடுகளைத் தாக்குவர். இத்தகைய குழு அனேகமாக 30 அல்லது 40 பேரைக் கொண்டிருக்கும்.

குற்றம் புரிவதையே தொழிலாகக் கொண்ட இந்த மக்களின் வாழ்க்கை முறையை அறிவது அவசியம். இந்தக் கூட்டத்தாரின் குடும்பத்தில் பிறந்த சிறுவனொருவன் நடக்கவும், பேசவும் தொடங்கும்போதே குற்றம் புரிய ஈடுபடுத்தப்படுகின்றான். சிறுவர்களைச் சிறுசிறு திருட்டுகளில் ஈடுபடுத்துவதில் ஆபத்து வாய்ப்பு குறைவு. சிறுவர்களானால் அகப்பட்டதும் கை விலங்கு இடப்படுவர்; பெரியவர்களாக இருந்தால் உடனே கைதாக வேண்டியதுதான். இந்த வகையில் பார்க்கும்போது, இவர்களைப் பொறுத்தவரையில் சிறுவர்களைக் குற்றம் புரிய வைப்பது நடை முறைக்கு உகந்த தாகிறது. திருட்டுக் குற்றங்களில் பெண்களும் பெரும்பங்கு பெறுகின்றனர். தாக்கிக் கொள்ளையடிப்பதில் பெண்கள் ஈடுபடுவதில்லையாயினும் வேறு வகைகளில் அவர்களுக்கு நிறைய பொறுப்புகள் உள்ளன. திருட்டுப் பொருள்களை விற்பதில் திறமை வாய்ந்தவர்களாக இருப்பதோடு இந்த இனத்துப் பெண்கள் கடைகளில் திருடுவதில் வல்லவர்கள்.

ஒரு காலத்தில் குற்றத் தொழில் புரிபவர்களான இந்தப் பழங்குடியினர் பிண்டாரிகள், தக்குகள் (**Thugs**) போலவே தொழில் முறையாகக், குற்றம் புரிவதற்கென்றே ஒருங்கிணைந்த கூட்டத்தைச் சார்ந்திருந்தனர்.

பிண்டாரிகள் ஆயுதம் தாங்கிய கொள்ளைக் கூட்டத்தினராவர். 20000 அல்லது அதற்கு மேற்பட்ட எண்ணிக்கையில் திறமைவாய்ந்த குதிரைப்படைகளைக்கூடத் திரட்டக் கூடிய அளவுக்குக் கொள்ளையடிப்பதற்குச் சுதந்திரமான ராணுவ அமைப்புகளாக

அவர்களின் அமைப்புகள் இருந்தன. இவர்கள் தங்கள் படைத் தளபதிகளுக்குப் பணிந்து செயல்பட்டனர். அவர்களில் சிட்டு என்னும் திறமை வாய்ந்த தளபதியின் பொறுப்பில் 10,000 குதிரைகளும் 5,000 சிறந்த குதிரைப் படைவீரர்களும், மற்றும் காலாட் படையினரும் துப்பாக்கிகளும் இருந்தன. பிண்டாரிகள் நிரந்தரமான படை வைத்திருக்கும் நோக்க மின்றி ஒழுங்கில்லாத இந்தப் படைவீரர்களுடன் அணிகளாக அமைந்து கொள்ளையடிப்பதையே தொழிலாகக் கொண்டனர். பிண்டாரிகள் படை நடத்திச் சென்று வெற்றிகளைக் குவிக்க வேண்டும் என்ற நோக்க முடையவர்கள் அல்லர். அவர்கள் நோக்கமெல்லாம் கொள்ளையடிப்பதும், கொள்ளையடித்த பணத்தைக் தமக்கென்று வைத்துக் கொள்வதும் தான். பொதுக் கொள்ளையடிப்பதும் அபகரிப்பதுமே அவர்கள் தொழில். எந்தச் சட்டங்களையும் அவர்கள் மதித்ததில்லை. எவர்க்கும் அடிபணிந்த குடிமக்களாகவும் எவருக்கும் விசுவாசமானவர்களாகவும் அவர்கள் இருந்ததில்லை. எவரையும் அவர்கள் மதித்ததுமில்லை. உயர்ந்தோர், தாழ்ந்தோர், ஏழை, பணக்காரன் என்ற வேறுபாடுகளோ ஈவு இரக்கமோ பயமோ இல்லாமல் கொள்ளையடித்தனர்.

தக்குகள்[1] கொலை புரிவதையே தொழிலாகக் கொண்ட நன்கு அமைந்த கூட்டத்தைச் சேர்ந்தவர்கள், 10 முதல் 100 பேர்கள் வரை குழுவினராக அமைந்து பலவகை வேடங்களில் இந்தியா முழுவதும் திரிந்தனர். பணக்கார வழிப் போக்கர்களிடம் கலந்து பழகி அவர்களின் நம்பிக்கைக்கு உரியவர்களாக அவர்களிடம் வேலைகள் செய்து, தமக்குச் சாதகமான நேரம் பார்த்து கைக்குட்டையாலோ அல்லது கயிற்றாலோ கழுத்தில் சுருக்கிட்டுப் பொருள்களைக் கொள்ளையடித்துக் கொண்டு பிணத்தைப் புதைத்துவிடுவர். தமது புனித பணிக்காக ஒதுக்கிய பங்கையும் சர்க்கரைப் படையலும் வைத்துச் சிறப்புச் சடங்குகளைச் செய்வர்; பண்டைய மரபின்படி விதிமுறைகளை மீறாமல் இந்தப் பூசைகளை நடத்துவர். இவர்கள் இந்துக்களின் அழித்தல் தெய்வமாகிய காளியின் பரம பக்தர்கள். தங்கள் நலத்திற்காகக் கொலை செய்தல் அவர்களின் மதக் கடமை என்றும்அவர்களைப் பொறுத்தவரை அது ஒரு புனிதமானதும் மரியாதைக்குரியதுமான தொழில் என்றும் கருதினர். அவர்கள் தாம் தவறேதும் செய்வதாகவோ இவ்வாறு செய்வதற்கு மனச் சாட்சி உறுத்துவதாகவோ கருதவில்லை. காளி தேவதையின் சித்தப்படி, அவளுடைய உத்திரவுப்படி, அவளுடைய பெருமையைக் காப்பாற்றுவதற்காக மேற் கொண்டிருக்கின்ற தொழிலை மிகவும் சிக்கலான வழிமுறைகள் மூலம் அவள் காட்டும் சகுனங்களின்படி இந்தத் தொழிலை மேற்கொண்டனர். இவற்றிற்குக் கீழ்படிந்து, தம் தொழிலுக்கு

1 பிரிட்டானிய கலைக் களஞ்சியம், 11-வது பதிப்பு தொகுதி 26, ப. 896.

இரையாவோருடன் நூறு மைல் தூரத்திற்கு மேலாகவும் நடந்து சென்று அவர்கள் அறியும் வண்ணமே பாதுகாப்பான சமயம் பார்த்திருந்து தமது திட்டத்தை நிறைவேற்றி விடுவார்கள். இந்த வேலை முடிந்ததும் பூஜைகளும் சடங்குகளும் செய்து வணங்குவர்; கொள்ளையடித்த பொருளில் ஒரு பெரும் பகுதியை அந்தத் தெய்வத்திற்கென்று ஒதுக்கி வைப்பார்கள். தக்குகள் தங்களுக்குள் செய்திகளைப் பரிமாற்றம் செய்து கொள்ள ஒருவகைச் சங்கேத சொற்களைப் பேசுவர். இந்தியாவில் வெகு தொலைவு வரையில் பரவலாக உள்ள தங்கள் கூட்டத்தார் ஒருவரையொருவர் அடையாளம் கண்டு கொள்வதற்குச் சிலவகைச் செய்கைகளைச் செய்வார்கள். இவர்களோடு இந்தத் தொழிலில் ஈடுபட முடியாத நிலையிலுள்ள முதியவர்கள், நலிந்தோர், ஊனமுற்றோர் ஆகியோரும் கூட காவலாளிகளாகவும், வேவு பார்ப்பவர்களாகவும், சமையல் செய்வோராகவும் பணியாற்றுவார்கள். மிகச் செம்மையான அமைப்பு முறையினால் தாங்கள் செய்யும் கொலைகளைப் பெரிதும் மதம் என்ற போர்வையில் மூடி மறைத்து மிக இரகசியமாகவும் பாதுகாப்புடனும் பல நூற்றாண்டுக் காலமாக இந்த வேலையை அவர்கள் செய்ய முடிகின்றது. இந்திய நாட்டை ஆண்ட முஸ்லீம், இந்து ஆட்சியாளர்களும் கூடத் தக்குகளின் இந்தத் தொழிலை முறையான தொழிலெனக் கருதியது குறிப்பிடத்தக்க உண்மையாகும். தக்குகள் அரசுகளுக்கு வரி செலுத்தினர்; அரசுகளும் அவர்களுக்கு எவ்வகைத் தொந்தரவும் தராமல் விட்டு விட்டன.

இந்த நாட்டில் பிரிட்டிஷார் ஆட்சியாளர்களாக வந்தபோது இந்தத் தக்குகளை ஒடுக்கும் முயற்சியை மேற்கொண்டனர். 1835 ஆம் ஆண்டில் 382 தக்குகள் தூக்கிலிடப்பட்டனர். 986-பேர் நாடு கடத்தப்பட்டனர் அல்லது ஆயுள் தண்டனை பெற்றனர். 1876-ஆம் ஆண்டின் இறுதி வரையிலும் கூட தக்குகளின் எண்ணிக்கை 344 வரை இருந்ததாகப் பதிவாகியது; 1904 வரை இந்திய அரசாங்கத்தின் தக்குகள் மற்றும் கொள்ளையர் துறை செயற்பட்டு வந்து, அதன் பின்னர் மத்திய குற்றவாளிகள் புலனாய்வுத் துறையாக மாறியது. குற்றவாளி பழங்குடியினர் குற்றம் புரிவதையே முறையானதொரு அமைப்பாகக் கொண்டு வாழ முடியாமல் போனபோதிலும் இத்தகைய குற்றம் புரிவது தொடர்ந்து அவர்களின் முதன்மையான தொழிலாகவே இருந்து வந்தது.

இந்த இருவகை வகுப்பரைத் தவிர, தீண்டாதார் எனப்படும் மூன்றாவது வகுப்பினரான மக்கள் கூட்டத்தினர் உள்ளனர்.

தீண்டாதாருக்குக் கீழே அணுகப்படக் கூடாதார் எனப்படுவோர் உள்ளனர். தீண்டாதார் எனப்படுவோர் தொடுவதால் தீட்டாகக்

கூடியவர்கள் ஆவர். அணுகப்படக் கூடாதாரோவெனில் ஒரு குறிப்பிட்ட எல்லையைக் கடந்து நெருங்கி வந்தாலே தீட்டாக்க கூடியவர்களாவர். அணுகக் கூடாதவர்கள் என்ற பிரிவினருக்குள் வரும் நாயாடிகள் என்போர் நாய்க்கறியைச் சாப்பிடுவோராக இந்துக்களில் மிக இழிந்த சாதியினராக உள்ளனர். இந்த சாதியார் பல மைல்கள் தூரம் அந்த வழியாக நடப்போர், வண்டி ஓட்டிக் கொண்டு போவோர், படகு ஓட்டுவோர் ஆகியோருக்குப் பின் தக்கதூரத்தை மீறாமல் சென்று தங்களுக்கு ஏதாவது தானம் போடுமாறு கூப்பாடு போடும் வழக்கத்தை விடாமல் பின்பற்றுபவர்கள். அவர்களுக்கு எதையாவது கொடுக்க விரும்புவோர் அதைத் தரையில் வைத்துவிட்டுப் போதுமான அளவுதூரம் விலகிச் சென்றபின், அதைப் பெறுவோர் பெரிதும் பணிந்து வந்து எடுத்துக் கொண்டு போய் விடுவார்கள். இந்த மக்களைப் பற்றி தர்ஸ்டன் குறிப்பிடுகையில், "என் ஆய்வுக்குரிய இந்த மக்களை (நாயாடிகள்) ஷோரனூரில் பார்த்தேன். இந்த ஊரைச் சுற்றி மூன்று மைல் தூரத்தில் இவர்கள் வாழ்ந்த போதிலும் அங்கிருந்த ஓர் ஆற்றின் நீண்ட பாலத்தைக் கடந்து செல்வது தீட்டுக்குரியதாக ஆகிவிடும் என்று கருதும் நெடுங்காலப் பழக்கத்தின் காரணத்தால் பல மைல்கள் தூரமுள்ள சுற்று வழியிலேயே செல்கின்றனர்".

அணுகக் கூடாத இந்த மக்களுக்குக் கீழாகப் பார்க்கக் கூடாதவர்கள் என்போர் உள்ளனர்.

சென்னை மாகாணத்தின் திருநெல்வேலி மாவட்டத்தில் புதிரை வண்ணார் எனப்படும் பார்க்கக் கூடாதவர் என்னும் வகுப்பினர் உள்ளனர். இவர்களைப் பற்றி, "இவர்கள் கண்ணில் பட்டாலே தீட்டாகி விடும் என்ற காரணத்தினால், இந்த மக்கள் பகல் நேரத்தில் வெளியே வர அனுமதிக்கப்படுவதில்லை. துரதிருஷ்ட சாலிகளான இந்த மக்கள் இரவு நேரப் பழக்கத்தைக் கட்டாயமாக மேற்கொண்டு, இருட்டிய நேரத்தில் தமது குடியிருப்புகளை விட்டு வெளியே வந்து வேலைகளை முடித்துக் கொண்டு நீர் நாய்களைப் போலவும், ஓநாய்களைப் போலவும் பொழுது புலர்வதற்குள் ஓடிப் பதுங்கிக் கொள்ள வேண்டும்."

இந்த மக்களின் மொத்த மக்கள் தொகையைக் கவனிக்க வேண்டும். நாகரிகமற்ற பழங்குடியினர் மொத்த தொகை 2.5 கோடி; குற்றத் தொழில் பழங்குடியினர் 45 லட்சம் ; தீண்டாதார் 5 கோடி. இவர்களின் கூட்டுத் தொகை 7 கோடி 95 லட்சம். இந்து மதம் சுற்றியுள்ள சூழலில் நல்லொழுக்கம், பொருளாதாரம், சமூக, ஆன்மீகம் ஆகியவற்றில் தாழ்த்தப்பட்டு எவ்வாறு இந்த மக்கள் தொடர்ந்து இப்படியே இருந்திருக்க முடியும் என்று கேட்டுப் பாருங்கள். இந்துக்கள் தமது

நாகரிகமே உலகில் தொன்மையான நாகரிக மென்றும், மற்ற மதங்களைவிடத் தங்கள் மதமே உயர்வானது என்றும் கூறுகின்றனர். இது உண்மையானால் நம்பிக்கையும் தெளிவும் பெறுமாறு செய்து, இந்த மக்களை உயர்த்த முடியாமல் போனது எப்படி? குறைந்த பட்சம் இந்த மக்களைக் கடைத் தேற்ற முடியாமல் போனது எப்படி? கோடான கோடி மக்களை குற்றவாளிகளாகவும், கேவலமான நிலையிலும் வாழ விட்டுவிட்டுக் கைகளைக் கட்டிக் கொண்டு இருந்தது எப்படி? இதற்கெல்லாம் என்ன பதில்?. இதற்குரிய ஒரே பதில் இந்துமதம் தீட்டு பட்டு விடும் என்ற பயத்தில் ஒடுங்கிக் கிடந்ததுதான். சுத்தப்படுத்திக் கொள்ளும் ஆற்றல், அதிகாரம் அதற்கில்லை. தொண்டு செய்ய வேண்டும் என்ற உந்துதலும் அதற்கில்லை. எனவேதான் அதன் ஒட்டு மொத்த தன்மையே மனிதாபிமான மற்றதாகவும், நல்லொழுக்க மற்றதாகவும் உள்ளது.. இதனை மதம் என்று சொல்வதே பொருத்தமில்லாத தொரு பெயராகும். மதமென்பது எதற்காக உள்ளதோ அதற்கு நேர் எதிர்மாறானது இதன் தத்துவம்.

❑❑❑

பகுதி 2

# இந்தியாவும் பொதுவுடைமைக்கான முற்படு தேவைகளும்

'இந்து சமூக அமைப்பு' என்னும் தலைப்பில் அடங்கும் ஒன்றாவது, இரண்டாவது இயல்களின் உரைகள் இங்கு தரப்படுகின்றன. 'இந்தியாவும் பொதுவுடைமையும்' என்னும் தலைப்புடைய நூலின் ஒரு பகுதியாக இந்த இயல் எழுதப்பட்டதுபோலும். தட்டச்சு செய்த தாள்களின் முதல் பக்கத்தில் தரப்பட்டுள்ள பொருளடக்கத்திலிருந்து 'இந்தியாவும் பொதுவு டைமையும்' என்னும் முழுநூலை மூன்று பகுதிகளாக டாக்டர் அம்பேத்கர் பிரித்திருந்தாரென அறிகின்றோம். முதல் பகுதி 'இந்தியாவும் பொதுவுடைமைக்கான முற்படு தேவைகளும்' என்னும் தலைப்பிடப்பட்டது. இந்தப் பகுதி மூன்று இயல்களைக் கொண்டிருக்க வேண்டும். ஆயினும் அவரெழுதியுள்ள தாள்களில் இந்த இயல்கள் எவையும் காணக் கிடைக்கவில்லை. 'இந்தியாவும் பொதுவுடைமைக்கான முற்படு தேவைகளும்' என்று தலைப்பிடப்பட்டுள்ள இரண்டாவது பகுதியைப் பொறுத்தவரை 'இந்து சமூக அமைப்பு' என்னும் தலைப்பிலுள்ள இயல் மட்டுமே நன்கு தைத்துக் கட்டமைத்த பதிவேட்டில் உள்ளது. இந்த இயல் பின்வரும் இரு குறுந்தலைப்புகளைக் கொண்டுள்ளது.

1.. இந்து சமூக அமைப்பு: அதன் இன்றியமையாக் கோட்பாடுகள்

2. இந்து சமூக அமைப்பு - அதன் தனித்தன்மைகள்

இந்த நூலில் காணப்படும் பொருளடக்கத்தில் தந்துள்ள வேறு எப்பொருள்பற்றிய இயல்கள் எவையும் இல்லை. இவை அனைத்தும் 63 முழுநீளத் தாளில் தட்டச்சு செய்யப்பட்டுள்ளன.

- ஆசிரியர்கள்

# இயல் 2

## இந்து சமூக அமைப்பு : அதன் இன்றியமையாக் கோட்பாடுகள்

### I

இந்து சமூக அமைப்பின் குணாம்சம் யாது? அது சுதந்திரமான சமூக அமைப்பா? இவ்வினாவிற்கு விடைகாண்பதற்குமுன், சுதந்திர சமூக அமைப்பின் தன்மைகளைப் பற்றி அறிய வேண்டுவது அவசியமாகிறது. அதிர்ஷ்டவசமாக, இக்கருத்து விவாதத்திற்குரியதன்று. பிரெஞ்சுப் புரட்சிக்குப்பின், சுதந்திர சமூக அமைப்பின் அடிப்படை இயல்புகளைப் பற்றிக் கருத்து மாறுபாடு எதுவுமில்லை. இந்த அடிப்படை இயல்புகள் பலவாக இருந்த போதிலும் இருகூறுகள் அடிப்படையானவை. முதலாவதாக, தனி மனிதர் தனக்குத் தானே முடிவெல்லையாகிறார் என்பது. சமூகத்தின் குறிக்கோளும் நோக்கமும் தனிமனிதர் வளர்ச்சியும் அவர்தம் ஆளுமையின் மேம்பாடுமேயாகும். சமூகம் தனி மனிதனுக்கு மேலானதன்று. தனிமனிதர் சமூகத்தில் தன்னை உட்படுத்தினால், அது தன் மேம்பாட்டிற்காகவும், அவசியமான அளவிற்கும்தான்.

இரண்டாவது இன்றியமையாக் கூறுபாடு, சமூக வாழ்வில் உறுப்பினர்களிடையேயுள்ள உறவுகள் சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம் என்னும் கோட்பாடுகளின் அடிப்படையில் அமைந்திருத்தல் வேண்டும்.

சுதந்திர சமூக அமைப்பின் அடிப்படைக் கூறுகளாக இவ்விரண்டினையும் ஏன் கருதிடல் வேண்டும் ?

தனி மனிதரைச் சமூக நோக்கங்களுக்கான வழிமுறையாகக் கருதாமல், முடிந்த முடிவாகக் கருதிடல் வேண்டியதேன்? தனிமனிதர் உரிமைகளைக் காப்பதற்கு நாம் ஏன் நமது விலைமதிப்பற்ற உடைமைகளையும் உயிர்களையும் தியாகம் செய்ய வேண்டும்.? இவ்வினாவிற்கு விடை காண்பதற்கு முன், தனி மனிதர் என்று நாம் பேசும் பொழுது எப்பொருளில் பேசுகிறோம். என்பதை வரையறுத்துக் கொள்ள வேண்டும். பேராசிரியர் ஜேக்வீஸ் மாரினாடன் கூறியிருப்பதை விட இவ்வினாவிற்குச் சரியான விடை எங்கும் காண முடியாது. ‘சுதந்திரத்தின் வெற்றி" என்னும் கட்டுரையில் பேராசிரியர் மாரிடைன் கூறுகிறார்:

"தனி மனிதனைப் பற்றிப் பேசும் பொழுது, நாம் என்ன பொருளில் பேசுகிறோம்? மனிதனை ஒரு நபர் என்று குறிப்பிடும் பொழுது யானை, ஈ, புல்லின் தழை, அணு என்பது போல நாம் கருதுவதில்லை. அறிவினாலும், மனப்பாங்கினாலும் தன் போக்கைத் தானே நிர்ணயித்துக் கொள்பவன் மனிதன். உடலளவில் மட்டும் அவன் வாழவில்லை. அறிவினாலும் அன்பினாலும் மனிதன் மிக உயர்வானஆன்மிக வாழ்வு பெறுகிறான். ஒரு வகையில், தனக்குள்ளே இப்பிரபஞ்சத்தை அடக்கியுள்ளான். பிரபஞ்சப் பிண்டம் அறிவினால் அண்டம் முழுமையும் அதனுள் அடக்கிட முடியும். தன்னைப் போன்ற மறுவடிவங்களாகவே கருதி, அடுத்தவர்களுக்குத் தன்னை அன்பினால் அர்ப்பணிக்க முடியும். இத்தகைய தொடர்புகளுக்குப் பௌதிக உலகில் சரிசமமான ஒன்றைக் காணல் இயலாது. இத்தகைய பண்புகள் மனிதனுக்கு இருப்பதற்குக் காரணம் கருவறையிலிருந்து கல்லறை வரை, சதையும் அழியும் எலும்புகளினால் ஆன உடல் ஒரு தெய்வீக சக்தியால் இயக்கப்படுகிறது. அவன் ஆன்மா காலத்தையும் இடத்தையும் கடந்தது. ஆன்மாவே ஆளுமையின் அடிப்படை. ஆளுமை என்னும் கருத்து முழுமையானதும் சுதந்திரமானதும் ஆகும் - எவ்வளவு ஏழையாகவும், ஒடுக்கப்பட்டவனாககவு ஒரு மனிதன் இருப்பினும், மானிடனுக்கு ஆளுமை இருக்கிறது என்று கூறும் போது, ஆளுமை முழுமையானது, எதன் பகுதியுமன்று, அடிமையன்று, சுதந்திரமானது என்பதேயாகும். ஒரு பெரும் பொருளின் சிறிய துகள் அதே சமயத்தில் பிரபஞ்சமாக இயங்குகிறது. முழுமையில் பங்குகொள்ளும் இரவலன், அழியும் சதையை மிஞ்சி நிற்கும் புற மதிப்பு. அற்பத்தில் சொர்க்கத்தின் பிரவேசம், மனிதன் கடவுளின் சாயலில் படைக்கப்பட்டிருக்கிறான் என்று சமயம் சொல்லும் மெய்யியல் புதிர். ஒரு தனி மனிதனின் மதிப்பு, உரிமைகள், கண்ணியம், ஆகியவை இயல்பாகவே புனிதமானவை. படைப்புத் தந்தையின் முத்திரை பொறிக்கப் பெற்று, அவனுள் இயக்கத்தின் இறுதியும் உள்ளடங்கும்"

சமத்துவம் ஏன் இன்றியமையாதது? 'அரசியல் சிந்தனையில் சுதந்திரம்' என்னும் கட்டுரையில் பேராசிரியர் பியர்டு இப்பொருள் பற்றிய மிகச் சிறந்த விளக்கம் தருகிறார். அவரையே மேற்கோள் காட்டுவது பொருந்தும். பேராசிரியர் பியர்டு கூறுகிறார்[2] :-

"துரதிஷ்டவசமாகச் சமத்துவம் என்னும் சொல்லுக்குப் பதில் வேறொரு சொல் இல்லை. சமத்துவம் என்றால், 'அளவு, தொகை, எண், தரம், மதிப்பு, தன்மையில் ஒன்று போல இருத்தல் என்றாகிறது.

1 'சுதந்திரம் - அதன் பொருள்' ருத் நந்தா கிஷன் பக்கம் 214

2*சுதந்திரம் - அதன் பொருள், பக் 11-13.

இயற்பியல், கணிதம் ஆகிய அறிவியல்களில் இச்சொல் துல்லியமான பொருளுடையது. ஆனால் மனித உறவுகளில் துல்லியமற்றது என்பது தெளிவு. இப்பொருள் பற்றி ஆராய்ந்த அறிஞர்கள் மனித இனத்திற்குப் பொதுவான அடிப்படை இயல்புகளும் மனிதர்களுக்கு உண்டு என்று கருதுகிறார்கள். மனித இனத்தைக் காலத்திற்கும் இடத்திற்கும் உட்பட்ட புறமரபுகள், இயல்புகளிலிருந்து நீக்கிவிட்டால், பரவலாக எல்லோரிடமும் எஞ்சியுள்ள பண்புகள் உலகளாவினதாகும். இக்குணாம்சங்கள் படைப்புக்காலம் சார்ந்தவையாகவோ, உயிரியல் கூறுகளாகவோ, மிச்ச சொச்சங்களாகவோ, வேறு எப்பொருளாகவோ கருதலாம். அவற்றை எவரும் மெய்யாக மறுத்திடல் இயலாது. உடல் வலிமை, கலைத் திறன், பொருள்வளம், மன ஆற்றல் - இவற்றில் ஏற்றத் தாழ்வுகள் இருப்பதை எளிதில் சுட்டிடல் இயலும். இவை அளவில் காணப்படும் ஏற்ற இறக்கங்களே. இறுதி ஆய்வில், மனித இனத்திற்குப் பொதுவான அடிப்படை இயல்புகள் துலங்கிடக் காணலாம். அவற்றின் இயல்பினையும் வெளிப்பாடுகளையும் 'தார்மிக சமத்துவம்' என்று அழைக்கிறோம் .

'தார்மிக' என்னும் சொல்லில் அழுத்தம் கொடுக்க வேண்டியுள்ளது. பொருள்வளம், திறமைகள், உடல்வலிமை ஆகியவற்றில் மனிதர்களிடையேயுள்ள சமமின்மைகளைச் சுட்டிக் காட்டுவது என்பது நினைவுக் கெட்டாக் கால முதல் வழக்கில் உள்ளது. இவ்விமர்சனம் பொருளற்றது, தொடர்பற்றது. கொடுமையாலும் அமைப்புக் கட்டுப்பாடுகளாலும் ஏற்படும் சமமின்மைகளைப் பற்றி விளக்கும் பொழுது கூட, 'தார்மிக சமத்துவம்' பேசும் எப்பகுத்தறிவாளனும் மனிதர்களிடையே வெளிப்படையாகத் தெரியும் சமமின்மைகளை மறுக்க வில்லை. சுதந்திரப் பிரகடனம் அனைவரும் சமமென்று கூறவில்லை. அனைவரும் சமமாகப் 'படைக் கப்பட்டுள்ளனர்' என்றே கூறுகிறது.

'தார்மிக சமத்துவம்' என்னும் சொற்றொடர் நீடித்துக் கொள்ளத்தக்க அறத்தின் மதிப்பையும் மதித்தற்குரிய உரிமைகளின் அங்கீகாரத்தையும் வலியுறுத்துகிறது. கணிதத்தில் ஒரு சிக்கலை விளக்கிக் காட்டுவது போல, இக்கருத்தின் பொருத்தத்தை விளக்கிக் காட்டுவது இயலாது. பொருள்வளம், தொழில், திறமைகள் ஆகியவற்றில் காணப்படும் ஏற்றத் தாழ்வுகளுக்கு எதிராக வலியுறுத்தப் பெறுவது. மிகுந்த உடல் வலிமை இருப்பதனால், கொன்று தின்னவோ, மற்றவரை அடக்கி ஆளவோ உரிமையுண்டு என்பதைத் தார்மிக சமத்துவம் மறுக்கிறது. திறமைகள், பொருள்வளம் பற்றியும், தார்மிக சமத்துவ இலட்சியம், அடக்கும் உரிமையை

மறுக்கிறது; பொருள்வளமும், திறமைகளும் உடையோர் அவற்றில் குறைந்தோரை, அடக்கி வைக்கும் உரிமை இல்லை என்பதே தார்மிக சமத்துவத்தின் இலட்சியம். உண்மையில் சிலர் உடல்வலிமையிலும், திறன்களிலும், பொருளிலும் தம்மை உயர்ந்தவராகக் கருதி, குறைந்தோருக்கு அனைத்து அறவுரிமைகளையும் மறுக்கலாம். அத்தகைய சூழ்நிலையில் அரசும், பொருளும் உயர் உடல் வலிமையுடையோரைச்சேரும். ரோமானியப் படையெடுப்பாளர்களுக்குத் திறமைப்படைத்த அடிமைகள் சேவகம் செய்தது போல் - நற்குணமும் திறமைகளும் மிருக வலிமையுடையோருக்கே பயன்படும். தார்மீக சமத்துவ இலட்சியத்திற்கெதிரான கடும் விமர்ச்சனம் எழுப்பப்பட்ட போதிலும், போற்றுதல்களுக்கும் எதிர்ப்புகளுக்கும் இடையே அதிலுள்ள சில கூறுபாடுகளை அனைவரும் ஏற்றுத்தான் ஆகவேண்டியதாகிறது; நடைமுறையில் செயல்படுத்தப்படுகிறது. மனித ஆளுமைகளை மதிக்காத ஒரு சமூகம் கொள்ளைக்காரர்களின் கூட்டமேயாகும்".

*சகோதரத்துவம் ஏன் இன்றியமையாதது?*

ஒரு தனி மனிதன் மற்றவர்களை அன்புடனும் மரியாதையுடனும், நடத்தி, உடன் வாழ் மனிதருடன் ஒன்று பட்டு வாழ விரும்பும் மன நிலையே சகோரத்துவம் எனப்படுவது. பவுல் **(St.Paul)** இதனைச் சரியாக விளக்குகின்றார்: "மனித இனத்தவர் அனைவரும் ஒரே ரத்தத்தைச் சேர்ந்தவர்கள். யூதரென்றும் கிரேக்கனென்றும் எவருமில்லை. அடிமை என்றும் ஆண்டான் என்றும் ஆணென்றும் பெண்ணென்றும் கூட எவருமில்லை. அனைவரும் கிறிஸ்துவுக்குள் ஒன்றேயாவர்". பிளைமௌத்தில் இறங்கிய பொழுது, யாத்திரீகத் தந்தையர் கூறியதும் இக்கருத்தையே:. " இறைவனின் புனித உறுதிமொழி ஆவணப்படி, நாம் யாவரும் ஒரே தொகுதியாக இணைக்கப்பட்டுள்ளோம். அதன்படி ஒவ்வொருவரின் நலனையும், ஒட்டு மொத்தமாக அனைவரின் நலனையும் காக்கக் கடமைப்பட்டுள்ளோம்." இவ்வுணர்வுகள் சகோதரத்துவத்தின் சாராம்சமாகும். சகோதரத்துவம் கூடிவாழும் இயல்பை வலுப்படுத்துகிறது. நடைமுறையில் மற்றவர்களின் நலனில், ஒவ்வொருவரும் வலுவான ஆர்வம் கொள்கின்றனர். சகோதரத்துவம் மற்றவர்களின் நலன்களில் தன்னை ஈடுபடுத்திக் கொள்ளச் செய்து நடைமுறையில் பெரிதும் பிறர் நலன் பேணுதலைச் செய்கிறது. சகோதரத்துவ உணர்வுடைய தனிமனிதன் மற்றவரிடம் மரியாதை செலுத்துகிறான். வாழ்வதற்கு வேண்டிய நடைமுறைகளைக் கவனிப்பது போலவே, மற்றவர் நலன் பேணுவதும் இயல்பான, அவசியமான ஒரு கூறுபாடு ஆகிறது. பிறரிடம் முழுமையாகப் பரிவுகாட்டாத ஒரு

தனிமனிதன் பொதுநிலையில் ஒத்தியங்குவது இயலாத காரியம். சமூக உணர்வு வளர்ச்சிபெறாத தனிமனிதன் மற்றவரைத் தன்னுடைய நலன்களுக்கு எதிரானவர்களெனக் கருதி, மற்றவர்களைத் தோற்கடித்தால்தான் தான் வெற்றி பெற்று இன்புற்று வாழமுடியும் என்று நினைக்கிறான்.

சுதந்திரம் என்பது யாது? சுதந்திர சமூக அமைப்பில் அது ஏன் இன்றியமையாததாகிறது ? சுதந்திரம் இருவகைப்படும் - சிவில் உரிமை, அரசியல் உரிமை. 1) சிவில் உரிமை என்பது சுதந்திரமாக இயங்கும் உரிமை. சட்டமுறைப்படியன்றி வேறுவகையில் சிறைப்படுத்த முடியாத நிலை. 2. பேச்சுரிமை - சிந்தித்தல், எழுதுதல், படித்தல், விவாதித்தல் ஆகியவற்றை உள்ளடக்கியது. 3. செயலுரிமை.

முதல்வகை சுதந்திரம் அடிப்படையானது. அடிப்படையானது மட்டுமன்று, இன்றியமையாதது. அதன் மதிப்பைப் பற்றி ஐயமெதுவும் இருக்க முடியாது. இரண்டாவது வகைச் சுதந்திரத்தைக் கருத்துச் சுதந்திரம் எனலாம். பல காரணங்களுக்காக அது முக்கியமானது. சமூக, அரசியல், தார்மிக, அறிவு சார்ந்த முன்னேற்றத்திற்கும் காரணமாவது. கருத்துச் சுதந்திரம் இல்லாத இடத்தில், நிகழ்நிலை ஸ்தம்பித்து விடுகிறது. அவசியமான சுய சிந்தனைகளும் ஊக்குவிக்கப்படுவதில்லை. செயல் உரிமை என்பது, தான் நினைத்ததைச் செய்யும் உரிமை. செயலுரிமை ஏட்டளவில் இருந்தால் மட்டும் போதாது - அது உண்மையானதாக இருத்தல் வேண்டும். இப்பொருளில் செயலுரிமை என்பது குறித்தவற்றைச் செய்தற்குரிய பயனுள்ள அதிகாரத்தைக் குறிக்கிறது. பயன்படுத்தும் நடைமுறைகள் இல்லாத சுதந்திரம் இருக்க முடியாது. சுரண்டல் ஒழிக்கப்பட்ட இடத்தில்தான், ஒரு வர்க்கம் இன்னொரு வர்க்கத்தை அடக்கியாள முடியாத இடத்தில்தான், வறுமையும் வேலையின்மையும் இல்லாத இடத்தில்தான், தான் விரும்பிய செயலின் விளைவால், தன்வேலை, வீடு, உணவு ஆகியவற்றை இழந்து விடுவோமோ என்னும் அச்சம் இல்லாத இடத்தில்தான், உண்மையான செயலுரிமை இருக்க முடியும்.

அரசியல் சுதந்திரம் என்பது சட்டமியற்றுவதில் பங்கு கொள்வதற்கும், அரசாங்கத்தை மாற்றுவதற்கும் உருவாக்குவதற்கும் தனி மனிதருக்குள்ள சுதந்திரமாகும். வாழ்வுரிமை, சுதந்திரம், இன்பநாட்ட முயற்சி போன்ற மாற்றமுடியாத உரிமைகளைத் தனிமனிதனுக்கு அளிப்பதற்காகவே அரசாங்கம் அமைக்கப்படுகிறது. எவருடைய உரிமைகளைக் காப்பதற்காக என்று அரசு அமைக்கப்பட்டிருக்கிறதோ, அவர்களிடமிருந்துதான் அரசு அதிகாரம் பெறுகிறது. எனவே ஆளப்படுபவரின் சம்மதத்தின் பேரிலேயே அரசாங்கத்தின் அதிகார எல்லையும் இருப்பும் இயங்க வேண்டும் என்பதாகிறது. மனித ஆளுமை,

சமத்துவம் ஆகிய கோட்பாட்டிலிருந்து பெறப்படுவது தான் அரசியல் சுதந்திரம். அனைத்து அரசியலதிகாரமும் மக்களிடமிருந்தே பெறப்படுகிறது என்பதே இதன் பொருள். மேலும் பொதுவாழ்வையும், தனி வாழ்க்கையையும் மற்றவரால‌ன்றித் தமக்குத் தாமே நிர்ணயித்துக் கொள்ளும் ஆற்றல் மக்களுக்கு உண்டு என்பதே இதன் பொருள்.

சுதந்திர சமூக அமைப்பின் இருவிரு கோட்பாடுகளும் ஒன்றுடனொன்று முழுமையான தொடர்புடையவை. முதற்கோட்பாடு ஏற்றுக் கொள்ளப்பட்டாலே, இரண்டாவது கோட்பாடும் தானே பெறப்படுகிறது. மானிட ஆளுமையின் புனிதத்தன்மை ஏற்கப்படும்போதே, ஆளுமை வளர்ச்சிக்கு ஏற்ற சூழ்நிலைக்குச் சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம் ஆகியவற்றின் தேவையும் ஏற்கப்பட வேண்டும்.

## II

இந்தக் கோட்பாடுகளை இந்து சமூக அமைப்பு எவ்வளவு தூரம் ஏற்கிறது? இவ்விசாரணை அவசியமானதே. இக் கோட்பாடுகளை எந்த அளவுக்கு அது ஏற்கிறதோ,அந்த அளவுக்குத் தான் சுதந்திர சமூக அமைப்பு என்பதற்குரிய சிறப்புப் பெயரைப் பெற முடியும்.

இந்து சமூக அமைப்பு தனிமனிதனை ஏற்கிறதா? தனி மனிதனின் தனித்தன்மையையும், தார்மிகப் பொறுப்பையும் ஏற்கிறதா? தனக்குத்தானே வரம்பானவன், சட்டப்படியான தடைகள் எதுவும் இல்லாமல் மட்டுமன்று அரசிற்கு எதிராகவும் உரிமைகளை உடையவன் என்பதை ஏற்கிறதா? இவ்விவாதத்தின் தொடக்கமாக, வெளியேறிச் செல்லுமுன், ஜெகோவா எசேக்கியேலுக்குக் கூறிய உரைகளைக் குறிப்பிடலாம்:-

> "அனைத்து ஆன்மாக்களும் என்னவை, காண்க; பிதாவின் ஆன்மாவும் மகனின் ஆன்மாவும் ஒன்றே, பாவம் செய்யும் ஆன்மா மரிக்கிறது. தந்தையின் பாவத்திற்கு மகன் பொறுப்பல்ல; மகனின் பாவத்திற்குத் தந்தை பொறுப்பல்ல; நேர்மையாளனின் நேர்மைஅவனுக்கே உரியது - கெட்டவனின் கேடும் அவ்வாறே."

இங்கு தனிமனிதனின் தனித்தன்மையும், அவனுக்குரிய தார்மிகப் பொறுப்பும் வற்புறுத்தப்படுகிறது. சமூக நோக்கத்திற்குத் தனிமனிதனை மையப்படுத்துதல் இந்து சமூக அமைப்பில் இல்லாதது. இந்து சமூக அமைப்பு தனி மனிதர்களால் அல்லாமல் வர்க்கம் அல்லது வருணத்தின் அடிப்படையில் அமைந்தது. முதலில் இந்து சமூக அமைப்பு நான்கு வர்க்கங்களை அங்கீகரித்தது: 1. பிராமணர் 2. க்ஷத்திரியர் 3. வைசியர் , 4. சூத்திரர். இன்று ஐந்து வர்க்கங்கள் உள்ளன. அந்த ஐந்தாவது வர்க்கத்தினர் பஞ்சமர் அல்லது தீண்டாதார் என்று

அழைக்கப்படுகின்றனர். இந்து சமூகத்தின் உறுப்பினர் தனி பிராமணரோ, தனி சத்திரியரோ, தனி வைசியரோ, தனி சூத்திரரோ, தனிப் பஞ்சமரோ அல்லர். திருமணத்திற்கும், வாரிசுரிமைக்கும் தவிர, ஏனையவற்றிற்குக் குடும்பம் கூட, சமூகத்தின் அலகாகக் கருதப்படுவதில்லை. வர்க்கம் அல்லது இந்து சமூகத்தின் வர்க்கத்தைக் குறிப்பிடப் பயன்படும் கலைச் சொல்லாகிய வருணமே சமூக அமைப்பின் அடிப்படை அலகாக உள்ளது. இந்து சமூக அமைப்பில் தனிமனிதனின் திறமைக்கு இடமில்லை. தனிமனித நீதிக்கும் இடமில்லை. தனிமனிதனுக்கு ஏதேனும் உரிமை இருக்குமாயின், அது தனிமனிதர் என்ற முறையில் வந்ததன்று. அவன் சார்ந்துள்ள வர்க்கத்தின் அடிப்படையில் ஏற்பட்டதுதான். தனிமனிதன் ஒரு உரிமையை அனுபவிப்பது அந்தத் தனிவர்க்கத்திற்குரியவன் என்பதால் தான். இதற்கு மாறாக, தனிமனிதன் தவறுபுரிந்து அதனால் துன்புற நேர்ந்தாலும் அது அவனது தனிப்பட்ட நடத்தையால் ஏற்பபட்டதன்று. அவன் சார்ந்ததுள்ள வர்க்கத்தின் மீது சுமத்தப்பட்டுள்ள இயலாமையே. அந்த இயலாமையின் காரணமாக ஏதாவது துன்புறநேர்ந்தால் அது அந்த வர்க்கத்தைச் சேர்ந்தவர் என்பதால்தான்.

இந்து சமூக அமைப்பு சகோதரத்துவத்தை ஏற்கிறதா? கிறிஸ்தவர்களையும், முஸ்லிம்களையும் போலவே, இந்துக்களும் மனிதர்கள் கடவுளால் படைக்கப்பட்டவர் என்று நம்புகிறார்கள். கிறிஸ்தவர்களும், முஸ்லிம்களும் இதை முழு உண்மையாக ஏற்கிறார்கள் - இந்துக்கள் இதை உண்மையின் ஒரு பகுதியாகக் கருதுகிறார்கள். முழு உண்மையில் இரு பகுதிகள் உள. முதற்பகுதி மானிடர் கடவுளால் படைக்கப்பட்டனர் என்று கூறுதல். இரண்டாம் பகுதி கடவுள் தன் தெய்வீக உடம்பின் பல்வேறுப் பகுதிகளிலிருந்து வெவ்வேறு மனிதரினங்களைப் படைத்தார் என்பது. இந்துக்கள் இரண்டாம் பகுதியை முதற்பகுதியை விட முக்கியமானதென்றும், அடிப்படையானதென்றும் கருதுகின்றனர்.

இறைவன் தன் உடம்பில் பல்வேறு பகுதிகளிலிருந்து மனிதர்களைப் படைத்தார் என்னும் கோட்பாட்டை அடிப்படையாகக் கொண்டது. இந்து சமூக அமைப்பு பவுல் (**Paul**) அல்லது யாத்திரிகத் தந்தையர் கூறிய கருத்துக்களுக்கே இதில் இடமில்லை. பிராமணன் சத்திரியனின் சகோதரனாகான். காரணம் பிராமணன் தெய்வத்தின் வாயிலிருந்தும் சத்திரியன் தோளிலிருந்தும் படைக்கப்பட்டுள்ளனர். சத்திரியன் வைசியனுக்குச் சகோதரனாக முடியாது. காரணம் சத்திரியன் தோளிலிருந்தும் வைசியன் தொடையிலிருந்தும் படைக்கப்பட்டிருக்கிறான். ஒரு வர்க்கத்தினர் இன்னொரு வர்க்கத்தினரின் சகோதரனாக முடியாது. அவ்வாறே ஒரு வர்க்கத்தினன்

தெய்வீக உடம்பின் பல்வேறு பகுதிகளிலிருந்து வெவ்வேறு வர்க்கத்தினர் படைக்கப்பட்டுள்ளனர் என்னும் கோட்பாட்டின் விளைவாக அந்தந்த வர்க்கத்தினர் தனித்தனியாகவும் தனித் தன்மையுடனும் இருக்க வேண்டுமென்பதுதான் கடவுளின் விருப்பம் என்ற நம்பிக்கையை உருவாக்கியுள்ளது. இந்த நம்பிக்கைதான், ஒருவருணத்தினர் மற்ற சக இந்துக்களிலிருந்து தனித் தனியாகவும் வேறுபட்டு வித்தியாசமாகவும் இருக்க வேண்டும் என்ற உணர்வை ஏற்படுத்தியுள்ளது. உபநயனம் அல்லது உடம்பில் பூணூல் அணிவதுபற்றிய மனு ஸ்மிருதியின் விதிகளை ஒப்பு நோக்குக:

2:36. "கருத்தரித்த எட்டாம் ஆண்டில் பிராமணருக்கும், பதினொராம் ஆண்டில் க்ஷத்திரியருக்கும். பனிரெண்டாம் ஆண்டில் வைசியருக்கும் உபநயனம் செய்விக்கப் பெறுதல் வேண்டும்."

2:41. "வருண ஒழுங்கின்படி, மேலுடை முறையே கருப்புமான், புள்ளிமான், வெள்ளாட்டுக் கிடாவின் தோலிலும், கீழாடை சணல், நிலமலர்ச் செடித் தண்டு அல்லது சணல்நாரினாலும் செய்யப்பட்டிருத்தல் வேண்டும்."

2:42."பிராமணனின் அரைக்கச்சை மூஞ்சாப்புல்லின் மூன்று இழைகளாலும், க்ஷத்திரியனின் அரைக்கச்சை வில்லின் நாண் இழைகளாலும் வைசியனின் அரைக்கச்சை சணல் நார் போன்ற மூர்வர் இழைகளாலும் வைசியனின் அரைக்கச்சை சணல்நார் இழைகளாலும் செய்யப்பட்டிருத்தல் வேண்டும்."

2:43. "மூஞ்சாப் புல் கிடைக்கவில்லை என்றால், குசா, அஸ்மாந்தகா, பால்பகா இழைகளால், மூன்று முடிச்சு அல்லது குடும்ப வழக்கத்திற்கேற்ப ஐந்து முடிச்சுகள் போடல் வேண்டும்."

2:44. "பிராமணனின் பூணூல் பருத்தி இழையால் வலப்புறம் முறுக்கி முப்புரியாக அமைதல் வேண்டும். க்ஷத்திரியனுக்குச் சணல் நார் இழைகளும், வைசியனுக்கு வெள்ளாட்டு ரோம இழைகளும் பயன்படுத்தப் பெறுதல் வேண்டும்."

2:45. "புனித சட்டத்தின் படி, பிராமணன் வில்வம், அல்லது பலாச மரக்கொம்பையும், க்ஷத்திரியன் ஆல் அல்லது கருங்காலி மரக் கொம்பையும், வைசியன் பில்லு அல்லது அத்தி மரக் கொம்பையும் ஏந்திச் செல்லுதல் வேண்டும்."

2:46."பிராமணன் தலை முடிவரை நீண்ட கொம்பையும், க்ஷத்திரியன் தன் நெற்றிமட்டக் கம்பையும் வைசியன் மூக்குவரை நீண்ட கொம்பையும் ஏந்துதல் வேண்டும்."

2:48. "விரும்பிய கொம்பினை ஏந்தி சூரியனை வழிப்பட்டு, அக்னி

*வலம் வந்தபின் வலக்கரம் நீட்டி மாணவன் யாசித்தல் வேண்டும்."*

*2:49. "பவதி (வீட்டுத் தலைவி) என்னும் சொல்லைத் தொடங்கி (பவதி பிஷாந்தேகி என்று) பிராமணனும், க்ஷத்திரியன் அச்சொல்லை (பிஷாம்பவதி தேகி என்று) நடுவில் இட்டும், வைசியன் அச்சொல்லை (தேகி பிஷாம் பவதி என்று) இறுதியில் வைத்தும் யாசித்தல் முறையாகும்."*

*இவற்றைப் படிப்போர் இத்தகைய வேறுபாடுகள் இருப்பதற்கான காரணங்களை அறிய முயலலாம். இவ்விதிகள் மாணவருக்குரியன. இவை வேத பாராயணத்திற்குரிய பிரம்மச்சரியத்தைக் கடைப்பிடிப்பவருக்குரிய விதிகள். ஏனிந்த வேறுபாடுகள்? பிராமணப் பையனின் கற்கும் வயது க்ஷத்திரியனைவிட, வைசியனை விட ஏன் வேறுபட வேண்டும் ? அவர்கள் அணியும் ஆடைகள் ஏன் வேறுபட வேண்டும்? அரைக்கச்சைக்குரிய இழைகள் வேறுபடுவானேன் ? பூணூல் இழைகளும் வெவ்வேறாக வேண்டிய அவசியம் என்ன? ஏந்து கொம்புகள் வெவ்வேறு மரத்தினதாக இருப்பானேன்? கொம்பின் நீளம் வேறுபடுவதேன்? 'பவதி' என்னும் சொல்லை வெவ்வேறு இடங்களில் வைத்து யாசிப்பது ஏன்? இவ்வேறுபாடுகள் அவசியமோ நன்மை தருவனவோ அல்ல. இதற்குரிய ஒரே விளக்கம் கடவுளின் உடலின் வெவ்வேறு பகுதிகளிலிருந்து வெவ்வேறு வர்க்கத்தினர் படைக்கப்பட்டனர் என்னும் நம்பிக்கையின் காரணமாகவே இந்துவர்க்கத்தினர் ஒருவர் மற்றொருவரிடமிருந்து தனித்து வேறானவராக இருக்கின்றோம் என்று கருதுவதுதான்.*

*இந்த நம்பிக்கையே இந்துக்கள் தம்மிடையேயுள்ள வேறுபாடுகளைப் புறக்கணிக்காமல், அதை ஏற்க வலியுறுத்துவதுடன், பலரறியப் பிரகடனம் செய்யத் தூண்டுகிறது. ஒரு சாதி இருக்கிறதென்றால், அதற்குரிய தனித் தலைப்பாகையும் தனிப் பெயரும் உருவாக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு மதப்பிரிவிற்கும் தனித் தலைப்பாகை உண்டு. 92 மதப்பிரிவுகள் இந்தியாவில் உள்ளன. ஒவ்வொன்றிற்கும் தனித்தனிக் குறியீடுகள் உள்ளன. ஒன்றுக்கொன்று வேறுபட்ட 92 குறியீடுகளை உருவாக்குவது பெரிதும் கடினமே. எனினும், மிகத் திறமையாக இது சாத்தியமாக்கப் பட்டுள்ளது. இந்துக்கள் இந்தச் சாதனை நிகழ்த்தி இருப்பதை, மூர் 'இந்துக் கடவுளர்' பற்றிய வரைந்துள்ள படச்சித்திரங்களிலிருந்து அறியலாம்.*

*பிரிந்து நிற்பதும் தனித்து நிற்பதுமான உணர்வுகளின் வெளிப்பாட்டைச் சாதி முறையில் காணலாம். பன்மையில்தான் சாதி இருக்கிறது; ஒருமையில் இல்லை. சாதி என்பது ஒன்றே என்று இருக்க முடியாது, பலவாக உள்ளன. சாதி பன்மையில் தான் இருக்க முடியம் என்பதை ஒப்புக் கொண்டபின், எத்தனை சாதிகள் இருக்கின்றன?*

ஆரம்பத்தில் நான்கு சாதிகளே இருந்தன. இன்று எத்தனை சாதிகள்? இரண்டாயிரத்திற்குக் குறையாது என்று மதிப்பிடப் பட்டுள்ளது. அது மூவாயிரமாகக் கூட இருக்கலாம். இது பிரம்மிக்கதக்க எண்ணிக்கை மட்டுமல்ல, வேறு விளைவுகளும் இதனால் ஏற்பட்டுள்ளன. சாதிகள் உபசாதிகளாகப் பிரிக்கப்பட்டுள்ளன - அவை எண்ணற்றவை. பிராமண சாதியில் 1886 உப சாதிகள் உள்ளன. பஞ்சாபில் மட்டும் சரஸ்வதபிரமாணர் 469 உபசாதிகளாகப் பிரிந்துள்ளனர். பஞ்சாபிலுள்ள காயஸ்தர் 890 உப சாதிகளாகப் பிரிந்துள்ளனர். சிறுசிறு துண்டங்களாகச் சமூகம் பிரிந்திருக்கும் எல்லையற்ற நிலையைச் சுட்டிக் காட்டிக் கொண்டே போகலாம். பிரிக்கும் முறை சமூக வாழ்க்கையைச் சகிக்க முடியாததாக்கி விட்டது. விலக்கப்பட்ட உபசாதிகளில் மண உறவு கொள்ளாமல், விதிப்படி மணஞ் செய்து கொள்வது இயலாததாகிவிட்டது. அந்த அளவுக்குச் சிறுசிறு பிரிவுகளாகப் பிரிந்து கிடக்கிறது. சில வணிக உபசாதிகளில் 100 குடும்பங்களே உள்ளன. இரத்த உறவு முறைகளை மீறாமல், தத்தம் உபசாதியில் மணஞ் செய்து கொள்வது மிகவும் கடினம் - அவ்வளவு நெருங்கிய உறவினராக அனைவரும் உள்ளனர்.

உபசாதிகளாகப் பிரிவதற்கு அற்பகாரணங்களே போதுமானவை. இடமாற்றம், தொழில் மாற்றம், சமூக வழக்க மாற்றம், மாசுபடுதல் காரணமாக மாற்றம், செல்வமிகுதியால் வரும் மாற்றம், சச்சரவால் ஏற்படும் மாற்றம், சமயமாற்றம் இவற்றால் சாதிகள் உபசாதிகளாகப் பிரிய நேரிட்டது. சாதாரணச் சண்டை சச்சரவுகளால் உபசாதிகள் தோன்றியவற்றில் ஒன்றினை மட்டும் -- எல்லாவற்றையும் குறிப்பிட இங்கு இடமில்லை.- எடுத்துக்காட்டாக இங்கு குறிப்பிடலாம். இந்துக்களிடையே நிலவும் இந்தப் போக்கினை விளக்கும் வகையில் திரு. பிளன்ட் பல நிகழ்ச்சிகளைத் தெரிவித்துள்ளார். திரு. பிளன்ட் கூறுவது போல[1] :-

> 'லக்னோவில் 'காத்திகா' என்னும் உபசாதியினர் இருந்தனர். அவர்களுக்குள் மூன்று பிரிவுகள், குலங்கள் - மாணிக்பூர், ஜெய்சுவாலா, தால்மான். அவர்கள் மணவுறவு கொண்டு, ஒன்றாக உண்டு, 'சௌத்ரி' என அழைக்கப்பட்ட பஞ்சாயத்து தலைவரின் தலைமையில் கூடி வாழ்ந்தனர். இருபது ஆண்டுகளுக்கு முன் ஒரு குழுவிற்கு ஒரு 'சௌத்ரி' இருந்தார் - இப்போது ஜெயசுவாலாவிற்கு மூவரும் மாணிக்பூருக்கு இருவரும் உள்ளனர். இதற்குக் காரணமாக இருந்த சண்டை இதுதான்: தெருக்களில் ஒரு பெண் (அவளது குலம் தரப்படவில்லை) பழம் விற்றுக் கொண்டிருந்தாள். அவள் தெருத் தெருவாகச் சென்று பழம்விற்பது தம் சாதிக்கு இழுக்கென அவளது சகோதரர்கள் பழம் விற்பதை நிறுத்தச் சொன்னார்கள். கடை வைத்து

1 வு. இந்தியாவில் சாதி முறை பக் 51-56

விற்பனை செய்யலாம் என்று சொல்லிப்பார்த்தனர். அப் பெண்ணும் அவள் கணவனும் இதற்குக் கீழ்ப்படிய மறுத்தனர். இறுதியாக அவர்கள் சாதியிலிருந்து விலக்கி வைக்கப்பட்டனர். தால்மு குலத்தினர் இந்தச் சாதி விலக்க நடவடிக்கையை ஏற்காமல், அதற்குப் பதிலாக ரூ.50 அபராதம் விதித்து அவர்களைத் தங்கள் குலத்தில் சேர்த்துக் கொண்டனர். இரண்டாவதாக ஒருவன் இன்ன சாதி என்று தெரியவில்லை, தன் குல சாதியிலிருந்து விலக்கி வைக்கப்பட்டான். அவன் வழக்கு விசாரணையிலிருக்கும் பொழுது. ஜெய்சுவாலா பிரிவின் சௌத்ரி, விவரம் தெரியாமல் அவனை விருந்துக்கு அழைத்தார். அதனால் மூன்று குலத்தாரும் சேர்ந்து சௌத்ரிக்கு ரூ.30, அபராதம் விதித்தனர். இப்படியே வசூலித்த அபராதத் தொகை அதிகம் சேர்ந்துவிட்டது. 'கதா' என்னும் புனித பாராயணம் நடத்துவதென்று தீர்மானிக்கப்பட்டது. தால்மு சௌத்ரி தன் பங்கைக் கேட்டார். பொதுப் பணத்தை வைத்திருந்த மாணிக்பூர் சௌத்ரி அதைக் கொடுக்க மறுத்தார். நடக்க இருக்கும் 'கதா' வுக்குத் தால்மு சாதியினரும் வரலாம், வராமலும் இருக்கலாம் என்றார். இச்சச்சரவு நீதி மன்றத்திற்குச் சென்றது. இதற்கிடையே மூன்று குலத்தாரும் மணவுறவு கொள்ள மறுத்தனர். மணவுறவு கொண்டு வாழ்ந்த ஒரே சாதி மூன்றாகப் பிரிந்தது;இவ்வாறு மூண்ட மூன்று சச்சரவால் ஒரு குலத்தார் இன்னொரு குலத்தாருக்கு எதிரிகளாயினர். வழக்கத்திலுள்ள வழிபாட்டு முறைக்கு மாறாக ஒரு சாதியிலுள்ள ஒரு கூட்டத்தார் புதிய அல்லது அசாதரண வழிபாட்டு முறையை மேற் கொள்வாராயின் அதனை அவர்களில் இன்னொரு பிரிவினர் ஏற்காவிடின், அந்த சாதி பிரிந்து மண உறவு கொள்ளத்தக்க இரு பிரிவுகளாக ஆகிவிடும். எதனை, யாருடன் உண்ணுகின்றனர், யாரை மணம் செய்து கொள்கின்றனர் என்பதில் சகிப்புத்தன்மை இருந்ததால் இப்படி ஏற்பட்ட உபசாதியினர் அரிதாகக் தெரிகின்றனர். இவ்வாறு ஏற்பட்ட, மகாபீரர், பாஞ்சிபிரியர் உபசாதிகளைத் தெலிகள், கோரிகள், நமக்கிஷாலிகள், பர்காயிகள், பங்கிகள், கேத்திரர் ஆகியோரிடையிலும் காணலாம்".

இச்சாதிகள் ஒன்றுடன் ஒன்று, எவ்வாறு நடந்து கொள்கின்றன? தனியாக இரு, ஒன்றாக உண்ணாதே, மணவுறவு கொள்ளாதே, தீண்டாதே என்று வழிநடத்துகின்றன. இச்சூழ்நிலையை, திரு பிளண்ட் நன்கு விளக்கியுள்ளார்.

"ஒரு இந்து உண்பதற்குத் தனியாகவோ, சக சாதியினருடனோ அமர்கிறான். மகளிர் ஆடவருடன் அமர்ந்து உண்ண இயலாது. தலைவர்கள் உண்டு முடிப்பதற்காக மகளிர் காத்திருப்பார்கள். கச்சா உணவாக இருப்பின் - பொதுவாகச் சப்பாத்தியே சாதாரண உணவு -

சமையலறையில் அல்லது சுல்காவில், தரையில் சதுரவடிவ அடையாளமிட்டு, அமர்ந்துண்ணல் வேண்டும், இச்சதுக்கத்தில் அந்நியர் நிழல் படிந்தாலும், உணவு அசுத்த மாய்விடும் - தூர எறிய வேண்டியதுதான். முகாம்களில், இந்து வேலைக்காரர்கள், ஒருவர்க்கொருவர் இடைவெளிவிட்டு, சதுக்கத்தில் மண் அடுப்பில் உணவு சமைத்துத் தனியாக உண்பதைக் காணலாம்...."

"மொத்தத்தில் உணவு உண்பதற்குரிய விதிகள் தண்ணீர் குடிப்பதற்கும் பொருந்தும் - சிறிது நெகிழ்ந்து கொடுக்கும் போக்கு இதில் காணப்படுகிறது. தண்ணீர் குடிக்கும் பாத்திரம் பிரச்சினைக் குரியது. உயர் சாதி மனிதன் கீழ்ச்சாதியானை அவனுக்குரிய லோட்டாவில், குடிநீர் வாங்கிக் குடிக்க அனுமதிப்பான். ஆனால் கீழ்ச்சாதியான் குடித்த பாத்திரத்தில் அவன் குடிக்க மாட்டான். உயர் சாதியான் தன் லோட்டாவிலிருந்து தீண்டாதாரைத்தவிர மற்ற சாதியார் குடிப்பதற்கு அவர்கள் பாத்திரத்தில் நீர் நிரப்புவான். ரயில் நிலையங்களில் பயணிகளுக்குக் குடிநீர் வழங்கும் பணியாளர், பார்ஹை, போரி, ஹால்வாய், காஹார், நாய்கள், பர்புஞ்சா ஆகிய சாதிகளைச் சேர்ந்தவர்களாகவும் அவர்களுக்கு மேற்பட்ட சாதியார்களுமாகவே நியமிக்கப்டுவர்."

புகைபிடிப்பது பற்றிய விதிகள் மேலும் கடுமையானவை. சக சாதியானுடன்தான் ஒருவன் புகை பிடிக்க முடியும்; காரணம் ஒரே குழலில் புகை பிடிக்க வேண்டும் என்பதே. தானே தயாரித்த உணவு உண்பதை விட புகை பிடிப்பதில் நெருக்கம் அதிகம். ஜாட், அஹிர். குஜார் ஆகிய சாதிகளைச் சேர்ந்த மூவகையினரும் ஒன்றாகப் புகை பிடிப்பதால் உறவுடைய சாதியாராகக் கருதக் கூடிய அளவிற்குப் புகைக்கும் விதி கடுமையானது. காயஸ்தர் போன்ற சாதியினர் குழாயின் வாயில் கை குவித்துப் புகைப்பதற்கும், வாய்வைத்துப் புகைப்பதற்கும் வேறுபாடு காட்டுகின்றனர். பாத்திரங்களைப் பற்றி அதிகம் சொல்லத் தேவையில்லை. எத்தகைய பாத்திரங்கள் செய்யப்பட வேண்டுமென்று விதிகள் உள்ளன. அவ்விதிகள் சமய சம்பந்தமானவை, சமூக சம்பந்தமானவை அல்ல. இந்துக்கள் பித்தளை, அல்லது வெண்கல பாத்திரங்களைப் பயன்படுத்த வேண்டும். உலோகக் கலப்பு பற்றி எண்ணற்ற விதிகள் உள, தூய்மையில்லாத பாத்திரங்கள் மீண்டும் வார்க்கப்படவேண்டும். தீட்டாவதிலிருந்து தப்புவிக்க ஒரு சில பாத்திரங்களையே இந்துக்கள் வைத்திருப்பார்கள். குறைந்த பட்சம் குடிநீர் லோட்டா, சமைக்கும் பானை, காய் கறிவகைகள் சமைக்கும் சட்டி ஆகியவற்றை வைத்திருப்பார்கள். மேல் வர்க்கத்தினர் கரண்டியும், தண்ணீர் பானையும் வைத்திருப்பார்கள். விருந்துகளுக்குச் சகசாதியினர் அனைத்துவதைப் பெரிய பாத்திரங்களும் வைத்திருப்பர்

விருந்தளிப்போருக்கு இரவலாகத் தருவர். அபராதத் தொகையிலிருந்து இப்பாத்திரங்களை வாங்கிப் பொதுச் சொத்தாக வைத்திருப்பர்."[1]

இத்தகைய உணர்வுகளுடைய சமூக அமைப்பில், சகோதரத்துவத்திற்கு இடமேது? சகோதர உணர்வுடன் செயல்படாமல், சகோதரக் கொலை உணர்வுடன் செயல்படுவர். காரல்மார்க்ஸின் எழுத்துக்களால் வர்க்க உணர்வு, வர்க்கப் போராட்டம், வர்க்கயுத்தம் போன்ற கோட்பாடுகள் தோன்றின என்று எண்ணப்படுகிறது. இது முற்றிலும் தவறு. இந்திய மண்ணில்தான் வர்க்க உணர்வும், வர்க்கப் போராட்டமும் நடந்தேறின. பல தலைமுறைகள் நடந்த, பிராமண - க்ஷத்திரிய வர்க்கப் போராட்டம் இந்திய மண்ணில்தான் நடந்தது. ஒருவரையொருவர் அழித்தொழிக்கும் அளவுக்குக் கடுமையாகவும் வன்கொலையாகவும் இப்போராட்டம் நடந்தது.

சகோதரக் கொலையுணர்வு நீங்கி, சகோதர உணர்வு வந்துவிட்டதென்று சொல்லிட முடியாது. இந்து சமூக அமைப்பிலுள்ள பிரிவினை உணர்வு எப்படி இருக்கிறதென்பதைக் கீழே காணலாம்.

ஒவ்வொரு வர்க்கத்தின் தோற்றத்திற்கும் தனிமூலம் சொல்லப்படுகிறது. சிலர் ரிஷிமூலம் என்றும், சிலர் வீரன்வழி என்றும் சொல்கின்றனர். தங்களுடைய மூலவராகப் பிறசாதிக்குழுக்கள் சொல்பவரை அல்லாத, தனியான ரிஷியோ, வீரனோ தமக்கு மூலவர் என்றும் ஒவ்வொரு குழுவும் சொல்லிக் கொள்கிறது. ஒவ்வொரு சாதிக்குழுவும் பிற குழுவினரை விடத் தாமே உயர்ந்தவர் என்று மெய்ப்பிப்பதில் ஈடுபட்டுள்ளனர். உயர் மூலம், உயர் மணம் பற்றிய விதிமுறைகள் இதற்கு நல்ல விளக்கம் தருகின்றன. திரு. பிளன்ட் சுட்டுவது போல[2]:-

"சமைத்தல் பற்றிய விளக்கத்தில், உணவு வழங்குபவனது சாதி முக்கியமன்று, உணவு சமைப்பவனின் சாதியே முக்கியமானது. எவ்வளவு தாழ்ந்த சாதியாரிடமும் பிராமணன் உணவு உண்ணுவான், சமைப்பவன் பிராமணனாக இருந்தால் போதும். ஆகவேதான் பிராமணர்கள் பலர் சமையல்காரர்களாக இருக்கிறார்கள். நீரில் சமைக்கும் கச்சா உணவிற்கும், நெய்யில் சமைக்கும் பக்கா உணவிற்கும் இந்து வேறுபாடு காண்கிறான். புனிதப் பசுவின் பால்படு பொருள்களைப் போல, நெய்யும் பாதுகாப்பளிக்கிறது என்பதே

(1) வட இந்தியாவில் சாதாரண உணவு உண்ணும்போது மட்டுமே இத்தகைய தடைகள் உ்ள்ளன. தென்னிந்தியாவில் விசேஷ உணவுகள் உண்ணுவதற்கு இந்தத் தடைகள் உரியவை. நீரில் சமைத்தவை சாதாரண கச்சா உணவென்றும் நெய்யில் சமைத்தவை விசேஷ பக்கா உணவென்றும் கொள்வர்.

2 வட இந்தியாவில் சாதி முறை, பக் 89-90.

காரணம், உணவு விளக்கங்களுக்கெல்லாம் பாதுகாப்பே காரணமாகிறது. சௌகரியமான இக்கற்பனை (நெய்யில் சமைத்தது) பக்கா உணவு பற்றிய அதிக கவனம் செலுத்துவதில்லை, கச்சா உணவு பற்றியே குறிப்பாக கவனம் செலுத்தப்படுகிறது. மற்றவற்றில் விதிமுறைகள் தளர்த்தப்படுகின்றன."

உயர்மணம் பற்றி திரு. பிளன்ட் கூறுகிறார்:

"பலசாதிகளில் உயர்மணம் திருமண விதிகளில் முக்கிய திருத்தத்தை ஏற்கச் செய்கிறது. உயர் மணம் நடைமுறையில் இருப்பின், மண உறவு கொள்ளத்தக்க குழுக்கள் சமூக அந்தஸ்து முறையில் வரிசைப்படுத்தப்படுகின்றன. உயர் சாதிக் குழுவினர் கீழ்ச்சாதியில் பெண் எடுப்பார்கள். ஆனால், பெண் கொடுக்க மாட்டார்கள். ராஜபுத்திரர்களிடையே இவ்விதி பெரிதும் வளர்ச்சியடைந்துள்ளது. வேறு பல சாதிகளிலும் பின்பற்றப் படுகிறது. அனைத்து இந்துக்களிடையேயும் உயர்மணம் செய்யும் போக்கு காணப்படுகிறது"

'உயர்மூலம்' 'உயர்மணம்' பற்றிய விதிமுறைகளிலிருந்து அறியப்படுவது யாது? உயர்வு, தாழ்வு உணர்வு மேலோங்கி இருப்பதே. எல்லா சாதிகளிலும் இவ்வுணர்வு காணப்படுகிறது. இவ்வுணர்வு இல்லாத சாதி இல்லை. இந்து சமூக அமைப்பில் ஏணிப்படி போல, ஒன்றன் மேலொன்று அடுக்கப்பட்ட சாதியமைப்பு உள்ளது; தமக்கு மேலுள்ள வகுப்பினரை வெறுக்கிறார்கள், கீழுள்ளவரை அவமதிக்கிறார்கள்.

ஒவ்வொரு சாதியும் மற்றவற்றை இழிவு படுத்தும் நோக்குடனமைந்த பழமொழிகளைப் புனைந்திருப்பதில் இவ்வுணர்வு வெளிப்படுகிறது. உயர் சாதியினருக்கு இழிவான மூலம் கற்பிக்கும் நூல்கள் எழுதிய தாழ்ந்த சாதி எழுத்தாளர்கள் தோன்றினர். 'சாஹியாத்திரி காண்டம்' இதற்குச் சரியான உதாரணமாகும் - அது இந்து புராண புனித இலக்கிய வகையைச் சார்ந்தது. எனினும் வழக்கமான புராணங்களிலிருந்து முற்றிலும் வேறுபட்ட பாணியில் இயற்றப்பட்டுள்ளது. பல்வேறு சாதிகளின் மூலவர்களைப் பற்றி அது விளக்குகிறது. பிராமணர்களுக்கு அசிங்கமான மூலத்தையும், மற்ற சாதிகளுக்கு விழுமிய மூலத்தையும் கற்பிக்கிறது.

இந்து சமூக அமைப்பு சமத்துவத்தை ஏற்கிறதா? இல்லை. 'பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்' என்னும் கோட்பாடு இந்த சமூக அமைப்பிற்குப் புறம்பானது. இக்கொள்கை தவறானதென்பது அதன் ஆன்மீக அடிப்படையும் ஆகும். பிரபஞ்சத்தைப் படைத்த பிரஜாபதியின் குழந்தைகளே அனைவரும் என்றாலும், அனைவரும் சமமாகார்.

படைக்கப்பட்டுள்ளனர். பிராமணர்கள் வாயிலிருந்தும், க்ஷத்திரியர் தோளிலிருந்தும், வைசியர் தொடையிலிருந்தும், சூத்திரர் பாதத்திலிருந்தும் படைக்கப்பட்டுள்ளனர். படைப்புக் கடவுளின் வெவ்வேறு உறுப்புக்களிலிருந்து, மனிதர் படைக்கப்பட்டிருப்பதால், மனிதர்கள் சமமாகப் படைக்கப்படவில்லை. இக்கோட்பாட்டிற்கு உயிரியல் அடிப்படை இருக்கிறதா என்பது பற்றி, இந்து சமூகம் கவலைப்படவில்லை. இது உண்மை இல்லையென்றால் குணத்திலும் இயற்கைத் திறன்களிலும் மனிதர் வேறுபடுகின்றனர் என்பது, அவ்வளவுக்கவ்வளவு சரிதான். மாற்றாக, இது உண்மை என்றால், மனிதர் குணத்திலும் இயற்கைத்திறனிலும் சமமாகப் படைக்கப்பட்டுள்ளனர் என்றால், அக்கொள்கைக்குக் கேடு.. கோட்பாட்டின் உண்மை பற்றி இந்து சமூகம் அக்கறை கொள்ளவில்லை. அதனை அறக் கோட்பாடாகவும் காணும் அக்கறை இல்லை. குணாம்சத்திலும் திறன்களிலும் எவ்வளவு வேறுபட்டாலும், மானிடர் என்ற முறையில் அனைத்து மனிதர்களும் மரியாதைக்குரியவர்கள் என்பதை ஏற்க இந்து சமூக அமைப்பு மறுக்கிறது; மனிதர்களுக்குள்ள ஆற்றல் குறைவோ மிகுதியோ அவரவர் திறமைகளை முற்றிலும் வளர்த்து பயன்படுத்தும் சூழ்நிலையை உருவாக்குவது சமூகத் திட்டமாக இருக்க வேண்டும் என்னும் கருத்தையும் அது மறுக்கிறது. நிறுவனங்களில், வாழ்க்கை முறையில், சூழ்நிலையில் சமத்துவத்தை அனுமதிப்பதில்லை; சமத்துவ உணர்வுக்கு அது எதிரானது.

## III

சமத்துவம், சகோதரத்துவம் ஆகியவற்றின் அடிப்படையில் இந்து சமூகம் அமைந்திருக்கவில்லை. பின் எக்கோட்பாடுகளின் அடிப்படையில் அமைந்துள்ளது? இவ்வினாவிற்கு ஒரே விடைதான் கூறலாம். அந்த அடிப்படைகளை உணர்ந்திட இயலுமாயினும், அவற்றின் தன்மை இந்து சமூகத்தில் ஏற்படுத்திய விளைவு பற்றி ஐயம் இருக்க முடியாது. இந்து சமூக அமைப்பு மூன்று கொள்கைகளை அடிப்படையாகக் கொண்டது. இவற்றில் முதலாவதும் முதன்மையானதும் வரிசைப் படுத்தப்பட்ட சமமின்மையே.

வரிசைப்படுத்தப்பட்ட சமமின்மைக் கோட்பாடு அடிப்படையானது என்பது சர்ச்கைக்கு அப்பாற்பட்டது. நான்கு வருணங்கள் வேறுபட்ட ஆனால் சமமான படுக்கைக் கோட்டில் அமைந்தவை அல்ல. அவை செங்குத்துக் கோட்டில் அமைந்தவை. மனுவின் திட்டப்படி, பிராமணன் முதலிடம் வகிக்கிறான். அவனுக்குக் கீழ் க்ஷத்திரியனும், க்ஷத்திரியனுக்குக் கீழ் வைசியனும், வைசியனுக்குக் கீழ் சூத்திரனும், சூத்திரனுக்குக் கீழ் ஆதிசூத்திரன் அல்லது தீண்டாதாரும் வைக்கப்பட்டுள்ளனர். இவ்வரிசை முறை மரபு சார்ந்தது மட்டுமன்று, ஆன்மீக, அற, சட்ட

அடிப்படையிலும் அமைந்தது. வாழ்க்கையின் எல்லாத் துறைகளிலும் இந்த வரிசைப் படுத்திய சமமின்மை ஆட்சி செலுத்துகிறது.

மனு ஸ்மிருதியிலிருந்து பல விளக்கங்களைக் காட்டி இதனை மெய்ப்பிக்க முடியும். இக்கருத்தை விளக்கிட நான்கு உதாரணங்களை மட்டும் எடுத்துக் கொள்கிறேன். அடிமைச் சாசனம், திருமண விதிகள், தண்டனைச் சட்டம், சந்நியாசம், சமஸ்காரம் பற்றிய விதிகள், இந்துச் சட்டம் அடிமைத் தனத்தைச் சட்டபூர்வமாக அங்கீகரித்துள்ளது. மனுஸ்மிருதி ஒருவகை அடிமைகளைக் குறிப்பிடுகிறது. நாரதஸ்மிருதி பதினைந்துவகை அடிமைகளைக் குறிப்பிடுகிறது. எத்தனைவகை அடிமைகள், அடிமைகளை எவ்வாறு வகைப்படுத்தினார்கள் என்பது முக்கியமல்ல. யார் யாரை அடிமைப்படுத்த முடியும் என்பதுதான் முக்கியம். இது பற்றிய நாரத ஸ்மிருதி, யாக்ஞவல்கியஸ்மிருதி கூறுவதைக் காண்போம்.

*நாரதஸ்மிருதி,* செய்யுள் 5:39. நான்கு வருணங்களின் தலைகீழ் முறையில் அடிமை முறை விதிக்கப்படவில்லை, தன் வருண ஆசாரத்தை மீறினாலொழிய, அவ்வகை அடிமை முறை மனைவியின் நிலைக்கு ஒப்பானது.

*யாக்ஞவல்கிய ஸ்மிருதி :* 16. 183(2) "அடிமை முறை வருணங்களின் இறங்குமுக வரிசையிலேயே தவிர, ஏறுமுக வரிசையில் அன்று"

அடிமைமுறை அங்கீகாரமே மோசமானதுதான். அடிமை முறையைத் தன்போக்கில் விட்டிருந்தாலும், ஓரளவு சமநிலை ஏற்பட வாய்ப்பு உண்டு. அது சாதியமைப்பின் அடிப்படையைத் தகர்த்திருக்கக் கூடும். அடிமை முறையில், பிராமணன் தீண்டாதானின் அடிமையாகவும், தீண்டாதான் எஜமானனாகவும் மாறும் வாய்ப்பு உண்டு. கட்டற்ற அடிமை முறையிலும் ஒரு வகை சமத்துவப் போக்கு இருப்பதால், அதனையும் அழித்திடத் திட்டமிட்டனர். மனுவும், அவர்வழித் தோன்றல்களும் அடிமை முறையை அங்கீகரித்து, அதனை வருணமுறையின் தலைகீழ் வரிசையில் அனுமதிக்கவில்லை. அதன் பொருள் ஒரு பிராமணன் மற்றொரு பிராமணனுக்கு அடிமையாக மாற முடியுமே தவிர, ஏனையோருக்கு க்ஷத்திரிய, வைசிய, சூத்திரருக்கு, ஆதி சூத்திரருக்கு, அடிமையாக முடியாது. பிராமணன் நான்கு வருணத்தாரையும் அடிமை கொள்ள முடியும். க்ஷத்திரியன் பிராமணனை அடிமைகொள்ள முடியாது. - க்ஷத்திரிய, வைசிய, சூத்ர, ஆதி சூத்திரரைத்தான் அடிமை கொள்ள முடியும். வைசியன் பிராமணனையும் க்ஷத்திரியனையும் அடிமை கொள்ள முடியாது. வைசிய, சூத்திர, ஆதி சூத்திரரைத்தான் அடிமை கொள்ள முடியும். சூத்திரன் சூத்திர, ஆதி சூத்திரரைத்தான் அடிமை கொள்ள முடியும். பிராமண, க்ஷத்திரிய, வைசியரை அடிமை கொள்ள முடியாது. ஆதி

சூத்திரன் ஆதி சூத்திரனைத்தான் அடிமை கொள்ள முடியும் பிராமண, க்ஷத்திரிய, வைசிய, சூத்திரரை அடிமை கொள்ள முடியாது.

வரிசைப்படுத்தப்பட்ட சமமின்மைக் கோட்பாட்டின் விளக்கத்தை மனுஸ்மிருதியில் திருமணம் பற்றிய விதிகளில் காணலாம். மனு கூறுகிறார்:-

3:12. "இருபிறப்பாளர் வருணங்களில், முதல் திருமணத்திற்கு அதே வருணத்தைச் சேர்ந்த பெண்ணையே மணஞ்செய்துகொள்ளப் பரிந்துரைக்கப்படுகிறது. மீண்டும் திருமணம் செய்து கொள்ள விருப்பமுடையவர் வருணமுறையின் நேர்வரிசையில் தேர்ந்தெடுத்தல் வேண்டும்."

3:13. "சூத்திரன் மனைவி சூத்திரச்சியாகவே இருத்தல் வேண்டும். வைசியனுக்கு வைசிய, சூத்திரப் பெண்; க்ஷத்திரியனுக்குச் க்ஷத்திரிய, வைசிய, சூத்திரப் பெண்கள்; பிராமணனுக்குப் பிராமண, க்ஷத்திரிய, வைசிய, சூத்திரப் பெண்கள்."

மனு கலப்புத் திருமணத்தை எதிர்ப்பவர். ஒவ்வொரு வருணமும் தனக்குள்ளேயே மணம்புரிதல் வேண்டும். குறித்த வருணத்திற்கு வெளியே நடக்கும் திருமணத்தை மனு பொதுவாக அங்கீகரிக்கின்றார். குறித்த வர்க்கத்திற்கு வெளியே நடக்கும் திருமணத்தையும் நிபந்தனையுடன் அனுமதிக்கிறார். அடிமை முறையைப் போல கலப்புத் திருமண முறையையும் அங்கீகரிக்கிறார் - வரிசைப்படுத்தப் பட்ட சமமின்மைக் கோட்பாட்டிற்கு ஊறுவிளையாத வகையில் கலப்புத் திருமணத்தை அங்கீகரிப்பது அடிமை முறையைப் போல, தலைகீழ் வரிசையிலன்று. பிராமணன் எந்த வருணப் பெண்ணையும் மணக்கலாம். க்ஷத்திரியன் தன் வருணம் தன் கீழ் வருணமான வைசிய, சூத்திரகுலங்களிலும் பெண் கொள்ளலாம் - ஆனால் மேல்சாதியாகிய பிராமணப் பெண்ணை மணக்கக் கூடாது. வைசியன் தன் வகுப்பிலும் சூத்திர சாதியிலும் பெண் கொள்ளலாம், க்ஷத்திரிய, பிராமணப் பெண்களை மணத்தல் தடைசெய்யப் படுகிறது.

சட்டத்தின் ஆட்சி மனு கூறும் மூன்றாம் விளக்கமாக அமைந்துள்ளது. முதலில் சாட்சிகளை எப்படி விசாரிக்க வேண்டும் என்பதைப் பார்ப்போம். மனுமுறைப்படி அவர்களுக்குப் பின்வருமாறு சத்தியப் பிரமாணம் செய்வித்தல் வேண்டும்.

8:87. "முற்பகலில் தூய்மைபெற்ற நீதிபதி இருபிறப்பாளரைத் (தூய்மை பெற்றவர்) தெய்வீகச் சின்னம் அல்லது படிமத்தின் முன் அல்லது பிராமணர் முன்னிலையில் உண்மையைக் கூறுமாறு அறிவுறுத்த வேண்டும். சாட்சிகள் வடக்கு அல்லது கிழக்கு முகமாக நிற்றல் வேண்டும்".

*8:88.* "பிராமணனிடத்தில் 'கூறுக' என்றும், க்ஷத்திரியனிடத்தில் உண்மையைக் கூறுக என்றும், வைசியனிடம் அவனுடைய பசுக்கள், பொன், தானியங்கள் மேல் ஆணையிட்டுக் கூறுக என்றும், சூத்திரனைத் தலைமீது ஆணையிட்டு அதனால் வரும் கேடுகளைக் கூறி அச்சுறுத்திக் கூறுக என்றும் பிரமாணம் செய்க."

மனு கூறும் தண்டனை முறைகளை எடுத்துக் கொள்வோம். அவதூறுக்குரிய தண்டனை:

*8:267.* "புரோகிதருக்கு அவதூறு இழைக்கும் க்ஷத்திரியனுக்கு நூறு பணம் அபராதம், அவ்வாறு தவறிழைக்கும் வைசியனுக்கு நூற்றைம்பது அல்லது இருநூறு பணம் அபராதமும், ஒரு அடிமையோ தொழிலாளியோ தவறிழைத்தால் கசையடி விதித்தலு வேண்டும்"

*8:268.* "ஒரு புரோகிதர் க்ஷத்திரியனுக்கு அவதூறு விளைவித்தால் ஐம்பது பணமும், வைசியனுக்கு அவதூறு விளைவித்தால் இருபத்தைந்து பணமும், அடிமை வர்க்கத்தானுக்கு அவதூறு விளைவித்தால் பன்னிரண்டு பணமும் விதித்தல் வேண்டும்".

நிந்தனைக் குற்றத்தை எடுத்துக் கொள்வோம். மனு விதிக்கும் தண்டனை வருமாறு:.

*8:270.* "சூத்திரன் இரு பிறப்பாளரைக் கடுஞ் சொற்களால் நிந்தித்தால், அவன் நாக்கை அறுத்தல் வேண்டும், ஏனெனில் பிரம்மனின் கீழான பாகத்தில் அவன் பிறந்தவன்."

*8:271.* "அவன் பெயரையும் சாதியையும் நிந்தித்தால், உதாரணமாக, தேவதத்தா, பிராமணக் குப்பையே என்றால், பத்துவிரல் நீளமுள்ள, பழுக்கக் காய்ச்சிய இரும்பாணியை அவன் வாயில் நுழைத்தல் வேண்டும்"

*8:272.* "கர்வத்தால் பிராமணர் எப்படிப் பணியாற்றுவது என்பது பற்றிக் கட்டளையிட்டால், அவன் வாயிலும் காதிலும் காய்ச்சிய எண்ணெய் ஊற்றுமாறு அரசன் கட்டளையிடுதல் வேண்டும்".

பழித்தல் பற்றிய தண்டனையை மனு இவ்வாறு விதித்துள்ளார்:

*8:276.* "பரஸ்பரம் பழித்தலைச் செய்த பிராமணனுக்கும் க்ஷத்திரியனுக்கும் அரசன் தண்டனை விதிக்க வேண்டும். பிராமணனுக்கு மிகக்'குறைவாகவும், க்ஷத்திரியனுக்கு மிதமாகவும் விதித்தல் வேண்டும்."

*8:277.* "வைசியனும், சூத்திரனும் தத்தம் வருணத்திற்குரிய முறையில், ஒன்று போலத் தண்டனை விதிக்கப் பெறல் வேண்டும். நாக்கை

அறுப்பது சூத்திரருக்கு மட்டும். இதுவே தண்டனைக்குரிய நிலையான விதிமுறை.".

தாக்கியமைக்கான தண்டனை குறித்து மனு விளக்குகிறார்.

8:279. "இரு பிறப்பாளரை எந்த அங்கத்தினால் சூத்திரன் தாக்கினானோ அல்லது புண்படுத்தினானோ அந்த அங்கத்தைத் துண்டித்தல் வேண்டும். இதுவே மனுநீதி."

ஆணவத்ததிற்கான தண்டனையை மனு விளக்குகிறார்.

8:281. "உயர் சாதிக்காரனுடன் சூத்திரன் சரியாசனத்தில் அமர்ந்தால், அந்த ஆணவச் செயலுக்காக இடுப்பில் சூடு போடுதல் வேண்டும் அல்லது நாடு கடத்தப்படுதல் வேண்டும் அல்லது அவனது ஆசனத்தில் ஒரு வெட்டுப்புண் ஏற்படுத்திட அரசன் ஆணை பிறப்பித்திட வேண்டும்."

8:282. "ஆணவத்தால் அவன் துப்பினால், அரசன் இரு உதடுகளையும் வெட்டிடல் வேண்டும். அவன்மீது சிறுநீர் பெய்தால், ஆண்குறியை வெட்டிடல் வேண்டும். அவன்மீது குசு விட்டால் ஆசனத்தை வெட்டிடல் வேண்டும்."

8:283. "பிராமணனின் முடியைப் பிடித்திழுத்தாலோ காலை பிடித்துவாரினாலோ, தாடியை, கழுத்தை, விதையைப் பிடித்து இழுத்தாலோ அவன் கைகளை வெட்டிவிடுமாறு அரசன் தயங்காமல் ஆணையிடுதல் வேண்டும்."

8:359. "இழிகுலத்தான் ஒருவன் பிறன்மனை புணர்ந்தால் மரண தண்டனை விதித்தல் வேண்டும்; எல்லா வருணத்தைச் சேர்ந்த மனைவிகளையும் குறிப்பாகப் பாதுகாத்தல் வேண்டும்."

பிறன்மனை புணர்தலுக்கு மனு பின்வருமாறு தண்டனை விதிக்கிறார்.

8:366. "உயர்சாதிக்காரப் பெண்ணைக் காதலிக்கும் சூத்திரனுக்குக் கசையடி கொடுத்தல் வேண்டும். சமவர்க்கப் பெண்ணைக் காதலித்தால், பெண்ணின் தந்தை சம்மதித்தால், பரிசம் போட்டுத் திருமணம் செய்து கொள்ளலாம்."

8:374. "இரு பிறப்பாளனின் மனைவியுடன் சோரம் போகும் சூத்திரன், அப்பெண் இல்லத்தில் பாதுகாக்கப் பட்டாலும், இல்லாவிடினும், பின்வரும் தண்டனைக் குள்ளாவான். காக்கப்படாத பெண்ணாயின் தன் சொத்துக்களை இழப்பதுடன் ஆண்குறியையும் வெட்டப்பட வேண்டியனாகிறான். காக்கப்பட்ட பெண்ணாயின் அவன் உயிரையும் பிற அனைத்தையும் இழத்தல் வேண்டும்."

8:375. "காப்பிலுள்ள பிராமணப் பெண்ணுடன் சோரம் போகும்

வைசியன் செல்வமனைத்தையும் இழந்து, ஓராண்டு சிறைத்தண்டனையும் விதிக்கப் பெறுதல் வேண்டும். அத்தகைய குற்றம் புரியும் க்ஷத்திரியனுக்கு ஆயிரம் பணம் அபராதமும், கழுதை மூத்திரத்தால் தலைச் சவரமும் பண்ணி விடுதல் வேண்டும்."

8:376. "க்ஷத்திரியனோ வைசியனோ காப்பிலில்லாத பிராமணப் பெண்ணுடன் சோரம் போனால், வைசியனுக்கு ஐந்நூறு பணமும், க்ஷத்திரியனுக்கு ஆயிரம் பணமும் அபராதம் விதித்தல் வேண்டும்."

8:377. "இவ்விரு சாதியைச் சேர்ந்தவளும், மேன்மைமிக்கவளும் பிராமணனின் காப்பிலுள்ளவளுமான மனைவியைச் சேர்ந்தால், அவர்களுக்குச் சூத்திரனுக்குரிய தண்டனையே வழங்குதல் வேண்டும் அல்லது உலர்ந்த புல்லும் நாணலும் நிறைந்த படுக்கையிலிட்டு எரிக்கப் பெறுதல் வேண்டும்."

8:382. "க்ஷத்திரியனின் காப்பிலுள்ள மனைவியை வைசியன் கூடினாலும், வைசியப் பெண்ணைக் க்ஷத்திரியன் கூடினாலும், காப்பில் இல்லாத பிராமணப் பெண்ணுடன் சோரம் போவோருக்குரிய தண்டனை பெறுவர்."

8:383. "பிராமணன் இவ்விரு சாதியைச் சேர்ந்த, காப்பிலுள்ள மனைவியுடன் சோரம் போனால், ஆயிரம் பணமும், சூத்திரப் பெண்ணுடன் சோரம் போனால், ஆயிரம் பணமும் அபராதம் விதிக்கப் பெறுதல் வேண்டும். க்ஷத்திரிய, வைசியருக்கும் அவ்வாறே."

8:384. "க்ஷத்திரிய வகுப்பைச் சேர்ந்த, காப்பிலுள்ள பிறர் மனைவியுடன் வைசியன் சோரம் போனால், 500 பணம் அபராதம். க்ஷத்திரியன் வைசியப் பெண்ணுடன் சோரம் போனால், 500 பணம் அபராதம் அல்லது மூத்திரச் சவரம் விதித்தல் வேண்டும்."

இந்துச் சட்ட முறைகளுக்கும், இந்து அல்லாத சட்ட முறைகளுக்கு இடையேயும் எத்துணை வேறுபாடு! குற்றவியல் சட்டத்தில் சமமின்மை எவ்வாறு ஆழமாகப் பதிக்கப் பெற்றுள்ளது! நீதிமுறைப்படி அமைந்த குற்றவியல் சட்டத்தில், இரு கூறுகளை நாம் காணலாம். குற்றத்தின் இலக்கணத்தை வகுப்பது ஒரு பிரிவு; அதை மீறுவோருக்கு அறிவுக்குப் பொருத்தமான தண்டனை விதிப்பது மற்றொரு பிரிவு.. எல்லாக் குற்றவாளிகளுக்கும் ஒரே விதமான தண்டனையே. ஆனால் மனுவில் நாம் காண்பது யாது? அறிவுக்குப் பொருத்தமற்ற தண்டனை முறை, குற்றத்துடன் சம்பந்தப்பட்ட அவயவத்தைத் தண்டித்தல். வயிறு, நாக்கு. மூக்கு, கண்கள், காதுகள், பிறப்பு உறுப்புக்கள் போன்றவற்றிற்குத் தனிமனம் உண்டு என்பது போலவும் உடலொடு உடன்வாழ்வன அல்ல போலவும் கருதித் தண்டனை அளித்தல். மனுவின் குற்றவியல் சட்டத்தின் இரண்டாம் கூறுபாடு, குற்றத்தின் கடுமையை மீறிய, மனிதத்

தன்மையற்ற தண்டனை அளித்தல். மனுவின் குற்றவியல் சட்டத்தின் மிக வெளிப்படையான கூறுபாடு, ஒரே விதமான குற்றத்திற்குப் பல சமமற்ற தண்டனைகளை விதித்தல் அப்பட்டமாகத் தெரிகிறது. குற்றவாளியைத் தண்டிப்பதற்கு மட்டுமின்றி, நீதி கேட்டு மன்றத்திற்கு வருபவருக்குள் சிலருடைய கண்ணியம் காக்கவும், சிலரைத் தாழ்த்தி வைக்கவும் திட்டமிட்ட செயல். இச்சமமின்மை மனுவின் திட்டத்தின் அடிப்படையான சமூகச் சமமின்மையை நிலைநாட்டுவதே.

வரிசைப்படுத்தப்பட்ட சமமின்மை என்னும் கோட்பாடு பொருளாதாரத் துறைக்கும் கொண்டு செல்லப்பட்டுள்ளது. "ஒவ்வொருவரும் தம் திறமைக்குத் தக்கவாறு உழைத்தல்; அவ்வொவ்வொருவரின் தேவைக்கேற்றவை அளித்தல்" என்னும் கோட்பாடு இந்து சமூகத்தில் இல்லை. இந்து சமூக அமைப்பின் கோட்பாடு. "ஒவ்வொருவரின் தேவைக் கேற்றபடி உழைப்பு, உயர்குலத்திற்கு ஏற்றவண்ணம் அளித்தல்." பஞ்சத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணத்தை ஓர் அலுவலர் [1] விநியோகிப்பதாகக் கொள்வோம்' தாழ்ந்த குலத்தாரைவிட உயர் குலத்தாருக்கு அதிகம் கொடுக்க வேண்டியது அலுவலர் கடமையாகிறது. ஒரு அலுவலர் வரி விதிப்பதாகக் கொள்வோம். உயர் குலத்தாருக்குக் குறைந்த வரியும், தாழ்ந்த குலத்தாருக்கு அதிகவரியும் அலுவலர் விதித்தல் வேண்டும். இந்து சமூக அமைப்பு, சமதேவை, சமப்பணி, சமத்திறமையின் அடிப்படையில் உழைப்பிற்கேற்ற ஊதியத்தை அங்கீகரிப்பதில்லை - அதன் கோட்பாடு வாழ்க்கையில் நல்ல வசதிகளை உயர் குலத்தாரே பெறவேண்டும், குறைந்த, மோசமானவற்றைக் கீழ்க் குலத்தாரே அனுபவிக்க வேண்டுமென்பதே.

வரிசைப்படுத்தப்பட்ட சமமின்மைக் கோட்பாடு இந்து சமூகத்தின் அடிப்படை என்பதற்கு மேலும் சான்று காட்ட வேண்டுவதில்லை. சமூக வாழ்வின் எல்லாத் துறைகளிலும் இக் கோட்பாடு ஆட்சி செலுத்துகிறது. சமத்துவத்திற்கு எதிராக சமூக நிலைகள் பாதுகாக்கப்பட்டுள்ளன.

இந்து சமூக அமைப்பின் இரண்டாம் கோட்பாடு, ஒவ்வொரு வர்க்கத்திற்கும் தொழில்கள் நிலையாக நிர்ணயிக்கப்பட்டுள்ளன - பரம்பரையாக அத்தொழில்களையே தொடர்ந்து செய்ய வேண்டும். நான்கு வருணத்திற்குரிய தொழில்களைப் பற்றி மனு கூறுகிறார்.

---

1. உதாரணங்கள் கற்பனை அல்ல; சரித்திர நிகழ்வுகள். பேஷ்வாக்களின் காலத்திலும் உயர், தாழ்குல வேறுபாடுகள் வழக்கிலிருந்தன. பம்பாய் மாகாணத்திலும் நிவாரண விநியோகத்தில் ஏற்றத்தாழ்வு உள்ளது - ஒரு காங்கிரஸ் மந்திரி அவற்றை நியாயப்படுத்திப் பேசினார். இன்று இக்கருத்துக்கள் பொருந்துவன அல்ல - ஆசிரியர்கள்

1:87. "இப் பிரபஞ்சத்தைக் காப்பதற்காக ஒளிமிகு இறைவன் தன் வாய், தோள், தொடை, பாதத்திலிருந்து தோன்றியவருக்கு வெவ்வேறு தொழில்களை வகுத்துள்ளான்."

1:88. "பிராமணர்களுக்குக் கற்றல், கற்பித்தல் (வேதத்தை) தம் நலனுக்காகவும் பிறருக்காகவும் வேள்வி செய்தல்; பிச்சை ஏற்றல், அளித்தல்."

1:89. "க்ஷத்திரியருக்கு மக்களைக் காத்தல், வேள்விக் கொடைகள் அளித்தல், கற்றல் (வேதம்), புலனின்பத்தில் பற்று நீங்கல்."

1:90. "வைசியருக்கு ஆடு மாடு மேய்த்தல், வேள்விக்குக் கொடையளித்தல், கற்றல் (வேதம்), புலனின்பத்தில் பற்று நீங்கல்."

1:91. "சூத்திரருக்குரிய ஓரேதொழில் மேல்வருணத்தார் மூவருக்கும் கீழ்ப்படிந்து உழைத்தல்."

பல்வேறு வர்க்கங்களுக்குரிய தொழில் விதிமுறைகள் மனுஸ்மிருதியில் மேலும் விளக்கமாகக் கூறப்பட்டுள்ளன.

1:88. "சுயம்புமனு பிராமணருக்குரிய தொழில்களாக விதித்திருப்பன, வேதம் கற்றல், கற்பித்தல், வேள்வி இயற்றுதல், வேள்விக்குத் துணைபுரிதல், மற்றவர் வேள்வியை நடத்துதல், பணக்காரனாயின் பிச்சை கொடுத்தல், ஏழையாயின் பிச்சை எடுத்தல் கடமைகளாகும்."

1:89. "க்ஷத்திரியனுக்கு மக்களைக் காத்தல், பிச்சை கொடுத்தல், வேள்வி செய்தல், வேதம் கற்றல், புலனின்பப் பற்று நீங்கல் கடமைகளாகும்."

1:90. "ஆடு மாடு மேய்த்தல், கொடையளித்தல், வேள்வி செய்தல், வேதம் கற்றல், வாணிபம் செய்தல், வட்டிக்குக் கடன் கொடுத்தல், நிலத்தில் பயிரிடுதல் வைசியனுக்குரிய கடமைகளாகும்."

1:91. "மேலாண்மை படைத்த இறைவன் சூத்திரருக்கு விதித்துள்ள ஒரே கடமை மேல் வருணத்தாருக்கு, அவர்தம் மதிப்புக் குன்றாமல் உழைத்தல்."

10:74. "உன்னத இறைநிலை எய்திட உறுதிபூண்டுள்ள பிராமணர் கடமைதவறாது பின்வரும் முறைப்படி ஆறு தொழிலை இயற்றிடுக."

10:75 "வேதங்களைக் கற்றல், அவற்றை மற்றவருக்குக் கற்பித்தல், வேள்வியேற்றல், பிறர் வேள்விக்குத் துணைபுரிதல், தமக்குப் போதிய அளவு இருப்பின் ஏழைக்கு ஈதல், அவர்களே ஏழையாயின் நல்லோரிடம் தானம் பெறுதல் - இவை முதல் தர பிறப்பினருக்குரிய ஆறுதொழில்கள்."

10:76. "பிராமணருக்குரிய ஆறு தொழில்களில் மூன்று அவர்தம் வாழ்விற்குதவுவன:. வேள்வி புரிதல், வேதம் கற்றல், எல்லோரிடம் கொடை பெறுதல்."

10:77. "மூன்று கடமைகள் பிராமணருக்கு மட்டுமே, க்ஷத்திரியருக்கு அல்ல, வேதம் கற்பித்தல், வேள்வி புரிதல், தானம் பெறுதல்."

10:78. "இம் மூன்று கடமைகளும் நிலையானவிதியால் வைசியருக்கு விலக்கப்பட்டுள்ளன. மானிடருள் தேவனாகிய மனு ராணுவ, வணிக வர்க்கத்தினருக்கு, இக்கடமைகள் பொருந்தா என்றார்."

10:79. "க்ஷத்திரியன் வாழ்க்கைக்குச் சிறப்பாக விதிக்கப்பட்டுள்ளவை பின்வருமாறு: ஆயுதமேந்துதல், அடிப்பதற்கோ, ஏவிடவோ; வைசியனுக்கு வணிகம், ஆடு மாடு மேய்த்தல், விவசாயம், மறு ஜென்மத்திற்கு உதவுவதற்காக இருவருக்குமே கொடை அளித்தல், கற்றல், வேள்வி நடத்துதல்."

தன் வர்க்கத்தாருக்கு விதித்துள்ள தொழில்களையே, ஒவ்வொருவரும் செய்தல் வேண்டும். தனிநபர் விருப்பத்திற்கும். தனிநபர் மனப் போக்கிற்கும் இடமளிக்கப்படவில்லை. இந்து சமூக அமைப்பில், முன்னோரது தொழிலையே தனிநபர் செய்தல் வேண்டும். தப்பிக்க முடியாத, கடுமையான விதி இது.

தொழிலை நிர்ணயிப்பதுடன் இக்கோட்பாடு நிற்பதில்லை. அதற்குரிய மரியாதை அடிப்படையிலும் தொழில்களை அது தரம் பிரிக்கிறது.

மனு கூறுகிறார்,

10:80. "வாழ்வதற்குரிய தொழில்களில் பிராமண, க்ஷத்திரிய, வைசியருக்கு முறையே வேதம் கற்பித்தல், மக்களைக் காத்தல், வணிகம் செய்தல் பெரிதும் பரிந்துரைக்கப்படுகின்றது."

இந்து சமூக அமைப்பின் மூன்றாம் கோட்பாடு, மக்களை அந்தந்த வர்க்கத்துக்குள்ளேயே அடக்கி வைத்தல். வர்க்கங்களை இந்து சமூக அமைப்பு அங்கீகரிப்பதில் வியப்போ, விந்தையோ எதுவுமில்லை. எங்கும் வர்க்கங்கள் உள. எச்சமூகத்திலும் இல்லாமலில்லை. குடும்பங்கள், வட்டங்கள், சங்கங்கள், அரசியல் கட்சிகள், சமூகப்பிரிவுகள், குற்றச் சதிகளில் ஈடுபடும் குழுக்கள், மக்களைச் சுரண்டும் வணிக நிறுவனங்கள். உலகெங்கிலுமுள்ள சமூகங்களில் இந்த வர்க்கங்கள் உள்ளன. வர்க்கங்களை ஒழிப்பது சுதந்திர சமூக அமைப்பிலும் இயலாததொன்று. சுதந்திர சமூக அமைப்பின் நோக்கம் தனித்தும் பிரிந்தும் வாழ்வதை இலட்சியமாகக் கொள்வதைத் தடுப்பதுதான். தனித்தும் பிரிந்தும் வாழாத வரையில் பல்வேறு வகுப்பினர் ஒருவருக்கொருவர் சமூகவியல்

அல்லாத உறவுகளை மேற்கொண்டுள்ளனர். தனிமையும், பிரிநிலையும் சமூக விரோதத்தையும் வெறுப்பையும் வளர்க்கின்றன. வர்க்க உணர்வு இறுகிட, சமூக வாழ்வியலை நிறுவனமாக்கிட, வர்க்கத்தினுள் சுய நல லட்சியங்கள் மேலோங்கிடத் தனிநிலை உதவுகிறது. வாழ்வை ஸ்தம்பிக்கச் செய்துவிட, உயர்உரிமை, குறையுரிமை பெற்ற குலங்களாக மாற்றிட, ஆண்டான் அடிமை ஆகிவிடப் பிரிநிலை உதவுகிறது.

சுதந்திர சமூக அமைப்பிற்குப் பிரிநிலையும், தனிநிலையுமே வர்க்கக் கொள்கையை விட முரணானது. சுதந்திர சமூக அமைப்பு சமூக மாற்றங்களுக்கான வாயில்களைத் திறந்து வைத்திருக்கிறது. பொதுநலன்கள், நிறுவனங்கள், செலவினம், பொதுவான விழுமியங்கள், முன்னும் பின்னும் இயங்கும் நெகிழ்ச்சி, பிறரிடம் பெறவும், அளிக்கவும் சமய சந்தர்ப்பம் இவற்றில் வர்க்கங்கள் பங்குகொள்ளும் போதுதான் இது சாத்தியமாகிறது. அத்தகைய சமூகத் தொடர்புகள் சம்பிரதாயங்களை வலுவிழக்கச் செய்கின்றன, மனம் விரிந்து விழித்திட உதவுகின்றன, மனநிலைகளை மாற்றி அமைத்திட, மாற்றத்தை விழைந்திட வகைசெய்கின்றன, இந்து சமூக அமைப்பின் சிறப்பம்சம் வர்க்கங்கள் சுதந்திரமாக உறவாடலையும், ஊடாடலையும் தடைசெய்வதே. உடன் உண்ணவும், மணஉறவு கொள்ளவும் தடைவிதிக்கப்பட்டுள்ளது. சாதாரண சமூக உறவுகளையும் மனு தடை செய்கிறார். மனு கூறுவது:

> 4:244. "தன் உன்னதநிலையைக் காக்க விரும்புபவன், உயரிய, விழுமிய குடும்பங்களோடேயே உறவுகள் கொள்ளுதல் வேண்டும், கீழான தரம் தாழ்ந்தவருடன் உறவைத் தவிர்த்தல் வேண்டும்."

> 4:245. "ஒரு புரோகிதர் உயர்குலப் பெரியவருடன் தொடர்பு கொண்டு, கீழான தரமற்றவரைத் தவிர்ப்பதன் மூலம் உன்னத நிலை அடைகிறான். எதிரான நடவடிக்கைமூலம் அடிமை நிலைக்குத் தாழ்ந்துவிடுகிறான்."

> 4:79. "தீயவர்கள், அந்தேயவாசிகள், பேதையர், பணத்திமிர் படைத்தவர், பக்காசர், சண்டாளர், பெருங் குற்றமிழைக்கும் பஞ்சமர் நின்ற மரத்தடி நிழலில் கூட நிற்கவேண்டாம்."

இந்து சமூக அமைப்பு சகோதரத்துவத்திற்கு எதிரானது. சமத்துவத்தை அது அங்கீகரிப்பதில்லை. சமத்துவத்தை அங்கீகரிக்காதது மட்டுமல்ல, சமமின்மையை அதிகாரபூர்வக் கோட்பாடாக்குகிறது. சுதந்திரம் பற்றிய நிலை என்ன? தொழிலைத் தேர்ந்தெடுக்கும் சுதந்திரம் கிடையாது. ஒவ்வொருவரது தொழிலும் ஏற்கனவே நிர்ணயிக்கப்பட்டுள்ளது. அத்தொழிலை மேற்கொண்டு நடத்துவதே செய்யத்தக்கது பேச்சு சுதந்திரம் இருக்கிறது. சமூக

அமைப்பில் மேல்மட்டத்துக்கே பேச்சு சுதந்திரம் உண்டு. தாராளமான பெருந்தன்மையுடன் கூடிய சுதந்திரம் அன்று. வால்டேர் கூறிய தாராள மனப்பான்மையுடன் அன்று: "நீ கூறியதை நான் முற்றிலும் மறுக்கிறேன், ஆனால் நீ மாற்றுக்கருத்துக் கூறும் உரிமையை என்னுயிர் ஈந்தும் காப்பேன்." தர்க்கம் பற்றியும், விவாத முறைபற்றியும் மனு கூறுவது இதனைத் தெளிவாக்குகிறது.

*4. 29:30 "விருந்தினரை இருக்கை தந்து, உணவளித்து, படுக்கை ஈந்து, தண்ணீர் கிழங்கு பழங்கள் கொடுத்து இல்லத்தில் தங்கவைத்தல் வேண்டும்."*

*வழக்கத்திற்கு மாறுபாடான கொள்கையாளரை, விலக்கப்பட்ட தொழில் புரிவோரை, வேதத்தை எதிர்த்து வாதாடுவோரை, கேடிபோல் வாழ்வோரை, நாரை போல்வாரை முகமன் கூறிச் சிறப்பித்தல் கூடாது.*

*2:10. "ஸ்ருதி (வெளிப்பாடு) என்றால் வேதம்; ஸ்மிருதி (மரபு) என்றால் புனிதச் சட்டம், இரண்டுமே விவாதத்திற்குரியன அல்ல. இரண்டிலிருந்தும் புனிதச்சட்டம் ஒளிர்கிறது".*

*2:11. "இருபிறப்பாளர் எவரும் விவாதமுறையில் இறங்கி இவ்விரண்டையும் (ஸ்ருதி,ஸ்மிருதி) அவமதித்தால், நல்லோர் அவரை நாத்திகரென்றும், வேததுவேஷி என்றும் சாதிப் பிரஷ்டம் செய்தல் வேண்டும்."*

*2:12. "வேதமும் அறநெறிவும், மேலோர் கடைப்பிடித்த மரபும், ஆத்ம சந்துஷ்டியும் என இவை நான்குமே தர்ம சாஸ்திர விளக்கங் களாக இருப்பனவென்று அறிந்தோர் தெளிவாகக் கூறுகிறார்கள்".*

*இதற்குரிய காரணங்களையும் மனு விளக்குகிறார்:*

*2:6 "புனிதச் சட்டத்தின் முதல்மூலம் வேதங்களே, அடுத்தது மரபு, வேதமறிந்தோரின் நன்னடத்தை, புனிதர்களின் பழக்கவழக்கங்கள், இறுதியாகத் தன்னிறைவு."*

*2:7 "மனு அளித்த சட்டங்கள் ஏற்கனவே வேதங்களில் அறிவிக்கப் பெற்றுள்ளன; மனு முனிவன் அனைத்தும் அறிந்தவன்"*

இந்தச் சுதந்திரத்தில் விவாதம்புரியும் சுதந்திரம் இல்லை, சமூக அமைப்பைத் தர்க்கரீதியாக விமர்சனமும் செய்ய இயலாது. சுதந்திரம் எதுவுமே இல்லை.

செயல்படும் சுதந்திரம் எந்நிலையது? இந்து சமூக அமைப்பில் தன் விருப்பத்திற்கு இடம் இல்லை. தனி மனிதர் விருப்பத்திற்கு இந்து சமூகம் எதையும் விட்டு வைக்க வில்லை. தொழிலை நிர்ணயிக்கிறது. இந்தக்கட்டுப்பாடுகளுக்குத் தன்னை ஆட்படுத்திக் கொள்வது

ஒன்றுதான் தனி மனிதன் செய்யக்கூடிய வேலை.

அரசியல் சுதந்திரம் பற்றியும் இதே கருத்தைத்தான் சொல்ல வேண்டும். மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட, பிரதிநிதித்துவ அரசாங்கத்தைப் பற்றி இந்து சமூக அமைப்பு எதுவும் கூறவில்லை. சட்டத்தின் அடிப்படையில் மக்கள் இயங்கிட வேண்டும். மக்களின் பிரதிநிதிகளே சட்டத்தை இயற்றிட வேண்டும் என்ற அடிப்படையில்தான் பிரதிநிதித்துவ அரசு இயங்கும். மக்களின் சட்டத்திற்குட்பட வேண்டுமென்பதை இந்துசமூக அமைப்பு ஏற்றுக் கொள்கிறது; ஆனால் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டவரே சட்டமியற்றிட வேண்டும் என்பதை மறுக்கிறது. மக்கள் உட்பட்டு நடக்க வேண்டிய சட்டம் ஏற்கனவே இயற்றப்பட்டு விட்டது -- அது வேதங்களில் சொல்லப்பட்டிருக்கிறது என்பதே இந்து சமூகத்தின் முடிவு. அதிலிருந்து கூட்டவோ, குறைக்கவோ எவருக்கும் உரிமையில்லை. அப்படியென்றால், பிரதிநிதித்துவ சபை எதுவும் வேண்டாம். அரசியல் சுதந்திரம் என்பது சட்டமியற்றும் உரிமையே அரசை உருவாக்குவதற்கும் மாற்றுவதற்கும் உள்ள உரிமையே. இந்து சமூக அமைப்பில் இதற்கு இடமில்லை.

தொகுத்துக் கூறின், இந்து சமூக அமைப்பு வர்க்கங்களை அடிப்படையாகக் கொண்டது -- தனி மனிதனை அன்று. வர்க்கங்கள் ஒன்றன்மேலொன்றாக அடுக்கப்பட்டுள்ளன. வர்க்கத்தின் அந்தஸ்தும் தொழில்களும் ஏற்கனவே நிர்ணயிக்கப்பட்டுள்ளன. இந்து சமூக அமைப்பு இறுக்கமானது. தனிமனிதன் என்ற முறையில் எவ்வளவு மாற்றங்கள் நிகழ்ந்தாலும் தான் பிறந்த குலத்தின் அந்தஸ்தில் எம்மாற்றமும் நிகழாது. வேறு வர்க்கத்தில் பிறந்த இன்னொருவருடன் அவருக்குரிய உறவு மாறாது. முதன்மையானது இறுதிநிலைக்கு இறங்காது. இறுதிநிலையில் உள்ளது முதல்நிலைக்கு ஏறவும் முடியாது.

❑❑❑

# இயல் 3

# இந்து சமூக அமைப்பு - அதன் தனித்தன்மைகள்

இதுவரை இந்து சமூக அமைப்பின் அடிப்படைகள் பற்றி விவரித்துரைக்கப்பட்டது. அதன் அடிப்படைத் தன்மைகளோடு இந்து சமூகம் சில தனிச்சிறப்புடைய இயல்புகளையும் கொண்டுள்ளது. அடிப்படைத் தன்மைகளைப் போலவே தனிச் சிறப்புகளும் முக்கியமானவையே. இவற்றைக் குறிப்பிடாமல் விடப்படும் இந்து சமூக அமைப்பைப் பற்றிய எந்த ஆராய்ச்சியும் முழுமையானதாகவோ, முற்ற முடிந்ததாகவோ ஆகாது.

அந்தத் தனித்தன்மைகள் யாவை? இந்து சமூக அமைப்பின் தனித் தன்மைகள் மூவகைப்பட்டவை. இந்த மூன்றில் முதலில் நம் மனதில் படுவது மனிதஇயல்புக்கு அப்பாற்பட்ட மாமனித **(superman)** வழிபாடேயாகும். இவ்வகையில் இந்து சமூக அமைப்பு என்பது நீட்ஷே[1] **(Nietzsehe)** யின் கோட்பாடுகளை நடைமுறைப்படுத்துவதாகவுள்ளது என்பதைத்தவிர வேறொன்றுமில்லை. இந்தக் கோட்பாடுகளை அவர் மனுஸ்மிருதியிலிருந்து பெற்றதாக ஒப்புக் கொண்டுள்ளார். அவர் தம்முடைய ‘கிறிஸ்துவுக்கு எதிர்ப்பு’ என்னும் கட்டுரையில் கூறியிருப்பதாவது :-

"பொய்மைகள் எந்த அளவுக்குக் கேடுவிளைவித்துள்ளன என்பது கேள்வி? உண்மையில் கிறிஸ்துவத்தில் புனித முடிவுகள் முழுமையாக இல்லாதபோதிலும் அவற்றை நடைமுறைப் படுத்துவது பற்றியே என்னுடைய மறுப்பு அமைந்துள்ளது: அதன் முடிவுகள் தவறான முடிவு களாகவே உள்ளன. நஞ்சு ஊட்டுதல், பழித்துக்கூறல், வாழ்க்கை மறுப்பு, உடலை வெறுத்தல், பாவத்தை அற்பமாகக் கருதல் ஆகியவற்றின் காரணமாக மனிதன் தரங்கெட்டுத் தாழ்வுறுதல் - இவற்றின் விளைவாக அதன் வழிமுறைகள் தவறானவையாகின்றன. இணையற்றதும் உயர்ந்ததுமான மனுவின் நூலை நான் படித்தறிந்தபோது என் உணர்வுகள் மாறின. இதே

---

1. நீட்ஷே (1844 -1900) ஜெர்மன் நாட்டைச் சார்ந்த தத்துவஞானி

போன்ற உணர்வுடன் விவிலிய நூலைப் பாராட்டியுரைப்பது ஒரு பாவமென்பேன். இவ்வாறு உரைப்பதற்கு நேரிய தத்துவார்த்த பின்னணி உள்ளதேன் என்பதை நீங்கள் உடனடியாக யூகித்துணர இயலும். யூதர்களின் யூதமத குருமார்களுக்குரிய கோட்பாடுகள், மூடநம்பிக்கைகள் ஆகியவற்றின் பிழிவாக உள்ள துர்நாற்றம் மட்டுமல்ல இதிலுள்ளவை. நுணுக்கநயம் எதிர்பார்க்கும் மனவியலறிஞர் ஒருவர் நினைந்து அசைபோடுவதற்கும் அது இடமளிக்கின்றது. இதில் மறக்கமுடியாத முக்கிய கருத்து, விவிலியத்திலிருந்து இந்த நூல் அடிப்படையிலேயே வேறுபடுகின்றது என்பதே. இதன் மூலம் உயர்குடிமக்கள், தத்துவவியலார்கள், வீரர்கள் ஆகியோர் மக்கள் அனைவருக்கும் பாதுகாப்பளித்து வழிகாட்டுபவராக உள்ளனர். உயரிய நலன்கள் அதில் நிறைந்துள்ளன, வாழ்வுக்கு இணக்கம் தெரிவிக்கும் ஒரு முழுமையுள்ளது என்ற உணர்வு நிரம்பியது. இதற்காக மட்டுமல்லாமல் வாழ்வின் நலன்களுக்குரிய வெற்றியுணர்வு நிரம்பியது, நூல் முழுமைக்கும் சுடரொளிர்கின்றது. மக்களைப் பெறுதல், மகளிர், திருமணம் ஆகியவற்றைப் பற்றிக் கிறிஸ்துவத்தில் ஆழங்காண முடியாத ஆபாசப் புகைமூட்டமாகக் கூறப்பட்டிருப்பவை இந்தநூலில் வாழ்க்கை விருப்போடும், கனிவோடும், நம்பிக்கையுடனும் கூறப்பட்டுள்ளது. மணமாகாத ஆண், பெண் கலவியைத் தவிர்ப்பதற்கு அவனவன் தனக்கு மனைவியைப் பெற்றிருப்பானாக, பெண்டிர் யாவரும் தத்தமக்குரிய கணவரைப் பெற்றிருப்பாராக..... எரிக்கப்படுவதைவிடத் திருமணம் செய்துகொள்வது மேலானது என்றுரைக்கும் இழிந்ததொரு புத்தகத்தைக் குழந்தைகளும், பெண்களும் படிப்பதற்குரிய வாய்ப்பினை நாம் அளிக்கலாமா? மாந்தரின் தோற்றமே கிறிஸ்துவ மயமாக்கப்பட்டுள்ளபோது - அதாவது களங்கமில்லாத கர்ப்பம் தரிப்பது பற்றிய கோட்பாட்டின் காரணமாகக்களங்க முற்றுள்ளபோது கிறிஸ்துவனாக இருப்பதென்பது ஏற்புடையது தானா? "

நீட்ஷேயின் கருத்துக்கள் அவருடைய நாட்டில் தக்க மதிப்புடனோ கூர்ந்து கேட்பதற்குரியதாகவோ ஏற்றுக்கொள்ளப்படவில்லை. அவரே கூறியிருப்பது போலவே, சிலசமயங்களில் உயர்குடிமக்களாட்சி, பெருநிலக்கிழார்களின் ஆட்சி ஆகியவற்றிற்குரிய தத்துவஞானி என்னும் மறுப்புக்கும் சில சமயங்களில் மற்றவர்களின் ஏளனத்திற்கும், இகழ்ச்சியுரைக்கும், சிலபோது மனிதாபிமானமற்றவன் என்ற எதிர்ப்புக்கும் ஆளாகியுள்ளார். நீட்ஷேயின் தத்துவங்கள் அதிகாரவிருப்பத்திற்கும், வன்முறை, ஆன்மீக மதிப்புகளை மறுத்தல், மனித நிலையைக்கடந்த மாமனிதர்களின் நலன்களுக்காகப் பொது மக்களை இழிவுபடுத்துதல், கொத்தடிமைப்படுத்துதல், பலியாக்குதல் ஆகிய விருப்பங்களுக்கும் எடுத்துக்காட்டாக அமைந்தவை. அவரது தத்துவத்தின் இத்தகைய குறைபாடுகள் காரணமாக அவருடைய

தலைமுறைக் காலத்து மக்களிடையே அதற்கு வெறுப்பும் அதனைக் கண்டு மக்களிடையே அச்சமும் நிலவியது. அவர் முழுமையாக வெறுக்கப்படாத போதிலும் புறக்கணிக்கப் பட்டவரானார். நீட்ஷேயும் தன்னை 'மறைவுக்குப் பின்னாக' உள்ள மனிதர்களுள் ஒருவராகக் கருதிவாழ்வதில் ஆறுதல் பெற்றார். பல நூற்றாண்டுகளுக்குப் பின்னர் வருங்கால மக்கள் தன்னைப் பாராட்டுவார்கள் என எதிர் நோக்கினார். இதிலும் நீட்ஷே ஏமாற்றத்துக் குரியவரானார். அவருடைய தத்துவங்கள் பாராட்டப் படுவதற்கு மாறாக, பல தலைமுறைகளுக்குப் பின்னரும் அவை எதிர்ப்புக் குரியதாகவும், வெறுத் தொதுக்கத் தக்கதாகவும் ஆயின. நீட்ஷே தத்துவத்துக்கு ஏற்பட்ட இந்த இழிவினைக் கருத்தில் கொண்டாவது, இந்து சமூக அமைப்பும் மாமனிதர் வழிபாட்டின் அடிப்படையில் தான் அமைந்துள்ளது என்பதைச் சிலர் நம்புவதற்கு முடியாதவர்களாகவே இருக்கலாம். இது குறித்து மனு என்ன கூறுகிறார் எனப் பார்ப்போம். இந்து சமூக அமைப்பில் பிராமணர்க்குரிய நிலை என்ன என்பதுபற்றி மனு கூறுவதாவது:

1:93. "பிராமணன் பிரஜாபதியின் முகத்திலிருந்து தோன்றியவனாதலாலும், முதலாவதாகத் தோன்றியவனாதலாலும் வேதங்களைப் பெற்றிருப்பதனாலும் படைக்கப்பட்ட யாவற்றினும் தலைவனாகும் உரிமையைப் பெற்றிருக்கின்றான்."

1:94."தேவர்களுக்கு அவிசொரிந்து மகிழ்விக்கவும், பிதுரர்களுக்குச் சிரார்த்தம் செய்யவும் இந்த உலகத்தை அழிவிலிருந்து காக்கவும் தக்கவனாகப் பிராமணனைச் சுயம்புவான பிரம்மா தமது முகத்தினின்று முன்னதாகப் படைத்தார்."

1:95."எவனுடைய மந்திரகோஷங்களையும், அவிப்பாகத்தையும், தேவ, பிதுரர்கள் இடையறாது உண்டு மகிழ நேர்கிறதோ அந்தப் பிறப்புக்குரியவன் படைப்பில் சிறந்தவனாகின்றான்."

1:96. "படைப்புப் பொருள்களில் உயிருடையவை சிறந்தவை, உயிருள்ளவற்றுள் அறிவுள்ளவை சிறந்தவை, அறிவுள்ளவற்றிலும் மானுடர் சிறந்தவர்கள், மானுடருள் பிராமணர் சிறந்து விளங்குகின்றனர்."

மனுதந்துள்ள இந்தக் காரணங்களோடு, தேவர்களுக்கும் பிதுரர்களுக்கும் அவிப்பாகத்தை அளிப்பதற்காகக் கடவுள் தன்னுடைய முகத்திலிருந்து பிராமணனைப் பிறக்க வைத்திருப்பதால் மற்றையோரைவிட அவன் முதன்மையானவனாகின்றான். பிராமணர்களுக்கு அளிக்கப்பட்டுள்ள இந்த உயர்வுக்கு மனு இன்னொரு காரணத்தையும் கூறுகின்றார். அதாவது :-

1:98. "ஒரு பிராமணனின் பிறப்பைப் புனித சட்டத்தின் (வேதத்தின்) நிலையான அவதாரம் எனலாம். ஏனென்றால் புனித சட்டத்தை (நிறைவேற்றுவதற்காகவே) அவன் பிறக்கிறான், பிரம்மத்துடன் (கடவுளுடன்) ஒன்றிக் கலந்துவிடுகிறான்."

1:99. "உலகப் படைப்புகளில் பிராமணன் உயர்ந்த பிறவியாகப் பிறந்து பிற உயிர்கள் அனைத்துக்கும் தலைவனாக இருப்பதற்கு அவன் சட்டம் என்னும் கருவூலத்தைக் காப்பவனாக இருப்பதே காரணம்."

மனு மேலும் கூறுவதாவது :

1:101. "பிராமணன் பிறரிடமிருந்து பெற்ற போதிலும் அவனுடைய உணவையே அவன் பெறுவதாகவும், அவனுடைய உடையையே அவன் உடுத்துவதாகவும், அவனுடைய பொருள்களையே அவன் அடைவதாகவும் உள்ளது. ஏனையோர் பிராமணனிடமிருந்து இவற்றைப் பெற்றுத் துய்ப்போராக உள்ளனர்."

1:100. "பிறவியின் மேன்மையினால் படைப்புலகில் காணப்படும் பொருள்கள் அனைத்தையும் தனக்குரிய செல்வமாகப் பெறுவதற்குப் பிராமணன் உரிமை பெற்றிருக்கின்றான்."

பிராமணன் தெய்வமாக இருப்பதால் சட்டத்திற்கும் மன்னனுக்கும் மேம்பட்டவனாக இருக்கின்றான். மனு விதிப்பதாவது :

7:37. "அரசன் காலையில் துயிலெழுந்து, மூன்று வேதங்களையும் அறநூல்களையும் ஆய்ந்துணர்ந்த பிராமணரை வணங்கி வழிபட்டு, அவர் அறிவுரையைப் பின்பற்றி நடப்பானாக."

7:38. "வேதங்களைக் கற்றுணர்ந்தவராகவும் தூயவராகவும் உள்ள முதிய பிராமணரை மன்னன் நாள்தோறும் வழிபடுவானாக."

இறுதியாக மனு கூறுவதாவது :-

11:35. "பிராமணனே இந்த உலகைப் படைத்தவனென இதன் வாயிலாக அறிவிக்கப்படுகிறது. தண்டிப்பவனாகவும், ஆசிரியனாகவும் இருந்து எல்லா உயிர்களுக்கும் புரவலனாக விளங்குபவனாதலால் அவனை எடுத்தெறிந்து பேசுதலும் பழித்துரைத்தலும் ஆகாது."

மனு விதிப்பதாவது,

10:3. "பிறப்பினால் உயர்ந்த இடத்திலிருந்து தோன்றியதாலும், உயர்ந்த குலத்தாலும், வேதங்களைப் பிழையறக் கற்றுணர்ந்த அறிவினாலும், பூணூல் தரித்துள்ள சிறப்பினாலும் பிராமணன் அனைத்து வருணத்தாருக்கும் தலைவனாக உள்ளான்."

பிராமணன் இந்து சமூக அமைப்பின் மாமனிதன் என்ற வகையில் பலவகை சலுகைகள் பெறுவதற்குரியவனாகின்றான். முதலாவதாக, கொலைக்குற்றம் சாட்டப்பட்டபோதிலும் பிராமணனுக்குத் தூக்கு தண்டனை கிடையாது.

இது பற்றி மனு கூறுவதாவது.

8:379. "பிராமணன் எத்தகைய ஒழுக்கம் கெட்டவனாக, பிறர்மனை

*நயப்பவனாக இருந்தபோதிலும் அவனைக் கொல்லக் கூடாது, அவனது தலையை மழித்து அவமானப்படுத்துவதோடு நின்று விடவேண்டும். ஏனையோருக்கு மரணதண்டனை விதிக்க வேண்டும்."*

*8:380. "எத்தகைய பாவத்தைச் செய்தபோதிலும் பிராமணனை அரசன் கொல்லக்கூடாது. அவனுக்குச் சொந்தமான பொருள்களுடன் அவனை ஊரைவிட்டுத்துரத்தி விடவேண்டும். அதே சமயம் அவனுக்கு எத்தகைய காயத்தையும் விளைவிக்கக் கூடாது."* [1]

*11:127. "ஒரு பிராமணன் நற்குணமுள்ள க்ஷத்திரியனைத் திட்டமிட்டுக் கொன்றால் பிராமணனைக் கொன்ற பாவத்திற்கு விதிக்கப்படும் கழுவாயில் நாலில் ஒரு பங்கையும், வைசியனைக் கொன்றால் எட்டில் ஒரு பங்கையும், தன்னுடைய கடமைகளைக் கைவிடாது செய்யும் சூத்திரனைக் கொன்றால் பதினாறில் ஒரு பங்கையும் அவன் செய்ய வேண்டும்."*

*11:128. "ஆயின் மனக்காழ்ப்பு ஏதுமின்றி க்ஷத்திரியனை ஒரு பிராமணன் கொன்றால் அனைத்துச் சடங்குகளும் செய்து புரோகிதருக்கு ஒரு எருதுடன் ஆயிரம் பசுக்களைத் தானம் செய்ய வேண்டும்."*

*11:129. "அல்லது அவன் தனது புலன் உணர்ச்சிகளை அடக்கிக் கொண்டு சடாதாரியாக மூன்றாண்டுகள் ஊருக்கு வெளியே மரத்தடியில் வசித்துப் பிராயச்சித்தம் செய்ய வேண்டும்."*

*11:130. "ஒழுக்கமிக்க ஒரு வைசியனைப் பிராமணன் பகைமை நோக்கமின்றிக் கொன்றால் ஓராண்டு விரதமோ அல்லது புரோகிதருக்கு ஒரு எருதும் நூறு பசுக்களும் தானமோ செய்ய வேண்டும்."*

*11:131. "வன்ம எண்ணமின்றி சூத்திரனைக் கொன்றால் ஆறுமாதம் பிராயச்சித்தமோ புரோகிதருக்கு ஒரு எருதுடன் பத்துப் பசுக்களைத் தானமோ செய்ய வேண்டும்."*

*8:381. "பிராமணனைக் கொல்வதைவிட உலகத்தில் வேறு பெரியதொரு பாவம் இல்லையாதலால், பிராமணனைக் கொல்வதற்கு அரசன் மனத்தளவில் கூட நினைக்கக் கூடாது."*

*8:126. "குற்றம் இழைத்தவர்களுக்கான தண்டனைகள் குற்றம் இழைக்கப்படுவது முதலாவதா, இரண்டாம் தடவையா என்பதையும்,*

*1. இந்தப் பாதுகாப்பு 1837-வரை பிரிட்டிஷ் அரசாலும் அளிக்கப்பட்டு வந்தது 1837 ஆம் ஆண்டில் திருத்தப்பட்ட இந்தியக் குற்றவியல் சட்டத்தில்தான் முதன்முதலாகப் பிராமணா மரணதண்டனைக்குட் பட்டவராக்கப்பட்டனர். இந்திய சமஸ்தானங்களில் பிராமணருக்கு மரணதண்டனை இல்லை என்ற பாதுகாப்பு நீடிக்கின்றது. இந்தச் சலுகை அளிப்பதை எதிர்த்த பொதுமக்களைச் சமாதானபடுத்த திருவாங்கூர் சம்ஸ்தானத்தின் பிராமணரான திவான் ஒரு சாமர்த்தியமான வழியைக் கண்டார். பிராமணர்களுக்குத் தூக்குத் தண்டனை அளிப்பதைத் தவிர்ப்பதற்காகத் தூக்கு தண்டனையையே ஒழித்துவிட்டார்.*

குற்றத்தின் தன்மையையும், குற்றம் புரிந்தவன் அதற்குரிய தண்டனையைத் தாங்கக் கூடியவனா என்பதையும், மேலும் குற்றம் இழைக்கப்பட்ட காலத்தையும் இடத்தையும் நன்கு ஆராய்ந்து விதிக்கப்பட வேண்டும்."

*8:124.* "பிராமணனைத் தவிர்த்த ஏனைய மூன்று கீழ் வருணத்தார் குற்றம் இழைப்பின் அவர்களுக்குத் தண்டனை விதிக்க பத்துக் கட்டங்களை சுயம்புவாகத் தோன்றிய மனு நிர்ணயித்துள்ளார்."

ஆனால் பிராமணன் இவற்றிற்கெல்லாம் அப்பாற்பட்டவன், அவனுக்கு இதனால் எந்த ஊறும் நேரக் கூடாது என்று அவர் கூறியுள்ளார். மனுஸ்மிருதியில் பிராமணருக்குப் பிற ஒருவகைச் சிறப்புரிமைகளும் வழங்கப்பட்டுள்ளன. தன்னுடைய வருணத்தில் ஒரு பெண்ணைத் திருமணம் செய்துக் கொள்வதோடு வேறொரு திருமணம் செய்து கொள்ள விரும்பும்போது, தன்னுடைய வருணத்திற்குக் கீழான எந்த வருணத்தைச் சேர்ந்த பெண்ணையும் திருமணம் செய்துக் கொள்ளாமலேயே மனைவியாக்கிக் கொள்ளவும், அவள் வழியில் பிறக்கும் பிள்ளைகளுக்குத் தன் சொத்தில் பங்கு பெறுவதற்கு உரிமையேதுமில்லாமல் செய்யவும் அவனுக்கு உரிமையுண்டு[1]. தனக்குத் தீங்கு இழைப்பவர்களைத் தானே தண்டிக்கும் அதிகாரமும் அவனுக்கு அளிக்கப்பட்டுள்ளது[2]. ஒரு சூத்திரனின் சொத்துக்களை எவ்வித இழப்பீடும் அளிக்காமல் அவன் சமயச் சடங்குகள் செய்வதற்காக எடுத்துக் கொள்ளலாம்; இதைப் பற்றி வழக்கு மன்றத்திற்கும் அறிவிக்க வேண்டியதில்லை[3]. பிராமணன் அனைவருக்கும் தலைவனாதலால் தான் கண்டெடுக்கும் புதையலில் மன்னனுக்கு எவ்வித பங்கும் அளிக்காமல் தானே எடுத்துக் கொள்ளலாம்[4]. அதே சமயம் பிறர் அத்தகைய புதையலைக் கண்டெடுத்தால் அதில் தனக்குப்பாதி பங்கு கோர அவனுக்கு உரிமையுண்டு[5] மன்னனொருவன் தீர்க்கமுடியாத நோயினால் இறந்து போனால் அவன் வசூலித்து வைத்திருக்கும் அபராதத் தொகை முழுவதையும் பெறுவதற்குப் பிராமணனுக்கு உரிமையுண்டு.[6] வரிவிதிப்பிலிருந்து அவனுக்கு விலக்கும் உண்டு.[7] தன்னுடைய அன்றாட வயிற்றுப் பிழைப்புக்கு வழிவகைச் செய்து, தன்னைப் பசியால் வாடாமல் பார்த்துக் கொள்ள மன்னனைக் கட்டாயப் படுத்துவதற்கும், அவனுக்கு உரிமையுண்டு. சொத்தைப் பறிமுதல் செய்யும் சட்டத்திலிருந்து அவனுக்கு விலக்கு உண்டு[8].

1. மனு *3:12-13* இந்தச் சிறப்புரிமை இந்திய வழக்கு மன்றங்களில் அங்கீகரிக்கப்பட்டுள்ளது.
2. மனு *11:31* - இந்த உரிமை ஒழிக்கப்பட்டு விட்டது.
3. மனு *11:32* இந்த உரிமை இப்போது வழக்கில் இல்லை
4. மனு *8:37*
5. மனு *9:323*
6. மனு *7:133*
7. மனு *7:134*
8. மனு *9:189*

இந்து சமூக அமைப்பின் இந்த மாமனிதன் வறுமைத் துன்பத்தில் சிக்கியிருந்தால் தன் குலத்தொழிலைச் செய்யவேண்டுமென்னும் கட்டாயமில்லை.

மனு கூறுவதாவது,

10:81. "தனக்குரிய தொழில் செய்து வாழ்க்கை நடத்த இல்லாத போது பிராமணன், க்ஷத்திரியனுக்குரிய தொழிலைச் செய்து பிழைத்துக் கொள்ளலாம். ஏனெனில் இதுதான் அவனுக்குரிய அடுத்த குலத்தொழில் ஆகும்."

10:82. "பிராமணன், தன்குலத் தொழில், க்ஷத்திரியருக்குரிய தொழில் ஆகியவற்றைச் செய்து வாழ்க்கை நடத்த முடியாத பட்சத்தில் வாழ்க்கை நடத்துவதற்கு அவன் வேறு என்னதான் செய்வது என்ற கேள்வி எழும்போது, வைசியனுக்குரிய வாணிபம் செய்தும், உழுது பயிரிட்டும், ஆநிரை மேய்த்தும் வாழ்க்கையை நடத்திக் கொள்ளலாம் என்பதே இதற்கான விடையாகும்."

10:83. "பிராமணன், க்ஷத்திரியன் ஆகியோர் வணிகருக்குரிய வாணிபம் செய்து பிழைக்க நேருமானால் உடல் உழைப்பையும், பிறர் உழைப்புடன் கால்நடைகளின் உழைப்பையும் நாடத்தக்கதாகவுமுள்ள உழவுத் தொழிலை மிகவும் கவனமாகத் தவிர்க்க வேண்டும்."

10:84. "உழவுத் தொழிலைச் சிலர் மேலான தொழில் என்று கருதுவர். எனினும் மேலோர் அதனைப் பாராட்ட மாட்டார்கள். ஏனெனில் இரும்புகொழுதுதியுடைய கலப்பை, கொண்டு உழும்போது பூமியிலுள்ள நுண் உயிரினங்களுக்கும் ஊறுசெய்ய நேரிடுகின்றது".

10:85. "உயரிய வாழ்வு வாழ வேண்டும் என்பதற்காக அவர்கள் நாணயமற்ற தொழில்களை மேற்கொள்ள முடியாது என்ற போதிலும், பிழைப்பதற்கு வேறு வழியின்றி வைசியருக்குரிய தொழிலான வாணிபத்தை மேற்கொண்டு பொருளீட்ட விரும்பும் பிராமணர், விலக்கத் தக்கவற்றை விலக்கியே வாணிபம் செய்ய வேண்டும்."

10:102. "வறுமை முதலிய துன்பத்தில் மூழ்கிய பிராமணன் எவரிடமிருந்தும் தானம் பெறலாம்; ஏனென்றால் பரிபூரண தூய்மைக்குக் களங்கம் உண்டாக்கி விட முடியும் என்று எந்தப் புனித சட்ட விதிகளிலிருந்தும் இதற்கு ஆதாரம் காட்டிவிட முடியாது."

10:103. "(தகாதவனுக்கு) வேதம் ஓதுவித்தல், வேள்வி புரிதல், பழியோடு வந்த தானங்களைப் பெறுதல் ஆகியவற்றைப் பொதுவாக விதிகள் அங்கீகரிக்காவிட்டாலும் வறுமையுற்ற புரோகிதர் அவ்வாறு செய்வதால் எவ்வித பாவங்களுக்கும் உள்ளாக மாட்டார். ஏனெனில் புரோகிதர் நெருப்பைப் போலவும் நீரைப்போலவும்

தூய்மையுடையவர்."

இந்தச் சிறந்த மனிதருக்கு அல்லது மாமனிதருக்கு அளிக்கப்பட்டுள்ள சிறப்புரிமைகளுக்கு ஈடாகப் பொதுமக்களுக்குச் செய்யக்கூடிய கடமைகள் எதுவும் கூறப்படவில்லை. சொல்லப்போனால், இந்தச் சிறந்த மனிதன் பொது மக்களுக்குச் செய்யக்கூடிய கடமை ஏதுமில்லை.

பொதுமக்களின் மேம்பாட்டிற்காக அறப்பணி ஆற்ற வேண்டிய கட்டாயம் எதுவும் அவனுக்கில்லை. அதற்கு மாறாக, மற்றவரிடமிருந்து ஈகையைப் பெறுவதற்குச் சிறந்த மனிதனுக்கு ஏகபோக உரிமையுண்டு, அவனைத் தவிர பிறர் எவரும் அத்தகைய ஈகையைப் பெறுவது பாவமாகும். இந்தச் சிறந்த மனிதனுக்குத் தொண்டு செய்வதற்கென்றே சூத்திரன் பிறந்துள்ளதால், சிறந்த மனிதன் நல்ல ஏஜமானனாக இருக்க வேண்டுமென்பது அவசியமில்லை; அல்லது அந்தச் சூத்திரனுக்கு நல்ல உணவும், உடையும், இருக்க நல்லதொரு வீடும் அளித்துக் காக்க வேண்டும் என்ற கட்டாயமும் இல்லை. இவ்வகையில் அவனுக்கு விதித்துள்ள கடமைகள் குறித்து மனு கூறுவதாவது :-

10:124. "பிராமணர்கள் தமக்குப் பணிபுரிவோனுடைய (சூத்திரன்) திறமை, உழைப்பு ஆகியவற்றைக் கருதியும், அவன் காப்பாற்றுவதற்குக் கடமைப்பட்ட நபர்களின் எண்ணிக்கையைப் பொறுத்தும் அவனது பராமரிப்புக்குத் தேவையான ஊதியஉயர்வு தங்கள் குடும்பச் சொத்திலிருந்து வழங்க வேண்டும்".

10:125. "(பிராமணன் தன்னிடம் பணிசெய்யும் சூத்திரனுக்கு) தான் உண்டு எஞ்சிய உணவு, உடுத்துக் கிழித்த பழைய உடைகள், தானியங்கள், சலித்து எஞ்சிய நொய், வீட்டுப் பழைய பாத்திரங்கள் ஆகியவற்றைக் கொடுக்க வேண்டும்."

சாதாரணமானவன் இந்தச் சிறந்த மனிதனுக்கு ஈடாக உயர்வது சிறந்த மனிதனின் மேலாண்மை உரிமைக்கு எதிரானதாகும். சிறந்த மனிதன் திருப்தியோடும், மகிழ்ச்சியாகவும் பாதுகாப்போடும் வாழ்வதற்காகச் சாதாரணமானவர்களை எப்போதும் தாழ்ந்த நிலையிலேயே வைத்திருக்க இந்து சமூக அமைப்பு தனிக்கவனம் செலுத்த வேண்டும்.

சூத்திரர் பிறர்க்குப் பணி செய்வதைத் தவிர வேறெதுவும் செய்யக்கூடாதென மனு வலியுறுத்துகின்றார்:-

10:122. "பிராமணரைப் பேணிப் பணிசெய்க."

10:121. "சூத்திரன் வாழ்க்கைத் தேவைகளை நிறைவேற்றிக் கொள்ள முடியாமல் பிராமணர்க்குப் பணிவிடை செய்து தக்க ஊதியம் பெறஇயலாத போது, க்ஷத்திரியரைச் சார்ந்து பிழைக்கலாம். அதனாலும் வாழ முடியாத போது, செல்வ வளமுள்ள வணிகனுக்குப் பணிகள் செய்து பிழைக்கலாம்."

*1:91.* "மேலே சொன்ன மூவர்க்கும் அடக்க ஒடுக்கமாகப் பணிபுரிதல் ஒன்றையே முதன்மையாகக் கொள்ளக் கடவரென்று சூத்திரர்க்குக் கடவுள் விதித்தார்."

*10:129.* "சூத்திரன் பொருளீட்டத் தக்கவனேயாயினும் அவன் தனது தேவைக்கு மேலாகப் பொருள் சேர்க்கக் கூடாது. அடிமை போன்ற அவன், பொருள் சேர்த்துப் பணக்காரனாக மாறினால் தற்பெருமைக்குரியனாவான்; தனது அகங்காரத்தால் அல்லது அலட்சியத்தால் பிராமணனுக்கு அவன் துன்பம் இழைப்பான்."

சாதாரண மனிதன் கல்வியறிவைப் பெறக்கூடாது. இதைத் தடுக்கும் மனுவின் கூற்றாவது:

*1:88.* "பிராமணர்க்கு வேதம் ஓதுதலும், ஓதுவித்தலும் கடமைகளாக (கடவுள்) விதித்தார்."

*1:89.* "க்ஷத்திரியருக்கு வேதத்தைக் கற்பது கடமையெனப் (கடவுள்) பணித்தார்."

*2:116.* "குருவுக்குத் தெரியாமல் அவரிடமிருந்து வேத ஞானத்தைக் கிரகித்துக் கொள்பவன் வேதத்தைத் திருடிக் கொண்டவனாகி நரகத்தில் வீழ்ச்சியுறுவான்."

*4:99.* "சூத்திரன் அருகில் இருக்குங்கால், பிராமணன் வேதம் ஓதலாகாது."

*9:18.* "பெண்களுக்கும் வேதபாடங்களுக்கும் எந்தச் சம்பந்தமும் இல்லை."

*9:199.* "முறையற்ற வகையில் (அதாவது சூத்திரர்க்கும் பெண்களுக்கும்) வேதம் போதிக்கும் பிராமணன் பாவம் செய்தவனாகின்றான். இதற்காக ஓராண்டுக் காலம் பார்லி உணவு உண்பதே அந்தப் பாவத்திற்குக் கழுவாயாகும்."

இந்தத் தொடர்களில் நன்கு வரையறுக்கப்பட்ட மூன்று கருத்துரைகள் பொதிந்துள்ளன. பிராமணன், க்ஷத்திரியர், வைசியர் ஆகிய மூவருணத்தார் வேதங்களைக் கற்பதற்குரியவர்கள். இந்த மூவருக்குள்ளும் பிராமணர்கள் மட்டுமே வேதங்களை ஓதுவிப்பதற்கு உரிமை பெற்றவர்கள். சூத்திரர்களைப் பொறுத்தவரையில் அவர்கள் வேதங்களைப் படிக்கவோ, வேதமோதுவதைக் கேட்கவோ கூடாது.

மனுவுக்குப் பின் வந்தவர்கள் சூத்திரன் வேதத்தைப் படித்தால் விதிக்க வேண்டிய தண்டனைகள் இவையென வகுத்துத் தடைகளைப் பெருக்கினர். எடுத்துக்காட்டாகக் கௌதமர் கூறுவதாவது;

*3:4.* "சூத்திரன் வேதங்களை மனப்பாடம் செய்யும் நோக்கத்தோடு அவற்றை விரும்பிக் கேட்பானாயின் அவன் காதுகளில் காய்ச்சி உருக்கிய ஈயத்தையும் அரக்கையும் ஊற்ற வேண்டும். அவன்

வேதமோதினால் அவனது நாக்கை அறுத்தெறிய வேண்டும். அவன் வேதங்களைக் கற்றறிந்து அவற்றில் புலமை பெற்றால் அவனது உடலைக் கண்டதுண்டமாக வெட்டி எறிய வேண்டும்."

இதேபோலவே காத்யாயணரும் கூறியுள்ளார்.

சாதாரண மனிதனுக்கு (சூத்திரன்) பூணூல் அணியும் புனித சடங்கு அனுமதிக்கப்படவில்லை. புனிதமான பூணூல் அணிவதால் இரண்டாவது பிறப்பு கிடைப்பதோடு ஒழுக்கமும், பொருள் வளமும் பெருகுகின்றது.

சாதாரண மனிதனுக்குக் கண்ணியமான பெயரைச் சூட்டிக் கொள்ளும் உரிமையும் மறுக்கப்பட்டுள்ளது.

மனு கூறுவதாவது :-

2:30."தந்தையானவன், குழந்தை பிறந்த பத்து அல்லது பன்னிரண்டாவது நாளில் நாமகரணம் செய்யக்கடவன். அல்லது வளர்பிறைப் புண்ணிய தினத்தில் நல்ல முகூர்த்தத்திலும், வானில் நல்ல நட்சத்திரக் கூட்ட நாளிலும் பெயரிடலாம்."

2:31. "பிராமணனது பெயரின் முதல் பகுதி மங்களத்தைக் குறிக்கும் வகையிலும், க்ஷத்திரியனது பெயர் அதிகாரத்தைக் குறிக்கும் வகையிலும், வைசியனது பெயர் பொருள் வளத்தைக் குறிக்கும் வகையிலும் அமைந்திருக்க வேண்டும். ஆனால் சூத்திரனது பெயரோ அருவருக்கத் தக்கதாக இருக்க வேண்டும்."

2:32. "அவ்வாறு சூட்டப்படும் பெயரின் இரண்டாவது பகுதி பிராமணாயின் மகிழ்ச்சியைக் குறிக்கும் வகையிலும், க்ஷத்திரியனாயின் பாதுகாப்பைக்குறிக்கும் வகையிலும், வைசியனாயின் வளத்தைக் குறிக்கும் வகையிலும் சூத்திரனாயின் பணிவிடையைக் குறிக்கும் வகையிலும் அமைந்திருக்க வேண்டும்".

சூத்திரன் படாடோபமான பெயரைச் சூட்டிக் கொண்டால் உயர்ந்த பிறவியான பிராமணன் அதைப் பொறுத்துக் கொள்ள மாட்டான். எனவே, சூத்திரனது பெயரைக் கேட்ட அளவிலேயே அது பொருளிலும் சொல்லளவிலும் வெறுக்கத்தக்கதாக இருக்கவேண்டும்.

ஒரு இந்துவின் வாழ்க்கை பல்வேறு பருவங்களாக, - ஆசிரமங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது. முதற்பருவம் பிரம்மசரியம் என்பது. இது மாணவப்பருவமாகும். இரண்டாவது பருவம் கிரகஸ்தாஸ்சிரமம் எனப்படுவது. இது இல்லற வாழ்க்கையாகும். மூன்றாவது பருவம் வானப்பிரஸ்தம் எனப்படுவது. இது உலகியல் பற்றுக்களிலிருந்து விடுபட்டு வனங்களில் தவம் மேற்கொண்டு வாழ் வதாகும். நான்காவதான சன்னியாசம் ஆசைகளை வென்று உலகத் தொடர்பனைத்தும் நீத்துத் துறவியாகி விடுதலாகும். சாதாரண மனிதர்கள் சன்னியாச நிலை அடைவதற்கு உரிமையில்லை. இது ஏன்

என்பது புரியவில்லை; பிராமணர்களின் நலனுக்காக இந்தத்தடை விதிக்கப்பட்டிருக்கலாம். ஒரு சூத்திரன் சன்னியாசியானால் பிராமணனுக்கு தொண்டு செய்யமாட்டான். சூத்திரன் சன்னியாசியானால் அதன் பலனாக அவன் கடவுளை அல்லது பிரமனை அடைந்து விடுவான்; இது பிராமணர்களுக்கு உரிய சிறப்புரிமையை மீறுவதாகும்.

மனு சாஸ்திரத்திலிருந்து எடுத்துக்காட்டப்பட்ட மேற்கண்ட மேற்கோள்கள் இந்து சமூக அமைப்பு வெளிப்படையாகவும் பலரறியவும் பிராமணர்களின் நலன்களைக் கருத்தில் கொண்டே உருவாக்கப் பட்டுள்ளது என்பது புலப்படும். இங்கே உயர்ந்த மனிதன் எனப்படுபவன் பிராமணனையும் சாதாரராணமானவன் எனப்படுபவன் சூத்திரனையும் குறிக்கிறது. பிராமணனுக்கு எத்தனை எத்தனையோ உரிமைகள் வழங்கப்பட்டுள்ள போதிலும் கடமைகள் ஏதுமில்லை. எல்லாவற்றையும் தீர்மானிக்கக் கூடிய நிலையில் பிராமணன் வைக்கப்பட்டுள்ளான். அவனுடைய நலன்களைச் சார்ந்தே அனைத்தும் செயல்படுமாறு வைக்கப்பட்டுள்ளன. அதற்கு இணையாக உள்ள அனைத்தும் சாதாரண மனிதனைத் தாழ்த்துவதற்கென்றே அமைந்தவை. உயர்ந்த மனிதனோடு ஒப்பிட்டுப் பார்க்கும்போது, சாதாரண மனிதனுக்கு வாழ உரிமையேதுமில்லை. சுதந்திரமோ சொத்து, சுகத்தை அனுபவிக்கவோ அவனுக்கு வாய்ப்பில்லை, உயர்ந்த மனிதனின் வாழ்வு வளத்திற்காகவும் மேம்பாட்டிற்காகவும் தன்னுடைய நலன்கள் அனைத்தையும் தியாகம் செய்ய வேண்டிய நிலையில் சாதாரண மனிதன் வைக்கப்பட்டுள்ளான். அந்தத் தியாகத்தைக் கட்டாயமாகச் செய்து தீர வேண்டிய நிலையில் இந்து சமூக அமைப்பு அவனை வைத்துள்ளது. உயர்ந்த மனிதனின் நன்மைக்காக இத்தகைய தியாகத்தைச் செய்வது தன்னுடைய தலையாய கடமை என்ற உணர்வைச் சாதாரண மனிதனின் மனதில் ஆழப்பதிய வைத்துள்ளது.

ஜராதுஸ்ட்ரர் என்பது மனுவின் மறு பெயரே என்பதிலும். 'ஜராதுஸ்ட்ரரின் பொன்மொழிகள்'[1] மனுஸ்மிருதியின் புதிய பதிப்பே என்பதிலும் ஐயமேதும் இருக்கமுடியுமா ?

நீட்ஷே, மனு ஆகிய இருவருக்கிடையில் ஏதாவது வேறுபாடு உள்ள தென்றல் அது இதுதான்; தற்போதைய மனித இனத்திற்குப் பதிலாக மாமனிதரினமான சிறந்த மனிதரினத்தைப் **(RACE OF SUPERMAN)** படைக்க வேண்டுமென்பதில் நீட்ஷே உளப்பூர்வமான விருப்பம் கொண்டிருந்தவர். ஆனால் மனுவோ, தம்மை உயர்ந்த மனிதர்கள் என்றாக்கிக் கொண்ட தொரு வகுப்பாருக்குரிய சிறப்புரிமைகளைக் கட்டிக்காப்பாற்று வதிலே ஆர்வம் கொண்டவர். நீட்ஷே கற்பனைசெய்த உயர்ந்த மனிதர் தமது தகுதியின் காரணமாக உருவானவர்கள்; நீட்ஷே உண்மையிலேயே எதிலும் தனிப்பற்றினைக் காட்டாத தத்துவ ஞானி. ஆனால் மனுவோ, ஒரு குறிப்பிட்ட குழுவில்

1. 1883 - ல் நீட்ஷே வெளியிட்ட நூல்

பிறந்த ஒரு கூட்டத்தாரின் நலன்களைக் காப்பதற்காக ஒரு தத்துவத்தை உருவாக்குவதற்கு முனைந்த கைக்கூலியாவார்; அவர் சூட்டிய உயர்ந்த மனிதன் என்ற பெயர், அந்தப் பெயருக்குரிய பண்பு நலன்களெதுவும் இல்லாதபோதும் மாறாதது. மனுவின் பின்வரும் கூற்றுக்களை ஒப்பிட்டுக் காண்க :-

10:81. "தனக்குரிய தொழில் செய்து வாழ்க்கை நடத்த இயலாதபோது பிராமணன், க்ஷத்திரியனுக்குரிய தொழிலைச் செய்து அதனால் பிழைத்துக் கொள்ள வேண்டியது. ஏனெனில் அவனுக்கு அடுத்த குலத்தொழில் அதுவேயாகும்".

10:82."பிராமணன் தன் குலத்தொழில், க்ஷத்திரியருக்குரிய தொழில் ஆகியவற்றைச் செய்து வாழ்க்கை நடத்த முடியாத காலத்தில் வாழ்க்கை நடத்துவதற்குச் செய்ய வேண்டியதென்ன என்ற கேள்வி எழும்போது, வைசியனுக்குரிய வாணிபம் செய்தும், உழுதல், ஆநிரைமேய்த்தல் ஆகியவற்றைச் செய்தும் வாழ்க்கையை நடத்திக் கொள்ளலாம் என்பது விடையாகின்றது. "

மனு மேலும் கூறுவதாவது:

9:317. " எவ்வாறுநெருப்பானது வைதீக காரியங்கள் செய்வதற்கு பயன்பட்டாலும் பயன்படாவிட்டலும் தெய்வத் தன்மையுடன் விளங்குகிறதோ அவ்வாறே ஒரு பிராமணன் கற்றறிந்தவனாகவோ மூடனாகவோ இருந்தாலும் மேன்மையானனாகவே இருக்கின்றான்".

9:319. " பிராமணர்கள் எவ்வகையான இழிந்த தொழில்களைச் செய்த போதிலும், அனைத்திலும் அவர்கள் போற்றுதற்குரியவராவர்; ஏனென்றால், அவர்கள் மனித அறிவுக் கெட்டாத ஒரு வகைத் தெய்வீகத் தன்மை பெற்றவராவர்."

நீட்ஷேவின் புகழுரைக்கு மனு ஸ்மிருதி எவ்வகையிலும் தகுதியற்றதாகும். ஏனென்றால் "உயர்குடி மக்கள், தத்துவவியலார், வீரர்கள் ஆகியோர் மக்கள் அனைவருக்கும் பாதுகாப்பளித்து, அவர்களுக்கு வழிகாட்டுவோராக இருக்க வேண்டும் என்பதே மனுவின் திட்டம் " என்று நீட்ஷே கூறியிருப்பது ஒன்று உண்மையல்லாத கூற்றாகவோ அல்லது சரியாக அறிந்துணராத கூற்றாகவோதான் இருக்க வேண்டும். ஆனால் மனு தர்மத்தின்படி உயர்ந்த மனிதன், சாதாரண மனிதருக்கில்லாத அவர்களுக்கெதிரான உரிமைகளைப் பெற்றிருக்கின்றான்; அதே நேரத்தில் சாதாரண மனிதருக்குச் செய்யக் கூடிய கடமைகள் எதுவும் இல்லை.

நீட்ஷேயின் சிறந்த மனிதன் கோட்பாட்டோடு ஒப்பிடும் போது மனுவின் சிறந்த மனிதத்தத்துவம் தாழ்வுற்றது மட்டுமல்ல இழிவானதுமாகும். எனவே நீட்ஷேயின் தத்துவத்தைவிட வெறுத் தொதுக்கத்தக்கது. இந்தச் சமூக அமைப்பைத்தான் இந்துக்கள் விலை மதிக்க முடியாததொரு முத்து எனக்கருதுகின்றனர்; இதைத்தான்

உலகிற்கு இந்துக்கள் அளித்த கொடை என்று காந்தி பெருமை கொள்கின்றார்.

இந்து சமூக அமைப்பின் மற்றுமொரு தனித்தன்மை அதனைப் பேணிப் பாதுகாப்பதற்கு உருவாக்கப்பட்டுள்ள நுணுக்கமான உத்திகள் எனலாம். இந்த நுணுக்க உத்திகள் இரு வகைப்பட்டவை.

முதலாவது உத்தி, இந்த அமைப்பு முறையைக் கட்டிக்காத்து நிலை நிறுத்துகின்ற பொறுப்பு மன்னனுக்கு அளிக்கப்பட்டிருப் பதாகும். மனு இதை மிகத்தெளிவாகக் குறிப்பிடுகிறார்.

8:410. "வர்த்தகம், வட்டிக்குக் கடன் கொடுத்தல், உழவு செய்தல். ஆநிரைக் காத்தல் ஆகியவற்றைச் செய்யுமாறு வைசியருக்கும், இருபிறப்பாளரான பிராமணர்க்குக் குற்றேவல் செய்யும் பணியை இழிகுலத்தாருக்கும் விதித்து மன்னன் செயல் படுத்தவேண்டும்."

8:418. "வைசியரையும் நாலாம் வருணத்தவரையும் தத்தமக்குரிய தொழில்களைச் செய்யுமாறு மன்னன் கட்டளையிட்டுக் கவனமாக இருந்து, நிறை வேற்ற வேண்டும். இவர்கள் இவ்வாறு கடமை செய்வதிலிருந்து தவறினால் உலகையே அவர்கள் குழப்பத்திலாழ்த்தி விடுவார்கள்."

இந்த வகையில் மன்னனுடைய கடமைகளை வகுத்துரைப்பதோடு மனு நின்று விடவில்லை. மன்னன் எப்போதும் இந்த அமைப்பு முறையைப் பாதுகாத்து வரும் கடமையைச் செய்வதை உறுதிப்படுத்திக் கொள்ளவும் அவர் விரும்புகிறார். எனவே இதற்காக மேலும் இரு விதிகளை வகுத்துள்ளார். மன்னன் இந்தச் சமூக அமைப்பைக் கட்டிக் காப்பாற்றத் தவறுகின்ற குற்றத்திற்குரிய தண்டனையை ஒரு விதியின் மூலம் வகுத்திருக்கிறார். அதன்படி சாதாரண குற்றவாளிக்குரிய தண்டனையை மன்னனுக்கு விதித்திருக்கின்றார். பின்வரும் மேற் கோளிலிருந்து இது தெளிவாகும் :-

8:335. " தந்தை, ஆசிரியன், நண்பன், தாய், மனைவி, பிள்ளை, புரோகிதன் இவர்களில் எவராயினும் அவரவர்க்குரிய கடமைகளைச் செய்யாமல் புறக்கணிப்பாராயின் மன்னன் அவர்களைத் தண்டிக்காமல் விடக்கூடாது."

8:336. " கீழ்க்குலத்தவனான ஒருவனுக்கு ஒருபணம் அபராதமாக விதிக்கப்படக் கூடிய குற்றங்களை மன்னனே செய்வானாகில் ஆயிரம் பணம் தண்டம் விதிக்க வேண்டியது. இந்தத் தண்டப் பணத்தைப் புரோகிதருக்குத் தரவேண்டியது; அல்லது அதனை ஆற்றில் வீசி எறிய வேண்டும். இதுவே மீறமுடியாத தெய்வ நீதியாகும்."

நடை முறையிலுள்ள அமைப்பை அலட்சியப்படுத்தும் அல்லது எதிர்க்கும் மன்னனை எதிர்த்து பிராமணர், க்ஷத்திரியர், வைசியர் ஆகிய மூன்று வருணத்தாரும் ஒன்றுதிரண்டு ஆயுதமேந்திப் போராட வேண்டும் என்னும் இன்னொரு விதியையும் மனு வகுத்துள்ளார்.

8:348. " தங்கள் கடமையைச் செய்வதற்கு வன்செயலால் தடை ஏற்படும் போதும் காலக் கேட்டினால் பிராமணர்க்குக் கேடு விளையும்போதும் அவர்கள் ஆயுதமேந்தித் தங்களைக் காத்துக் கொள்ளலாம்".

கிளர்ந்தெழுந்து கலகம் செய்யும் உரிமை உயர்குலத்தினரான மூவருக்கும் அளிக்கப்பட்டுள்ளது; அந்த உரிமை சூத்திரர்க்கு மறுக்கப்பட்டுள்ளது. இது இயற்கையானதே. ஏனெனில் இந்த சமூக அமைப்பு முறையை அப்படியே கட்டிக்காப்பதால் பயன் பெறக்கூடியவர் அந்த மூன்று உயர் வகுப்பினரே யாவர். ஆனால், இந்தச் சமூக அமைப்பைத் தகர்ப்பதற்குச் க்ஷத்திரியர் அனைவரும் மன்னனோடு சேர்ந்து கொண்டால் என்ன செய்வது? அத்தகைய சூழ்நிலையில் அனைவரையும் குறிப்பாகச் க்ஷத்திரியரைத் தண்டிக்கும் அதிகாரத்தை மனு பிராமணர்களுக்கு அளிக்கின்றார்.

11:31. " தரும நியதி அறிந்த பிராமணன். மன்னனிடம் எவ்வித வழக்கும் கொண்டு செல்ல வேண்டியதில்லை. தனக்குத் தொல்லைத் தருவோரைத் தன்னுடைய வலிமையினால் தானே தண்டிக்கலாம்."

11:32. " தன்னைத் தானே சார்ந்திருக்கும் பிராமணனின் வலிமையே மற்றவர்களின் துணையைச் சார்ந்திருக்கும் மன்னனின் வலிமையைவிட பலம் வாய்ந்தது. எனவே பிராமணன் தன் பகைவரை எதிர்த்து வெல்லலாம்."

9:320. "பிராமணர்க்கு எதிராக க்ஷத்திரியன் ஆயுத மேந்தி வன்முறையில் ஈடுபடும் சமயங்களிலெல்லாம் பிராமணரே அவனை அடக்குவதற்குரியவராவர். ஏனெனில் அவன் பிராமணனிடமிருந்து தோன்றியவன்."

ஆயுதமேந்தாமல் பிராமணர், க்ஷத்திரியரை எவ்வாறு தண்டிக்க முடியும் ? இதை மனு அறிவார்; எனவே க்ஷத்திரியரைத் தண்டிப்ப தற்குப் பிராமணர் தாமே ஆயுதமேந்தலாம் என அனுமதியளிக்கிறார்.

12:100. " தானைத் தலைமை, அரசாட்சி, நீதிவழங்கிப் பிறரைத் தண்டிக்கும் அதிகாரம், அனைத்து நாடுகள் மீதும் ஆதிக்கம் செலுத்துதல் ஆகியவை அனைத்திற்கும் வேத சாஸ்திரங்களை நன்கறிந்தவனாக உள்ள பிராமணனே உரிமை உடையவன்."

நடைமுறையிலுள்ள அமைப்பு முறையைக்கட்டிக் காப்பதற்குரிய இரண்டாவது உத்தி முதலாவதிலிருந்து முற்றும் வேறுபட்டது. உண்மையில் , இதுவே இந்து சமூக அமைப்பின் தனித் தன்மையாக அமைகின்றது.

சமூக அமைப்பினைத் தகர்ப்பதற்குத் தோன்றும் வன்முறைத் தாக்குதலை எதிர்த்து அந்த அமைப்பை நிலை நிறுத்துவதற்கு மூன்று யோசனைகள் கவனத்தில் கொள்ளத்தக்கவை. மூவகைக் காரணங்களால் புரட்சி தோன்றுவதற்கு வாய்ப்புள்ளது. 1) தவறான கருத்து நிலவுதல்

2) தவறுகளால் மற்றவர்கள் துயருறுகின்றனர் என்று உணரும் திறன் 3) ஆயுதங்கள் எளிதில் கிடைக்கும் வாய்ப்பு. இத்தகையதொரு புரட்சி தோன்றினால் இருவழிகளில் அதனை அடக்கலாம் என்பது இரண்டாவது யோசனை. முதலாவது, அத்தகைய புரட்சியே தோன்றாமல் தவிர்ப்பது. இரண்டாவது அப்படியே ஒரு புரட்சி தோன்றினால் அதனை அடக்குவது. மூன்றாவது யோசனையாவது அத்தகைய புரட்சி தோன்றாமல் தவிர்ப்பதற்கு வாய்ப்புள்ளதா, அந்தப் புரட்சியை அடக்கி ஒடுக்குவதுதான் ஒரே வழியாக உள்ளதா என்பனவற்றோடு புரட்சி தோன்றுவதற்கு அடிப்படையாக உள்ள மூவகை நிலைகளை அடக்கியாளக் கூடிய விதிகளைச் சார்ந்திருப்பது ஆகும்.

சமூக அமைப்பானது புரட்சி செய்யும் வாய்ப்பை மறுக்கும் போதும், கல்வியைப் பெறும் உரிமையை மறுக்கும் போதும், ஆயுதமேந்துவதற்குரிய உரிமையை மறுக்கும்போதும் சமூக அமைப்புக்கு எதிராகத் தோன்றும் புரட்சியைத் தடுக்கக் கூடிய நிலையில் இருக்கின்றது. அதற்கு மாறாக, ஒரு சமூக அமைப்பு, கல்வி கற்கும் உரிமையை அனுமதிக்கின்றபோதும் ஆயுதங்களைப் பயன்படுத்த அனுமதிக்கும் போதும் அநீதிகளால் துன்புறுவோர் புரட்சி செய்வதை அதனால் தடுக்க முடியாது. அத்தகைய சூழ்நிலையில் புரட்சியை ஒடுக்கிச் சமூக அமைப்பை நிலை நிறுத்துவதற்குரிய ஒரேவழி வன்முறையையும் பலத்தையும் கொண்டு புரட்சியை ஒடுக்குவதுதான். இந்து சமூக அமைப்பு முதலாவது முறையையே மேற்கொண்டுள்ளது. சமுதாயத்தின் அடித் தளத்திலுள்ளவர்களின் சமூக அந்தஸ்தினைத் தலைமுறை தலைமுறைக் காலத்திற்கும் ஒரே மாதிரியாக இருக்கும்படி அது நிர்ணயித்துள்ளது. அவர்களின் பொருளாதார நிலையும் மாற்றமுடியாதபடி நிலைப்படுத்தப்பட்டுள்ளது. இருவருக்கிடையே ஏற்றத்தாழ்வு என்பது இல்லாதபோது, மனக்குறை தோன்றி வளர்வதற்கே இடமில்லாமல் போகின்றது. அடித்தளத்து மக்களுக்கு அது கல்வி வாய்ப்பை மறுத்துள்ளது. இதன் விளைவாக, தன் இழிநிலையே தனது துயரத்திற்குக் காரணம் என்ற உணர்வு எவர்க்கும் தோன்ற முடியாமல் போய்விட்டது. அப்படியே ஏதாவதொரு உணர்வு இருக்குமானால் அது இந்த இழிநிலைக்கு எவரும் பொறுப்பாளியல்ல; அது நமது தலைவிதி என்ற உணர்வேயாகும். தம் துயரத்திற்கான காரணத்தை எண்ணிப்பார்த்தோ, தம் குறைகளைப்பற்றிய உணர்வுடனோ இந்து சமூக அமைப்பு முறையை எதிர்த்து அடித்தளத்து மக்கள் புரட்சி செய்யமுடியாது. காரணம் இந்து சமூக அமைப்பில் பொது மக்களுக்கு ஆயுதமேந்துகின்ற உரிமை மறுக்கப்பட்டுள்ளது. இதற்கு மாறாக முஸ்லீம் அல்லது நாஜிகளின் சமூக அமைப்பில் இந்த உரிமை அளிக்கப் பட்டுள்ளது. அங்கு அனைவருக்கும் சமஉரிமை அளிக்கப்பட்டுள்ளது. அனைவரும் கல்வி அறிவைப் பெறும் வாய்ப்பளிக்கப்படுகின்றது. ஆயுதமேந்துவதற்கும், புரட்சியை வன்முறையாலும் ஆயுதம் கொண்டும் அடக்கும்போது அதைத் தாமே

எதிர்த்து நிற்பதற்கும் அந்தச் சமூக அமைப்புகள் அனுமதிக்கின்றன. வாய்ப்புச் சுதந்திரத்தை மறுப்பதும், அறிவைப் பெறுவதற்கான சுதந்திரத்தை மறுப்பதும், ஆயுதமேந்தும் உரிமையை மறுப்பதும் மிகக் கொடிய அநீதியாகும். இதன் விளைவு மனு மனிதனை முடமாக்குவதும், ஆண்மையற்றவனாக்குவதுமாகும். இதைத் செய்திருப்பதற்காக இந்து சமூக அமைப்பு வெட்கப்படவில்லை. எனினும் அது இரண்டு விஷயங்களைச் சாதித்துக் கொண்டுள்ளது. முதலாவது, உறுதியுடன் நிலைநிறுத்தப்பட்டுவிட்ட அமைப்பினைப் பெரிதும் வெட்கங்கெட்ட முறையில் பாதுகாப்பதாக இருந்த போதிலும் அந்த அமைப்பைப் பாதுகாக்க அது மிகவும் பயனுறுதியுள்ள முறையைக் கண்டு பிடித்துள்ளது, இரண்டாவதாக கொஞ்சமும் மனிதாபிமானமற்ற முறையில் ஆண்மையைக் கொன்றிருந்த போதிலும் இந்துக்கள் மிகவும் இரக்கத் தன்மையுடைவர்கள் என்ற புகழைப் பெற்றிருக்கின்றனர். நாஜிகள் இந்துக்களிடமிருந்து கற்றுக் கொள்வதற்கு நிறைய உள்ளன. இந்துக்கள் கடைப்பிடித்த வழியில் பொதுமக்களை ஒடுக்கும் உத்திகளை அவர்கள் கையாண்டு இருப்பார்களேயானால் யூதர்களை வெளிப்படையான கொடுமைக்கு உட்படுத்தி நசுக்கி இருக்கத் தேவை ஏற்பட்டிருக்காது. அதோடு அவர்களும் தங்களை இரக்கமுள்ள எஜமானர்கள் என்று காட்டிக் கொண்டிருக்கலாம்.

இந்து சமூக அமைப்பின் மூன்றாவது தனித்தன்மை என்னவெனில் கடவுளே உருவாக்கிய தெய்வீக அமைப்பாக அதனை ஆக்கியதுதான். இவ்வாறு தெய்வீக அமைப்பாக இருப்பதால் அது புனிதமானது; அழிக்கமுடியாதது; மாற்றங்களுக்கோ, குற்றம் காண்பதற்கோ இடமில்லாதது என்று கூறப்படுகிறது. இந்து சமூக அமைப்பின் தெய்வீகத் தன்மையைப் பற்றி எவருக்காவது மனதில் எத்தகைய ஐயமுமிருக்குமானால் அதை நீக்குவதற்குப் பகவத் கீதையிலும், மனுஸ்மிருதியிலும் கூறப்பட்டுள்ள பின்வரும் பாடல்கள் உதவுகின்றன. இந்து கடவுளர்களில் ஒருவரான ஸ்ரீகிருஷ்ணரின் உபதேசங்கள் அடங்கிய கீதையில் கூறப்பட்டுள்ளதாவது :-

> *4:13.* “நானே நால்வகை பிராமணர், க்ஷத்திரியர், வைசியர், சூத்திரர், வருண அமைப்பினை அவரவர்களுக்குள்ள செயல் வேறுபாடுகளுக் கேற்றவாறு படைத்துள்ளேன். எனவே நானே அதனை உருவாக்கியவனாவேன்.”

> *18:41-44.* “எதிரிகளைத் தவிக்கச் செய்பவனே! பிராமணர் (புரோ கிதர்கள், க்ஷத்திரியர் (வீரர்கள்), வைசியர் (வணிகம் செய்வோர்), சூத்திரர் (குற்றேவல் செய்வோர்) ஆகியோருக்கு மூலப்பிரகிரு தியிருந்து அவர்கள் தோன்றியபோது கொண்டிருந்த இயற்கை குணங்களுக்கேற்றவாறு அவரவர்க்குரிய கடமைகள் விதிக்கப்பட் டுள்ளன. அமைதி, புலனடக்கம், சமய ஆசாரங்களைக் கைக்கொள்ளுதல், தூய்மையுடைமை, பொறுமையுடைமை, நேர்மையுடைமை, விவேகம், ஆன்மீக ஞானம், (மறு உலக நம்பிக்கை

பற்றிய) ஆத்திக புத்தி ஆகியவற்றை இயல்பாகப் பெற்றிருக்கும் கடமை பிராமணனுக்குரியது. வீரமிடுக்கு, துணிவுடைமை, ஊக்கமுடைமை, போரில்புறங்கொடாமை, வள்ளண்மை, பிரஜாபரிபாலனம் செய்தல் ஆகியவை க்ஷத்திரியர்க்கு இயல்பாக அமைந்த கடமைகள். ஆநிரைக்காத்தல், வணிகம் செய்தல் ஆகியவை வணிகருக்கு இயல்பாக உள்ள கடமைகள். அவ்வாறே உடலுழைப்பும் குற்றேவல் செய்வதும் சூத்திரர்க்குரிய இயல்பான கடமையாகும்"

இந்து சமூக அமைப்பு முறையை எதிர்த்துப் பேசுவதைக் கிருஷ்ணன் தடுத்துள்ளார். அவர் கூறுவதாவது,

*3:26.* "செயலில் பற்றுடன் செய்யப்படுவது அறியாமையினால் செய்யப்படுவதாதலால், மக்கள் தங்கள் கடமைகளைச் செய்ய வேண்டும் என்று விரும்பும் அறிவாளியானவன், செயலில் பற்றுடைய அறவீனர்களுக்குப் புத்திக் குழப்பத்தை உண்டாக்கக்கூடாது. செயலிலிருந்து விலகும்படியாக அவர்களுக்கு உற்சாகமூட்டாது, பக்தி உணர்வுடன் செயலாற்றலில் ஈடுபடுமாறு செய்ய வேண்டும்".

இந்து சமூக அமைப்புமுறை செயலற்றுப் போகும்போது, மக்கள் சீர்திருத்தப்பணியை மேற்கொள்வதைக் கிருஷ்ணன் விரும்பவில்லை. அந்தப் பணியைத் தனக்கு விட்டுவிடுமாறு கூறுகிறார்.

*4:7-8.* "ஓ ! பரதா! தர்மம் தளர்வுற்று அதர்மம் தலைதூக்கும்போது நான் பிறக்கின்றேன். தர்மத்தை நிலை நாட்டுவதற்காக யுகந்தோறும் நான் பிறப்பெடுத்து அதர்மத்தை அழித்துத்தர்மத்தை நிலை நாட்டுகின்றேன்."

இது மட்டுமே இந்து சமூகத்தின் தனித் தன்மையன்று; அது வரம்பு கடந்ததொரு நிலையாகும். தெய்வங்களைத் திருநிலைப்படுத்தி வைத்திருப்பதை ஆய்ந்தோமானால் உயிரில்லாத பொருள்கள்கூட தெய்வங்களாகப் பிரதிஷ்டை செய்யப்பட்டு, அவை கும்பிடுவதற்குரியவை என்று ஒரு மத நம்பிக்கையை மக்கள் மனதிலே நிலைநிறுத்தி வைத்திருப்பதைக் காணலாம். கற்கள், ஆறுகள், மரங்கள் ஆகியவையெல்லாம் இவ்வாறு ஆண் கடவுள்கள், பெண்கடவுள்களாக ஆக்கப்பட்டுள்ளன. உயிருள்ளவற்றைத் தெய்வங்களாகத் திருநிலைப்படுத்தி அவற்றைப் பயபக்தியோடு வணங்குவதற்குரியவை என்னும் நம்பிக்கை வளர்க்கப்பட்டுள்ளது என்பதற்குச் சான்றுகள் உள்ளன. ஆனால் ஒரு குறிப்பிட்ட சமூக அமைப்பு மதத்தின் பெயரால் திருநிலைப்படுத்தப்பட்டுத் தெய்வத்தன்மையுள்ளதாக ஆக்கப்பட்டிருப்பதற்கு வேறெங்கும் சான்றுகள் கிடையாது. நாகரிகம் முதிராத மக்களிடையே குலங்களும் குடிமரபுகளும் இருந்துள்ளன. ஆனால் இந்தக் குலங்களும் குடிமரபுகளும் ஒரு சமூக அமைப்பாக இருந்தனவே ஒழிய, அவை மதத்தால் தெய்வீகத் திருநிலைப்படுத்தப்பட்டு

பக்திக்குரியதாகவும் மீற முடியாததாகவும் ஆக்கப்பட்டதில்லை. எகிப்து, பெர்ஷியா, ரோம், கிரீஸ் முதலிய பண்டைய நாடுகள் தங்கள் சமூக அமைப்பில் சிலரைச் சுதந்திரமுள்ளவர்களாகவும், சிலரை அடிமைகளாகவும், சிலரைக் குடிமக்களென்றும், சிலரை வேற்றவர்கள் என்றும், சிலரை தங்கள் இனத்தினர் என்றும், சிலரை வேறு இனத்தவர் என்றும் கொண்டிருந்தன. இந்தப் பாகுபாடுகள் எல்லாம் சமூக அமைப்பாக இருந்தனவே ஒழிய, அவற்றை மதத்தோடு தொடர்புபடுத்தித் தெய்வச் சம்பந்தப்படுத்தித் தெய்வத்தன்மை உடையதாகவோ, மீற முடியாததாகவோ அங்கு ஆக்கப்படவில்லை - தற்காலத்திலும் இத்தகைய அமைப்புகள் ஜனநாயகம், பாசிசம், நாஜிசம், போல்ஷிவிசம் என்னும் முறைகளாக இடம் பெற்றுள்ளன. ஆனாலும் இவை அனைத்தும் சமூக அமைப்புகளே ஒழிய அவை தெய்வத் தொடர்புடையவையாகவோ அதனால் பக்தியுடனும் மீறமுடியாததாகவும் காப்பாற்றபட வேண்டியவையாகவோ ஆக்கப்படவில்லை.

வயிற்றுப் பிழைப்பிற்காகச் செய்யப்படும் தொழில்களும் வேறெந்த சமுதாயத்திலும் தெய்வத்தொடர்புடையதாக ஆக்கப்படவில்லை. பொருளாதார நடவடிக்கைகள் மதத்திற்குச் சம்பந்தமற்றவையாகவே எப்போதும் இருந்துள்ளன. வேட்டையாடிப் பிழைத்த சமுதாயத்தினருக்கென்று ஒரு மதம் இருந்தது. ஆனால் வேட்டையாடும் தொழிலே மதத்தின் பெயரால் திருநிலைப்படுத்தப்பட்டு, அதைச் செய்வது தெய்வத் தொடர்புடையதாக்கப்பட்டதில்லை. ஆடு மாடுகளை மேய்த்து வ ாழ்ந்த சமூக மக்களுக்கென்று மதம் இருந்ததுண்டு; ஆனால் ஆடு மாடு மேய்த்து வாழும் தொழிலே தெய்வத் தொடர்புடைய தாக ஆக்கப்பட்டுப் புனிதமுள்ளதாகப் போற்றப்பட்டதில்லை. இதேபோன்று வேளாண்மையும் மதத்தால் தெய்வத் தொடர்புடையதாக ஆக்கப்பட்டு, புனிதமானதாக பூஜிக்கப்பட்டதில்லை, நிலப்பிரபுத்வ முறையிலும் ஏற்றத்தாழ்வுகளும், பிரபுக்கள், போக்கிரிகள், அடிமைகள் போன்றோர் இருந்தனராயினும் அந்தப்பிரிவுகள் முழுக்க முழுக்கச் சமூகத்தன்மை உடையனவேயன்றி அவற்றில் தெய்வீகத் தன்மை ஏதுமில்லை.

ஒரு மனிதனுக்கும் இன்னொரு மனிதனுக்கும் இடையேயுள்ள உறவுகள் மதத்தால் திருநிலைப்படுத்தப்பட்டு தெய்வத்தன்மை யுடையதாகவும், நிரந்தரமானதாகவும், மாற்ற முடியாததாகவும் ஆக்கப்பட்டுள்ள ஒரு சமூக அமைப்பினை உலகில் இந்துக்கள் மட்டுமே பெற்றுள்ளனர். உழைப்போருக்கிடையே உள்ள உறவுகள் மதத்தால் திருநிலைப்படுத்தப்பட்டு தெய்வீகமானதாகவும் நிரந்தரமானதாகவும், மாற்ற முடியாததாகவும் உள்ள பொருளாதார அமைப்பினை உலகில் இந்துக்கள் மட்டுமே பெற்றிருக்கின்றனர்.

இந்துக்கள் மட்டுமே தமக்கென மதக் கோட்பாடுகளைப் பெற்றிருப்பவர்கள் என்று கூறிவிட முடியாது. ஜெராஸ்துரியர்கள்,

இஸ்ரேலியர்கள், கிறிஸ்தவர்கள், முஸ்லீம்கள் ஆகியோரும் முறைப்படுத்திய மதக்கோட்பாடுகளைப் பெற்றிருக்கின்றனர். நம்பிக்கைகளையும், சடங்குகளையும் அவர்கள் தெய்வத்தன்மை யுடையனவாக ஆக்கியுள்ளனர். ஆனால் ஒருமனிதனுக்கும் இன்னொரு மனிதனுக்குமிடையேயுள்ள உறவுகளை இருகிய வடிவமாக்கிய சமூக அமைப்பை அவர்கள் வரையறுத்துத் தெய்வீகத் தன்மையுடையதாக ஆக்கிக் கொண்டதில்லை. இந்த வகையில் இந்துக்கள் மட்டுமே தனித்து நிற்கிறார்கள். இப்படி ஆக்கப்பட்டிருப்பதாலேயே காலத்தால் அழித்தொழித்து மாற்றமுடியாததான வலிமை இந்து சமூக அமைப்பிற்குக் கிடைத்துள்ளது.

இதனை இந்து சமூக அமைப்பைப்பற்றிய ஒரு துல்லியமான வருணனையாக வைதீக இந்துக்கள் ஏற்றுக் கொள்வார்கள். சீர்திருத்தவாதிகள்தான் அநேகமாக இதனை ஆட்சேபிக்கக்கூடும். ஆங்கிலேயர் இந்த நாட்டிற்கு வந்த பிறகு, இதெல்லாம் வழக்கொழிந்து போன ஒரு கடந்த காலத்தைப் பற்றிய வருணனையே தவிர வேறொன்றுமில்லை என்று இவர்கள் வாதிக்கக்கூடும். இத்தகைய வாதத்தைக் கண்டு எவரும் மனத்தைக் குழப்பிக் கொள்ள வேண்டியதில்லை. ஏனெனில் இத்தகைய வாதம் தவறானது. கோட்பாடுகள் என்ற வகையில் சில ஒழுங்கமைப்பு முறைகள் மறைந்து போனாலும் சில சமயங்களில் அவை பழக்க வழக்க மரபுகளாக நீடித்து நிலைத்து நிற்பது உண்டு என்ற உண்மையை இந்த வாதம் புறக்கணித்துவிட்டது. இவ்வகையில், இந்து சமூக அமைப்பு இந்துக்களின் பழக்கவழக்க மரபாகப் பரிணமித்து முழு அளவுக்கு நடைமுறையில் இருந்து வருகிறது என்பதை எவரும் மறுக்க முடியாது.

❑❑❑

# இயல் 4

## இந்து மதத்தின் அடையாளங்கள்

*இத்தலைப்பின் கீழ் 37 பக்கங்கள் உள்ளன. இந்த இயல் முற்றுப் பெறவில்லை. இருப்பினும் இது ஆரம்ப திட்டத்தின் 7-வது தலைப்பு சம்பந்தப்பட்டதாகும். "இந்தியாவும் பொதுவுடைமையும்" என்ற தலைப்பில் வரும் பக்கங்களோடு இப்பக்கங்களும் கோக்கப்பட்டு ஒரு பட்டியலாக்கப்பட்டுள்ளது, டாக்டர் அம்பேத்கர் எழுதிய பொருளடக்கப்பகுதியுடன் தட்டச்சு செய்யப்பட்ட வாசகப் படிவத்தைக் கீழே வெளியிடுகிறோம், "நான் ஒரு இந்துவாக இருக்க முடியுமா?" என்ற தலைப்பின் கீழ் வெளியிட உத்தேசிக்கப்பட்ட நூல் மூலத்தின் செல்லரிக்கப்பட்ட நிழல்பட வடிவமும் கீழே வெளியிடப்பட்டுள்ளது.*

*- ஆசிரியர்கள்.*

இந்து சமூக அமைப்பில் விநோதமாக ஏதாவது உள்ளதா? ஆராய்ச்சியாளர்கள் இது பற்றி ஆய்வு செய்கிறார்கள் என்பதைப் பற்றி எதுவும் அறிந்திராத கள்ளமற்ற ஒரு இந்து, தனது சமூக அமைப்பில் விநோதமான, இயற்கைக்கு முரண்பட்ட, இயல்பு மீறிய அம்சம் எதுவும் இல்லை என்றுதான் கூறுவார். இது இயல்பானது தான். ஒதுக்கப்பட்டு, ஒதுங்கியே வாழ்பவர்களுக்கு அவர்களின் வாழ்க்கை முறையில் வழக்கத்திற்கு மாறான விநோதங்கள் இருப்பது எதுவும் புலப்படுவதில்லை, தங்களுக்கென்று ஒரு பெயரைக் கூட கொடுத்துக் கொள்ள முடியாத வகையில் தலைமுறை தலைமுறையாக ஏதோ வாழ்ந்து வருகிறார்கள். இந்து மதத்தைச் சேராத வெளியாருக்கு இந்து சமூகம் எவ்வாறு தெரிகிறது? தங்களது சமூகத்தைப் பற்றி இந்துக்கள் நினைப்பது போல், இந்து சமூகம் இயல்பானதாகவும் இயற்கையானதாகவும் அவர்களுக்குத் தெரிகிறதா?

சுமார் கி.மு. 305-ஆம் ஆண்டில் சந்திரகுப்த மௌரியர் ஆட்சிக்காலத்தில் செலுக்கஸ் நிகேடர் என்னும் கிரேக்க மன்னனின் தூதராக இந்தியாவுக்கு வந்த மெகஸ்தனீஸ் இந்து சமூக அமைப்பு மிகவும் விசித்திரமான அம்சங்களைக் கொண்டதாக இருப்பதைக் கண்டார். இதனாலே இந்து சமூக அமைப்பில் காணப்படும் விசித்திரத் தன்மைகளை விரித்துரைக்கப் பெரிதும் முயற்சி எடுத்துக் கொண்டுள்ளார். அவர் குறித்திருப்பதாவது:

"இந்தியாவின் மக்கள் ஏழு வகையினராகப் பிரிக்கப்பட்டுள்ளனர். புரோகிதர்கள் முதல் வகுப்பைச் சேர்ந்தவர்கள். இவர்களின் எண்ணிக்கை மிகவும் குறைவுதான். வேள்விகள் அல்லது இதர புனித சடங்குகள் நடத்த விரும்புவோர் தனிப்பட்ட முறையில் இந்தப் புரோகிதர்களைப் பயன்படுத்திக் கொள்வார்கள். பொதுவாக அரசர்களுக்கு இவர்கள் பணிசெய்கிறார்கள். அரசனின் மாளிகையில் ஆண்டு ஆரம்பத்தில் நடைபெறும் சதஸ் கூட்டங்களில் புரோகிதர்கள் அனைவரும் ஒன்று கூடி அவர்களில் ஒருவர் பொது நலத்தினைப் பெருக்குவதற்கோ அல்லது கால்நடை வேளாண்மை அபிவிருத்தி செய்வதற்கோ பயனுள்ள ஆலோசனைகளைக் கூறுவார். அல்லது நூல் எழுதுவதற்கான கருத்துக்களை வெளிப்படையாகத் தெரிவிப்பார். இவ்வாறு அரசர்களுக்கு இவர்கள் பணியாற்றுகிறார்கள். இவர்களில் எவராவது மூன்றுமுறை தவறான தகவல் அளித்ததாகத் தெரியவந்தால் அவர்கள் வாழ்நாள் முழுவதும் ஒதுக்கி வைக்கப்பட்டு வாய் மூடி இருக்க வேண்டுமென்று விதிக்கப்படுவர். பயனுடைய கருத்துக்களைக் கூறுபவர்கள் வரி செலுத்த வேண்டியதில்லை; வேறு சில கட்டணம் செலுத்துவதிலிருந்து வரி விலக்கு பெறுவர். இரண்டாவது சாதியைச் சேர்ந்தவர்கள் பயிர்த்தொழில் செய்பவர்கள். இவர்கள் பெரும்பான்மையினர்; சாந்தமான குணமும் பணிவுமுள்ளவர்கள். இச்சாதியினர் போர்களில் பங்கு கொள்ள வேண்டியதில்லை. எவ்வித அச்சமுமின்றி பயிர்த்தொழில் செய்கிறார்கள். அவர்கள் நகரத்திற்குச் சென்று அங்கு நடைபெறும் அமளிகளில் பங்கேற்பதில்லை. அல்லது வேறு எதிலும் பங்கு கொள்வதில்லை. களத்தில் போர் செய்வதையும், அதே நேரத்தில் அவர்களுக்கு மிக அருகிலேயே மற்றொரு பிரிவினர் வீரர்களின் பாதுகாப்புடன் உழுது கொண்டும், மண்ணைத் தோண்டிக் கொண்டும் இருப்பதைச் சர்வ சாதாரணமாகக் காணலாம். நிலமனைத்தும் அரசனுக்கே சொந்தம். விளை பொருளில் நான்கில் ஒரு பங்கினை மட்டும் அரசன் கொடுத்தால் போதும் என்ற நிபந்தனையின் அடிப்படையில் அவர்கள் பயிர்த்தொழில் செய்கிறார்கள்.

கால்நடை மேய்ப்பவர்கள், வேட்டையாடுபவர்கள் மூன்றாவது சாதியைச் சேர்ந்தவர்கள். வேட்டையாடுவதற்கும் கால்நடைகளை வைத்துக்கொள்ளவும், உழவுமாடுகளை விற்க அல்லது வாடகைக்குக்

கொடுக்க இவர்களுக்கு மட்டும் தான் அனுமதி உண்டு. விளை நிலத்தில் விதைத்த விதைகளைத்தின்னும் குருவிகளை ஓட்டவும் காட்டுவிலங்குளை வேட்டையாடவும் இவர்களுக்கு அரசன் தானிய மானியம் அளிக்கிறான். அவர்கள் நாடோடிகளாகக் கூடாரங்களில் தங்குகிறார்கள்.

நான்கா்வது வகையினர் வாணிபம் செய்கிறார்கள்; இவர்கள் பொருள்களை விற்பதிலும் உடல் உழைப்பிலும் ஈடுபடுகிறார்கள். சிலர் அரசனுக்குக் கப்பம் செலுத்துகிறார்கள்; நிர்ணயிக்கப்பட்ட சில பணிகளையும் செய்கிறார்கள். ஆயுதம் செய்பவர்களும், கப்பல் கட்டுபவர்களும் அரசனிடமிருந்து கூலியும், உணவுப் பொருள்களும் பெறுகின்றனர். இவர்கள் அரசனுக்கு மட்டும் தொண்டு செய்பவர்கள். இராணுவத் தளபதி ஆயுதங்களையும், போர்வீரர்களையும் அளிக்கிறார்; பயணிகள் செல்லுவதற்கும், வாணிபப் பொருள்களை ஏற்றிச்செல்லுவதற்கும் கப்பல்களை வாடகைக்குக் கொடுக்கிறார்.

போர் வீரர்கள் ஐந்தாவது வகையைச் சேர்ந்தவர்கள். போர் நிகழாத காலத்தில் வேறு வேலை எதுவுமின்றிக் குடித்துக் கும்மாளமிட்டுக் காலத்தை வீணாக்குகிறார்கள். அவர்களை அரசன் பராமரித்து வருவதால், நேரம் வரும்போது களத்தில் இறங்க தயாராக உள்ளனர். அவர்களின் உடல் வலிமையைத் தவிர வேறு எதுவும் அவர்களுக்குச் சொந்தமில்லை.

ஒற்றர்கள் ஆறாவது வகையைச் சேர்ந்தவர்கள். நாட்டில் நிகழும் நிகழ்ச்சிகள் அனைத்தையும் கவனமாகக் கண்காணித்து அரசனுக்கு இரகசிய அறிக்கை கொடுப்பவர்கள் இவர்கள். சிலர் நகரத்தைக் கண்காணிக்கும் பணியையும், மற்றவர்கள் இராணுவ இரகசியத்தைக் கவனிப்பவர்களாகவுமுள்ளனர். நகரத்தைக் கண்காணிப்பவர் நகரத்திலுள்ள விலைமாதர்களையும், இராணுவ இரகசியத்தைக் க்ண்காணிப்பவர் இராணுவ முகாமிலுள்ள விலை மாதர்களையும் தங்களது உதவியாளர்களாகப் பயன்படுத்திக்கொள்கின்றனர். மிகவும் திறமையுள்ள, நம்பிக்கையுள்ளவர்களே இத்தகைய ஒற்றர்களாக நியமிக்கப்படுகின்றனர்.

அரசனுடைய ஆலோசகர்களாகவும் வரி மதிப்பீட்டாளர்களாகவும் உள்ளவர்கள் ஏழாவது வகையினர். நீதிமன்றங்களிலும், பொது நிருவாகப்பணித்துறைகளிலும் பணிபுரியும் இவர்கள் அரசின் உயர் பதவிப் பொறுப்பிலுள்ளவர்களாவர்.

சாதியைவிட்டு வேறு சாதியில் யாரும் திருமணம் செய்துகொள்ள முடியாது; ஒருவர் செய்யும் தொழிலை இன்னொருவர் மாற்றிக் கொள்ளவும் இயலாது; அல்லது ஒன்றுக்கும் மேற்பட்ட தொழில் செய்யவும் முடியாது. நல்லொழுக்கம் காரணமாகப்

புரோகிதர்களுக்கு மட்டும் ஒரு உரிமையாக இதிலிருந்து விதிவிலக்கு அளிக்கப்படுகிறது".

சுமார் கி.பி. 1030-ஆம் ஆண்டில் இந்தியாவில் தான் மேற்கொண்ட பயணங்கள் பற்றிப் பயணக் கட்டுரை எழுதிய அல்பெருனி என்பவர் இந்து சமூக அமைப்பின் விநோதங்களைக் கண்டு ஆச்சரியப்பட்டார். தனக்கு ஏற்பட்ட அனுபவம் பற்றி எழுதும் போது அவரும் இதுபற்றி ஒரு குறிப்பு எழுதியுள்ளார். அவர் கூறுகிறார்:

"இந்துக்கள் தங்கள் சாதியை வருணம் அதாவது வண்ணம் என்று குறிப்பிடுகிறார்கள். வம்சாவளி முறையில் அவைகளை ஜாதகா அதாவது பிறப்புகள் என்கின்றனர். ஆரம்பத்திலிருந்தவை நான்கு சாதிகள்தான்.

1. பிராமணர்கள்-உயர்சாதியினர். இவர்கள் பிரம்மாவின் தலையிலிருந்து பிறந்தவர்கள் என்று இந்துக்களின் நூல்கள் கூறுகின்றன. இயற்கையின் சக்திக்கு மறுபெயர் பிரம்மா; விலங்கு உடம்பின் தலையாய அவயவம்தான் தலை; குலத்தில் சிறந்தவர்கள் பிராமணர்கள். எனவே அவர்கள் மனிதகுலத்தில் மேம்பட்டவர்கள் என இந்துக்கள் கருதுகின்றனர்.

2. க்ஷத்திரியர்கள்-பிரம்மாவின் தோளிலிருந்தும், கைகளிலிருந்தும் பிறந்தவர்கள். அடுத்த சாதியினர் என்கின்றனர். இவர்கள் பிராமணர்களுக்கு அடுத்த அந்தஸ்தை உடையவர்கள்.

3. அதற்கு அடுத்த சாதியினரான வைசியர்கள். பிரம்மாவின் தொடையிலிருந்து பிறந்தவர்கள்.

4. சூத்திரர்கள் பிரம்மாவின் கால்களிலிருந்து பிறந்தவர்கள்.

இறுதியாகக் கூறப்பட்ட இரண்டு சாதியினர்களுக்கு இடையே மிகுந்த வேறுபாடு இல்லை. அவர்கள் சாதியால் வேறுபட்டவர்களாக இருந்தபோதிலும், நகரங்களிலும் கிராமங்களிலும் வீடுகளிலும் கலந்தே வாழ்கின்றனர்.

சூத்திரர்களுக்கு அடுத்தபடியாக அந்தியாஜர் என்னும் மக்கள் உள்ளனர். பல்வேறு வகையான பணிகளைச் செய்யும் அவர்கள் எந்தச் சாதிப்பிரிவையும் சேராதவர்கள். ஆயினும் குறிப்பிட்ட சில கைத் தொழில்களையே செய்பவர்கள். அவர்கள் எட்டுப்பிரிவினராக இருந்தபோதிலும் அவர்களுக்குள் திருமணம் செய்து கொள்வார்கள். சலவையாளர்கள், காலணி செய்பவர்கள், நெசவாளர்கள் தவிர வேறு யாரும் அவர்களிடம் தொடர்பு கொள்ளுவதில்லை.

சலவையாளர்கள், காலணி செய்பவர், செப்படி வித்தைக்காரர்கள், கூடை முடைபவர், கேடயம் செய்பவர், மாலுமி, மீனவர், பறவைகள், விலங்குகளை வேட்டையாடுவர், நெசவாளர் ஆகியோர் இந்த எட்டுச் சங்கங்களைச் சார்ந்தவர்கள். நான்கு வருணத்தவரும் அவர்களுடன்

ஒரே இடத்தில் இணைந்து வாழ்வதில்லை. நான்கு வருணங்களைச் சேர்ந்தவர்கள் வாழும் நகரங்கள், கிராமங்களுக்கு வெளியே இந்த எட்டு சங்கங்களைச் சேர்ந்தவர்கள் வசிக்கின்றனர்.

ஹாதி, தொம்பர், சண்டாளர், பதாதாவர் எனப்படுவோர் எந்த சாதியையும் சங்கத்தையும் சேர்ந்தவர்களல்லர். அவர்கள் கிராமத் துப்புறவு மற்றும் இதர இழிவான, அசுத்தமான வேலைகளைச் செய்கிறார்கள். அவர்கள் ஒரு தனியான வகுப்பாகச் செய்கின்ற தொழிலை வைத்து அடையாளம் கண்டு கொள்ளப்படுகின்றனர். அவர்கள் முறைதவறிப் பிறந்தவர்களாகக் கருதப்படுகின்றனர்.

இவர்கள் சூத்திர தகப்பனுக்கும், பிராமணத் தாய்க்கும் பிறந்த வைப்பாட்டிப் பிள்ளைகள் என்று கருதப்படுவதால் சாதியற்ற இழி மக்களாக உள்ளனர்.

இந்துக்கள், நால்வருணத்தவருக்கே உரிய செய்யும் தொழில், வாழ்க்கை முறை ஆகியவற்றை அடிப்படையாகக்கொண்டு அவரவர்க்குப் பெயர் வைக்கின்றனர். உதாரணமாக வீட்டில் இருந்து கொண்டு தனது வேலையைச் செய்து கொண்டிருக்கும் பிராமணனைப் பிராமணன் என்று அழைக்கின்றனர். அக்னி குண்ட பூசை செய்து கொண்டிருந்தால், அவன் இஸ்தின் என்று அழைக்கப்படுகிறான். மூன்று அக்னி குண்டங்களைப் பூசை செய்தால் அக்னி ஹோத்திரன் என்று அழைக்கப் படுகிறான். இதனோடு தீட்சைகொடுப்போர் தீட்சிதர் என அழைக்கப்படுகிறார். இதர சாதியினரும் அவரவர் தொழிலுக்கேற்ற பெயர் வைத்து அழைக்கப்படுகின்றனர். சாதிகளுக்குக் கீழ் நிலையிலுள்ள வகுப்பினர்களில் அசுத்தமான வேலைகளைச் செய்யாத ஹாதி வகுப்பினருக்கு மதிப்பு உண்டு. குழல் ஊதுதல், பாடுதல் ஆகிய தொழிலினரான தொம்பர் அடுத்தபடியான அந்தஸ்து பெறும் வகுப்பினராவர். இவர்களைவிட இழிந்த வகுப்பினர் நீதி மன்றங்களின் தீர்ப்புகளை நிறைவேற்றியும், கொலை செய்தும் பிழைக்கின்றனர். நாயின் மாமிசத்தையும், இறந்த பிராணிகளின் மாமிசத்தையும், இதர மிருகங்களின் இறைச்சியையும் தின்போரான பதான்தன் வகுப்பினர் எல்லோரையும் விட இழிவானவர்கள்.

நான்கு சாதிகளில் ஒவ்வொரு சாதியினரும் ஒன்று சேர்ந்து சாப்பிடும்போது அந்தந்த சாதியினர் அணியாக அமரவேண்டும். வெவ்வேறு சாதிகளைச் சேர்ந்த இருவர் ஒன்றாக உட்காரக் கூடாது. பிராமணர்கள் அணியாக அமர்ந்து உணவு உட்கொள்ளும் போது பகைமை உணர்வுள்ள இரண்டு பிராமணர்கள் பக்கத்தில் உட்காரக் கூடாது. அவ்வாறு பக்கத்தில் உட்கார நேரிட்டால், ஒரு அட்டையை தடுப்பாக இருவருக்குமிடையில் வைக்க வேண்டும். அல்லது ஒரு துணியையோ அல்லது வேறு ஏதாவது ஒன்றைத் தடுப்பாக வைக்க வேண்டும். அவர்கள் இருவருக்குமிடையே ஒரு கோடு

போடப்பட்டால், அவர்கள் தனியாக உட்கார்ந்ததாகக் கருதப்படும். ஒருவர் சாப்பிட்டு மிகுந்ததை இன்னொருவர் சாப்பிடுவது தடுக்கப்பட்டுள்ளது. அதனால் அவரவர் தத்தமக்குரிய உணவைக் கொண்டுவந்து சாப்பிட வேண்டும். ஒருவர் மற்றொருவர் சாப்பிடும் அதே தட்டில் சாப்பிட வேண்டுமானால், முதலில் சாப்பிட்டவர் அத்தட்டில் உணவை மிச்சமாக விட்டு இருந்தால், அந்த உணவை மற்றொருவர் சாப்பிடுவது தடை செய்யப்பட்டுள்ளது."

அல்பெருனி, இந்து சமூகத்தில் தனக்கு தேவைப்பட்டதை மட்டுமே எழுதவில்லை. மேலும் அவர் குறிப்பிடுவதாவது :.

"இந்துக்களிடையே இத்தகைய அமைப்புகள் ஏராளமாக உள்ளன. தெய்வ பக்தி தவிர, மற்ற எல்லாவற்றிலும் மனிதர்கள் அனைவரும் சமம் என்று கருதும் முஸ்லீம்களாகிய நாம் இதற்கு முற்றிலும் வேறுபட்டவர்களாக உள்ளோம். -இந்துக்களுக்கும் முஸ்லீம்களுக்கும் இடையே நெருங்கிப்பழகவும் நல்லுணர்வு ஏற்படவும் இதுதான் ஒரு பெரிய தடையாக உள்ளது".

இந்தியாவில் 1500ஆம் ஆண்டு முதல் 1571-ஆம் ஆண்டுவரை போர்த்துக்கீசியர் ஆட்சி நடைபெற்ற போது போர்த்துக் கீசிய அரசு ஊழியராகப் பணிபுரிந்த டுயர்ட் பார்போசா என்பவர் இந்து சமுதாயம் பற்றிய தம் கருத்துக்களைக் குறித்து வைத்துள்ளார். குஜராத் இராச்சியம் பற்றிப் பின்வருமாறு அவர் எழுதியுள்ளார்:.

"குஜராத் இராச்சியம், மூர்கள் ஆட்சியின் கீழ்வருவதற்கு முன்னர் அங்கு ரொஸ்புத்தோஸ் (ராஜபுத்திரர்கள்) என்று மூர்களால் அழைக்கப்பட்ட மக்கள் வாழ்ந்தனர். அக்காலத்தில் அவர்கள் நிலப்பிரபுக்களாகவும் நில மேற்பார்வையாளர்களாகவும் இருந்தனர். போர்கள் நடந்தபோது அவர்கள் அதில் பங்கு பெற்றனர்.. ஆடுகளையும், மீன்களையும், இதர பல்வேறு வகை உணவுகளையும் அவர்கள் உண்டனர். மலைகளிலும் கிராமங்களிலும் பெரும்பான்மையினராக வாழ்ந்த அந்த மக்கள் குஜராத் அரசனின் கட்டளைக்குப் பணிந்ததில்லை. எப்போதும் அரசனோடு சண்டை செய்தனர். அவர்கள் சிறந்த வில் வீரர்களாகவும், குதிரைப் படை வீரர்களாகவும் இருந்த காரணத்தால், அரசன் அவர்களுக்கு எதிராக எதுவும் செய்ய இயலவில்லை. மூர்களுக்கு எதிராகவும் தங்களைப் பாதுகாத்துக் கொள்ள எல்லாவித ஆயுதங்களும் அவர்களிடமிருந்தன. மூர்களுடன் அவர்கள் எப்போதும் சண்டைசெய்தனர். மூர்களோ அல்லது அரசனோ அவர்களைக் கட்டுப்படுத்த முடியவில்லை. இதே இராச்சியத்தில் பணியாக்கள் என்ற வேற்று மதத்தைச் சார்ந்த மற்றொரு பிரிவு மக்களும் இருக்கிறார்கள். இவர்கள் பெரிய வியாபாரிகள்; வர்த்தகர்கள். தாங்கள் வர்த்தகம் செய்யும் மூர்களுடன் இவர்கள் வசிக்கிறார்கள். இவர்கள் மாமிசத்தையோ, மீனையோ அல்லது கொல்லப்பட்ட

எதையும் சாப்பிடுவதில்லை. எதையும் அவர்கள் வெட்டிக் கொலை செய்வதுமில்லை, மிருகங்கள் வெட்டப்படுவதைக்கூட அவர்கள் பார்ப்பதில்லை. இவ்விதமாக அவர்கள் விக்கிரக வழிபாட்டினைச் செய்து, அதில் முழுமையாகத் தங்களை ஈடுபடுத்திக் கொள்கின்றனர். சிறு பறவைகளையும், பூச்சிகளையும் காட்டி, அவைகளை அவர்களுக்கு முன்னால் கொல்லுவது போன்று அடிக்கடி மூர்கள் ஏமாற்றுவது உண்டு. மூர்களிடமிருந்து அவற்றை அதிக விலைக்கு வாங்கி, சுதந்திரமாக வெளியே பறக்க விட்டு விடுவார்கள். அரசனால் அல்லது கவர்னரால் மரணதண்டனை விதிக்கப்பட்ட குற்றவாளிகளை நீதிபதிகளிடமிருந்து விலைக்கு வாங்குவதற்காக பனியாக்கள் ஒரு இடத்தில் கூடிப்பேசி, குற்றவாளிகள் விற்கப்பட்டால் விலைக்கு வாங்கி அவர்களை மரணத்திலிருந்து காப்பாற்றுகிறார்கள். மூர் பிச்சைக்காரர்கள் பிச்சைக்காசு பெற விரும்பினால் கருங் கற்களை எடுத்துத் தமது தோள்களிலும், வயிறுகளிலும் குத்திக் கொண்டு தாங்கள் பனியாக்கள் முன்பு சாகப்போவது போன்று பாசாங்கு செய்கிறார்கள். பனியாக்கள் இதைப்பார்த்து மனம் வருந்தி, அதிகமாக பிச்சையளித்து அவர்களை அமைதியாகத் திரும்பி போய் விடுமாறு செய்கிறார்கள். இன்னும் சிலர் கத்திகளை எடுத்துக் கொண்டு கால்களிலும் கைகளிலும் வெட்டிக் கொள்ளுகிறார்கள். இதைப் பார்க்கும் போதும் பனியாக்கள் பெருமளவில் பிச்சை கொடுக்கிறார்கள். இன்னும் சிலர் பனியாக்கள் வீடுகளுக்குச் சென்று வீட்டு எலிகளையும், பாம்புகளையும் பிடித்து கொன்று விடுதாகக் கூறுகிறார்கள். இதைத் தடுக்கும் நோக்கத்தில் பனியாக்கள் பணம் கொடுத்து, அவர்களை அனுப்பிவிடுகிறார்கள். மூர்கள் பனியாக்களைப் பெரிதும் மதிக்கின்றனர். தாங்கள் செல்லும் பாதையில் எறும்பு புற்றுக்கள் காணப்பட்டால், வேறு வழியில் செல்லுகிறார்கள். இதனால் எறும்புகள் மிதிக்கப்படுவதில்லை. பகல் நேரத்திலேயே வீட்டில் உணவு உட்கொள்கின்றனர். இரவிலும் பகலிலும் தங்களது இல்லங்களில் விளக்கு ஏற்றுவதில்லை. அவ்வாறு விளக்கு ஏற்றினால் தீச்சுடரில் சிறுசிறு பூச்சிகள் ஏதாவது விழுந்து செத்துவிடும் எனப்பயப்படுகிறார்கள். இரவு நேரத்தில் விளக்கு ஏற்ற வேண்டும் என்ற தேவை ஏற்பட்டால் வார்னீஸ் காகிதம் அல்லது துணி மூடிய விளக்கைப் பயன்படுத்துகிறார்கள். இதனால், தீச்சுடரில் சிற்றுயிர்கள் விழுந்து மடிவது தடுக்கப்படுகிறது. தலையில் பேன் வளர்ந்தால் அவற்றை அவர்கள் நீக்குவதில்லை; பேன்களால் பெரிய அளவில் தொந்தரவு ஏற்பட்டால், துறவிகளாக விக்கிரக ஆராதனை செய்தும், புனிதமானவர்கள் என்று அவர்கள நினைக்கும் சில ஆட்களை அழைத்து, பேன்களைப் பிடித்துக்கொள்ளும்படிச் செய்கின்றனர். இப்பேன்களை இவர்கள் தங்களது தலைமுடியில் விட்டு வளர்க்கின்றனர். இவர்களின் உடல் சதையும் பேன்களுக்கு உணவாகப் பயன்படுகிறது. இவ்வாறு செய்வதை இவர்கள்

தெய்வத்துக்குச் செய்யும் தொண்டு என நினைக்கிறார்கள். இவ்வாறு கொல்லாமை விரதத்தைப் பனியாக்கள் கடுமையாக அனுசரிக்கின்றனர். மற்றொரு வகையில் பார்த்தால் பணியாக்கள் அதிக வட்டிக்குக் கடன் கொடுப்பவர்கள்; பொய்யர்கள், எடை அளவுகளில் ஏமாற்றம் செய்து பொருள்களை விற்பவர்கள். விக்கிரக ஆராதனைசெய்யும் இவர்கள் உயரமும் மாநிறமும் உடையவர்களாகவும், பார்ப்பதற்கு அழகான ஆடை அணிந்தவர்களாகவும், உணவில் கவனம் செலுத்துபவர்களாகவும், ஒல்லியானவர்களாகவும் உள்ளனர். பால், வெண்ணை, சர்க்கரை, அரிசி முதலியவற்றைச் சாப்பிடுகிறார்கள். உணவில் பழங்கள், காய்கறிகள், கீரைகள் ஆகியவற்றையும் சேர்த்துக் கொள்கின்றனர். அவர்கள் எங்கு குடியிருந்தாலும் பழந்தோட்டங்களை வைத்து பராமரிக்கின்றனர். பெரிய நீர்த்தடாகங்களில் ஆடவரும், பெண்டிரும் நாள்தோறும் இரண்டு முறை குளிக்கின்றனர். குளித்து முடித்தவுடன் அன்றைய பொழுதில் தாங்கள் செய்த அனைத்துப் பாவங்களும் குளியலுடன் அழிந்து போகின்றன என்று அவர்கள் நம்புகிறார்கள். பெண்களைப்போல இவர்கள் நீண்ட கூந்தலை வளர்த்து, சடைப்பின்னி, அதன்மீது தலைப்பாகை அணிந்து கொள்கின்றார்கள். எப்போதும் தலைப்பாகையுடன் இருக்கிறார்கள். முடியில் பூ சுற்றி, வாசனைத் தைலத்தைத் தடவிக்கொள்கிறார்கள்.

வெண்மையான சந்தனத்தைக் குங்குமத்துடனும், வாசனைத் தைலத்துடனும் கலந்து பூசிக்கொள்கிறார்கள். இவர்கள் சிற்றின்ப வேட்கை மிகுந்தவர்கள். நீளமான பருத்தி ஆடையையும், பட்டுச் சட்டையும் அணிகிறார்கள்; அழகான நூல் இணைந்த, முகம் நீண்ட காலணிகளை அணிகிறார்கள். ஜரிகை வேலைப்பாடுள்ள பட்டாலான சின்னஞ்சிறு கோட்டுகளையும் சிலர் அணிகிறார்கள். தங்கம், வெள்ளி பூண்கள் கொண்ட சிறு கத்திகளைத் தவிர வேறுவிதமான ஆயுதங்களையும் அவர்கள் எடுத்துச் செல்லுவதில்லை. ஏனெனில், முதலாவதாக ஆயுதங்களை அவர்கள் பெரிதும் பயன் படுத்துவதில்லை; இரண்டாவதாக மூர்கள் அவர்களுக்குப் பாதுகாப்பளிக்கின்றனர்".

இங்குள்ளவர்களில் பிராமணர்கள் என்று அழைக்கப்படும் மற்றொரு பிரிவினர் புரோகிதர்களாக உள்ளவர்கள். விக்கிரக ஆராதனை செய்து, கோவில்களையும் பராமரிக்கின்றனர். இந்தக் கோயில்கள் பெரியவை. இவற்றின் மூலம் வருமானமும் கிடைக்கிறது. தாமிரம், கல், மரம் ஆகியவற்றில் செய்யப்பட்ட பல விக்கிரகங்கள் கோவில்களில் உள்ளன. பூசை நிலையங்களில் அல்லது மடாலயங்களில் விக்கிரகங்களுக்குச் சிறப்பான பூசைகள் செய்கின்றனர்; பூசையின் போது நமது மரபு போல் மணிகள் ஒலித்தும், எண்ணெய் விளக்குகள் ஏற்றியும் தீபசோதிகள் காட்டியும் ஆராதனைகள் நடத்துகின்றனர். பிராமணர்களும், மற்றும் புறச்

சமயத்தவர்களும் அனுசரிக்கும் முறைகள் நாம் வணங்கும் பிதா, குமாரன், பரிசுத்த ஆவி என்னும் ஐக்கிய தத்துவ முறையினை ஒத்திருப்பதாக உள்ளன. திருமூர்த்திகளை அவர்கள் பெரிதும் கௌரவிக்கிறார்கள்; மன்னிப்பருள வேண்டியும். உண்மையான தெய்வமாக ஆராதனைகள் செய்கின்றனர். படைத்தலும், பாதுகாத்தலும், அழித்தலும் செய்கின்ற கடவுள்கள் ஏகமூர்த்தியாக உள்ளதாகவும் மூன்று தெய்வங்களுக்குக் கீழே பல சிறிய தெய்வங்கள் உண்டு என்றும் நினைத்து அவர்களையும் அவர்கள் விசுவாசிக்கிறார்கள். பிராமணர்களும் பிற மதத்தவர்களும் நமது தேவாலயங்களைப் பார்க்கும் போது அங்கு சென்று, நமது விக்ரகங்களை வழிபட்டு ஆராதனையும் செய்கிறார்கள். நமது தெய்வ நெறியை அறிந்தவர்கள் போல் பரிசுத்த மேரி அன்னையைப்பற்றி எப்போதும் கேட்கிறார்கள்; நமது முறைப்படி தேவாலயத்தில் ஜெபம் செய்கிறார்கள். நமக்கும் அவர்களுக்கு மிடையே வேற்றுமைகள் அதிகமில்லை என்றும் சொல்லுகிறார்கள். கொல்லப்பட்டது எதையும் இவர்கள் சாப்பிடுவதுமில்லை; எவ்வுயிரையும் கொல்லுவதுமில்லை.. குளிப்பதையே அவர்கள் பெரிய சடங்காகக் கருதுகிறார்கள். அதனால் அவர்கள் காப்பாற்றப் படுவதாகக் கூறுகின்றனர்.

கள்ளிக்கோட்டை இராச்சியம் பற்றி பார்போசா பின்வருமாறு எழுதியுள்ளார்:

"நமக்குப் பாதிரியார் இருப்பது போல் கள்ளிக்கோட்டை இராச்சியத்திலும் பிராமணர்கள் எனப்படுவோர் புரோகிதர்களாக உள்ளனர். மற்றொரு இடத்தில் இவர்கள் பற்றி நான் குறிப்பிட்டுள்ளேன்."

"இவர்கள் அனைவரும் ஒரே மொழி பேசுகின்றனர். பிராமணனின் மகனைத்தவிர வேறு எவரும் பிராமணனாக முடியுமா என்கின்றனர். ஏழு வயதுள்ள பிராமணச் சிறுவனின் தோளில் இரண்டு அங்குல அகலமுள்ள பதப்படுத்தாத ஒரு காட்டுமிருகத்தின் தோலை மயிருடன் சேர்த்து ஒரு நூல் போல் அணிவிக்கிறார்கள். காட்டுக் கழுதைப் போன்ற இந்த மிருகத்தைக் கிரைவமிருகம் என்கின்றனர். இந்தச் சடங்கு முடிந்த பின்பு ஏழு ஆண்டுகள் அவன் வெற்றிலை போடக்கூடாது . அந்த ஏழு ஆண்டுகளிலும் அவன் இப்பட்டையை அணிய வேண்டும். பதிமூன்று வயது அடையும்போது அவனுக்கு மூன்று புரிகள் உள்ள பூணூல் அணிவித்து அவனைப் பிராமணனாக்குகிறார்கள். பிராமணனின் சின்னமான இப்பூணூலை அவன் தனது வாழ்நாள் முழுவதும் அணிகிறான். நம் நாட்டில் ஒருவன் மதக்குருவாக அபிஷேகம் செய்யப்பட்டு, முதல் பூசையை அவன் தேவாலயத்தில் செய்யும் போது நாம் மகிழ்ச்சியடைவது போல் அவர்கள் பூணூல் அணிவிக்கும் விழாவைக் குதூகலத்துடன் ஒரு சடங்காக

நடத்துகிறார்கள். அதற்குப் பின்னர் அவன் வெற்றிலை போடலாம். ஆயினும் மாமிசமோ அல்லது மீனோ சாப்பிடக் கூடாது. இந்தியர்கள் மத்தியில் அவர்களுக்கு மிகுந்த மரியாதை உண்டு. அவர்களின் சாதித் தலைவன் சிறிய தண்டனை அளித்தாலும் அதனை ஏற்று இறக்கவும் தயாராக உள்ளனர். நாம் அனுசரிக்கும் முறை போல் அவர்கள் ஒரு முறைதான் திருமணம் செய்து கொள்கிறார்கள். அவர்கள் குடும்பத்தில் மூத்தமகன் மட்டுமே திருமணம் செய்து கொள்கிறான். ஒரு பண்ணையின் தலைவனைப் போல் அவன் குடும்பத்தில் மதிக்கப்படுகிறான். மற்ற சகோதரர்கள் எவரும் திருமணமே செய்துகொள்ளாமல் வாழ்நாள் முழுதும் தனித்தே வாழ்கின்றனர். அன்னியர் எவருடனும் தொடர்பு இல்லாதவாறு தமது மனைவிகளைப் பாதுகாப்பாகவும், கௌரவமாகவும் இப்பிராமணர்கள் கவனித்துக்கொள்கிறார்கள்."

"மனைவி இறந்தால் வேறு திருமணம் செய்துகொள்வதில்லை. ஆனால் கணவனுக்குத் துரோகம் செய்யும் மனைவியை நஞ்சுவைத்துக் கொன்று விடுகின்றனர். திருமணமாகாத இதர சகோதரர்கள் நாயர் வகுப்புப் பெண்களை வைப்பாட்டியாக வைத்துக் கொள்கின்றனர். அவர்கள் பிராமணர்களாக இருப்பதால் அவர்களுக்கு வைப்பாட்டியாக இருப்பது பெருமையென நாயர் பெண்கள் எண்ணுகிறார்கள். இதனால், எந்தப் பெண்ணும் மறுத்து எதுவும் சொல்வதில்லை; ஆயினும் இவர்கள் தங்களைக் காட்டிலும் மூத்த பெண்களுடன் உடல் உறவு வைத்துக்கொள்வதில்லை. இவர்கள் தங்களது சொந்த வீடுகளிலும் நகரங்களிலும் வசிக்கின்றனர். சில குறிப்பிட்ட நேரங்களில் பிரார்த்தனை செய்வதற்கும் சடங்குகளுக்கும் விக்கிரக ஆராதனை செய்வதற்கும் கோயில்களுக்குச் செல்கின்றனர்".

"போரில் பங்கு பெறுவதைத் தவிர்த்து பிற எல்லாவகைகளிலும் இந்தப் பிராமணர்களில் சிலர் அரசனுக்குப் பணிசெய்கின்றனர். பிராமணன் அல்லது அவனுடைய உறவினர் தான் அரசனுக்கு உணவு சமைக்க வேண்டும். இதர நாடுகளுக்குக் கடிதங்களையும், பணம் அல்லது வர்த்தகப் பொருள்களையும் எவ்வித ஆபத்தும் இல்லாமல் எடுத்துச் செல்லுகின்றனர். போர்க் காலத்தில் கூட அவர்களுக்கு யாரும் தீங்கு செய்வதில்லை. பிராமணர்கள் விக்ரக ஆராதனை பற்றி நன்கு கற்றறிந்தவர்கள். அது பற்றி நிறைய புத்தகங்கள் இவர்களிடம் உண்டு, அரசர்கள் பிராமணர்களுக்கு மிகுந்த மரியாதை அளிக்கின்றனர்."

"நாயர்கள் பற்றி ஏற்கனவே நான் அதிகமாகச் சொல்லியிருக்கிறேன். இருப்பினும் அவர்கள் எத்தகைய இயல்புடையவர்கள் என்று இதுவரை உங்களுக்குச் சொல்லவில்லை. மலபார் பகுதியில் நாயர்கள் என்னும் இந்தச் சாதியினர் உள்ளனர் என்பதை நீங்கள் தெரிந்துகொள்ள வேண்டும். அவர்களில் உயர்பிரிவினர் போரில்

கலந்துகொள்வதையே தொழிலாகக் கொண்டவர்கள். வாள், கேடயம், வில், அம்பு, ஈட்டி போன்ற ஆயுதங்களை அவர்கள் எங்கு சென்றாலும் எடுத்துச் செல்லுகின்றனர். அரசர்கள் மாளிகையிலும், இதர பிரபுக்களுடனும் அவர்கள் வசிக்கிறார்கள். அரசரிடமிருந்து அல்லது அவர்கள் வசிக்கும் இடத்தின் பிரபுக்களிடமிருந்து அவர்கள் உபகாரச் சம்பளம் பெறுகின்றனர். நாயர் வம்சா வழி வந்தவன்தான் நாயராக முடியும். அவர்களின் பிறப்புச் சிறப்பில் களங்கமேதும் இல்லாததுகீழ்ச் சாதியினர் எவரையும் அவர்கள் தொடுவதில்லை. நாயர்கள் இன்னொரு நாயர் வீட்டில் தவிர வேறு எங்கும் உணவு , தண்ணீர் கூட, அருந்துவதில்லை. இச்சாதி ஆண்கள் திருமணம் செய்து கொள்வதில்லை. அவர்களின் சகோதரிகளின் புதல்வர்கள் தான் இவர்களின் வாரிசுகள். நல்குடிப்பிறந்த நாயர் பெண்களுக்கு முழு சுதந்திரம் உண்டு. தங்கள் விருப்பம் போல் பிராமணர்களுடனோ நாயர்களுடனோ உறவு வைத்துக்கொள்கிறார்கள். தங்கள் சாதியாரைத் தவிர கீழ்ச் சாதியினருடன் உடல் உறவு கொண்டால் மரணம் அவர்களைத் தழுவும். நாயர் மகளிர் பன்னிரண்டு வயதாகிப் பூப் பெய்துகிறபோது தாய்மார்கள் ஒரு பெரிய சடங்கினைச் செய்கிறார்கள். தனது மகள் பூப்பெய்தும் போது, தாயார் உறவினர்களையும் நண்பர்களையும் தனது மகளைக் கௌரவிக்கத் தயாராக இருக்க வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறாள். தனது உறவினர், குறிப்பாக நெருங்கிய சொந்தக்காரர் அல்லது நண்பர் ஒருவரைத் தனது மகளைத் திருமணம் செய்து கொள்ளுமாறு கேட்கிறாள். ஒருவர் தான் மனமுவந்து திருமணம் செய்து கொள்ளுவதாக உறுதியளித்து, அரை துகாத் தங்க நாணயத்திலான ஒரு சிறிய நகைகைத் தயார் செய்கிறார். ரிப்பன் மாதிரி நீண்டும், அதன் நடுவில் ஓட்டையும் கொண்டதாக வெள்ளைப்பட்டு நூல் கயிற்றில் இது கட்டப்பட்டு இருக்கும். தங்க ஆபரணங்களை அணிந்து அழகாக அலங்கரிக்கப்பட்ட தன்னுடைய மகளுடன் இசையும், பாடலும் முழங்க மக்கள் கூடியுள்ள சபைக்கு அந்தத்தாய் வருகிறாள். முன்பு குறிப்பிட்ட உறவினர் தனது சுற்றத்தாருடன் தங்க நகையுடன் வருகிறார்; சடங்குகளை அனுசரித்துவிட்டு இந்த (தாலி) நகையைப் பெண்ணின் கழுத்தில் கட்டுகிறார். அந்தப் பெண் தன் வாழ்நாள் முழுவதும் இதை அணிந்து கொண்டு, தான் விரும்பும் வகையில் வாழ்க்கை நடத்துவாள். கழுத்தில் தாலி கட்டியவர், தான் உறவினர் என்ற முறையில் அவளுடன் இரவு நேரத்தைக் கழிக்காது போய் விடுகிறார். அவ்வாறு உறவினனாக இல்லாவிட்டால் அவளுடன் அன்று உறவு கொள்ளலாம்; எனினும் இது கட்டாயமன்று, தாய் தனது மகளுடைய கற்பைச் சோதிக்க சில நாயர் இளைஞர்களைத் தேடிக் கேட்கிறாள். ஒரு பெண்ணின் கற்பைச் சோதிப்பது அவமானம் என்றும், தவறு என்றும் அவர்கள் கருதுகிறார்கள். அவளுடன் யாராவது தங்கி உடல் உறவு கொண்டால், அவள் ஆண்களுடன் சேர்ந்து வாழத்

தகுதியுடையவளாகிறாள். அதன்பின்னர் நாயர் இளைஞர்கள் தனது மகளை மனைவியாக ஏற்றுக் கொள்கிறார்களா என்று வினாவுகிறாள். மூன்று அல்லது நான்கு இளைஞர்கள் அவனை ஏற்றுக்கொண்டு ஆதரிப்பதாகக் கூறி முன் வருகின்றனர். அவளுடன் தங்கி உறவு கொள்ள இவ்வளவு பணம் கொடுப்பதாகக் கூறுகிறார்கள். பல இளைஞர்கள் ஒரு பெண்ணை ஏற்று ஆதரிக்க விரும்பினால் அந்த அளவுக்கு அவளின் மதிப்பு உயருகிறது. ஒவ்வொருவரும் ஒரு நண்பகல் முதல் அடுத்த நாள் நண்பகல் வரை அவளுடன் தங்கி உறவாடுகிறார்கள். அவர்களுக்கிடையே எவ்வித சண்டையும் தகராறும் இல்லாமல் அவளுடன் உறவு வைத்துக் கொள்கின்றனர். அவர்களில் ஒருவன் அவளை விட்டுப் பிரிந்துபோக விரும்பினால் அவ்வாறே செய்யலாம், வேறு ஒரு பெண்ணிடமும் சேரலாம். அவளும் தனக்கு ஒருவன் பிடிக்கவில்லை என்றால் அவனைப் போகச் சொல்லி விடலாம். அவன் போய்விடலாம். அல்லது அவளுடன் சமாதானம் செய்துகொள்ளலாம். அவளுக்குக் குழந்தை எதுவும் பிறந்தால் அதை வளர்ப்பது அவளுடைய கடமை. அத்தகைய குழந்தைகள் எந்த ஒரு மனிதனின் குழந்தைகள் என்றும் கூற மாட்டார்கள். ஒரு குழந்தை அவளுடன் உறவுகொண்டவனைப் போல் தோற்றத்தில் இருந்தாலும் அவன் அதை ஏற்றுக் கொள்வதில்லை. அக்குழந்தைகள் அவர்களிடமிருந்து சொத்துக்கள் எதையும் அடைய முடியாது. நான் ஏற்கெனவே கூறியபடி, அவர்களின் வாரிசுதாரர்கள் சகோதரிகளின் புதல்வர்களான மருமகன்கள்தான். இந்த வழக்கம் பாமரமக்கள் நினைப்பதைவிட மிகுந்த ஆழ்ந்த பொருள் கொண்டது. ஏனெனில் குடும்பபாரமும், குழந்தைப் பராமரிப்பும் அரசனின் பணியிருந்து நாயர்களை பிரித்துவிடும் என்ற காரணத்தால் அரசர்களே இத்தகைய விதியை அமைத்துள்ளார்கள் என்கின்றனர்".

"மலபார் இராச்சியத்தில் வியாபாரிகள் என்று அழைக்கப்படும் மற்றும் ஒரு சாதி இருக்கிறது. அவர்கள் உள்ளூரைச்சேர்ந்த இந்திய வர்த்தகர்கள். துறைமுகங்களிலும் உள்நாட்டிலும் மிகுந்த இலாபம் பெறக்கூடிய இடங்களிலெல்லாம் அனைத்து வகைப் பொருள்களையும் வாங்கி விற்று வியாபாரம் செய்கின்றனர். நாயர்களிடமிருந்தும் உழவர்களிடமிருந்தும் மிளகு, இஞ்சி அனைத்தையும் வாங்குகிறார்கள். துறைமுகக் கிடங்கில் தாங்கள் வைத்திருக்கும் பருத்தித் துணி, இதர பொருள்களை மாற்றிக் கொண்டு விவசாயிகளிடமிருந்து புதிய விளைபொருள்களை வாங்கிக் கொள்கிறார்கள். அதன் பின்னர் அப்பொருள்களை அதிக விலைக்கு விற்று இலாபம் ஈட்டுகிறார்கள். அவர்கள் வாழும் நாட்டின் அரசன், அவர்கள் மீது எத்தகைய வழக்கும் தொடர்ந்து தண்டிக்க முடியாது என்பது அவர்களுக்குள்ள உரிமையாகும்".

"இந்த இராச்சியத்தில் குயவன் என்னும் மற்றொரு சாதி உண்டு.

நாயர்களிலிருந்து அவர்கள் வேறு பட்டவர்களல்லர், இருப்பினும் அவர்கள் முன்பு எப்போதோ செய்த ஒரு தவற்றின் காரணமாக நாயர்களிடமிருந்து பிரிந்துவாழ்கின்றனர். அரசனுடைய மாளிகை, கோவில்களுக்குத் தேவையான செங்கற்களையும், மண்பாண்டங்களையும் உற்பத்தி செய்வது அவர்கள் தொழில். ஓடுகளுக்குப் பதிலாக செங்கற்களையே கூரைகளுக்குப் பயன் படுத்துகின்றனர். மற்றவர்களின் வீடுகள் ஓலைக் கூரைகளைக் கொண்டவை. குயவர்களுக்குத் தனியான கோவில்களும், பூசைமுறைகளும் உண்டு".

"விக்கிரக ஆராதனை செய்யும் மைனதாசு என்று கூறப்படும் மற்றுமொரு சாதியினர் அரசர், பிராமணர், நாயர் ஆகியோரின் துணிகளைச் சலவை செய்யும் தொழில் செய்பவராக உள்ளனர். இத்தொழிலைத்தவிர வேறு தொழில் எதுவும் இவர்கள் செய்வதில்லை."

"இவர்களைக் காட்டிலும் கீழ்ச்சாதியான களேத்தியர்கள் எனப்படுவோர் நெசவுத் தொழில் செய்கின்றனர். பருத்தி, பட்டுத் துணி நெசவு செய்வதைத் தவிர வேறு தொழில் செய்யாத இவர்கள் தனியாக வாழ்ந்து வருகின்றனர். இவர்களின் வருமானம் மிகக் குறைவு; இவர்களும் தாழ்ந்த சாதியாக இருப்பதால் தங்களுக்கென்று தனியாக விக்ரகங்களை வைத்துள்ளனர்".

"மேலே கூறப்பட்ட சாதிகளைத் தவிர, மேலும் பதினோறு சாதிகள் உண்டு; மேலே கூறப்பட்ட சாதிகளை விட தாழ்ந்த இந்த சாதியாருடன் எவரும் தொடர்பு வைத்துக்கொள்வதில்லை; எவராவது இவர்களைத் தொட்டால், அவர்களுக்கு மரண தண்டனை உண்டு. அவர்களுக்கிடையே மிகுந்த வித்தியாசங்கள் உள்ளன. மற்ற சாதியாருடன் கலந்து விடாதவாறு தனித்தே வைக்கப்பட்டுள்ளனர். இத்தகைய கீழ்ச்சாதிகளில் மிகவும் சுத்தமான பாமரமக்கள் தீய்யா என்னும் சாதியினராவர். பனை மரங்களை வளர்த்து, பனைமரம் ஏறி, காய்களைப் பறித்து, முதுகில் சுமந்து சென்று விற்று அதன் மூலம் வாழ்க்கை நடத்துபவர்கள், இச்சாதி மக்கள்".

"இன்னும் கீழ் நிலையிலுள்ள மேனேன் என்று அவர்கள் அழைக்கும் சாதி உண்டு. (அச்சிட்ட வாசகத்தில் மன்சு என்று உள்ளது). இவர்கள் இதர சாதியினருடன் கலந்து கொள்வதுமில்லை, அவர்களைத் தொடுவதுமில்லை. சாதாரண மக்களுக்குச் சலவைத் தொழிலாளிகளாகப் பணிபுரிகிறார்கள். படுக்கும் பாய்களையும் செய்கிறார்கள். அவர்களின் புதல்வர்கள் குலத் தொழிலைத்தான் செய்ய வேண்டுமென்று நிர்ப்பந்தம் உண்டு. அவர்களுக்குத் தனி தெய்வ வழிபாடு உண்டு".

"இந்நாட்டில் இன்னும் கீழ் நிலையிலுள்ள கணக்கர் என்று

அழைக்கப்படும் சாதியார் உள்ளனர். குடைகள், கொக்கிகள் செய்வது இவர்களின் தொழில். வான சாஸ்திரத்திற்குப் பயன்படும் எழுத்துக்களை அவர்கள் கற்றுக் கொள்கிறார்கள். வருங்கால நிகழ்ச்சிகளைக் கணித்துக்கூறும் திறமை படைத்த சோதிடர்கள், அவர்கள் இத்தகைய சோதிடங்களைக் கணித்து கூறவே சில பிரபுக்கள் அவர்களைத் தங்கள் பராமரிப்பில் வைத்துள்ளனர்."

"அகிரஸ் எனப்படும் மற்றுமொரு புறமதத்தினரான கீழ்ச் சாதியார் உள்ளனர். அவர்கள் கட்டடம் கட்டுபவராகவும், கொல்லராகவும், தச்சராகவும், உலோக வேலை செய்பவராகவும் உள்ளனர். சிலர் தங்க நகை வேலையும் செய்கிறார்கள். பொதுவான தொரு வம்சவழியைச் சேர்ந்த இவர்கள், தனிச் சாதியாகவும், தங்களுக்கென்று தனியே தெய்வவழிபாடு முறையினைப் பெற்றவர்களாகவும் உள்ளனர். இவர்கள் திருமணம் செய்து கொள்கிறார்கள். இவர்களின் புதல்வர்கள் தகப்பனின் தொழிலையே செய்கின்றனர்; தகப்பனின் சொத்து புதல்வர்களைச் சேரும்".

"இந்த நாட்டில் மோகெரஸ் எனப்படும் மற்றுமொரு கீழ்ச்சாதியினர் உள்ளனர். திய்யா சாதியினரை இவர்கள் ஒத்தவர்களாக இருந்தாலும், இவ்விரு சாதியினரும் ஒருவரையொருவர் தொட்டுப் பழகும் தொடர்பு இல்லாதவர்கள். அரசனின் பரிவாரங்கள் செல்லுமிடங்களுக்கெல்லாம் இவர்கள் சாமான்களைச் சுமந்து செல்லுவார்கள். இவர்களின் எண்ணிக்கை மிகவும் குறைவு; இந்த நாட்டில் தனிச் சாதியாக உள்ள இவர்களுக்குத் திருமணச் சட்டங்கள் எதுவும் இல்லை. இவர்கள் கடல்படு பொருள்களை வைத்துப் பிழைக்கிறார்கள்; சிலர் கடலில் செல்லும் மாலுமிகளாகவும், மீனவர்களாகவும் உள்ளனர். இவர்களுக்கு விக்ரகங்கள் இல்லை. இவர்கள் நாயர்களின் அடிமைகளாகப் பணிபுரிகின்றனர்".

"மாங்கூர் எனப்படும் மீனவர்கள் மிகவும் தாழ்ந்த சாதியினராவர்; மீன் பிடிப்பது தவிர வேறு தொழில் இவர்கள் செய்வதில்லை. இருப்பினும் சிலர் மூர்களின் கப்பல்களில் செல்லுகின்றனர். கடல்பயணம் இவர்களது கைவந்த கலையாகும். இவர்கள் முரடர்கள்; திருடர்கள்; திருமணம் செய்து கொள்கிறார்கள்; தந்தையின் சொத்து புதல்வனுக்கு உண்டு. இவர்களின் பெண்கள் மோசமான நடத்தையுள்ளவர்கள். எவருடனும் உடல் உறவு கொள்வார்கள். அது தவறு என்று அவர்கள் நினைப்பதில்லை. இவர்களுக்குத் தனியாக தெய்வங்கள் உண்டு".

"மலபாரில் பெதுன்கள் என்னும் மற்றுமொரு கீழ்ச்சாதியினர் உள்ளனர். நெல் விளைவிப்பதும், உப்புக் காய்ச்சுவதும் அவர்களுடைய தொழில். இதைத் தவிர வேறு பிழைப்புக்கான தொழில் எதுவும் இவர்களுக்கு இல்லை".

"மேல்சாதியினர் எவரும் நடந்து செல்லாத சாலைகளுக்கு அப்பால் வயல் வெளிகளில் இவர்கள் வீடு கட்டி வசிக்கிறார்கள். அவர்களுக்குத் தனி விக்ரகங்கள் உண்டு. வறியவர்களான இம்மக்கள் அரசன், நாயர் ஆகியோரின் அடிமைகள். நாயர்களைக் கண்டால் வெகு தொலைவில் நின்று பேச வேண்டும். வேறு எந்த சாதியாரிடமும் இவர்களுக்குத் தொடர்பு இல்லை."

"எவ்வித மதத்தையும் சேராத முரடர்களாக உள்ள பணியன் என்ற இழிந்த சாதியார் பில்லி சூனியக்காரர்கள். முரடர்களாக உள்ள இவர்கள் பிழைப்புக்கு வேறு தொழில் எதுவுமில்லாதவர்கள்.

"இவர்களுக்குக் கீழே ரெவொலீன் என்னும் ஏழைகளான கீழ்ச் சாதியினர் உள்ளனர். இவர்கள் முரடர்கள், நகரங்களில் புல்லும், விறகும் விற்றுப் பிழைப்பவர்கள். இவர்கள் வேறு சாதியினரைத் தொடமுடியாது. மற்றவர்களும் இவர்களைத் தொட மாட்டார்கள் பால் உறுப்புகளை மட்டும் கிழிந்த அசிங்கமான துணிகளால் மறைத்துக்கொண்டு, நிர்வாணமாகத் திரிகிறார்கள். உடம்பின் சில பகுதிகளைச் சில வகை மர இலைகளால் மறைத்துக் கொள்கிறார்கள். காதுகளில் பெண்கள் ஏராளமான பித்தளை வளையங்கள் அணிந்து கொள்கிறார்கள், தலை, கை, கால், கழுத்திலும் வளையங்களையும், காப்புகளையும் அணிந்து கொள்கிறார்கள்".

புலையர்கள் என்னும் இவர்களினும் கீழ்ச்சாதியினர் இந்த நாட்டில் உள்ளனர். பிற எல்லோரையும் விட இச்சாதியினர் சபிக்கப்பட்டவர்கள்; சாதிக்கு வெளியே தள்ளி வைக்கப்பட்டவர்கள். வயல் வெளிகளிலும், இருண்ட ஒதுக்குப்புறங்களிலும், வேறு உயர் சாதியினர் சாதாரணமாக நடந்து செல்லக் கூடாத பகுதிகளில் சின்னஞ்சிறு அசுத்தமான குடிசைகளில் வாழ்கிறார்கள். எருது, எருமைகளை வைத்து நெற் பயிர் செய்கிறார்கள். நாயர்களுடன் பேச வேண்டுமானால், வெகுதொலைவில் நின்று கொண்டு நாயர்கள் கேட்கும் வண்ணம் உரத்த குரல் எழுப்ப வேண்டும். சாலைகளில் செல்லும் போது, தங்களுக்கு வழிவிட வேண்டுமென உரக்கக் கத்துகிறார்கள்; இவர்களின் குரலைக் கேட்டதும் அருகிலுள்ள புதர்களில் மறைந்து நின்று அவர்கள் போனபிறகு மீண்டும் நடக்கின்றனர். உயர் சாதி ஆண் அல்லது பெண் அவர்களைத் தீண்டினால் உடனடியாகக் கொலை செய்து விடுகின்றனர்."

"மிகவும் இழிவாகவும், கீழான நிலையிலுள்ளவர்கள் பறையர்கள் எனப்படுவோர். இதர சாதிகளின் குடியிருப்புகளுக்கு வெகுதூரத்தில் இவர்களின் குடியிருப்புகள் உள்ளன. இவர்களுக்கும் இதர சாதிகளுக்குமிடையே எவ்விதத் தொடர்பும் இல்லை. பேய் பிசாசுகளை விட மோசமானவர்கள் என்றும், வெறுக்கப்பட வேண்டியவர்கள் என்றும் இவர்களை மேல் சாதியினர் கருதுகின்றனர். தீண்டப் படாத இவர்களைப் பார்த்தாலே

காட்டுச்செடிகளின் கிழங்குகள் ஆகியவற்றைச் சாப்பிடுகிறார்கள். உடம்பின் பிறப்பு உறுப்புகளை இலைகளால் மறைத்துக் கொள்கின்றனர். காட்டு மிருகங்களின் மாமிசத்தையும் சாப்பிடுகிறார்கள்'.

"புறமதத்தைச் சேர்ந்தவர்களாக உள்ள இவர்கள் தனித்தனியாக வாழ்ந்துகொண்டு, ஒரு சாதியினரை மற்றொரு சாதியினர் தொடாமலும், கலப்புத் திருமணம் செய்து கொள்ளாமலுமுள்ள பதினெட்டு சாதிகளிடையேயுள்ள வித்தியாசங்கள் பற்றிய விவரங்கள் இத்துடன் முடிவடைகிறது. மலபாரின் பூர்வீகக் குடிகளாக உள்ள பதினெட்டுச் சாதியாரைப்பற்றி நான் உங்களுக்கு இப்போது விவரித்து கூறியுள்ளேன். இவர்களைத் தவிர விநோதமான தோற்றமுள்ள வியாபாரிகளும், நிலவர்த்தகர்களும் உள்ளனர். அவர்ளுக்கு வீடுகளும், நிலங்களும் உண்டு. மண்ணின் மைந்தர்கள் போல் வாழ்ந்தாலும் அவர்களுக்குத் தனித்த சமூக வழக்கங்கள் உண்டு."

இந்த வெளிநாட்டுக்காரர்கள் சாதி முறை பற்றி முழு விவரத்தையும் படம்பிடித்துக் காட்ட முடியவில்லை. அதற்கான காரணத்தை நாம் யூகித்துணர முடியும். இந்து சமுதாயத்தின் அந்தரங்க வாழ்வு வெளிநாட்டவருக்கு மூடி மறைக்கப்பட்டுள்ளது. அவர்களும் அதனை ஊடுருவிப் பார்க்க முடியாது. இந்தியாவின் சமூக அமைப்பு, சட்ட நூலிலிருந்து எளிதாகப் புரிந்து கொள்ளக் கூடிய விதிகள் போல் அல்லாமல் இந்த நாட்டிற்கு வந்து பார்த்த வெளிநாட்டவர்க்குச் சாதி அமைப்பு பிற எதனோடும் ஒப்பிட முடியாத தனித்தன்மை வாய்ந்த முறையாகத் தோன்றியிருப்பதிலும் இந்து சமூகத்தை வேறு படுத்திக்காட்டக்கூடிய தன்மையாக இருப்பதிலும் வியப்பேதுமில்லை. இல்லையெனில் இந்த நாட்டிற்கு அவர்கள் வந்து பார்த்தவற்றில் இதனை இவ்வளவு விவரமாகக் குறித்துவைக்க வேண்டிய தேவை இல்லை.

எனவே இந்து சமூக அமைப்பில் சாதி என்பது தனித் தன்மை வாய்ந்தது, இதுவே இந்துக்களைப் பிறரிடமிருந்து வேறுபடுத்திக் காட்டுகிறது. சாதி முறை வளர்ந்து வரும் அமைப்பாக உள்ளது. எக்காலத்திலும் அது ஒரே மாதிரியாக இருந்ததில்லை. மெகஸ்தனிஸ் எழுதியபோது இருந்த சாதிகளின் அமைப்பும் தோற்றமும் அல்பெருனி இந்தியாவுக்கு வந்த போது வேறுபட்டிருந்தது. அல்பெருனி வந்த போதிருந்த சாதி அமைப்பின் தோற்றம் போர்த்துக்கீசியர் வந்த காலத்தில் வேறுபட்டிருந்தது. சாதியைப்பற்றி முழுமையாக அறிந்து கொள்ள வேண்டுமாயின் வெளிநாட்டவர்கள் தந்துள்ள தகவலைக் காட்டிலும் மேலும் சரியான தகவல் ஒருவருக்குத் தெரிந்திருக்க வேண்டும்.

சாதி என்னும் பொருள் பற்றிய விவரத்தை முழுதும் அறிந்து கொள்ள வேண்டுமாயின் சமூக அமைப்பிலுள்ள அடிப்படைக்

அடிப் படைக் கோட்பாடு, நான்கு வகுப்புகள் அல்லது வருணங்களாக இந்து சமூகத்தைப் பிளவு படுத்தியதிலிருந்து ஆரம்பமாகிறது. இந்த நான்கு வகுப்புகள் வருமாறு:

1) பிராமணர் - இவர்கள் படித்தவகுப்பினர்; புரோகிதர்கள்.

2) க்ஷத்திரியர் - இவர்கள் படை வீரர் வகுப்பினர்.

3) வைசியர் - இந்த வகுப்பினர் வர்த்தகர்கள்.

4) சூத்திரர்கள்-உழைக்கும் வகுப்பினர்.

முதலில் இவை வகுப்புகளாக மட்டும் இருந்தன; அதன்பின்னர் நான்கு வருணங்களாக இருந்தவை நான்கு ஜாதிகளாக மாறின; நான்கு சாதிகள் நாலாயிரம் சாதிகளாயின. இவ்வாறு தான் இன்றைய சாதி முறை பண்டைய வருணமுறையின் பரிணாம வளர்ச்சியாயிற்று.

வருணங்களின் பரிணாமம்தான் சாதிமுறை என்பதில் சந்தேகம் எதுவுமில்லை. எனினும் வருண அமைப்பு முறையை மட்டும் படித்து சாதி அமைப்பு முறை பற்றி ஒருவர் தெரிந்து கொள்ள முடியாது. வருணங்களுடன் சாதி அமைப்பு முறைபற்றியும் ஆராயவேண்டும்.

## II

பழைய உலோகாயதவாதி ஒருவர் தன்னுடைய தத்துவத்தைச் சுருக்கிப்பின் வருமாறு கூறுகிறார்:-

> "எனக்கு எதுவும் தெரியாது என்பதுதான் நான் அறிந்து கொண்டதாகும்; எனக்கு அதுவும் தெரியும் என்று நிச்சயமாகக் கூறமுடியாது".

பஞ்சாபில் நிலவிய சாதி முறை பற்றி எழுத வந்த சர் டென்சில் இபட்சன் இந்த உலோகாயதவாதி தன்னுடைய தத்துவத்தைப் பற்றிக் குறிப்பிட்ட நிலையிலேயே சாதியைப் பற்றிய தனது நிலை உள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார். வெவ்வேறு பிராந்தியங்களில் நிலவும் வேறுபட்ட சூழ்நிலைமைகளின் காரணமாக சாதிமுறையும் ஆங்காங்கு சற்று மாறுபட்டிருக்கிறது என்பது உண்மைதான். எனவே எந்த சாதியைப் பற்றியும் ஒரே விதமான கருத்தினைக் கூற முடியாது. ஒரு பிராந்தியத்திலுள்ள ஒரே சாதி மற்றொரு பிராந்தியத்திலுள்ள அதே சாதி முறையிலிருந்து வேறுபட்டதாகவும் இருக்கும் என்பதும் உண்மைதான்.

இருப்பினும் சாதியின் இன்றியமையாததாகவும் அடிப்படையாகவும் உள்ள அம்சங்களை இவற்றிற்கு எதிரான அம்சங்களிலிருந்து வேறுபடுத்திப் பார்ப்பது இயலாத காரியமல்ல. ஒருவனை அவனது சாதியிலிருந்து நீக்கப்படுவதற்குள்ள காரணங்களைத் தெரிந்து

கொண்டால் அடிப்படை அம்சங்களை எளிதில் புரிந்துகொள்ளலாம். சாதியிலிருந்து நீக்கப்படுவதற்கான காரணங்களை திரு. பட்டாச்சாரியா பின்வருமாறு கூறுகிறார்: 1. இஸ்லாம் அல்லது கிறிஸ்தவ மதத்திற்கு மாறுதல். 2) ஐரோப்பா அல்லது அமெரிக்காவிற்குச் செல்லுதல் 3)விதவையைத் திருமணம் செய்து கொள்ளல் 4) பகிரங்கமாகப் பூணூலைக் கழற்றி எறிதல் 5) பன்றி, மாடு அல்லது பறவைகள் மாமிசத்தைப் பகிரங்கமாகச் சாப்பிடுதல் 6) முகம்மதியர் அல்லது கிறிஸ்தவர் அல்லது கீழ்ச்சாதி இந்து சமைத்த அசுத்தமான உணவைச் சாப்பிடுதல் 7) சூத்திரனின் வீட்டில் பூசை செய்தல் 8) ஒரு பெண் தனது கற்பினை இழந்து விடும்படி வீட்டை விட்டு ஓடிப்போவது 9) விதவை கர்ப்பமடைதல் இப்பட்டியல் இதோடு முடிந்துவிடவில்லை. சாதியை விட்டு விலக்குவதற்கான இன்னும் முக்கியமான காரணங்கள் உள்ளன. அவையாவன 10) தன் சாதியைவிட்டு வேறு சாதியில் திருமணம் செய்தல், 11) வேறு சாதியினருடன் உட்கார்ந்து சாப்பிடுதல், 12) தனது குலத்தொழிலை விட்டு வேறு , தொழில் செய்தல். இன்றியமையாதவைகளுக்கும் இன்றியமையாதவை அல்லாதவற்றிற்கும் உள்ள வேறுபாட்டை திரு.பட்டாச்சாரியா கோடிட்டுக் காட்டாதது இரண்டாவது குறைபாடாகும்.

ஒருவன் தனது சாதியிலிருந்து விலக்கப்பட்டால் அவனுக்கு அளிக்கப்படும் தண்டனை ஒரே மாதிரியானது என்பது உண்மைதான். நண்பர்கள், உறவினர்கள், சொந்தச் சாதியினர் ஆகியோர் அவனுடன் தொடர்பு வைத்துக்கொள்ளமாட்டார்கள். அவனை விருந்திற்குத் தங்களுடைய வீடுகளுக்கு அழைக்கமாட்டார்கள். அவனுடைய பிள்ளைகளுடன் எவ்விதமான திருமண உறவும் வைத்துக் கொள்ள மாட்டார்கள். அவனுடைய திருமணமான புதல்விகள் அவனைச் சந்தித்தால், அவர்களும் சாதியிலிருந்து விலக்கப்படுவார்கள். புரோகிதர், நாவிதன், சலவைத் தொழிலாளி ஆகியோர் பணியும் அவனுக்கு மறுக்கப்படும். அவனுடைய சொந்த சாதியினரே அவனுடன் தொடர்பு அனைத்தையும் அறுத்துக்கொள்வார்கள். அவன் வீட்டில் ஏற்படும் மரணத்தின் இறுதிச்சடங்கிலும் கூட உறவினர்கள் கலந்து கொள்ள மாட்டார்கள். சாதியிலிருந்து விலக்கப்பட்டவர்கள் பொது கிணற்றிலிருந்து நீர் எடுக்க முடியாது; கோவிலில் அனுமதி இல்லை; இடுகாட்டிலும், சுடுகாட்டிலும் இடம் தரப்படமாட்டாது.

சாதியிலிருந்து விலக்கப்படுவதற்கான காரணங்கள் சாதி முறையின் விதிகளையும் கட்டுப்பாட்டு நிபந்தனைகளையும் மறைமுகமாகக் குறிப்பிடுகின்றன. எல்லா நிபந்தனைகளும் அடிப்படையானவையல்ல. அநேக நிபந்தனைகள் தேவையானவையல்ல. அந்த நிபந்தனைகள் இல்லாமலும் சாதி இருக்க முடியும். இன்றியமையாதவை எவை அல்லது அவ்வாறு இல்லாதவை எவை என்று வேறுபடுத்தி அறிவதற்கு மேலும் ஒரு கேள்வியை எழுப்பித் தெரிந்து கொள்ள முடியும். தனது சாதியை இழந்துவிட்ட ஒரு இந்து எப்போது மீண்டும் சாதியில் சேரமுடியும்?

பிராயச்சித்தம் அல்லது கழுவாய் என்றால் என்ன என்பது பற்றி தெரிந்துகொள்ள சில தகவல்களை நாம் நினைவில் கொள்ள வேண்டும். முதலாவதாக, சில சாதிக் குற்றங்களுக்குப் பிராயச்சித்தம் இல்லை. இரண்டாவதாக, குற்றங்களுக்கேற்ப பிராயச்சித்தம் மாறுபடும். சில விஷயங்களில் பிராயச்சித்தம் சாதாரணத் தண்டனையாக இருக்கும். சில விஷயங்களில் கடுமையான தண்டனை பிராயச்சித்தமாக இருக்கும்.

பிராயச்சித்த முறை இருப்பதற்கும், அது இல்லாதற்கும் ஒரு முக்கியத்துவம் உண்டு. பிராயச் சித்தமுறை இல்லையென்றால் எவ்விதத் தடையுமின்றி ஒருவர் குற்றம் செய்யலாம் என்பது பொருளல்ல. அதற்கு மாறாக அளவிட முடியாதபடி பெரிய குற்றத்தைச் செய்ததற்காக சாதியிலிருந்து நீக்கப்பட்ட குற்றவாளி மீண்டும் சாதியில் சேர்த்துக் கொள்ளப்படமாட்டார் என்றாகிவிடும். பிராயச்சித்த முறை இருப்பதால் குற்றத்தை மன்னித்து தண்டனையைக் குறைக்க முடியும். குற்றவாளி பிராயச்சித்தம் செய்து மீணடும் தனது சாதியில் சேர்ந்து கொள்ள வாய்ப்புள்ளது.

பிராயச்சித்தமே இல்லாத இருவகைக் குற்றங்கள் உள்ளன., அக்குற்றங்களாவன:

1. இந்து மதத்திலிருந்து வேறு மதத்திற்கு மாறுதல் 2) வேறு சாதியானை அல்லது வேறு மதத்தினனைத் திருமணம் செய்து கொள்வது.. இக்காரணங்களுக்காக ஒருவன் தனது சாதியிலிருந்து நீக்கப்பட்டால் அவன் நிரந்தரமாகத் தனது சாதியை இழந்து விடுகிறான்.

வேறு இரண்டு குற்றங்களுக்காக அனுசரிக்க வேண்டிய பிராயச் சித்தம் மிகவும் கடுமையானவை. அவை: 1.) வேறு சாதியினருடன் அல்லது இந்து அல்லாத மற்ற மதத்தினருடன் உணவு அருந்துவது 2) தனது சாதியின் தொழிலைவிட்டு வேறு தொழிலைச் செய்வது. இவைதவிர மற்ற குற்றங்களுக்காக அளிக்கப்படும் தண்டனை எளிமையானதாகும்.

சாதியின் அடிப்படை விதிகள் மற்றும் சாதியின் உட்பொருள் என்ன என்பதையும் அறிந்துகொள்வதற்குப் பிராயச்சித்த விதிகள் உதவுகின்றன. எந்த விதியினை மீறினால் பிராயச்சித்தம் இல்லையோ அவ்விதி சாதியின் உயிராகவும், எந்த விதியை மீறினால் பிராயச்சித்தம் கடுமையாக இருக்கிறதோ அது சாதியின் உடலாகவும் இருக்கிறது. எனவே சாதி சம்பந்தப்பட்ட நான்கு அடிப்படை விதிகள் உள்ளன. சாதி என்பது ஒரு சமூகக் கூட்டம். இக்கூட்டம் அ) இந்து மதத்தில் நம்பிக்கை வைத்திருத்தல், ஆ) திருமணம் இ) உணவு ஈ) தொழில் ஆகியவற்றிற்கென அமைந்த ஒழுங்கு முறைகளுக்குக் கட்டுப்படுதல், இவற்றோடு அங்கீகரிக்கப்பட்ட பொதுவான ஒரு பெயர் இடப்பட்ட சமூகக் கூட்டம்தான் சாதி எனப்படுவது என்று மேலும் குறிப்பிடலாம்.

திருமணத்தைப் பொறுத்தவரை, புறச்சாதி திருமணம் தடை

செய்யப்பட்டுள்ளது. வெவ்வேறு சாதியினரிடையே கலப்புத் திருமணம் இருக்கக் கூடாது.

முதலாவதும் முக்கியமானதுமான இந்த அடித்தளத்தின் மீதே சாதி என்னும் கட்டடம் எழுப்பப்பட்டுள்ளது.

தனது சாதியைத் தவிர இதர சாதி மக்களுடன் ஒருவன் உணவு சாப்பிடக் கூடாது. அதாவது ஒருவருக்கொருவர் திருமணம் செய்துகொள்ள அனுமதிக்கப்பட்டவர்கள் மட்டும் தான் ஒன்றாகச் சேர்ந்து உணவு சாப்பிடமுடியும். திருமண உறவு கொள்ளக் கூடாதவர்கள் ஒருவருக்கொருவர் ஒன்று சேர்ந்து உணவு சாப்பிடமுடியாது. அதாவது சாதி என்பது புறச்சாதித்திருமணம் தடைசெய்யப்பட்ட அமைப்பு, அதோடு அதுவே ஒரு சாதித்தொகுப்பு.

செய்யும் தொழிலைப் பொறுத்தவரை, ஒருவன் தன்னுடைய சாதியின் தொழிலையே தொடர்ந்து செய்ய வேண்டும். தனது சாதிக்கென்று தனித்தொழில் எதுவுமில்லாவிட்டால், தன்னுடைய தகப்பனின் தொழிலைச் செய்யவேண்டும்.

ஒரு நபரின் அந்தஸ்தும் முன்னதாகவே நிர்ணயிக்கப்பட்டுள்ளது; அது பரம்பரையாக வருவது. ஒருவனுடைய அந்தஸ்து அவனுடைய சாதியின் அந்தஸ்தைப் பொறுத்தது. ஒரு இந்துவின் சாதி அவனது பெற்றோர்களின் சாதியுடன் இணைக்கப்பட்டுள்ளதால் அவனுடைய அந்தஸ்து பரம்பரையானது. ஒரு இந்து தன்னுடைய சாதியை மாற்றிக் கொள்ள முடியாது என்ற காரணத்தால் அவனுடைய அந்தஸ்தையும் மாற்றிக் கொள்ள முடியாது. இந்து ஒருவன் ஒரு சாதியில் பிறந்து, அதே சாதியில் தான் சாகிறான். தன்னுடைய சாதியை இழந்தால் அவன் தன்னுடைய அந்தஸ்தையும் இழக்கிறான். அவன் புதியதாகவோ அல்லது சிறந்த அல்லது வேறொரு அந்தஸ்தையோ பெற முடியாது.

ஒரு சாதிக்குரிய பொதுவான பெயரின் முக்கியத்துவம் என்ன? பொருத்தமுடைய இரண்டு கேள்விகளை எழுப்பினால், அதனுடைய முக்கியத்துவம் தெளிவாகிவிடும். அதாவது சாதி என்னும் அமைப்பின் முழுப்பொருளை அறிந்து கொள்ள அத்தகைய ஒவ்வொரு கேள்விக்கும் சரியான பதில் தேவை. சமூகக் கூட்டம் அமைப்பு ரீதியாகவோ அல்லது அமைப்பு இல்லாமலோ இருக்கலாம். ஒரு சமூகக் கூட்டத்தில் உறுப்பினராக தொடர்ந்து இருப்பதற்கும், அந்தக் கூட்டத்தில் சேருவதற்கும் விலகிக் கொள்வதற்கும் சில சமூகக் கட்டுப்பாடுகள் இருக்குமானால், அந்தக் கட்டுப்பாடுகளுடன் சில கடமைகளும். உரிமைகளும் இணைக்கப்பட்டிருந்தால் அந்தச் சமூதாயக் கூட்டம், அமைப்பு ரீதியானது என்று சொல்லலாம்.

ஒரு சமூகக் கூட்டம் தன்னிச்சையான அமைப்பாகும். ஒரு அமைப்பில் இணைகிறவர்கள் தாங்கள் செய்யத்தக்கது என்ன என்பது பற்றியும், சமூக அமைப்பின் நோக்கங்கள் யாவை என்பது பற்றியும்

முற்றிலுமாக அறிந்துகொண்டு இணைகின்ற ஒரு சமூகக்கூட்டம் தன்னிச்சையான அமைப்பாகும். மாறாக வேறு சில சமூகக் கூட்டங்கள் உள்ளன. அவற்றில் இணைபவர்கள் தங்கள் இச்சைப்படி சேருபவர்களல்ல; தங்கள் சக்திக்கும் மீறிய சில சமூகக் கட்டுப்பாடுகளுக்கும் மரபுகளுக்கும் அவர்கள் கட்டுப்பட்டவர்களாக்கப்படுகின்றனர்.

எனவே, சாதி என்பது அமைப்புரீதியில் நிலைத்துள்ள ஒரு சமூகக் கூட்டம் என்பதை மீண்டும் வலியுறுத்திக் கூறத்தேவையில்லை. சாதி ஒரு சுயமான அல்லது தன்னிச்சையான சமூகக் கூட்டமல்ல என்பதும் சொல்லத் தேவை இல்லை. ஒரு இந்து ஒரு சாதியில் பிறக்கிறார்; அச்சாதிக்காரராகவே வாழ்ந்து, அச்சாதியிலேயே சாகிறார். சாதி இல்லாத இந்துவாக இருக்கமுடியாது. சாதியிலிருந்து அவர் தப்பி விடவும் முடியாது. பிறப்பிலிருந்து இறப்புவரை அவரது கட்டுப்பாட்டிற்கு அப்பாற்பட்ட சமூக ஒழுங்கு முறைகளுக்கும் சாதி மரபுகளுக்கும் அவர் கட்டுப்பட்டவராகிறார்.

ஒவ்வொரு சாதிக்கும் தனித்தனிச் சாதிப் பெயர் தரப்படுவதால், சாதி என்பது வலுப்பெற்ற அமைப்பாகவும், ஒருவரது விருப்ப ஆற்றலுக்கு உட்படாத கூட்டமாகவும் ஆக்கப்படுகிறது. ஒரு சாதியைத் தனித்துக் குறிப்பிட்டுக் கூறச் சாதிக்கொரு பெயர் இருப்பதால், சாதி நிலைத்து நிற்கின்றது, சாதிக்கெனத் தனி அடையாள முத்திரையும் பதிக்கப்படுகிறது. சாதிகளைப் பற்றி எழுதியவர்கள் இவ்வாறு ஒவ்வொரு சாதிக்கும் தனித்தனிப் பெயரிடப்படிருப்பதன் முக்கியத்துவத்தை முழுமையாக அறிந்து கொள்ளவில்லை. அதன் விளைவாகவே அவர்கள் சாதியின் தெளிவான தனித்தன்மையைக் கண்டு கொள்ள முடியவில்லை. ஒவ்வொரு சமூதாயத்திலும் சமூகக் கூட்டத்தினர் இருக்கத்தான் செய்வார்கள். பல நாடுகளில் காணப்படும் சமூகக் கூட்டங்களை இந்தியாவிலுள்ள பலவகை சாதிகளுக்குச் சமமானவை எனக் கொள்ளலாம். குயவர்கள், சலவைத் தொழிலாளர்கள், அறிவாளிகள் என்னும் கூட்டங்கள் எல்லா நாடுகளிலும் உள்ளன. ஆனால் அத்தகைய சமூகக் கூட்டங்கள் பிற நாடுகளில் அமைப்பு ரீதியாக அமையவில்லை. அவற்றில் உறுப்பினராகச் சேருவது என்பதும் ஒருவரின் தனிப்பட்ட விருப்பத்திற்குட்பட்டது. ஆனால் இந்தியாவில் அவை அமைப்பு ரீதியில் வலுவடைந்துள்ளன. தன்னிச்சையாக ஒருவர் விரும்பி அதில் பிணைக்கப்படவில்லை; அதாவது இச்சமூகக் கூட்டங்கள் சாதிகளாக மாறியுள்ளன. இந்தியாவிலிருப்பது போல் இச்சமூகக் கூட்டங்களுக்கு வேறு நாடுகளில் சாதிப்பெயர்கள் இல்லை. சாதியின் பெயர்தான் நிலைத்து நிற்கிறது; அதுவே தொடர்ந்தும், தனித்தன்மையும் பெற்றுள்ளது. சாதிப் பெயர்தான் அவர் எந்தச் சமூக கூட்டத்தைச் சேர்ந்தவர் என்பதைச் சுட்டிக் காட்டுகிறது. ஒரு சில குறிப்பிட்ட சாதிகளைச் சேர்ந்தவர்கள் பெரும்பாலும் தங்களுடைய பெயருடன்

சாதிப்பெயரையும் துணைப் பெயராகச் சேர்த்துக் கொள்கிறார்கள். மேலும் சாதிப் பெயர்கள் அந்தந்த சாதியின் சமூக விதிகளையும் கட்டுப்பாடுகளையும் எளிதில் நடைமுறைப் படுத்துவதற்குப் பெரிதும் உதவுகின்றன. இது இரண்டு வகைகளில் எளிதாகிறது. முதலாவதாக, சாதிப்பெயர் துணைப் பெயராக இருப்பதால் தவறு செய்தவர் எந்தச் சாதியைச் சேர்ந்தவரென்பதை எளிதில் தெரிந்து கொண்டு, அவர் சாதிக் கட்டுப்பாட்டிலிருந்து தப்பித்துக் கொள்ளுவதைத் தடுக்க உதவுகிறது.

இரண்டாவதாக, தவறு செய்பவர் எந்தச் சாதியைச் சேர்ந்தவர் என்பது எளிதில் கண்டு பிடிக்கப்பட்டு, அவரது சாதி வட்டத்தை எளிதில் அடையாளம் கண்டு சாதி விதிகளை மீறியிருந்தால் தண்டிப்பது எளிதாகிறது.

சாதி என்பதன் பொருள் இதுதான். இனி சா தி முறை என்ன என்பது பற்றிப் பார்க்கலாம். இதற்குப் பல்வேறு சாதிகளுக்கிடையேயுள்ள பரஸ்பர தொடர்புகள் பற்றித் தெரிந்து கொள்ள வேண்டும். சாதிமுறை ஒருவரின் கவனத்தைக் கவரும் வண்ணம் பல அம்சங்களைக் கொண்டுள்ளது. முதலாவதாக, சாதி அமைப்பிலுள்ள பல்வேறு சாதிகளுக்கிடையே எவ்விதத் தொடர்பும் இல்லாமல் இருப்பது. ஒவ்வொரு சாதியும் தனித்தனியாகவும், வேறுபட்டதாகவும், சுதந்திரமுள்ளதாகவும், தனது உள்விவகாரங்களைத் தானே நிருவகிக்கும் அதிகாரம் பெற்றதாகவும் உள்ளன. ஒவ்வொரு சாதியும் ஒன்றிற்கொன்று தொடர்புள்ளவை; ஆனால் ஒன்றையொன்று ஊடுருவிச் செல்லாதவை. இரண்டாவதாக, ஒவ்வொரு சாதியும் இதர சாதிகளுடன் சார்ந்துள்ள தொடர்பு பற்றியதாகும். சாதி அமைப்பு முறை செங்குத்தாக உள்ளது. படுக்கையான அமைப்பு கொண்டதாக அது இல்லை.

இதுவே சாதியும் சாதியின் அமைப்பு முறையுமாகும். இந்து சமூக அமைப்பு முறை பற்றி மட்டும் தெரிந்து கொண்டால் போதுமா? இ ந்த சமூக அமைப்பு பற்றி நிலையான கருத்து ஒன்றைப் பெற சாதி மற்றும் சாதி அமைப்பு முறை பற்றிய விவரங்களைத் தெரிந்து கொண்டால் போதுமானதாகும்.

இந்துக்கள் பல சாதி மக்களாகப் பிரிக்கப்பட்டு உள்ளனர். சாதி முறையானது சாதிகளால் உருவாக்கப்பட்டது. டென்னிஸ் பந்துகளை நூலால் கட்டித் தொங்கவிட்டது போல சாதிகள் ஒன்றின் மேல் ஒன்றாக தொங்குகின்றன.. இந்நூல் இழை, சாதிகளை வளைத்தும் பிரித்தும் சுற்றிக் கொண்டுள்ளது. இதனால் பந்துகள் ஒன்றோடொன்று கலந்து விடாமலும், எதுவும் கீழே விழுந்து விடாமலும் உள்ளன. சாதிமுறையின் அமைப்பைத் தெளிவாக உணர்வதற்கு இந்த உண்மையினை மனதில் கொள்ள வேண்டும். ஆனால் சாதி முறையின் செயல்பாட்டுத் தன்மையைத் தெரிந்துகொள்ள இதுமட்டும் போதாது. நடைமுறையில் சாதி எவ்வாறு செயல்படுகிறது என்பதை அறிவதற்குச் சாதி பற்றி மட்டுமன்றி, சாதியின் மற்றொரு அம்சமான சாதிவர்க்க

முறையைப் பற்றியும் தெரிந்து கொள்வது அவசியமாகும்.

சாதி மற்றும் வர்க்கம் ஆகியவற்றைப் பற்றிய கருத்துக்களுக்கு இடையே உள்ள உறவுகள் சுவையான விவாதத்திற்கு இடமளித்துள்ளன. சாதியும் வர்க்கமும் ஒன்றுதான்; இவ்விரண்டிற்கும் வித்தியாசம் எதுவுமில்லை என்று சிலர் கூறுகின்றனர். சாதிகள் பற்றிய கருத்தும் வர்க்கம் பற்றிய கருத்தும் அடிப்படையிலேயே ஒன்றிற்கொன்று முரண்பட்டது என்று பிறர் கருத்து கொண்டுள்ளனர். சாதிகள் பற்றிய கருத்தின் இந்த அம்சத்திற்கு முக்கியத்துவம் கொடுத்து விவாதிக்க வேண்டியது அவசியமாகிறது. இப்போதைக்குச் சாதி அமைப்பைப் பற்றி இதற்கு முன்பு கூறப்படாததொரு சிறப்புத்தன்மையை வலியுறுத்திக்கூறியாக வேண்டியுள்ளது. சாதி முறையானது வர்க்கக் கோட்பாட்டிற்கு முற்றிலும் மாறுபட்டது; எதிரானது; என்ற போதிலும் சாதி என்பதிலிருந்து வேறுபட்டிருக்கும் சாதி அமைப்பு மேலே சுட்டிக் காட்டியவாறு படித்தரத் தன்மைக்கு மாறுபட்ட வர்க்க அமைப்பை ஏற்றுக்கொள்கிறது. இந்துக்கள் பலத்தரப்பட்ட சாதியினராகப் பிரிக்கப்பட்டு இருப்பது போலவே, சாதிகளும் சாதியின் பலவகைப்பட்ட வர்க்கங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளன. இந்து எனப்படுபவர் சாதி உணர்வுள்ளவராகவே இருக்கின்றார். அதோடு வர்க்க உணர்வும் அவருக்கு உண்டு. அவர் சாதி உணர்வு உள்ளவரா அல்லது வர்க்க உணர்வு உள்ளவரா என்பது அவரை எதிர்க்கின்ற சாதியைப் பொறுத்து வெளிப்படுகிறது. அவரது எதிர்ப்புக்குப் பாத்திரமாகும் சாதி அவர் சார்ந்திருக்கும் வர்க்கத்தைச் சார்ந்த சாதியாக இருந்தால் அவர் சாதி உணர்வு உள்ளவராக இருக்கிறார். அவ்வாறின்றி அந்தச் சாதி அவரது வர்க்கத்தைச் சாராததாக இருந்தால் அவர் வர்க்க உணர்வு உள்ளவராக இருக்கிறார். இது பற்றிய உதாரணம் வேண்டுமென விரும்புவோர் சென்னை ராஜதானியிலும் பம்பாய் ராஜதானியிலும் உள்ள பிராமணரல்லாதார் இயக்கங்களை ஆராய்ந்து பார்க்கலாம். அத்தகையதோர் ஆய்வு சந்தேகத்திற்கு இடமில்லாமல் சாதி உணர்வு என்னும் வட்டம் உண்மையில் வர்க்க உணர்வு வட்டமாக உள்ளது என்பதையும், சாதி உணர்வும் வர்க்க உணர்வு போன்றே உண்மையானது என்பதையும் அந்த ஆய்வு தெளிவுபடுத்தும் என்பதில் ஐயமில்லை.

வருணமுறையின் பரிணாம வளர்ச்சிதான் சாதி என்கின்றனர். இவ்வாறு கருதுவது எவ்வளவு அறிவீனமானது என்பதைப் பின்னர் தெளிவாக்குவேன். வருணமுறையின் நெறிப்பிறழ்வின் - எதிர் பிம்பம்தான் சாதி. சாதி எதிர்மாறான திசையில் பரிணாமம் பெற்றிருப்பதாகும். சாதி, வருண முறையை முழுமையாகக் குதர்க்கமாக்கியிருக்கின்றது. அதே நேரத்தில் வர்க்கமுறையை ஏற்றுக் கொண்டுள்ளது. உண்மையைச் சொல்வதானால், வர்க்க - சாதிமுறையானது வருணமுறையின் பிளவு தன்மைகளை அநேகமாக அப்படியே ஏற்றுக் கொள்கிறது.

இந்தக் கோணத்திலிருந்து சாதி முறையினை நோக்குவோர், கூம்பு வடிவமாக அதாவது பிரமிட் ( **Pyramid**) வடிவத்தில் அமைந்துள்ள சாதிகளுக்கிடையே பல வர்க்கப் பிளவுகள் ஊடுருவிச் சென்று அந்தக் கூம்புவடிவத்தைச் சாதிகளின் துண்டுகளாக, பாளங்களாகச் சிதைத்திருப்பதைக் காணமுடியும். பண்டைய வருண முறையில் நிலவிய பிரிவினைகள் முதலாவது வரிசை பிளவாக அமைந்துள்ள. பிராமணர்கள், க்ஷத்திரியர், வைசியர் ஆகிய முதல் மூன்று வருணங்களுக்கும் நான்காவது வருணமாகிய சூத்திரருக்கும்இடையே பழைய நால்வருணமுறை ஒரு வேறுபாட்டைச் செய்தது. இதில் முதல் மூன்று வர்க்கத்தார் புத்துயிர்ப்பு பெற்ற வர்க்கத்தினர்; அதாவது இருபிறப்பாளர். சூத்திரர்களோ புத்துயிர்ப்பு பெறாத வர்க்கத்தினர். இந்த வேறுபாடு முதல் மூன்று வருணத்தார் மட்டும் பூணூல் அணியவும், வேதங்களைக் கற்கவும் உரிமை பெற்றிருப்பதை அடிப்படையாகக் கொண்டு அமைந்துள்ளது. இந்த இருவகை உரிமைகளும் சூத்திரர்க்குக் கிடையாது என்பதால் அவர்கள் புத்துயிர்ப்பு பெறாத வர்க்கத்தினராயினர். இந்தப் பிளவு - பிரிவினை இன்றளவும் உள்ளது. பிராமணர்கள், க்ஷத்திரியர், வைசியர் ஆகிய மூன்று வர்க்கத்திலிருந்து கிளைத்து வளர்ந்த சாதிகளையும், பெருந்திரளான வர்க்கத்தவராகிய சூத்திரர்களிடமிருந்து கிளைத்து வளர்ந்த சாதிகளையும் பிரிக்கின்ற தற்கால வர்க்கப் பிரிவுகளின் அடித்தளமாக இது அமைகின்றது. இவ்வாறு உருவான வர்க்கப்பிரிவே உயர் சாதியினர், கீழ்ச் சாதியினர் என்று அழைக்கப்படுவதாயிற்று. இந்தப் பெயர்கள் உயர்வர்க்க சாதியினர், கீழ்வர்க்க சாதியினர் என்பவற்றின் சுருக்கமே ஆகும்.

இந்தக் கூம்பு வடிவத்தில் உண்டாகியுள்ள இந்த பிளவுக்கு அடுத்ததாக இன்னொரு வர்க்கப் பிளவு ஏற்பட்டுள்ளது. அது கீழ் வர்க்க சாதியாருக்குக் கீழே செல்கிறது. உயர் சாதியினர் என்று குறிப்பிடப்பட்ட நான்கு வருணத்திலிருந்து பிறந்த சாதிகளுக்கும், அதே போல கீழ்ச்சாதிகளுக்கும் அப்பாற் பட்டதாகச் செல்லும் இந்த எஞ்சிய சாதிகளை நான் 'எஞ்சிய சாதியினர்' என்று மட்டுமே குறிப்பிடுகிறேன். இத்தகைய வர்க்க வேறுபாட்டுப் பிளவு உண்மையானது. அதுவே சதுர்வருண முறையின் அடிப்படைக் கொள்கையாகத் தெள்ளத் தெளிவாகப் பகுக்கப்பட்டுள்ள வேறுபாடாகப் பின்பற்றப்படுகின்றது. இதுவரை குறித்துக்காட்டிய சதுர்வருண முறையில் நான்காவது வருணத்திற்கு மேலாக மூன்று வருணங்களை வைத்து நான்கு வருணங்களுக்கு இடையிலேயே வேற்றுமையை உண்டாக்கியுள்ளது. அது மட்டுமல்லாமல் சதுர்வருணத்திற்குள் வரும் சாதிகளுக்கும், சதுர்வருணப் பாகுபாட்டிற்கு அப்பாற்பட்ட சாதிகளுக்கும், இடையே தெளிவான வேற்றுமையை ஏற்படுத்தியுள்ளது. இந்த வேற்றுமையைக் குறிப்பதற்கான சொற்களையும் அது உருவாக்கியுள்ளது. சதுர்வருணப் பாகுபாட்டிற்குள் அடங்கிய உயர்ந்த அல்லது தாழ்ந்த, பிராமணர் அல்லது சூத்திரர் வருணமுத்திரை குத்தப்பட்டவர்கள் என்று பொருள்படும் 'சவர்ணர்கள்' என்று பெயரிடப்பட்டனர். சதுர்

வருணத்திற்குப் புறம்பானவர்கள் வருணமுத்திரை பெறாதவர்கள் என்று பொருள்படும் 'அவர்ணர்கள்' எனப்பட்டனர். நான்கு வருணங்களிலிருந்து கிளைத்து வளர்ந்த அனைத்துச் சாதியினரும் ஆங்கிலத்தில் 'சாதி இந்துக்கள்' என்று மொழி பெயர்க்கப்படும் சவர்ண இந்துக்கள் என்றும், இவர்களைத் தவிர்த்து எஞ்சிய மற்றவர்கள் அனைவரும் வருணம் அல்லது நான்கு மூல சாதிகளுக்கு அப்பாற்பட்டவர்கள் எனப்படும் வகையில் தற்போது ஐரோப்பியர் 'சாதியில்லாத இந்துக்கள்' என்று குறிப்பிடும் சொல்லுக்கு இணையான 'அவர்ணர்கள் என்றும் பெயர் பெற்றனர்.

சாதி முறையைப் பற்றிப் பல நூல்கள் எழுதப்பட்டிருப்பினும் அவை அனைத்தும் சவர்ண (சதுர்வருண) இந்துக்களிடையே நிலவும் சாதி முறையைக் குறிப்பிடுவனவாகவே உள்ளன. அவர்ண இந்துக்கள் பற்றித் தெரியவந்திருப்பவை மிகக் குறைவே. இந்த அவர்ண இந்துக்கள் யார், இந்து சமூகத்தில் அவர்களின் நிலை என்ன, சவர்ணர் இந்துக்களுக்கும் அவர்களுக்குமிடையே என்ன சம்பந்தம் உள்ளது என்பது பற்றி இதுவரை எவரும் தமது கவனத்தைத் திருப்பியதாகத் தெரியவில்லை. இந்தக் கேள்விகளுக்குரிய பதில்களைப் பரிசீலனை செய்யாமல், இந்துக்கள் உருவாக்கியுள்ள சமூக அமைப்பு பற்றிய உண்மை உருவத்தை எவரும் பெறமுடியாது என உறுதியாகக் கூறுவேன். சவர்ண இந்துக்களுக்கும் அவர்ண இந்துக்களுக்கும் இடையே உள்ள வர்க்கப் பிளவுகளைக் கூறாமல் விடுவது, கிரிம்ஸ் கதைகளைச் சொல்லும்போது அதில் வரும் பேய்பூதங்கள், மந்திரக்காரி, குட்டிச்சாத்தான் ஆகியவற்றைப்பற்றிக் குறிப்பிடாமல் விடுவதை ஒத்ததாகும். அவர்ண இந்துக்கள் மூவகை.......

(முற்றுப் பெறவில்லை)

# சிறப்புப் பெயரகராதி


அ

அகஸ்திய முனிவர், 73
அகல்யை, 71
அக்னி பகவான், 80
அங்க நாட்டரசன், 68
அசீரியா,22
அசுரர், 83
அணுகக் கூடாதவர், 125 --126
அணுபாதகம்,113
அதிபாதகம், 113
அம்பாரீஷன்,80
அயோத்யா, 79
அரிஸ்டாடில், 117
அல்டேகர்,108
அல்பெருனி,180
அனடோல் பிரான்ஸ்,116
அஹிர், 142

ஆ

ஆக்டன் பிரபு, 90
ஆசிரமங்கள், 49, 166--
ஆடம்ஸ்,டி.எ.ஸ், 12
ஆதிசூத்திரர், 38 , 39
ஆத்மா, 117
ஆத்ரிமுனிவர், 69
ஆரிய சமாஜிகள், 106

இ

இந்தியா, 11, 67
இந்திரன், 71
இந்திராணி, 71, 172
இந்துக்கள், 51,54,59
இந்துமதத்தில்
 சமத்துவம், 38,52,119
 சகோதரத்துவம், 62
 சுதந்திரம், 56 - 62
 கல்வி , 59
இஸ்லாம், 12, 175

உ

உபநிடதம்,-116

ஏ

ஏசுகிறிஸ்து, 134

க

கள்ளிக் கோட்டை, 185
கலப்பு மணம், 40
காத்தியாயனர், 61, 166
காந்தி, எம்.கே., 169
காயத்ரி மந்திரம், 48
காயஸ்தர், 142
கார்த்த வீரியன், 82, 184
கார்ல் மார்க்ஸ், 143
கிராலி, 17
கிருஷ்ணன், 109, 173
கிரேக்கர்கள், 9
கிறிஸ்தவம், 12
கிறிஸ்தவர், 46, 175
கிறிஸ்தவர்,
 ரோமன் கத்தோலிக்கர், 66
கிறிஸ்துவுக்கு எதிர்ப்பு, 101, 157
கெளதம ஸ்மிருதி, 61

ச

சகோதரத்துவம், 134
சண்டாளர், 181
சந்திர குப்த மௌரியர், 178
சமத்துவம், 132 --133
சாக்ரடீஸ், 8
சாதி, 52,65,66-67, 90-96,
சாதிமுறை, 65, 91, 140, 180, 192,
சிவில் உரிமை, 135
சிறந்த மனிதன், 157, 167
சுதந்திரம், - 89,135
சுமுகன், 74
சூத்திரர், 54 - 62

ட

டார்வின், 51
டால்ஸ்டாய், லியோ, 117
டீலே, பேராசிரியர், 36

த

தக்குகள் 123-- 125
திரிசங்கு , 79

ந

நகுஷன், 70 --22.
நிமி, 73
நாயர்கள், 186, 187
நாரதர், 39
நாரத ஸ்மிருதி, 146
நாஜிசம், 101
நீட்ஷே, 101, 158, 168.

ப

பகவத் கீதை, 105, 109.
பஞ்சமர், 137
பனியா, 183,
பவுல், 134,137
பரசு ராமன், 85
பாணினி, 53
பால்ஃபோர், 104
பிருகஸ்பதி, 72
பிரம்மா, 76, 117
பிரஜாபதி, 74, 98
பிராமணர், 39, 184-- 185
பிளேட்டோ, 8, 117
பிருகு முனிவர், 83
பிரெஞ்சுபுரட்சி, 32
பைபிள், 27

ம

மகாபாரதம், 82
மராட்டிய ஆட்சி, 87
மனு, 39,40-52, 57, 74, 102, 151, 163
மனுஸ்மிருதி, 100, 105, 110, 146
மாக்ஸ்முல்லர், 1, 11
மார்க்சியம், 67
மெகஸ்தனிஸ், 178
மேனகை, 80
மௌரிய அரசு, 96

வ
வசிஷ்டர் 77-78
வால்டேர், 117
விசுவாமித்திரர், 75, 76
வீணா, 68

ய
யாக்ஞவல்கியர், 107
யூதர்கள், 12

ர

ரஸ்கின், 117
ரஷ்ய புரட்சி, 32
ரிக்வேதம், 110
ரூஸோ, 117

ஜ

ஜமத்கனி 85-86.
ஜராதுஸ்ட்ரர், 103,167

ஸ

ஸ்மித், ராபர்ட்சன், 10, 20
ஸ்மிருதிகள், 107,110
ஸ்ருதி, 107
ஹரிதயாள் சர்மா, 116
ஹெர்பர்ட் ஸ்பென்சர், 34

*" கல்வி, செல்வம், உழைப்பு ஆகிய யாவும் ஒவ்வொருவரும் சுதந்திரமான முழு மனித நிலையையடையத் தேவையானவை. செல்வமும் உழைப்பும் இல்லாத கல்வி மட்டும் களர்நிலம்தான். உழைப்பும் கல்வியும் அற்ற செல்வம் மிருகத் தனமானது. கல்வியும் செல்வமும் ஒன்று மற்றதற்கு அவசியம். அவை மனித வளர்ச்சிக்கு அவசியமானது"*

*டாக்டர் பாபாசாகேப் அம்பேத்கர்*

